
# மதுரம்



மணிவிழா மலர்


27.01.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரம்

## மணிவிழா மலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் விபரம்


| | |
|---|---|
| மலரின் பெயர் | : மதுரம் |
| இதழாசிரியர்கள் | : திருமதி.ந.சிவானந்தன் |
| | திரு.சி.உதயகுமார் |
| வெளியீடு | : மணிவிழாக்குழு |
| | கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம் |
| முதற் பதிப்பு | : 2021. தை |
| அச்சுப் பதிப்பு | : வேலன் பதிப்பகம் |

| | |
|---|---|
| Name of Magazine | : MATHURAM |
| Editors | : Mrs.N.Sivananthan |
| | Mr.S.Uthayakumar |
| Publishers | : Felicitation Committee |
| | Akkarayan Maha Vidayalayam. |
| 1st Edition | : 2021 January |
| Printers | : Velan Printers |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்கநிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்ததனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே !
வளர்மொழி வாழியவே !
வளர்மொழி வாழியவே !

–மகாகவி சுப்பிரமணிய பாரதியார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழிய அக்கராயன் மகாவித்தியாலயம்
வையகம் புகழ்ந்திடவே
வளர்ந்திடும் இயல், இசை,நாடகம் மூன்றும்
வளம்பெறவாழியவே!

ஆனினநிரையும் மானொடுமயிலும் இன்னிசைதந்திடுமே
கழனியல் வயலும் கவினுறு வனமும்
கலையகம் சூழ்ந்ததுவே – நம்
கலையகம் சூழ்ந்ததுவே!

சீரியதமிழும் சீர்மையின் மொழியும்
சிறப்புறுகணிதமற்றையகலையும்
பாரினில் எமக்குபயிற்றிடும் எமது
பண்புறுபயிலிடமே – நற் பண்புறுபயிலிடமே!

திடகாத்ரமனமும் தேகநற் பலமும்
கொண்டநல் வீரர்களாவோம்
அறிவினைப்பெற்றுஆற்றலைவளர்த்து
அறிஞர்கள் போற்றிடவாழ்வோம் – நல்
அறிஞர்கள் போற்றிடவாழ்வோம் –நல்
அறிஞர்கள் போற்றிடவாழ்வோம்!

*ஆக்கம்*
*தியாகராசா இரவீந்திரராசா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி.வ.இராஜமூர்த்தி |
| செயலாளர் | : | திருமதி.ல.ஜீவதாசன் |
| பொருளாளர் | : | திரு.சி.குலராம் |
| உறுப்பினர்கள் | : | திரு.தி. நீதிராசா |
| | | திருமதி.ஜெ.சிறிதரன் |
| | | திருமதி.சு.நந்தகோபாலன் |
| | | திருமதி.கா.கெங்காதரன் |
| | | திரு.இ.கெங்காநேசன் |

# மணிவிழா மலர்க்குழு

திருமதி.ந.சிவானந்தன்

திரு.சி.உதயகுமார்

திரு.ந.கிருஷ்ணானந்தன்

செல்வி.இ.விஜயலக்சி

செல்வி.ந.தர்சிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனின் விபரக் குறிப்புக்கள்

பெயர் : திரு.கஸ்பார் மதுரநாயகம்
பிறப்பு : 28.01.1961
பிறந்த இடம் : உரும்பிராய்
பெற்றோர் : தந்தை - திரு. சின்னப்பு கஸ்பார்
தாய் : திருமதி. கஸ்பார் இராசமணி

குடும்பம்: மனைவி - திருமதி. மதுரநாயகம் பிறேமா

பிள்ளைகள் :

01. திருமதி. ரஞ்சித்குமார் சிந்துஜா (வைத்திய கலாநிதி)
02. செல்வி. மதுரநாயகம் சானுஜா (பொறியியலாளர்)
03. செல்வன். மதுரநாயகம் அஜித் ஜெரோம் (மருத்துவபீட மாணவன்)
04. செல்வன். மதுரநாயகம் அருணன் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன்)

மருமகன் : திரு.கோபாலசிங்கம் ரஞ்சித்குமார் (பொறியியலாளர்)
பேர்த்தி : செல்வி.ரஞ்சித்குமார் ஆத்விகா

கல்வி :

தரம் - 01 முதல் தரம் - 05 வரை - யாழ்/உரும்பிராய் றோ.க.த.க.பா
தரம் - 06 முதல் தரம் - 11 வரை - யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
க.பொ.த உ/த - யாழ்/வயாவிளான் மத்திய கல்லூரி
B.Com - யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
PGDE - யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
MED - யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

தொழில் : இலங்கை அதிபர் சேவை (S.L.P.S - 1)

ஆசிரியர் சேவை :

கிளி/வன்னேரிக்குளம் ம.வி - 1987.12.14 - 1992.12.31
கிளி/பளை றோ.க.த.க.பா - 1993.01.01 - 1996.09.30
கிளி/பூநகரி ம.வி (ஜெயபுரம்) - 1996.10.01 - 1998.07.30
கிளி/வலயக் கல்வி அலுவலகம் -1998.08.01 - 2002.12.31

அதிபர் சேவை :

கிளி/முருகானந்தா கல்லூரி - 2003.01.01. - 2006.12.31
கிளி/திருவையாறு ம.வி - 2007.01.01 - 2012.08.31
கிளி/அக்கராயன் ம.வி - 2012.09.01 - 2021.01.27

சமூக ஈடுபாடு :

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்க வாழ்நாள் உறுப்பினர்.
நெடுந்தீவு "சண்மலர் அறக்கட்டளை" இணைப்பாளர்.
AVR அறக்கட்டளை கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்.
பொன்மணி அறக்கட்டளை இணைப்பாளர்.


பொழுதுபோக்கு :

செஸ், கரம்போட்
கிற்றார் இசைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா நாயகன்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

கிளிநொச்சி மாவட்டத்திலே வரலாற்றுப் புகழ் மிக்க சிற்றரசன் அக்கிராசன் நல்லாட்சி புரிந்த, அக்கராயன் குளத்திலே, குன்றிலிட்ட தீபமாக ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற கிளி / அக்கராயன் மகாவித்தியாலயத்தின் அதிபராக எட்டு ஆண்டுகளுக்கு மேல் வினைத்திறனான பணியாற்றி, மங்காப் புகழ் படைத்தவர் உயர்திரு கஸ்பார் மதுரநாயகம் அவர்கள். அகவை அறுபதுதனில் அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்களின் 34 வருட கல்விப் பணியினைப் பாராட்டி, கௌரவப்படுத்தும் முகமாக 'மதுரம்' எனும் மணிவிழா மலர் வெளிவருகின்றது. ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், பிரதி அதிபர், அதிபர் எனும் பல்வேறு தளங்களில் அளப்பரிய சேவைகளை ஆற்றிய பெருமைக்குரிய மணிவிழா நாயகனின் பணிகளை நயந்து, ஆவணப்படுத்தும் நோக்கோடு, வெளிவருகின்ற இம்மலரிலுள்ளே நான்கு இயல்கள் இடம்பெற்றுள்ளன.

இயல் ஒன்று அருளாசிகளையும், வாழ்த்துரைகளையும் கொண்டமைந்ததாகவும், இயல் இரண்டு மணிவிழா நாயகனின் வாழ்வியலையும் பணிவாழ்வையும் எடுத்தியம்புவதாகவும் இயல் மூன்று கிளி/அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் படைப்புக்களைத் தாங்கியதாகவும், இயல் நான்கு துறைசார் வல்லுநர்களின் கல்வியியற் கட்டுரைகளைக் கொண்டமைந்த தாகவும் அமையப்பெற்றுள்ளது.

இத்தகைய மலராக்கப் பணிதனிலே பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்கள் நன்றிக்குரியவர்களாவர். ஆசியுரைகளை வழங்கிய குருமுதல்வர்களுக்கும், வாழ்த்துரைகளை வழங்கிய பெரியோர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் கல்வியியற் கட்டுரைகளை வழங்கிய, துறைசார் வல்லுநர்களுக்கும் மலருக்கான அனுசரணையாளருக்கும் அச்சிட்டு வழங்கிய, வேழன் அச்சகத்தினருக்கும், கணினி வடிவமைப்புச் செய்த திருமதி.ர.விஜிதா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– மணிவிழா மலர்க்குழுவினர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரம்

## மணிவிழா மலரின் உள்ளே

இயல் i.

அருளாசிகளும்
வாழ்த்துக்களும் 2–72

இயல் ii

மணிவிழா நாயகனின்
வாழ்வும் பணியும் 74–106

இயல் iii

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்கள். 108–164

இயல் iv

கல்வியியற் கட்டுரைகள் 166–209



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழாக் குழு



மலர்க்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் –I

## அருளாசிகளும்
## வாழ்த்துக்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருளாசிச் செய்தி

### இதயத்திலிருந்து மண்ணின் மைந்தனுக்கு...

உரும்பையூர் ஈன்றெடுத்த தவப்புதல்வன் ஆசிரியர், அதிபர் திலகம் திரு. கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் தமது ஆசிரியப் பணியின் நிறைவில் மணிவிழாக் காணும் பொன்னான வேளையில், அவரை நெஞ்சார வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன். அவரது மணிவிழா மஞ்சரிக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் உள்ளம் பூரிப்படைகின்றேன்.

கல்விப் புலத்தில் பல்பரிமாணங்களில் நீக்கமுடியாத பல தடங்களைப் பதித்து, பல நூறு மாணவர்களின் மேம்பாட்டுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, பணியின் முழுமையை உய்த்துணரும் இவ்வேளையில், அவரை வாழ்த்துவதும் பாராட்டுவதும் சாலவும் பொருத்தமானதே.

இவர் வாழ்வில் தனது இலக்குகளைத் திடமான மனத்துடனும் மாறிவிடாத முயற்சியுடனும் வென்றவர். படிப்படியாக உயர்ந்தவர். சிறந்த மாணவனாக, ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக ஈற்றில் அதிபராக, பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை , முருகானந்தா கல்லூரி, திருவையாறு மகாவித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம் போன்ற கஷ்டப்பிரதேசங்களில் பணிசெய்து, மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், ஏன் பெற்றோர்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர். அவர்களின் மனங்களில் நீங்காமல் நிறைந்திருக்கும் இவரை வாழ்த்துவது இரட்டிப்பு மகிழ்வைத் தருகின்றது. கல்விப்புல உயர் அதிகாரிகளாலும் நன்கு மதிக்கப் பெற்றவர்.

தாழ்வு, கீழ்ப்படிவு, கனிவு, பொறுமை, நேர்மை போன்ற உயர் பண்புகளால் தனது ஆளுமையை உருவாக்கியவர். மாணவர்களின் வளர்ச்சியில் தனிப்பட்ட கவனமும் அக்கறையும் செலுத்தி, அவர்களின் உயர்வாழ்வுக்கு வழிகாட்டியவர். கல்விமான்கள் பலரின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்.

தனித்துவமாக தான் சார்ந்த பாடசாலைச் சமூகங்கள் வளரவேண்டும் என்று அர்ப்பண உணர்வுடன் தன்னை ஈடுபடுத்தி உழைத்தவர். மாணவர்கள் பலரின் வாழ்வியலுடன் தன்னை இணைத்து ஒரு செயல்வீரனாகப் பணிபுரிந்தது மட்டுமன்றி ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தியவர். தனித்துவமான நிர்வாகத் திறமையால் யாவரையும் உள்வாங்கி நிர்வாகக் கட்டமைப்புகளைக் காத்திரமான முறையில் ஒருங்கிணைத்தவர். ஆசிரியர்களினதும் மாணவர்களினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களினதும் ஒத்துழைப்புக்களை நிறைவாகப் பெற்றவர். தனது பணியின் மகுடமாகிய கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்தின் வினைத்திறன்களையும், ஆற்றல்களையும் இனங்கண்டு அந்தந்தத் துறைகளில் அவர்கள் வளரவும் வெற்றியீட்டவும் பல திட்டங்களை வகுத்தவர்.

ஆசிரியப் பணிக்காலத்தில் போர்க்கால நெருக்கடிகள், இடப்பெயர்வுகள், மரணங்கள் மத்தியிலும், தியாக சிந்தையுடன் தனது கடமைகளை முன்னெடுத்துச் சென்றமை இவரின் அர்ப்பணிப்பின் வெளிப்பாடாகவிருப்பதை பலர் பதிவு செய்துள்ளனர்.

இவரது குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். இக்குடும்பம் இன்று கல்விப்புலத்தில் உயர்ந்து நிற்கிறதென்றால் இறைவன் இவரது பணிக்குக் கொடுத்த அருள்வரமென்றே கூறவேண்டும். ஓய்வு பெறும் இவர் உடல், உள நலத்துடன் நீடூழி காலம் வாழ்ந்து மகிழ்வுடன் தனது தொடர்ந்த கல்விசார் பங்களிப்பை நம் சமூகங்களுக்கு வழங்க வேண்டுமென்று ஆசிக்கின்றேன்.

**" வாய்ப்புக்களை கடும் முயற்சியால் பயன்படுத்துபவர்களே**
**வாழ்வில் முன்னேற முடியும் "**

**அருட்பணி ம.போல் நட்சத்திரம் அ.ம.தி**
**(வடமாகாண அமதிகளின் முன்னாள் முதல்வர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச் செய்தி

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என மிளிரும் ஈழமணித்திருநாட்டின் வடபால் விளங்கும் எழில் கொஞ்சும் கிராமமான அக்கராயன்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள அக்கராயன் மகாவித்தியாலயத்தினை தன்னிகரில்லாத் தனித்துவத்துடன் விளங்கும் பாடசாலையாக மாற்றிய பெருமைக்குரியவர் உயர்திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

மனிதனை மனிதனாக வாழவைக்கும் உயரிய பண்புகளான ஒழுக்க விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட உத்தமர். இக் கிராம மக்களின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு, இப்பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு தன்னாலான சேவையினையும், பங்களிப்பினையும் வழங்கி சிறந்த சாதனையாளர்களாக இக்கிராம மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

அறிவு, தேவை, தேடல் எனும் முக்குறிக்கோள்களுடன் செயற்பட்டு, மாணவர்களின் ஆத்மார்த்த உணர்வுகளையும், கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் சுடர்விட்டு ஒளிரச்செய்த பண்பாளர். தன்னலமற்ற இச்சேவையாளரின் பணி மென்மேலும் ஓங்கவும், ஓய்வுகாலம் சிறப்புறவும், நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் வாழவும் எல்லாம் வல்ல கந்தப்பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசியினை வழங்குகின்றேன்.

" சுபமஸ்து "

**பிரம்மஸ்ரீ பா.பாலச்சந்திரசர்மா**
**பிரதமகுரு,**
**ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்,**
**ஸ்கந்தபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துப்பா

உரும்பிராய் மண்பெற்ற உத்தம புத்திரன்.
கரும்பெனக் கல்விப்பணியேற்றிங்கு வந்தவன்.
வருந்தியே உழைத்து வான்புகழ் கொண்டவன்.
விரும்பிடும் மாணவர்க்கு வரமாய் வாய்த்தவன்.

தடம்பல பதித்திட்ட தனித்துவ நாயகன்.
கடமை கண்ணியமே கருத்தினில் கொண்டவன்.
வாடிடும் பயிருக்கு வான் மழையானவன்.
தேடிடும் மாணவர்தம் நெஞ்சினில் உறைபவன்.

பௌதிக வளங்கள் பெருகிட உழைத்தவன்.
பசுமைப் போர்வை எம் பள்ளிக்குத் தந்தவன்.
பரிசளிப்பாலே ஊக்கம் அளிப்பவன்.
பல்கலை மாணவர்க்குப் பகலவன் போன்றவன்.

கலைஞனாய் நின்று நிதம் கலைகளை வளர்த்தவன்.
கல்வியோடொழுக்கமும் உயர்ந்திடச் செய்தான்.
மலையே எதிர்ப்பினும் நிலையில் தளரான்.
மாண்புறு மாணவர்க்கு மதுரமாய் அமைந்தான்.

ஆசிரியர்களை ஓரணி வைத்தவன்.
ஒற்றுமையே எமக்குப் பலம் என்று உரைத்தவன்.
மாதவம் செய்து பெற்றோம் மாசற்ற தலைவன்.
மனம் போல் மணி விழாக் காணும் நாயகன்.

**வாழிய! வாழிய!! வாழியவே!!!**

- **மலர்க்குழுவினர்** -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு நண்பனை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்....

மணிவிழா நாயகன் திரு. கஸ்பார் மதுரநாயகத்திற்கு வாழ்த்துச் செய்தி எழுத எத்தனித்த வேளையில், பல்கலைக்கழக கடந்தகால பசுமையான நினைவுகள் என் மனதின் ஆழத்திலிருந்து மகிழ்ச்சியாய்த் தோன்றுகின்றன. 1981ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழக நண்பனாக பண்புடன் பழகி, பரிவுடன் பேசி, அடக்கமாய் நடந்து அனைவரின் மனதிலும் இடம்பிடித்த நண்பன் மதுரநாயகம் (மது), கல்வி உலகிலே மாகாணத்திலே நல்ல ஆசானாய், ஆசிரிய ஆலோசகனாய், அதிபராய் சேவையிலே அர்ப்பணிப்புடன் பணியாற்றி, இன்று மணிவிழாக் காண்பதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

1981இல் பல்கலைக்கழகத்தில் நண்பன் மது அவர்களுடனும் அவரின் துணைவியார் பிறேமா அவர்களுடனும் ஏற்பட்ட நட்பானது, 39 ஆண்டுகள் கடந்தும் நட்பின் இளமை குன்றாது, இன்றும் தொடர்கிறது. 1987 ஆம் ஆண்டு ஆசிரியப் பணியினைத் தொடங்கிய நண்பன் மது 1997ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியப் பணியை அர்ப்பணிப்போடு ஆற்றி, கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் அதிபராக 09 ஆண்டுகள் உன்னதமான சேவையினை கல்விப் பணிக்காக வழங்கியுள்ளார். இவர், அதிபராக இருந்த காலத்தில் அக்கராயன் மகாவித்தியாலயத்திலிருந்து வருடாந்தம் மாணவர்கள் பல்வேறு துறைகளுக்கும் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். 2019இல் மாணவன் ஒருவன் மருத்துவபீடத்திற்குத் தெரிவாகி பல்கலைக்கழகம் சென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கிளிநொச்சி மாவட்டமானது, 1990களில் இருந்து உள்நாட்டு யுத்தத்தின் போது பலதரப்பட்ட பேரழிவுகளைச் சந்தித்த மாவட்டமாகும். இக்காலப்பகுதியில் மக்களின் சேவையினை முன்னெடுத்தவர், நண்பன் மதுரநாயகம் அவர்கள், யுத்த சூழ்நிலைகளின் போதும் கிளிநொச்சி மாவட்டத்தை விட்டு அகலாது, மக்களோடு மக்களாக சொந்த இடத்தில் நிலைத்திருந்து பணியாற்றியமை பாராட்ட வேண்டியதாகும்.

இவ்வாறாக 33 வருடங்களாக ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக கல்விப்பணியாற்றி எதிர்கால கல்விச் சமூகத்தினை உருவாக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்த நண்பன் மது அவர்கள் கல்வியோடு விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்குவித்து, சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளையும், அடைவு மட்டங்களையும், ஆளுமை விருத்தியினையும் மாணவர் சமூகத்திற்கு வழங்கி, இன்று ஓய்வு பெறும் நாளிலே அவரின் அன்பு நண்பனாக வாழ்த்தி, அவருடைய எதிர்காலம் சிறக்க இறையாசி வேண்டுகின்றேன்.

'புதிய விண்ணுலகம் புதிய மண்ணுலகம் என்முன்னே நிலைத்திருப்பதுபோல் உங்கள் வழித்தோன்றல்களும் உங்கள் பெயரும் நிலைத்திருக்கும்' என்கிறார் ஆண்டவர்.
(ஏசாயா 66:22)

**அ.பத்திநாதன்**
**பிரதம செயலாளர்**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
Govt.Agent / District Secretary

தொலைபேசி / දුරකථනය / Telephone: 021 - 228 3965

தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 228 3966

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E-mail: gaofficekili@gmail.com

பொதுத்தொலைபேசி / පොදු දුරකථනය / General Telephone: 021 - 228 3945

மேலதிக மாவட்டச் செயலாளர் / අතිරේක දිස්ත්‍රික් ලේකම් / Addl.District Secretary: 021 - 228 5456

மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය,කිලිනොච්චි.
District Secretariat, Kilinochchi

எனது இல / මගේ අංකය / My No:

உமது இல / ඔබේ අංකය / Your No:

திகதி / දිනය / Date: 07.01.2021

# மணி விழாவின் மகிழ்ச்சியில் நிறைவடைவோம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆசிரிய சேவையில் கடந்த 34 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றி நிறைவான சேவையை வழங்கிய திருப்தியோடு ஓய்வு பெற்றுச் செல்லும் அக்கராயன் மகாவித்தியாலயத்தின் முதல்வர் திரு.க.மதுரநாயகம் அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தனது சேவைக்காலம் முழுவதிலும் எமது மாவட்டத்தின் பல்வேறு பின்தங்கிய பாடசாலைகளே அவரது பணியிடமாக இருந்திருக்கிறது. அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், புலோப்பளை, திருவையாறு என கிராமப்புறக் கல்வி மேம்பாட்டில் அவரது உழைப்பைச் செலுத்தியிருக்கின்றார். இந்த உழைப்பு எமது மாவட்டக் கல்வி அபிவிருத்தியில் கிராமியப் பாடசாலைகளை முன் கொண்டு வருவதில் பங்களித்திருக்கிறது. ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதி முதல்வராக, முதல்வராக அவரது வகிபாகம் ஆற்றிய பணிகளால் பல மாணவர்கள் நன்மையடைந்திருக்கின்றார்கள். நல் ஆசிரியராக ஆற்றிய பணிகளுக்கு மாவட்டத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் ஓய்வு காலமும் மகிழ்ச்சியாக அமைய ஆசிகளுடன் நிறைவு செய்கின்றேன்.

**திருமதி றூ.கேதீஸ்வரன்,**
**மாவட்ட செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக் கல்விப் பணிப்பாளரின் இதயத்திலிருந்து.....

பணிகளுள் உயர்ந்த பணியாகக் கருதப்படுவது கல்விப் பணியாகும். இப்பணியிலே தன்னை 34 வருடங்களாக இணைத்துக்கொண்டு ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, அர்ப்பணிப்புடன் பணியாற்றி, வாழ்நாளில் பெரும் பகுதியை கல்விப் பணிக்காகவே அர்ப்பணித்து, இன்று அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வித்துறையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பணியாற்றி, கல்வியில், கலைகளில், இணைபாடவிதான செயற்பாடுகளில் ஒழுக்கத்தில் உயர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களைச் சமூகப் பெறுமானமுள்ள மாணவர்களாக உருவாக்கிய பெருமை திரு க.மதுரநாயகம் அவர்களைச் சாரும். அவர் பணிபுரிந்த பாடசாலைச் சமூகங்கள் அவரைக் காலமெல்லாம் வாழ்த்தும் வகையில் பணிபுரிந்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவரான போதும் முப்பது வருடங்களுக்கு மேலாக கொடிய யுத்தத்தால் இன்னல்களை அனுபவித்த கிளிநொச்சி மாவட்டத்தில் 34 வருடங்கள் விருப்புடன் பணியாற்றியமை பாராட்டுதற்குரியதாகும். போர்க்காலத்தில் பாடசாலைகளும், மாணவர்களும் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கு நகர்ந்த வேளைகளில் சோர்வடையாது, தனது கல்விப் பணியை நிறைவேற்றியிருக்கின்றார்.

நானறிந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகஷ்டப் பிரதேசமாகக் கருதப்படும் கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்தில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார். இப்பாடசாலையில் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த), பெறுபேறுகள் இவருடைய வழிகாட்டலின் கீழ் உயர்வடைந்ததை அவதானித்துள்ளேன். 2019ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் கணித பாடம் 54% இலிருந்து 82%மாக உயர்வடைந்துள்ளது. ஏனைய பாடங்களின் அடைவு மட்டமும் கணிசமாக உயர்வடைந்துள்ளது. இவரின் முகாமைத்துவத்தின் கீழ் ஆசிரியர்களின் கூட்டு வலுவான செயற்பாடுகளின் விளைவாகவே இந்த அடைவு மட்டம் உயர்வடைந்துள்ளது எனலாம்.

2013ஆம் ஆண்டு கிளி/அக்கராயன் ம.வி 1A,B தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டு பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக உயிரியல் விஞ்ஞானத் துறையில் ஒரு மாணவன் மாவட்ட நிலையில் இரண்டாம் நிலையில் சித்தியடைந்து, மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குரியதாகும். வருடம் தோறும் 10ற்கும் மேற்பட்ட மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக்கழகம் செல்வதும் குறிப்பிடத்தக்கது. அதிலும் சிறப்பாக மாவட்டத்தில் முதலாம், இரண்டாம் நிலைகளைப் பெறுவதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

2019 பெறுபேற்றின் அடிப்படையில் வணிகத்துறையில் இரண்டு மாணவர்கள் திறமைச்சித்தி பெற்று ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். கலைத் துறையில் 04 மாணவர்கள் திறமைச்சித்தி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். இவருடைய ஓய்வு காலத்தில் சாதனை படைக்கும் பாடசாலையாக கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம் மாற்றம் பெற்றதை நான் மகிழ்வுடன் பாராட்டுகின்றேன்.

தனது சேவைக்காலத்தின் பெரும்பகுதியை வன்னேரிக்குளம், அக்கராயன், ஜெயபுரம் முதலிய அதிகஷ்டப் பிரதேச மாணவர்களின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துள்ளார். இவரது ஓய்வு காலம் மகிழ்வாக அமைந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்க பல்லாண்டு!

**திரு.கி.கமலராஜன்.**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்மனச் செம்மலே!
# வாழி ! வாழி !

அகவை அறுபதில் மணிவிழாக்காணும் என் பல்கலைக்கழக நண்பர் கஸ்பார் மதுரநாயகத்திற்கு இந்நாளில் செந்தமிழ்ச் சொல்லெடுத்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு மனிதன் எப்படியும் வாழலாம்! ஆனால், இப்படித்தான் வாழவேண்டும் என வாழும் பூமியில் தன் பெயரை முத்திரையாய்ப் பதித்துவிட்டுச் செல்வதே பிறந்த பெயரின் பெருமை!கற்ற கல்வியை மூலதனமாக்கி, அதனையே அறிவாக்கி, தன் அறுவடையைதன் சமூகம் சார்ந்த கல்விப் பயனாளிகளுக்கு தாரைவார்த்து செயற்படும் கஸ்பார் மதுரநாயகம் சொல்லின் செல்வர். அருமைப் பணியாளன். செந்தமிழ்ச் சொல்லோன்.

தான் கற்ற கல்வியை, ஆசிரியசேவையில் 1987.12.14 ஆந் திகதிமுதல் இணைந்து 1997 ஆம் ஆண்டுவரை சுமார் பத்து வருடகாலம் பணியாற்றிய பிறகு அந்தச் சேவையில் இருந்து ஆசிரிய ஆலோசகராக தன் திறமையால் மாற்றிக் கொண்டு நான்கு வருடம் அப்பணியில் பணியாற்றி, 2003 முதல் மாணவச் செல்வங்களை தன் பொக்கிசங்களாகக் கருதி, அதிபராகப் பதவி உயர்ந்து நின்று, தன் சேவையால் உயர்ந்த பொன்மனச் செம்மலாய் மணிவிழாக்காணும் கஸ்பார் மதுரநாயகம் வரலாற்றில் ஒருமுக்கிய இடத்தைப் பெறுகிறார்.

நல் அதிபராக முருகானந்தாக் கல்லூரியில் 2003 முதல் 2008 வரை அவர் பணியாற்றிய காலம் காலத்தின் பொன்னேடாகும். திருவையாறு மகா வித்தியாலயத்தில் 2007 முதல் 2011 வரை பணியாற்றியபோது, இப்பாடசாலையின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சேவையாற்றியதும் பாராட்டுதலுக்குரியதாகும். அதன் பிறகு, 2012 முதல் அக்கராயன் மகா வித்தியால யத்தில் தன்னை அதிபராக இணைத்துக் கொண்டு மாணவச் செல்வங்களினதும், பெற்றோரினதும், சமூகத்தினதும் உயரிய அங்கீகாரத்தைச் சேவையால் பெற்று ஏனைய அதிபர்களுக்கு ஒரு முன்னுதாரணமாயிருந்து சேவையாற்றி வருவது பெரும் பாக்கியமாகும்.

இவர் கடமையாற்றிய அனைத்துப் பாடசாலைகளும் மிகவும் பின்தங்கிய கிராமியப் பாடசாலைகளாகும். பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியிலும் பௌதிக அபிவிருத்தியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, சவால்களை வென்று சாதனை புரிந்த நல் அதிபராக இவரைப் பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடம் கல்வி கற்ற மாணவர்களை க.பொ.த. (சா.த) பரீட்சை, உயர்தரப் பரீட்சை உட்பட அனைத்துத் தேர்வுகளிலும் சாதனைபடைக்க வைத்து, அழகு பார்த்ததுடன் தன்னை கல்வியால் உயர்த்தி, வணிகமாணி பட்டப் படிப்பு, பட்டப்பின் படிப்பு, முதுகல்விமாணி என தன்னையும் உயர்த்தி அழகு பார்த்திருக்கும் இவரை மணிவிழாக்காணும் சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் எனக்கும் பெருமையே!

எனது பல்கலைக்கழக நாட்களில் ஒரு நண்பனாய், ஒரு சகோதரானாய் நின்று பல்வேறு சந்தர்ப்பங்களில் நட்புடன் அன்பு பாராட்டியும் நற் தோழனாய் நின்றகாலம் என்றும் மனதிற்கினியது தான்!

இவர் அகவை அறுபது மட்டுமல்ல சதம் அடித்து, நூற்றாண்டு கண்டு, இன்னும் பலசாதனைகள் புரிந்து, அகவை அறுபது கண்டு செழித்ததுபோல, இணையிலா ஆயிரம் பிறைகாண என்றும் வாழ்த்துவதோடு இன்றுபோல் என்றும் தேடிய அமைதியும் தெய்வப் பார்வையும் பெற்று அறிவார்ந்த சமூகப் பணிதொடர என் வாழ்த்துக்கள்.

**பெ.செல்வராஜ்**
*முன்னாள் ஸ்ரீ லங்காவிற்கான இஸ்ரேல் நாட்டின் தூதுவர்*
*முன்னாள் மேலதிகச் செயலாளர், வெளிவிவகார அமைச்சு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுரத்திற்கு மணிவிழா! நமது நட்பிற்கு மாணிக்கவிழா!

மணிவிழா நாயகன் மது!
நல்லாசிரியன்
நல்லதிபர்
நல்ல தந்தை
நல்ல நண்பன்

மதுவிற்கு மணிவிழா! மதுவின் கல்விச் சேவைக்கு முத்துவிழா! நமது நட்புக்கு மாணிக்கவிழா! அதிர்ந்து பேசாதவன், சிரித்த முகம். கோபத்தையும் சிரிப்பால் வெளிப்படுத்தும் தனித்துவம். நட்பையும் நண்பர்களையும் கொண்டாடும் நட்பின் இலக்கணம். பாடசாலையாயினும் குடும்பமாயினும் நண்பர்களாயினும் கடமைகளை ஈடுபாட்டுடனும் பொறுப்புடனும் செயற்படுத்தி, வெற்றிகாணும் உண்மையான செயற்பாட்டாளன்.

கிளிநொச்சி மாவட்டத்திலும் அதிகஷ்டப் பிரதேசங்களிலேதான் இவன் நீண்டகாலம் பணியாற்றியிருக்கின்றான். 34 ஆண்டுகள் தனது கல்விச் சேவையினை அர்ப்பணிப்புடன் வழங்கி, பல்லாயிரம் மாணவர்களின் செழுமையான எதிர்காலத்திற்கு வழிகோலியவன். சேவையாற்றிய அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களின் சித்திமட்டம் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தவன். கடந்த 9ஆண்டுகளாக அதிகஷ்டப் பிரதேசத்திலுள்ள கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றி வருகின்றான். இக்காலகட்டத்தில் பாடசாலையானது, கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் துரித வளர்ச்சியடைந்து வருவது யாவரும் அறிந்த உண்மை.

ஆண்டுதோறும் பத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிவகுத்த சிறந்த நிர்வாகி. 2013ஆம் ஆண்டிற்தான் இப்பாடசாலையில் கணித விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை வரலாற்றில் 2019ம் ஆண்டு முதன்முறையாக இராசமூர்த்தி ஹேமகிரி எனும் மாணவன் மாவட்டத்தில் இரண்டாம் நிலையில் சித்திபெற்று, மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகியுள்ளமை அதிபரினதும், ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவைக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே ஆண்டில் வர்த்தகத்துறை மாணவி செல்வி.கிருபாலினி பாலச்சந்திரன் அவர்கள் மாவட்டத்தில் முதலாம் நிலைச்சித்தியினைப் பெற்றுள்ளார். அதுமட்டுமன்றி கலைத்துறையில் நான்கு மாணவர்கள் விசேட சித்தி பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். வர்த்தகத்துறையில் இரண்டு மாணவர்கள் விசேட சித்திபெற்று கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். எல்லாமாகப் பதினைந்து மாணவர்கள் இவ்வருடம் பல்கலைக்கழகம் செல்வது வினைத்திறன் மிக்க நிர்வாக முன்னேற்றத்திற்குச் சான்று பகர்கின்றது.

பாரிய இடப்பெயர்வுகளின் போது பாடசாலைகள் இடத்திற்கு இடம் நகர்ந்த போதிலும் சோர்வடையாது, உத்வேகத்தோடு, மாணவர்களின் கல்வி விருத்திக்கு வித்திட்டவன். மணிவிழாக் கொண்டாடத் தகுதிபெற்ற நாயகன் மதுவிற்கு என் வாழ்த்துக்கள். ஒரு மனிதனின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண்ணிருப்பாள். நண்பன் மதுவின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பின்னால் குடும்பவிளக்காய் மிளிர்பவள் மதுவின் மனைவி எனது நண்பி பிரேமா. மதுவிற்கு விழும் மாலைகளும், வாழ்த்துக்களும் பிரேமாவிற்கும் உரித்தாகும். ஏன்? அவன், இவன் என்ற எழுத்து நடைகள் இருக்கின்றதென்றால் நீ எனது உற்ற நண்பனடா.

**கலாநிதி க.சர்வேஸ்வரன்**
**முன்னாள் கல்வி அமைச்சர்**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகனுக்கு மகிழ்வுடன் ஒரு வாழ்த்து.....

பல்திறமை மிக்க நெறியாளன் பரந்துபட்ட மனமும், இளகிய உள்ளமும் உடைய பண்பாளன். அயராத முயற்சியாளன் என்று தன்னை பல்வேறு பரிமாணத்தில் வெளிப்படுத்தி வரும் திரு.க.மதுரநாயகம் அவர்களுடன் பல்கலைக்கழக காலம் முதல் பழக வாய்ப்புக் கிடைத்தது.

1981 தொடக்கம் 1985 வரை வணிகமாணி பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த இவர் மானிடப்பிறவிக்கு மாண்பினை உட்பாய்ச்சும் கல்வி எனும் கருவூலம். நல்லாசிரியர் கைப்பட்டு வெளிப்பட்டால் ஊரும் நாடும் உயர்வடையும் என்பதற்கமைய 14.12.1987ஆம் திகதி முதல் தனது ஆசிரியர் பணியினை ஆரம்பித்தார். இவர் யாழ்ப்பாணத்தினைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும் தனது மகத்தான சேவையினை, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கஷ்டப்பிரதேசங்களிலும் "காலத்தினாற் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, யுத்த காலப்பகுதியில் வழங்கி, வறுமையில் அல்லலுற்ற மாணவர்களின் வளர்ச்சிக்குத் திட சித்தத்துடன் மிகவும் உறுதுணை புரிந்த உத்தமர் என்பதை அவரோடு அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையாற்றியவன் என்ற வகையில் கூறுவதில் உவகையடைகின்றேன். கடமையின் போது, பயனையோ, நற்புகழையோ சிறிதளவும் எதிர்பாராது, தனது தொழிலினைச் செம்மையாக வழிநடத்தியதுடன் இவரது விடாமுயற்சியினால் பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் முது கல்விமாணிப் பட்டங்களையும் பெற்றுக்கொண்ட கல்வியியலாளர்.

இடைவிடாத முயற்சியின் காரணமாக, 1998ஆம் ஆண்டு முதல் ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்றதுடன் சிந்தனைத் தூய்மையுடனும், சேவைக் கடமையுணர்வினாலும் 2003ஆம் ஆண்டு முதல் அதிபராக உயர்வு பெற்று கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி, திருவையாறு மகாவித்தியாலயம் மற்றும் கஷ்டப்பிரதேசப் பாடசாலையான அக்கராயன் மகாவித்தியாலயத்திலும் பணி செய்து ஓய்வு பெறும் காலப்பகுதியில், தனது இணையில்லா சேவையினை ஆற்றியுள்ளார். அக்கராயன் மகாவித்தியாலயத்தில் வருடாந்தம் குறிப்பிட்ட அளவில் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை இவரது மகத்தான சேவைக்கும் அயராத உழைப்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்னும் வாக்கிற்கிணங்க தன்னலம் அற்ற சேவையினால், அவரது பிள்ளைகள் சிறந்த கல்விச் செல்வத்தினைப் பெற்று உயர்வடைந்துள்ளனர். இவரது மகத்தான கல்விப்பணி மற்றும் சமூகப்பணி தொடரவும், அதனால் சகல ஆற்றல்களும் செழித்தோங்கவும் அவரை மணிவிழா நாளில் மனதார வாழ்த்துகின்றேன்.

**பத்மநாதன்**
B.Sc.(B.Ad), MA in Regional Planning, CPFA, CIPFA
**பிரதி பிரதம செயலாளர் – நிதி,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனம்நிறைந்த மணிவிழா வாழ்த்து


மதிப்பிற்குரிய திரு. கஸ்பார் மதுரநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கான இவ்வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மதுரநாயகம் அவர்களை, கல்வி முதுமாணிக் கற்கை நெறியை அவர் மேற்கொண்ட காலத்தில் தான் அறிந்துகொண்டேன். இக்கல்வி நெறியில் அவர்களுக்கு நான் விரிவுரையாளனாக இருந்தேன். அதனால், விரிவுரைகளின் போதும் கலந்துரையாடல்களின் போதும், இவை தவிர்ந்த நேரங்களின் போதும், அவரை நன்கு அறிந்துகொள்ளவும், பழகவும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் கல்வியில் மிகுந்த நாட்டம் கொண்டவராகவும் மாணவர்களின் எதிர்காலம் குறித்து, சிந்திப்பவராகவும், ஆளுமையுள்ள அதிபராகவும் இருந்தமையை என்னால் காணமுடிந்தது.

இன்றைய காலச் சூழலில் மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும், பாடசாலைக் கல்வி குறித்து பல்வேறு இடர்களையும், சவால்களையும் எதிர்கொள்கிறார்கள். பெற்றோர்கள், கொரோனாத் தொற்று நோயின் அச்சத்தின் மத்தியில் தமது பிள்ளைகளின் கல்வி குறித்தும், எதிர்காலம் குறித்தும் கவலையடைகின்றார்கள். இந்நிலையில் ஆசிரியர்களினதும், அதிபர்களினதும், பொறுப்புக்களும், வகைகூறலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இச்சவால்களை வெற்றிகொள்வதற்கு ஆசிரியர்களும், அதிபர்களும் பொருத்தமான மனப்பாங்குகளையும் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலையும் கொண்டு விளங்கவேண்டியது அவசியமாகிறது. இவ்வகையில், அதிபர்கள் வெவ்வேறு தலைமைத்துவ வகிபாகங்களைக் கொண்டு விளங்க வேண்டியவர்களாகவும் வெவ்வேறு தலைமைத்துவப் பாங்குகளை வெளிப்படுத்த வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

இப்பின்னணியில் நோக்குகின்ற போதுதான் மணிவிழாக் காணும் அதிபர் மதுரநாயகம் அவர்களின் சேவையை விதந்து பாராட்ட வேண்டியது கவனத்திற்குரிய தாகின்றது. திரு.மதுரநாயகம் அவர்கள், 1987இல் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றது தொடக்கம் 2021 இல் ஓய்வு பெறும் வரையில் ஏறத்தாழ 34 வருடங்களாக தமது கல்விச் சேவையை எமது சமூகத்துக்கென வழங்கிவந்துள்ளார். ஒருவருடைய வாழ்க்கைவட்டத்தில் (Life Span) 34 வருடங்கள் என்பது ஒரு நீண்ட காலமாகும். பதினாறு ஆண்டுகள் ஆசிரியராகவும், 18ஆண்டுகள் அதிபராகவும் கல்விச்சேவை புரிந்த அவரின் அனுபவங்கள் எமது கல்விச் சமூகத்தில் பகிரப்பட வேண்டியன. கற்கப்பட வேண்டியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழா நாயகன் அதிபர் மதுரநாயகம் அவர்கள் தமது அதிபர் சேவைக்காலம் முழுவதும் கிளிநொச்சி மாவட்டத்திலேயே கடமை புரிந்தமை கவனத்திற்குரியதாகும். இதனால், கிளிநொச்சி மாவட்டம் அவரால் பயன்பெற்றுள்ளதென்றே சொல்லவேண்டும். கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்தில், மதுரநாயகம் அவர்கள் அதிபராகக் கடமைப் பொறுப்பேற்றபின் 2012 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை அக்கராயன் மகாவித்தியாலயத்திலிருந்து ஆண்டுதோறும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பானது, அதிபர் மதுரநாயகம் அவர்களின் அறுவடை என்றே சொல்ல வேண்டும். இக்காலப்பகுதிகளில் இவரின் மாணவர்கள் மாவட்டத்தில் முதல் நிலைகளையும், இரண்டாம் நிலைகளையும் பெற்றிருப்பதும் கூட அவர் வழங்கிய ஊக்கலின் விளைவுகளே.

திரு.மதுரநாயகம் அவர்களின் குடும்பம் கல்விக்கு முதன்மை இடம் வழங்கி பேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள். இவரின் பிள்ளைகள் கல்வியில் உயர்நிலை எய்தியுள்ளார்கள். இவ்வகையில், மதுரநாயகம் அவர்கள் தமது பாடசாலை மாணவர்களையும் தன் பிள்ளைகள் போலப் பேணி, உயர்நிலை அடையச்செய்துள்ளார் என்பதைக் காணும்போது கல்விச் சமூகத்துக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது.

அன்புக்குரிய அதிபர் மதுரநாயகம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் கூட கிளிநொச்சி மண்ணுக்கு அவர் சேவை தொடர்ந்தும் கிடைக்கும் என நான் நம்புகின்றேன். அவர் குடும்ப நலத்துடன் உடல், உள ஆரோக்கியமும் பெற்று பன்னெடுங்காலம் வாழவேண்டும். எமது சமூகத்துக்கு அவரின் பணிகள் பயன்படவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி.த.கலாமணி**
**ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்**
**கல்வியியற்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பிற்கும் சிறு கண்டிப்பிற்கும் வடிவம் அதிபர் மதுரநாயகம்.

எளிமை, நேர்மை, உண்மை, சிறு கண்டிப்பு, நிறைய அன்பு இவை வெறும் வார்த்தைகள் அல்ல. எங்கள் அதிபர் மதுரநாயகம் அவர்களின் வாழ்க்கை நெறி. பெயருக்கு ஏற்றாற் போல் மிகவும் அன்பாகவும் இன்முகத்துடனும் எல்லோருடனும் பழகுவார். மற்றவர்களுக்கு உதவிபுரியும் உயரிய குணமுடையவர்.

தன்னிடம் கல்வி பயிலும் மாணவர்களை, தன் பிள்ளைகள் போலவே கருதி அவர்களின் மீது மிகுந்த அக்கறையெடுத்து, கல்வி கற்பிப்பதுடன் அக்கராயன் மகாவித்தியாலயம் போன்ற கிராமப்புறப் பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றிய காலங்களில் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் அக்கறையும் கருணையும் கொண்டு வழிநடத்துவார். தனக்கு கீழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் பண்பாகவும் மரியாதையாகவும் நடாத்துவதில் சிறந்த மனிதர் இவர்.

எனக்கு இவரைப் பல காலமாகத் தெரியும். கிளிநொச்சி மாவட்டத்தில் எமது கல்விச் சேவையினை ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை எம்முடன் சேர்ந்து கல்விச் சேவையினைச் செய்து வருகின்றார். எமது மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறையுடைய நல்லாசான். கிளிநொச்சி மாவட்டத்தின் பல பின்தங்கிய கிராமங்களில் தனது கல்விப் பணியை மிகவும் சிறப்பாகச் செய்து, அங்குள்ள மாணவர்களை இச்சமுதாயத்தில் நல்ல பிரஜைகளாக உருவாக்கிய பெருமை மதுரநாயகம் அதிபர் அவர்களைச் சாரும்.

இவர் தன் பணியினைச் செய்ய என்றும் சளைத்ததும் இல்லை. களைத்ததும் இல்லை. எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் சிறந்த மனிதர். மாணவர்களுக்கு அறிவுரை சொல்வதில் நல்லாசானாகவும் கண்டிப்பதில் சிறந்த அதிபராகவும் பாசம் காட்டுவதில் அன்பான தந்தையாகவும் நடந்து கொள்வார். இவரின் வழி நடத்தலிலும், கற்பித்தலிலும் உருவாகிய மாணவர்கள் பலர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர் பதவிகள் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரவு பகல் மாறுகின்ற இயற்கைக்கு ஓய்வு ஏது? இவ்வாறான இயற்கைக்கு ஓய்வு என்றால் எவ்வளவு ஆச்சரியமோ அவ்வாறே உங்கள் ஓய்வினைக் கேள்வியுற்றதும் எனக்குத் தோன்றியது.

தங்களது சேவை தொடர்ந்தும் கிளிநொச்சி மண்ணுக்குத் தேவை. ஓய்வு காலத்திலும் உங்கள் சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளும் கொடுக்க வேண்டும் என பிரார்த்திப்பதுடன் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr.த.சத்தியமூர்த்தி**
**பணிப்பாளர்,**
**யாழ் போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன்...

கிளிநொச்சி கல்வி வலயத்தில் அமைந்துள்ள அக்கராயன் மகாவித்தியாலயத்தில் முதல்வராகப் பணிபுரிந்து, 27.01.2021ல் தனது 60ஆம் அகவையில் ஓய்வு பெறும் மதிப்பார்ந்த திரு. கஸ்பார் மதுரநாயகத்தை வாழ்த்துவதில் அகமகிழ்வெய்துகின்றேன்.

திரு.க.மதுரநாயகம் அவர்கள் நான் ஆசிரியராக, அதிபராக கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலங்களிலே பல்வேறு வகைகளில் என்னோடு சேர்ந்து பணியாற்றிய ஒருவராவார். பல்வேறு வசதியீனங்களோடு விளங்கிய கிளிநொச்சி கல்வி வலயத்தில் மிகவும் கஷ்டமான பாடசாலைகளில் பணியாற்றிய ஒருவராவர். அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டு, பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த பாடசாலைகளில் அதிபராகப் பணியாற்றியவர்.

வளப்பற்றாக்குறைகளுடனும் போக்குவரத்து வசதிகளுமற்ற வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஒரு வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராக, 14.12.1987 ஆம் ஆண்டில் தனது கடமையை ஏற்றுக்கொண்டவர். கடமை ஏற்று ஒரு அதிபராகப் பணிபுரிய எவரும் வருகை தர விரும்பாத போது, பளை றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பதில் அதிபராகவும் பிரதி அதிபராகவும் பணிபுரிய சம்மதம் தெரிவித்து, 01.01.1993 இல் கடமையேற்று பங்குத்தந்தையாராலும் பொது மக்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர்.

இவரது பல்வேறு ஆற்றல்களை அவதானித்த கல்விப் பணிப்பாளர், 1996 ஆம் ஆண்டில் பூநகரி மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபராக நியமித்தார். இந்நிலையில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் வர்த்தக பாடத்திற்கான ஒரு சேவைக்கால ஆலோசகர் தேவைப்பட்ட பொழுது அறிவும் ஆற்றலும் ஆசிரியர்களை வழிநடத்தும் பண்புமிக்க இவரை வர்த்தக பாட ஆலோசகராக 1998ஆம் ஆண்டு கல்வித்துறையினர் நியமனம் செய்தனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் இருந்து வர்த்தகத் துறைக்கு பலர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட, ஆசிரியர்களை வழிநடத்திய முறையை இட்டு, பலர் பாராட்டியமையை நான் அறிவேன். இந்நிலையில் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் பிரபல்யம் பெற்ற முருகானந்தா மகாவித்தியாலயத்திற்குப் பல்வேறு ஆற்றல்களுள்ள ஒரு அதிபரைத் தேடிய பொழுது, எம் கண் முன்னே நின்றவர் திரு.க.மதுரநாயம் ஆவார். இந்நிலையில் கிளிநொச்சி கல்வி வலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளராக இருந்த நான் முருகானந்தா ம.வி யின் அதிபராக இவரை 2003இல் நியமனம் செய்தேன். கிளிநொச்சி கல்வி வலயத்தில் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான காலத்தில் அதிபராகப் பணிபுரிந்த சிறப்புக்குரியவரானார். இந்நிலையில் ஒரு குடியேற்றத்திட்டத்தின் மத்தியில் பௌதீக வசதியீனங்களுடன் விளங்கிய திருவையாறு மகா வித்தியாலயத்திற்கு ஒரு அதிபர் தேவைப்பட்ட பொழுது அப்போதைய கல்விப் பணிப்பாளரால் 2007ஆம் ஆண்டு திருவையாறு மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் போக்குவரத்துப் பிரச்சினைகளால் அதிபர்கள் பதவி ஏற்க விருப்புத் தெரிவிக்காத நிலையிலும் தான் கடமை ஏற்பதாகத் தெரிவித்து, அக்கராயன் மகாவித்தியாலயத்தின் அதிபராக 2012ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பணிபுரிந்து வருகின்றார்.

திரு.க.மதுரநாயகம் அக்கராயன் ம.வியின் அதிபராகப் பணியேற்ற 2012ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்சேர்வு வீதம் அதிகரித்ததோடு, வலயத்தில் விளையாட்டுத்துறையிலும் கலை, கலாசார நிகழ்வுகளிலும் மாணவர்களது திறமைகள் வெளிக்கொணரப்பட்டன. மாணவர்களது பரீட்சைச்சித்தி வீதங்கள் உயர்வடைந்து செல்வதை பலரும் அவதானித்து பாராட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பல்வேறு பரிமாணங்களை உடைய அதிபர்கள் வரிசையில் திரு.க.மதுரநாயகம் குறிப்பிட்டத்தக்கவர். மாணவர்களை வழிநடத்தும் முறைமை, ஆசிரியர்களை தனது குடும்ப உறுப்பினர் போல் அரவணைக்கும் தன்மை, வலயப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகளோடு நடந்து கொள்ளும் தன்மை என்பன அவரது தனித்துவத்திற்கும், முன்னேற்றத்திற்கும் காரணங்களாக அமைந்துள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் கல்வியையும், மாணவர்களையும் வழிநடத்திய சிறந்த அதிபர்கள் வரிசையில் ஒருவரான திரு.கஸ்பார் மதுரநாயகம் 27.01.2021இல் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது கல்விச்சேவைக்கு ஒரு இழப்பேயாகும்.

இந்நிலையில் அவரது சேவைகளுக்காக எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, தனது ஓய்வு காலத்தில் நீடித்த ஆயுளுடனும், சுகதேகத்துடனும், குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.ப.அரியரத்தினம்**
**முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும்,**
**மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும்.**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்முக ஆளுமை படைத்த அதிபர் மதுரநாயகம்...!

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நல்லாசிரியராகவும், ஆற்றல் ஆளுமையுள்ள ஓர் அதிபராகவும் கடமையாற்றி, தனது கல்விச் சேவையின் ஒருபகுதியை நிறைவுசெய்து, இன்னுமொரு பணியை மேற்கொள்வதற்குத் தயாராகிவரும் திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்களின் மணிவிழா அக்கராயன் மக்கள் ஒன்று சேர்ந்து எடுக்கும் விழாவாக அமைந்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

கிளிநொச்சி வலயத்தில் மிகவும் கஸ்டமான ஒரு பாடசாலையாக விளங்கும் வரலாற்றுப் புகழ்பெற்ற தமிழ் மன்னன் அக்கராயனின் பெயரில் இயங்கும், அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக அதிபராகச் சிறந்த முறையில் கடமையாற்றி, கிளிநொச்சியில் முன்மாதிரியான ஒரு கல்லூரியாகத் திகழவைத்த பெருமைக்குரிய ஓர் அதிபராகவே அவரை நான் பார்க்கின்றேன்.

நான் வடமாகாணக் கல்வி அமைச்சில் கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளராகக் கடமையாற்றிய பொழுது அப்போதைய கல்வி அமைச்சருடன் இந்தக் கல்லூரிக்கு விஜயம் செய்தபொழுது, அவரது பன்முகப்பட்ட ஆளுமையை அன்று அவதானித்தேன். நிகழ்வுகளை அவர் ஒழுங்கு செய்தபாங்கும், தனது ஆசிரியர்களிடம் உரிய பொறுப்புக்களைக் கொடுத்து, அவற்றின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை ஒழுங்கமைத்தும், அவதானித்தும். நெறிப்படுத்தியும், வழிகாட்டியும், செயற்பட்ட அதிபர் திரு.மதுரநாயகம் அவர்களை நான் பல வருடங்களுக்கு முன்னரேயே அறிந்து பழகியுள்ளேன். அதேவேளை மாணவர்களின் ஒழுங்கு, கட்டுப்பாடுகள் என்பனவும் சிறப்பாக இருந்தமை போன்ற செயற்பாடுகளே ஒரு பாடசாலையின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளுக்கு உதாரணமாகும். அந்த வகையில், திரு.மதுரநாயகம் அவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்தை ஒரு சிறந்த வினைத்திறன் மிக்க பாடசாலையாக வளர்த்திருக்கின்றார்.

ஆரம்பத்தில் அவருடைய மனைவி பிறேமா மதுரநாயகம் அவர்கள், கிளிநொச்சி வலயத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய பொழுது நான் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழிக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில், தமிழ் மொழித் தின விழாக்களிலும் போட்டிகளிலும் பரீட்சைப் பெறுபேறுகளிலும் அவர்காட்டிய ஆர்வமும் பங்கேற்பும் எங்கள் ஒவ்வொருவரையும் ஈர்த்தது. அதற்கெல்லாம் காரணமாக விளங்கி ஊக்குவித்தவரே அவரது கணவர் மதுரநாயகம் தான் என்பதை அறியும் பொழுது இரட்டிப்பு மகிழ்ச்சியும், பெருமையும் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று சொல்வதற்கும் மேலாக இருவரினது வெற்றிக்குப் பின்னாலுமே, இருவருமே ஒருவருக் கொருவர் காரணமாக இருந்திருக்கின்றனர் என்பதை திரு.மதுரநாயகம் அவர்களின் ஆளுமைமிக்க நிர்வாக முறைமைகளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

அக்கராயன் மகாவித்தியாலயம் யுத்தத்தின் வடுக்களினால் பல பின்னடைவுகளைச் சந்தித்திருந்த நேரத்தில், அவர் அதிபராகப் பொறுப்பேற்ற நாளில் இருந்து, அந்தப் பாடசாலை படிப்படியாக நகரப்புறப் பாடசாலைகளுக்கு ஈடாக வளர்ச்சியடைவதற்கு அவரது நிர்வாகத் திறனும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான பங்கேற்புமே காரணம் என்பதை மறந்துவிட முடியாது. அந்தளவுக்குத் தனது ஆசிரியர் குழுவினரைத் தனது அன்பான செயற்பாட்டினால் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததனாலேயே இன்று அக்கராயன் மக்கள், ஆசிரியர்களுடன் ஒன்றிணைந்து அவருக்கான மணிவிழாவை எடுக்கின்றார்கள்.

இன்று, பாடசாலை வாழ்க்கையில் இருந்து அவர் பெறவுள்ள ஓய்வானது கல்லூரி என்ற கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள், கோவைகள் போன்ற சடப்பொருட்களை முகாமை செய்தமைக்கான ஓய்வே அன்றி, கல்விக்கான ஓய்வு அல்ல என்பதை திரு.மதுரநாயகம் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்தக் கல்லூரியில் இருந்து பிரிந்து சென்றாலும், தொடர்ந்தும் கிளிநொச்சி மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் தமது பங்களிப்பை வழங்குவதற்கு தன்னைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும். அதன் மூலம் அவர் அடையவுள்ள மனத்திருப்தியானது, இதுவரை பெற்றிருந்த மனமகிழ்ச்சி என்பவற்றை விட மிக உயர்வானதாகவும், பெறுமதியானதாகவும் இருக்கும். அதனையே கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் சமூகமும் அவரிடம் இருந்து எதிர்பார்க்கின்றது..

தனது அறுபதாவது அகவை நிறைவைச் சிறப்பாக முடித்து, புதிய சகாப்தத்தைப் படைப்பதற்குத் தயாராகிவரும் திரு.மதுரநாயகம் அவர்கள் அவருடைய மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் இணைந்து, மகிழ்ச்சியாக, நோய்நொடியின்றி நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**ந.அனந்தராஜ்** B.A.(Hons.), M.A.,
Dip-In-Edu.,Dip-In-Journalism,
SLPS,SLEAS,
**முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகத்தான மணிவிழா வாழ்த்து

பள்ளி முதல்வர் திரு.க.மதுரநாயகம் அவர்கள் 27.01.2021 அன்று தனது 60ஆவது வயதில் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறும் நிலையில், அவர்களுக்கான மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த வாய்ப்புக்கு பெரிதும் மனமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உரும்பிராயில் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்று, யாழ் பல்கலைக் கழகத்தில் வர்த்தகப் பாடத்தில் பட்டம் பெற்று 1986ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக தனது அரசசேவையை ஆரம்பித்தார். அடுத்த ஆண்டிலேயே தனது ஆசிரியப்பணியை கஷ்டப் பிரதேசமான கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் பணியாற்றத் தொடங்கினார். பத்து வருடங்களுக்கு மேலாக பட்டதாரி ஆசிரியராகத் தனது கற்பித்தல் பணியை சிறப்பாக ஆற்றி, போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரிய ஆலோசகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1998 - 2002 காலப்பகுதியில், திரு.க.மதுரநாயகம் அவர்கள் ஆசிரிய ஆலோசகராகக் கடமைபுரிந்த காலத்தில் நானும் அவருடன் சேர்ந்து வலயக்கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்த காரணத்தினால் அவரின் திறன்களை என்னால் நேரடியாக இனங்காண முடிந்துள்ளது. வலயமட்ட குழு மேற்பார்வை மற்றும் வலய மட்ட கண்காணிப்புக் குழு(ZMP) மேற்பார்வை நடவடிக்கையின் போது, மாவட்டத்தின் மிகவும் பின் தங்கிய தொலைதூரப் பாடசாலைகளுக்கு பணி நிமித்தம் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்து பணி செய்தமையை இன்னும் நான் மறக்கவில்லை.

மணிவிழா நாயகன் இவ்வாறாக, அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு, 2003 - முதல் 2021வரை கிளிநொச்சி மாவட்ட உயர்தரப் பள்ளிகளின் அதிபராக 17 வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்துள்ளார். நல்ல ஆளுமை மிக்க அதிபராக நிர்வாகத்திலும் முகாமைத்துவத்திலும் நல்ல அறிவைக் கொண்டிருந்த இவர் மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டுக்கு பெரும் பங்கை ஆற்றியுள்ளார். குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு வழிகளிலும் அயராது உழைத்துள்ளார். அவர்களின் வாழ்வுக்கு ஒளியூட்டியுள்ளார். 2008, 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில், எமது மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு காரணமாக சகல நிறுவனங்களும் சகல மக்களும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இவர் தனது உயிரையும் துச்சமாக மதித்து பாடசாலையின் விலைமதிக்க முடியாத சொத்துகள், சான்றிதழ்கள், தளபாடங்கள் என்பவற்றைப் பாதுகாத்து பாடசாலையை நடத்த உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 - 2010 மீளக் குடியமர்ந்த காலத்தில் மீண்டும் எமது கல்விச் சேவையை பூச்சிய நிலையிலிருந்து மீளவும் ஆரம்பிக்கத் தொடங்கினார். நான் கல்விப் பணிப்பாளராக இருந்த காலம் முழுவதும் திரு.க.மதுரநாயகம் அவர்கள் எமது மாவட்டப் பள்ளிகளின் அதிபராகப் பொறுப்புடன் பணியாற்றி, எமது மாவட்டத்திற்கு நற்பெயர் ஏற்படக் காரணமாய் அமைந்தவர். மிகவும் கஷ்டப் பிரதேசத்தில் வளப்பற்றாக்குறையுள்ள அக்கராயன் ம.வியில் அதிபர் பொறுப்பை ஏற்ற திரு.க.மதுரநாயகம் அவர்கள் 8 வருடங்களுக்கு மேலாக அயராது அர்ப்பணிப்புடன் பணியாற்றி, இப் பள்ளியை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். இப்பள்ளியில் வருடாந்தம் 10 மாணவர்களுக்குக் குறையாது பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும் அளவுக்கு அளப்பரிய பணியாற்றி அப்பள்ளியிலேயே ஓய்வு பெறுவது அவருக்கு கிடைத்த பெரும் பேறாகும்.

யாழ் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருந்த போதும், கிளிநொச்சி மாவட்டத்தில் 33 வருடங்களுக்கு மேலாக கல்விப் பணியாற்றி அந்த மாவட்டத்திலேயே ஓய்வு பெறும் திரு.க.மதுரநாயகம் அவர்களை மனம் திறந்து பாராட்டி, நன்றியுடன் வாழ்த்துகின்றேன். திருமதி.பி.மதுரநாயகம் எமது கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக என்னுடன் பல வருடங்களாகச் சேர்ந்து பணிபுரிந்த காரணத்தினாலும் அவர்களுடைய நட்பு எமது குடும்ப நட்பாக மாறியது.

இவர்களுடைய சேவைக்குச் சான்று இவர்களின் பிள்ளைகளின் வளர்ச்சியிலிருந்தும் காணமுடியும். மணிவிழா நாயகன் அவர்கள் தம் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் உடல் உள நலத்துடன் மகிழ்வுடன் எல்லா நல்ல வரங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திரு.க.முருகவேல்.**
**முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**(ஓய்வுநிலை)**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுரமணி வாழ்த்து

அதிபர் மதுரம் பெயருக்கேற்ற மதுரமான அதிபர். திரு கஸ்பார் மதுரநாயகம் அவர்களின் அறிமுகம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் அவர் வணிகக்கல்விக்குரிய சேவைக்கால ஆலோசகராகக் கடமையாற்றிய காலத்தில் ஏற்பட்டது. .B.Com பட்டதாரியான இவர் தனது ஆசிரியர், அதிபர் சேவைக்காலத்தில் எமது மாவட்ட, மாணவர் கல்வி அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமையை துணிந்து கூறமுடியும். 'தினமும் கற்காத ஆசிரியர் தினமும் கற்பிக்க முடியாது' என்ற தத்துவத்திற்கமைய தனது சேவைக்காலத்தில் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி ஆகிய பட்டங்களையும் பெற்றுக்கொண்டார்.

2003ஆம் ஆண்டில் ஒரு நாள் வலயக் கல்விப் பணிமனை பதவி நிலை அலுவலர் கூட்டம் நடைபெற்றபோது, கிளி/முருகானந்தா கல்லூரிக்கு ஓர் அதிபரை நியமனம் செய்வதற்கான தேவை எழுந்தது. அப்போது சகல பதவிநிலை அலுவலர்களாலும் ஒருமனதாக உச்சரிக்கப்பட்ட பெயர்தான் திரு.மதுரநாயகம். அவரை அழைத்து, சம்மதம் கேட்டபோது, அவர் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். அவரது சேவையால் முருகானந்தாவும் சிறப்புப் பெற்றது. இன்று முருகானந்தா கல்லூரி இயங்குகின்ற வளாகத்தில் முதலாவது இருமாடிக்கட்டடம் அமைத்த பெருமை அவருக்குரியது. நான் வலயக் கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் செயற்பாட்டுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்தபோது. 'நீக்கோட்' நிறுவனத்தால் வழங்கப்படவிருந்த 110m x 25m இருமாடி கட்டடத்தை முருகானந்தாவுக்கு ஒதுக்கீடு செய்தேன்.

முருகானந்தாவின் பழைய வளாகத்தில் இடம் இல்லாத நிலையில் இக்கட்டடத்தை எங்கே அமைப்பது என்ற சர்ச்சை எழுந்தது. அதிபர் அவர்கள் என்னை அணுகிய போது, மேனாள் அரச அதிபர் பொன்னம்பலம் ஐயா அவர்களால் மாணவர் விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு மட்டும் பயன்படுத்துவதற்கென வழங்கப்பட்ட காணியில் அமைக்கும்படி கூறினேன். வலயக் கல்விப்பணிமனையில் என்னைத்தவிர எவரும் விரும்பியிருக்காத நிலையில், துணிவுடன் எனது கோரிக்கையை ஏற்று அந்த வளாகத்தில் இருமாடிக்கட்டடத்தை அமைப்பித்தார். இது வரலாறு. இன்று முருகானந்தா அந்த வளாகத்தில் பல மாடிக்கட்டடங்களுடன் பட்டொளி வீசி பிரகாசிக்கின்றது. இவர் மிக கஷ்டமான காலங்களில் கிளிநொச்சி மாவட்ட கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கால ஆலோசகராக கடமையாற்றிய காலத்தில், ஈருருளியில் இவர் மாவட்டத்தின் சகல பாடசாலைகளுக்கும் சென்று கடமையாற்றியமையை நேரில் கண்டிருக்கின்றேன். உயர்தரவகுப்புக்களுக்கு பயிற்சித் தேர்வை நடாத்த தொண்டமனாறு வெளிக்கள கல்வி நிலைய வினாத்தாள்கள் கிடைக்காத காலத்தில் வலய பரீட்சைச் சபையின் பொறுப்பை ஏற்று, இங்கே எமது வளவாளர்களால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களை ஈருருளியில் சகல பாடசாலைக்கும் எடுத்துச்சென்று விநியோகம் செய்தமையை மறக்க முடியாது. இவர் கடமையாற்றிய பாடசாலைகள் அனைத்திலும் பரீட்சைப் பேறுபேறுகளை இவர் உயர்த்தியுள்ளார். அக்கராயன் மகா வித்தியாலயத்தில் பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பி, பட்டதாரிகளாக்கிய பெருமை இவருக்குரியது.

இந்த ஆண்டும் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் இருந்து க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவாகியிருப்பது சிறப்பம்சம். கடந்த சில ஆண்டுகளில் அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பௌதீக காட்சிகள் மாற்றம் பெற்று வனப்புடன் காட்சியளிக்கின்றன. இதன் பெருமை இவரைச் சாரும். நிறைவான 34 ஆண்டுகள் கல்விசேவையாற்றி அரச சேவையில் இருந்து பணி ஓய்வு பெறுகின்றார். அகவை அறுபதில் மணிவிழாக் காண்கின்றார். மணிவிழா நாயகனை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் மன நிறைவடைகின்றேன்.

வாழிய பல்லாண்டு!!!

**றோட்டறியன் க.ம. பத்மநாதன்** PHF
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஓய்வு நிலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமைத்துவ வழியில் நண்பன் மதுரநாயகம்.



'நம்மைப் பற்றி நமக்குத் தெரியாத விடயங்களை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் சிறந்த கருவிதான் நட்பு.' எங்கோ எப்போதோ வாசித்த வரிகள் நண்பன் மதுரநாயகத்தைப்பற்றி எழுத நினைக்கையில் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. ஞாபகவரிகள் மதுவின் (மதுரநாயகத்தை நாங்கள் மது என்றே உரிமையுடன் அழைப்போம்.) நட்பைவிட நான் இரசித்த மதுவின் செயலாற்றுகையைச் சொல்லவே அதிகம் ஆசைப்படுகின்றது.



கல்வியியல் துறைசார்ந்த எனது பார்வைகள், மதுவின் கல்விசார் செயலாற்றுகையையே அதிகம் பேச முற்படுவது வியப்பல்ல. மறுபக்கத்தில் கல்வி பற்றித்தான் என் அறிவும் செல்கின்றது. ஆகவே அது பற்றி சற்றுத் துணிவாகப் பேசமுடியும். கல்வி என்பது ஒரு மக்கள் குழுவினரின் வாழ்க்கையின் நோக்கங்களும் பழக்க வழக்கங்களும் அடுத்த தலைமுறையினரிடம் ஒப்புவிக்கப்படுவதற்கான வழிமுறைகள் எனலாம். ஒருவர் சிந்திக்கும் முறை உணரும்முறை, செயற்படும்முறை என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்தும் அனுபவமாக கல்வியை நாம் கருதலாம். அத்தகைய பெருமைமிகு கல்விசார் துறையில் பணியாற்றி இன்று உத்தியோக பூர்வமாக ஓய்வுபெறும், மதுவின் வாழ்க்கையின் பெரும்பகுதி கல்வியோடு சென்றது பெருமைக்குரியதாகும்.

'Leader is the capacity to translate vision into reality'

கற்றல் என்பது ஒருவருடைய அறிவு, திறன்கள், விழுமியங்கள், உலகப்பார்வை, என்பவற்றைப் பெற்றுக்கொள்ள, மேம்படுத்த அல்லது அதில் மாற்றங்களை உட்படுத்தக் கூடிய அறிகைசார், உளவியக்கம்சார், மனவெழுச்சிசார் மற்றும் சூழல்சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குகளையும் அனுபவங்களையும் ஒன்று சேர்க்கின்ற செயன்முறையாகும். கற்றல் கற்பித்தலோடு உறவாடிய மதுவின் வாழ்க்கை, நடத்தை மாற்றம் பற்றிய சவால்களை மிக துல்லியமாக இனங்கண்டு எதிர்கொண்டது, வெற்றி கண்டது. பாடசாலை என்பது திறன்களையும் அறிவையும் மனப்பாங்கையும் மாணவர்க்கு வழங்க கட்டப்பட்ட, அல்லது அதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு நிர்வாக அலகு எனலாம்.

தலைவர் என்பவர் இன்னொருவருடைய நடத்தையை மாற்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துபவர். அல்லது உடன்பாடான விதத்தில் ஏனையோரில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த ஊக்குவிக்கும் செயற்பாட்டில் ஆற்றலை வெளிப்படுத்துபவராக இருப்பவர் என்று கூறலாம்.



பாடசாலை அதிபராக கல்வியை வழங்கும் நிறுவன தலைவராக மதுவின் பணிகள் அளப்பரியவை. 'அவரைப் பின்பற்றுவோர் உள்ள ஒருவர்' என்பதே தலைவருக்கான ஒரே வரைவிலக்கணமாகும். மது தனது மென்மையான வழிமுறைகளால் கல்விக்கான தலைமைத் துவத்தை வழங்கினார். தன்னைத் தொடரும் பலரைக் கொண்ட தலைமைத்துவத்தின் வரைவிலக்கணமாகத் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

மாணவர்களது விருத்தியின் ஒவ்வொரு அம்சங்களிலும் கவனஞ் செலுத்தி, உயர்தரத்திலான கல்வியை வழங்கி அவர்களது அறிவு, சிந்தனை, செயற்பாடுகளை மேம்படுத்தும் அல்லது அதிகரிக்கும் செயற்பாடுகளில் தன்னைப் பிணைத்துகொண்டவர். மதுவின் தலைமைத்துவம் ஆதரவு நிறைந்த மானிட தலைமைத்துவம் ஆகும். மதுவுடன் உரையாடும் போதெல்லாம் மது, மாணவர்களுக்கு உதவும் முறைகள் பற்றியே அதிகமாகத் தனது கருத்துக்களைப் பதிவு செய்வார். வறிய மாணவர்களுக்கு உதவக்கூடிய வழிமுறைகள் பற்றியே அவரது கவனம் அதிகமாக இருக்கும். வறுமை கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது என்பதிலான மதுவின் இலட்சியப்போக்கு என்னைப் பெரிதும் ஈர்த்ததொரு விடயமாகும்.



மனதைக் கட்டுப்படுத்துங்கள் (Master your mind), உடலைக் கட்டுப்படுத்துங்கள் (Master your body), உறவுகளை மேம்படுத்துங்கள் (Master your relationship), செல்வத்தைச் சரியாக நிர்வகியுங்கள் (Master your Finance), நேரத்தை சரிவர உபயோகியுங்கள் (Master your time)

மேற்கண்ட ஐந்து பண்புகளையும் மது தனது வாழ்க்கையில் நன்கு கடைப்பிடிப்பதை நான் நன்கு அறிவேன். எவ்வளவு பிரச்சினையாக இருந்தாலும் உடனே மன அமைதியாகுதல், நல்லதொரு உறவுவட்டத்தினைப் பேணுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனமாகவும், எளிமையாகவும் வாழுதல், நேரத்தைச் சிறப்பாக கையாளுதல் என்பன மதுவின் வாழ்க்கை காட்டும் உதாரணங்களாகும்.

'Leadership is not a position or a title it is action and example'

மதுவின் தலைமைத்துவம் பற்றி எனது மாணவர்களாகிய ஆசிரியர்கள் என்னிடம் உரையாடுவது உண்டு. அவர்களின் உரையாடல்களிலிருந்து சிலதுளிகள் வருமாறு எங்கள் அதிபர் செயன்முறைக்கு சவாலாக இருப்பவர். சந்தர்ப்பங்ளை தேடுபவர் பரீட்சித்துப் பார்ப்பவர், இடர்களை ஏற்பவர், மற்றவர்களை தமது இயலளவுக்கு மேலாகச் செல்லத் தூண்டுபவர்.பொதுவாக எதிலும் தூர நோக்கினை முன்னெடுப்பவர். ஏதிர்காலத்தில் தம்மைக் கட்டியெழுப்பும் நோக்கினை கொண்டிருப்பதுடன் புதிய போக்கில் செல்வதற்கு எங்களை இணைத்துக் கொள்வார். நாங்கள் செயற்படுவதற்கு அதிபர் இடமளிப்பவர். ஏனையோரை வலுப்பெறச் செய்வதோடு ஒத்துழைப்பதை அதிகரிப்பவர். வழிகாட்டும் மாதிரியாக இருப்பவர். அவரின் தலைமைத்துவ நடத்தை காரணமாக ஏனையோருக்கு உதாரணமாக விளங்குபவர். சிறு வெற்றிகளைத் திட்டமிட்டு மற்றவர்களை ஊக்கப்படுத்துவார். எங்கள் இன்ப துன்பங்கள் பற்றி இதயசுத்தியோடு உரையாடுவார்.



வாழ்க்கையிலான தலைமைப் பண்பு என்பது குடும்பத்தின் தலைமைப்பண்பிலிருந்து தொடங்குகின்றது. 'எமது வாழ்வின் நிரந்தர அர்த்தம் எமது அன்றாட வேலைகளில் எமக்கு கிடைக்கும் வெற்றிகளில் மட்டும் தங்கியிருக்க வில்லை. அது எமது குழந்தைகளில், நாம் உருவாக்கும் நற்பண்புகளில் தங்கியுள்ளது' என ஒரு சமூகவியலாளர் கூறுகின்றார். மேற்கண்ட கூற்றினை மெய்ப்பிக்கும வகையில் மதுவின் குடும்ப தலைமைத்துவம் அமைகின்றது.

'பிள்ளைகளில் சிறுவயதில் தென்படும் அறிகுறிகளின்படியே அவர்கள் வளர்வதற்கு எமது குடும்ப தலைமைத்துவம் உதவியாக அமைந்தால் மேதைகளைத் தவிர வேறொருவரும் நம்மிடையே இருக்க முடியாது' என "கெதே" என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார். மது தனது பிள்ளைகளை உயர்நிலைக்கு இட்டுச்செல்ல வெளிப்படுத்திய தலைமைத்துவம் கல்வியில் பின்தங்கிய பிரதேசத்தில் மருத் துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும் பிள்ளைகள் மிளிர வழிவகுத்துள்ளது. உலகிலேயே மிக உயர்ந்த தலைமைத்துவம் குடும்பத் தலைமைத்துவமே ஆகும். குடும்ப தலைமைத்துவம் சிறப்பாக அமைந்தால் மற்றையவை சிறப்பாக அமையும் என்பதை எமக்குப் புலப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'A person always doing his or her best becomes a natural leader just by example'

வாழ்க்கையில் தலைவனாக இருப்ப தென்பது இல்லத்தில் தலைவனாக இருப்பதிலிருந்து தொடங்குகின்றது. தலைமைத்துவம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அடிப்படை யானது. குடும்பத்தின் எதிர்காலம் பற்றிய மனக்காட்சியொன்றை உருவாக்கி, அம்மனக்காட்சியை நோக்கி குடும்ப உறுப்பினர்களை இயக்குவதற்கு குடும்ப தலைமைத்துவம் அவசியமானது. குடும்ப தலைமைத்துவமானது, குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினைப் பூரணமாகப் பெற்று குடும்ப அங்கத்த வர்களின் இணக்கத்துடன் குடும்பவிருத் திக்கான செயற்பாடுகளில் பங்கேற்றுச் செயற்பட குடும்ப அங்கத்தவர்களை வழிநடத்தும் பொறுப்பினையுடையது.



நண்பன் மது பல்கலைக்கழக வாழ்க்கையிலும், கற்றல் கற்பித்தல் செயன்முறையிலும், பாடசாலை அதிபராக தலைமைத்துவத்திலும், குடும்ப வாழ்க்கையிலும் தனது தலைமைத்துவத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஒருவர்.

'My best success came on the heels of failures'

மதுவின் வாழக்கை நிறைந்த சவால்களைக் கொண்டது. மது கடந்துவந்த பாதை கரடுமுரடானது. வறுமை பற்றி நன்கு பரிச்சயமான மது எல்லா சவால்களையும் புன்னகையுடன் எதிர்கொண்டு வாழ்பவர். யாருக்கும் பயப்படாத துணிவு கொண்டவர் ஆனால் நிறைந்த பணிவுமிக்கவர். எல்லா இடங்களிலும் பொறாமை, வஞ்சகம், இன்றி சுயவிமர்சனத்துடன், திறந்த மனதுடன் வாழும் தலைவன் எங்கள், மது.

'Leadership and learning are indispensable to each other'

கல்வி பற்றிய மதுவின் பார்வை என்றுமே நேர்நிலையானது. தனிமனிதர்களின் வாழ்வை இன்பமுடையதாகவும், நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதற்கு கல்வி உதவ வேண்டும். தனித்து உயர்பெறுபேறுகள் மட்டும் இதனைத் தந்துவிடாது என என்னிடம் வாதிடுவார். தனிமனிதர்களின் வாழ்வை இன்பமுடையதாகவும், நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதற்கு கல்வி உதவவேண்டுமாயின் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுபவர்கள் புதியதை அறியச் செய்ய வேண்டும். அறிந்ததைப் புதிதாகச் செய்ய வேண்டும் என அடிக்கடி கூறிக்கொண்டிருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்பிப்பவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் கட்டளையிடுவோர் மீது அல்ல" என்றவாறு ஆசிரியர்கள் மீதான தனது அன்பையும் பரஸ்பர மரியாதையையும் அடிக்கடி மது என்னிடம் வெளிப்படுத்தவார்.

"முடிக்கப்பட்ட படைப்புகள் இனிமையானவை"

"எந்தப் பணியாக இருந்தாலும் தன்னார்வமாய் அதைச் செய்யும் போது கிடைக்கும் மனநிறைவு பதவி உயர்வால் கிடைக்கும் தற்காலிகப் பெருமையில் நிச்சயம் கிடைக்காது. ஒருவர் தனது பணியில் மகிழ்ச்சியாக இருந்து, தனது பணியை செம்மையாக நிறைவேற்றி, தனது ஒவ்வொரு செயல் பற்றியும் உயரிய பிரதிபலிப்பு பெற்று, வாழும்போது எத்தகைய பாராட்டுகளும், கடும் விமர்சனங்களும் அவரது பணியில் தடைகளை ஏற்படுத்த மாட்டாது என்பதற்கிணங்க வாழ்ந்து தனது அயராதபணியில் ஓய்வுபெறும் நண்பன் மதுவிற்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**க.சுவர்ணராஜா**
**ஓய்வுநிலைப் பீடாதிபதி**
**(யாழ்.பல்கலைக்கழகம்**
**தொடக்கம் , தொடரும்**
**நட்புக்குரியவன்)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குன்றினில் வைத்த தீபம்
## மதுரநாயகம் நீ நீடு வாழி !

மணிவிழா நாயகன் மதுரநாயகத்திற்கு எனதும் எனது குடும்பத்தினதும் வாழ்த்துகள். எனது பல்கலைக்கழக வாழ்க்கையிலே இணைந்த நண்பர் கூட்டங்களில் தாங்களும் ஒருவர். அன்றுதொட்டு இன்றுவரை குடும்பத்தோடு இணைந்து நட்புடன் பழகி வருகின்றோம்.

வணிகமாணி கல்வியைப் பூர்த்திசெய்து, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவையினை ஆரம்பித்த இவர் காலம் இட்ட கட்டளைக்கமைவாக 1987 டிசம்பர் 14 இல் ஆசிரியசேவையில் இணைந்தவர். ஆசிரியத்துவத்தினை நன்கு மதித்து, அதன் பணியை எவ்வாறு செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்து அதிபராக உயர்வடைந்தவர். அவர் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த பாடசாலைகளில் தனது சேவைக்காலத்தில் பணியினை செவ்வனே நிறைவேற்றி மாணவர்களினதும், அப்பாடசாலைச் சமூகத்தினதும் நன்மதிப்பை பெற்றவர். குறிப்பாக அதிபராக இருந்த பாடசாலைகளில் தான் என்ன செய்ய வேண்டும் என்பதனை நினைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமன்றி பல்வேறு சமூக நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்று நிறைவேற்றி வந்துள்ளதனை நான் நன்கு அறிவேன்.

மணிவிழா நாயகனின் நற்சேவைக்கு அவரது குடும்பத்தின் வளர்ச்சி ஒரு சான்று. அது இறைவனின் கொடை. தனது சமகால மாணவி பிறேமாவை பல்கலையில் காதலித்து, கரம்பிடித்து அவர்களது திருமணசாட்சிய வாழ்விற்கு இறைவன் நான்கு செல்வங்களை வழங்கினார். அவர்கள் கல்வியில் உயர்ந்து மருத்துவத்துறையிலும் பொறியியல் துறையிலும் மிகவும் உன்னதமான நிலையில் இருக்கின்றமை மணிவிழா நாயகனின் நற்சேவைக்கு ஒரு சான்று.

ஆசிரியர், அதிபர் என கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டு முழுமையாக வெற்றிகண்டு ஓய்வுநிலை அடையும் தங்களை மிக அன்போடும் உறவின் உரிமையோடும் எனது குடும்பத்துடன் சேர்த்து மீண்டும் பாராட்டி வாழ்த்துவதோடு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சமூகத்தின் சொத்தாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்தித்து உளமார வாழத்துவதில் பெருமையடைகின்றேன்.

**ஜே.கில்பேட் குணம்**.B.Com(Spe), M.Com, HNDA, CPFA, CIPFA
**பிரதம கணக்காளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணிப்புடன் செயலாற்றும் நண்பனுக்கு மணிவிழா வாழ்த்து

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் வினைத்திறன் மிக்க அதிபராகப் பணியாற்றி, அகவை அறுபதில் மணிவிழாக் காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகமாணி மாணவர்களாக கல்வி கற்ற, உற்ற நண்பனுமாகிய திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்களது அளப்பரிய சேவைகளைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலங்களில் ஆரம்பித்து, ஆசிரியர் தொழிலிலும் ஒன்றாக இணைந்த எம் நட்பானது, இடையில் நான் வேறு துறைக்குச் சென்ற போதும் இன்றுவரை தொடர்கின்றது.

கல்விப்புலத்தில் 33 வருடங்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய இவர் பல் துறை ஆளுமையைக் கொண்டவர். கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் மாணவர் கல்விப் பெறுபேறுகளில் வளர்ச்சியடையவும், பாடசாலையில் பல அபிவிருத்திகளுக்காகவும் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி, மாணவர்களின் உள்ளங்களிலும், சமூகத்திலும் நிரந்தர இடத்தைப் பெற்றுள்ளார். ஆசிரியபணிக்கு உரித்தான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேரம் தவறாமை, வாய்மை, நேரிய சிந்தனை, அன்பு காருண்யம் முதலான பண்புகளைக் கொண்டவராக 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு உயிரோட்டமாய் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

இன்று மணிவிழாக்காணும் நாயகன் தமது உன்னதமான சேவையின் மூலம் எல்லோரது மனங்களிலும் இடம்பிடித்து நிற்பது மறுக்க முடியாத ஒரு விடயமாகும். பாடசாலை வாழ்வில் பெற்ற வெற்றிகளைப் போல் சொந்த வாழ்விலும் பல வெற்றிகளைத் தமதாக்கியுள்ளார். அரச பணியில் இருக்கும் போது பெற்ற வெற்றியும் மகிழ்ச்சியும் ஓய்வு நிலையிலும் கிடைத்து சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**அ.பாலகுமார்**
**பிரதம கணக்காளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதுர காவியம்"



## மதுர காவியம்


அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
Govt.Agent / District Secretary

தொலைபேசி / දුරකථන / Telephone } 021 - 228 3965

தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 228 3966

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E-mail } gaofficekili@gmail.com

மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, කිලිනොච්චි.
District Secretariat, Kilinochchi

பொதுத்தொலைபேசி / පොදු දුරකථන / General Telephone } 021 - 228 3945

மேலதிக மாவட்டச் செயலாளர் / අතිරේක දිස්ත්‍රික් ලේකම් / Addl.District Secretary } 021 - 228 5456


எனது இல / මගේ අංකය / My No }

உமது இல / ඔබේ අංකය / Your No }

திகதி / දිනය / Date } 07.01.2021

---

கிளிநொச்சி மாவட்டத்தின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராக தனது சேவைக்காலம் முழுவதும் எமது மாவட்டத்தில் பணியாற்றி, நல்ல கல்வியாளராகப் பங்களித்து இன்று ஓய்வு பெறும் அக்கராயன் மகாவித்தியாலயத்தின் அதிபர் க. மதுரநாயகம் அவர்களின் மணிவிழாவினை வாழ்த்தி நிறைவடைகின்றேன்.

திரு.திருமதி மதுரநாயகம் தம்பதியினர் குடும்பமாக வந்து குடியேறி, எமது மாவட்ட மாணவர்களுக்கு நிறைவான சேவையினை வழங்கியதனை அவர்களது பிள்ளைகளின் நிறைவால் மீளப்பெற்றிருக்கிறார்கள். கிராமியப்பாடசாலைகளை நோக்கி ஆசிரிய வளத்தினை நகர்த்துவது என்பது சவாலுக்குரியது. அவ்வளத்தினை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வது என்பது இன்னமும் கடினமானது. இவ்வகையில் சேவைக்காலம் முழுவதும் தனித்து விடப்பட்ட கிராமங்களை நோக்கி ஓடி ஓடி உழைத்த காலங்கள் நன்றிக்குரியவை.

போர்க்கால நெருக்கடியிலும் புலம் பெயராது நின்று நீங்கள் ஆற்றிய பணிகள் மதிப்பிற்குரியது. எளிமையும் அடக்கமும் கொண்ட உங்கள் பண்பு அலாதியானது. வாழும் காலத்தில் செய்யக்கூடிய மதிப்பார்ந்த பணிகளினை செய்வதன் மூலம் ஓய்வு காலத்தினையும் நீங்கள் வலுப்படுத்தியுள்ளீர்கள். நிறைவாக சுக நலன்களோடு ஓய்வு காலம் கழியும் என்ற நம்பிக்கையையும், எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்,**
**உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த பண்பாளனுக்கு வாழ்த்துக்கள்

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக, வினைத்திறன் மிக்க அதிபராகப் பணியாற்றி 27.01.2021 இல் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வணிகப் பட்டதாரி ஆசிரியராக கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் 14.02.1987 இல் நியமனம் பெற்ற நாள் முதல் ஆசிரியராக, பிரதி அதிபராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக பல்வேறு வகிபாகங்களில் கல்விப் பணியாற்றி தனது பன்முக ஆளுமையை அடையாளப்படுத்தியவர். இவர், கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள நான்கு கோட்டங்களிலும் கல்விப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் கல்விப் பெறுபேற்றினை உயர்த்துவதற்காக அயராது உழைத்தவர். அதேவேளை இணைபாட விதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் அக்கறையுடன் செயற்படுபவர். கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தினுடைய கல்விப் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டி நிற்கின்ற அதே வேளை, நாடகப் போட்டிகள், குறும் படம் தயாரித்தல் முதலான போட்டிகளில் மாகாணம் மற்றும் தேசிய நிலைகளில் சாதனை படைக்கும் பாடசாலையாக விளங்குவதும் கண்கூடு.

நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, தனது கருத்தைத் துணிவுடன் வெளிப்படுத்தும் மனோதிடம், வசீகரமான பேச்சாற்றல், மதுரக் குரல்வளம் என்பன இவர்பால் என்னை ஈர்த்த பண்புகளாகும். பாடசாலையின் தலைவராக மட்டுமன்றி குடும்பத்திலும் முன்னுதாரணமாகத் திகழும் சிறந்த பண்பாளன். சேவைக்காலம் நிறைவடையும் இக் காலப்பகுதியிலும் தனது வீட்டில் இருந்து நீண்ட தூரப் பாடசாலையில் சேவையாற்றுகின்ற போதிலும் தனது கடமையைச் சிறப்பாகச் செய்யும் கடமை வீரன். இவரது புகழுக்கு அறிவும் அழகும் ஆற்றலும் நிறைந்த இவரது மனைவியின் பங்கு மகத்தானது. அத்துடன் சேவை மனப்பாங்கு கொண்ட திறன் மிக்க பிள்ளைகளும் இவருக்கு இறைவன் அளித்த கொடையாகும். மேலும் இவரின் ஓய்வுக்காலம் மென்மேலும் மகிழ்ச்சிகரமானதாக அமைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**பாலசிங்கம் வாசுதேவன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், (கல்வி நிர்வாகம்)**
**வலயக் கல்வி அலுவலகம்.**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்து

மூன்று தசாப்தத்திற்கு மேலாக கிளிநொச்சி மண்ணில் கல்விப்பணியாற்றி ஓய்வு பெறுகின்ற கிளி/அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் திரு.க.மதுரநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். கல்வி உலகில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதி அதிபராக, அதிபராக மிகுந்த நெருக்கடியான காலங்களில் உயரிய சேவைகளை ஆற்றி மணிவிழாக் காணுகின்ற அதிபர் அவர்கட்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவரோடும் அன்பாகப் பழகி தமது சிம்மக் குரலால் அனைவரையும் தம்வசம் கவரக்கூடியவர். தனது இனிய குரலால் பாடல்கள் இசைப்பதில் வல்லவர். இவரது காலத்தில் கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமை இவரைச் சாரும். ஒவ்வொரு வருடமும் க.பொ.த(உ/த) பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல்நிலையைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு ஊக்கமூட்டி வழிகாட்டியவர். பாடசாலையின் பௌதிக வள விருத்தி இவரது காலத்திலேயே நடைபெற்றது.

மேலும் வலயம் சார்ந்த செயற்பாடுகளுக்கு தமது முழுமையான பங்களிப்புக்களை வழங்குவதோடு கல்வியுலகிற்கு வெளியே சமூகத்தின் நலன் சார்ந்து சிந்தித்து மக்களின் தேவைகள் பலவற்றையும் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற பொது உள்ளம் படைத்தவராகவும் இவர் விளங்குகின்றார்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த அதிபர் அவர்கள் இன்றுடன் தனது பணியிலிருந்து ஓய்வுபெறுகின்றார். ஓய்வுக்காலத்தில் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் உடல் ஆரோக்கியத்துடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து சமூகத்திற்கு அரிய தொண்டுகளை ஆற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.அருந்தவச்செல்வம்**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வித் திட்டமிடல்)**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்து

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

(திருமந்திரம்)

எமது பள்ளியின் முதல்வராய் விளங்கித் தனது மணிவிழாவைக் கண்டு பிரியாவிடை பெற்றுச் செல்லும் மதிப்பார்ந்த முதல்வர் திரு.க.மதுரநாயகம் அவர்கள் "என் கடன் பணி செய்து கிடைப்பதே" எனப் பணியாற்றி உயர்ந்தவர்.

பிள்ளைகளையும், ஆசிரியர்களையும் அன்போடு கண்ணியமாக நிர்வகித்தவர். அக்கராயன் பிரதேசத்திலே மாணவர் பலரின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் தூண்டு கோலாய் விளங்கியதுடன் கலைகளில் மாணவர்கள் தடம் பதிக்க, மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி காட்டியவர்.

மிடுக்கான நடை. முகத்தில் முறுவல், பணியில் ஆர்வம், நிறைந்த ஓர் அதிபராய்த் திகழ்ந்து ஓய்வு பெற்றுச் சென்றிடினும் ஆரோக்கியமான வளமும் நலமும் பெற்றுச் சிறப்போடு வாழ இறையாசியை வேண்டுகின்றேன்.

" ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

**திரு.பொ.சுஜாத்குமார். (பழைய மாணவன்)**
**கணக்காளர்,**
**பிரதேச செயலகம்,**
**துணுக்காய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து...

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெறும் அதிபர் திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் யாழ்ப்பாண மண்ணில் உரும்பிராய் கிழக்கிலே, குடும்பத்திலே ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யாழ்/ உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் க.பொ.த உயர்தரக் கல்வியை யாழ் மண்ணில் புகழ் பூத்த பாடசாலையான யாழ்/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றுத் தேறினார். 1981-1985 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகமாணிப் பட்டத்தையும் பெற்றவர்.

இவர் 14.12.1987இல் கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றவர். அக்காலப் பகுதி கிளிநொச்சி மாவட்டத்திலே யுத்தமும் போர்ச்சூழலும் நிறைந்திருந்த காலமாகும். தூய அரிசிக்குள்ளே நெல்மணிகள் காணப்படுவது போன்று பட்டதாரி ஆசிரியர்கள் மிகக் குறைவாகக் காணப்பட்ட காலமாகும். வன்னேரிக்குளம், கிளிநொச்சி மாவட்டத்திலேயே மிகவும் போக்குவரத்துக் குறைந்த அடர்ந்த காடுகளுக்குள்ளே காணப்பட்ட கிராமமாகும். அக்கிராமத்திலே மக்களோடு மக்களாக தங்கியிருந்து, இவரும் இவரது துணைவியாரும் குடும்பமாகப் பணியாற்றிய காலம் பெறுமதி மிக்க காலமாகும். இப் பிரதேச மக்களுடன் ஒன்றாக வாழ்ந்து, தாம்பெற்ற பிள்ளைகளையும் அந்தப் பாடசாலையிலேயே கல்வி பயில வைத்து, அக்கிராமத்திலே ஒருவராக பயனுறுதிமிக்க மனிதராக வாழ்ந்தார்.

இலங்கை, இந்திய இராணுவப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து பல சவால்களை எதிர்கொண்டார். மின்சார வசதிகளற்ற, அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய மண்ணெய் விளக்குகள், மண்ணெய் வாகனங்கள் ஓடிய இடர்மிகுந்த காலப்பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்து, பணி செய்தவர். இவர் தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்குச் செல்வதாக இருந்தால் முக்கொம்பன் பாதை, கிளாலிப் பாதை, கொம்படிப்பாதை முதலிய பாதைகளால் உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு பயணித்த நாட்களை இப்பொழுது நினைத்தாலும் இரத்தமே உறைந்துவிடும். சம்பளக் காசோலைகள் மாற்ற யாழ்ப்பாணத்திற்கோ, பொருட்களை வாங்குவதற்கு கிளிநொச்சிக்கோ செல்வது என்பது ஒருபெருஞ் சுமையாக இருந்தகாலம். இக்காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்காக மாணவர்களை அழைத்துக் கற்பித்து மாலைநேர வகுப்புக்கள் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற உழைத்தவர். அதன் பின்னர் மிகக் கடின உழைப்பினூடாக 1998ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று இவரும் இவரது பாரியாரும் ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர். அப்போது 2001ஆம் ஆண்டு நான் மன்னார் பெரியமடு மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த வேளை மல்லாவி மத்திய கல்லூரியிலே நடைபெற்ற வினாத்தாள் தயாரிக்கும் (உருப்படிப்பகுப்பாய்வு) செயலமர்வில் இவரையும் இவரது பாரியாரையும் சந்தித்தேன். இருவரும் ஒருவருக்கொருவர் நிகரில்லாத வகையில் அந்தச் செயலமர்விலே மிகவும் விறுவிறுப்புடனும் உற்சாகமாகவும் மிகுந்த சமூக அக்கறையுடனும் செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. பின்னர் 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருவாளர். மதுரநாயகம் அவர்கள் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் பெற்ற போது என்னையும் அடிக்கடி உற்சாகப்படுத்தி நான் 'தாய்வீடு பாகம் - 01' வெளியிடவும் உறுதுணையாக இருந்தார். அக்காலத்தில் கிளி/ வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் பௌதிக வளத்தை மெருகூட்டுவதிலும் பாடசாலையின் உட் கட்டுமானத்தை வளர்ப்பதிலும் நான் ஈடுபட்டதை மனதாரப் பாராட்டி, அவ்வப்போது என்னை ஊக்கப்படுத்துவார். எதையும் தீர்க்கதரிசனத்துடன் முன்னெடுக்கும் அதிபர் பின்னர் 2007ஆம் ஆண்டு அதிபர்களை சுற்றுவட்டத்தில் மாற்றும்போது, கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார். 2008ஆம் ஆண்டில் நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாகப் பாடசாலையை இடமாற்றி தர்மபுரம், விசுவமடு, சுதந்திரபுரம் என சுழன்றடித்து பாடசாலையை சிறப்புடன் நடாத்தியவர்.

செட்டிகுளம் இராமநாதன் நலன்புரி நிலையத்திலும் தற்காலிகமாக நிறுவப்பட்ட பாடசாலையின் அதிபராகச் செயற்பட்டவர். பின்னர் நான் பூநகரிக் கோட்டக் கல்வியதிகாரியாகப் பணியாற்றிய 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிபர் சுற்றுவட்ட இடமாற்றத்தில் கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று 27.01.2021 இல் ஓய்வு பெறுகின்றார். இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர் அவர்களின் பல அர்ப்பணிப்பான செயற்பாடுகள் உள்ளமையை இப்பகுதி மக்கள் நன்கு அறிவார்கள். 2018ஆம் ஆண்டு நான் கிளிநொச்சி கரைச்சிக் கல்விக் கோட்ட அதிகாரியாக நியமனம் பெற்ற பின்னர், என்னுடன் இணைந்து பல அர்ப்பணிப்பான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

இவரின் தனித்துவமான செயற்பாடுகளுக்கு இவரது காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்ற மாகாணக் கல்வி அமைச்சர், வடக்குமாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட அரசாங்க அதிபர் எனப் பலரும் வடக்கு மாகாணத்தை அலங்கரித்த காலப்குதியில் அவர்களை அழைத்து வெவ்வேறு விழாக்களை நடத்தி பாடசாலையைப் பலரும் ஆச்சரியப்படக் கூடிய வகையில் வளர்த்து நகரப் பாடசாலைகளுக்கு இணையான ஓர் பாடசாலையாகப் பரீட்சைப் பெறுபேற்றிலும் வளர்ச்சியிலும் முன்கொண்டு வந்துள்ளார். நான் இவரது பாடசாலையில் 2019ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் விருந்தினராகப் பங்கேற்றிருந்தேன். தனது நண்பர்கள் பலரின் உதவியைப் பெற்று, பாடசாலையில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதைக் காணமுடிந்தது. அத்துடன் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுவிழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டேன். பிரமாண்டமான ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விழாவை என்றும் என்னால் மறக்கமுடியாது. இவரால் ஏற்பாடு செய்யும் அத்தனை விழாக்களிலும் சமூகத்தின் பல முன்னோடிகள் சிறப்பித்திருந்ததையும் காணமுடிந்தது.

தனது நட்புரிமையைப் பாடசாலைக்குக் கொண்டு வந்திருக்கின்றார். ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது, இவருக்குப் பொருத்தமான ஒரு இடம் அமைந்திருந்தால், அதிபர் மென்மேலும் பல பதவிகளை அலங்கரிக்க வாய்ப்பாக அமைந்திருக்கும். இருந்தபோதும் கிளிநொச்சி மண்ணிலே தனது பிள்ளைகளையும் கல்வி பயில வைத்து, வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் உருவாக்கி இந்த மாவட்டத்தின் நிலையான வாசியாகிக் கொண்ட அதிபர் மதுரநாயகம் குடும்பம் மேலும் செழித்தோங்க வாழ்த்துகின்றேன். அதிபர் அவர்களின் ஆங்கிலப்புலமையும் கல்வியறிவும் இன்னும் பல கல்விசார்ந்த சேவைகளையும் ஆற்றக்காத்திருக்கின்றது என்பதனைக் கூறி 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என வாழ்த்துக் கூறி நிறைவு செய்கின்றேன். அதிபரின் விழாப்பணியில் ஈடுபடும் அனைத்து உள்ளங்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

**இவ்வண்ணம்**
**திரு.சு.தர்மரத்தினம்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்.,**
**கரைச்சி, கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறன்மிக்க முகாமையாளன்

எமது வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினராக நீண்டகாலம் இருந்து அளப்பரிய சேவையை ஆற்றிவரும் திரு.க.மதுரநாயகம் அவர்கள் 27.01.2021 இல் மணிவிழா காண்பதையிட்டு பெருமகிழ்வடைகிறோம். இவர் எமது சங்கத்தின் செயற்பாடுகளிற்கு வலுச்சேர்க்கும் அதிபர்களில் ஒருவர். சிறந்த ஆளுமையும் அமைதியான சுபாவமும், நல்ல முகாமைத்துவதிறனும் கொண்ட அதிபர் இளைப்பாறுவது கல்லூரிக்கு மட்டுமல்ல எமது சங்கத்திற்கும் பேரிழப்பாகும். எனினும் அறுபதுவயதை அடைந்ததும் இளைப்பாற வேண்டும் என்பது சட்டக் கட்டுப்பாடு ஆகும்.

இவருடைய துணைவியாரும் கல்விப் புலத்தைச் சார்ந்த உத்தியோகத்தராக இருப்பதால், அவருடைய ஊக்குவிப்பும் இவருடைய சேவையை உயர்த்தி நிற்கின்றது. இவருடைய சேவையின் காரணமாக இவர்களுடைய பிள்ளைகள் மருத்துவர்களாகவும் பொறியியலாளராகவும் உருவாகி, உன்னத சேவையை சமூகத்திற்கு ஆற்றிவருகின்றனர்.விழாநாயகன் அவர்களின் கல்விப் பணியானது அதிபராக கடமையாற்றும் கிளி/அக்கராயன் மகாவித்தியாலயத்துடன் நின்றுவிடாது, கிளிநொச்சிமாவட்டம் முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கிளிநொச்சிமாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவில் உறுப்பினராக இருந்து அந்த மாவட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திப் பணியில் கூடுதல் பங்களிப்பை ஆற்றிவருகிறார்கள். இதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பலநன்மைகள் அடைந்துள்ளனர்.

ஒருமனிதனை நாம் கணிப்பது அவருடைய சொல்,செயல் என்பவற்றில் ஆகும். விழாநாயகர் அவர்கள் மிகவும் கண்ணியமானவர் மட்டுமன்றி மிகவும் கண்டிப்பானவர். இதனால், இவர் மற்றவர்களுடன் அணுகும் முறை பேசுகின்ற விடயங்கள் சுருக்கமாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் காணப்படும். இவருடைய சேவையின் சிறப்பைக் கணித்து, பாடசாலைச் சமூகம் விழா எடுப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாறு சேவை செய்கின்ற அதிபர்களிற்கு விழா எடுப்பது இன்றைய காலத்தின் தேவையாகும். இவருக்கு விழா எடுப்பது மட்டுமன்றி மலர் ஒன்றினையும் வெளியிடவேண்டும் என எண்ணி செயற்படுகின்ற விழாக் குழுவினருக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக. ஓய்வுக் காலத்திலும் இவரின் கல்விப்பணி, சமூகப்பணி தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**திரு.சி.திரிகரன்**
**செயலாளர்,வடமாகாண அதிபர்கள் சங்கம்**
**(அதிபர்,யா/ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனங்களை வென்ற மணிவிழா நாயகன் மதுரநாயகம்

மணிவிழா நாயகன் கஸ்பார் மதுரநாயகம் பெயருக்கேற்ப மதுரக்குரலோன். "நான் மலரோடு தனியாக" என்பது இவரது விருப்பத்துக்குரிய ஒரு பாடல். அழகாகப் பாடக் கூடிய நல்லதொரு பாடகன். மதுரநாயகம் சேர் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக இருந்தகாலம் தொடக்கம் எனக்கு நன்கு பரிச்சயமான அன்பான ஒரு ஆசான் . இவரின் முகத்தில் எந் நேரமும் ஒரு புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கும். எவருடனும் கடுஞ்சொற்களைப் பாவிப்பது, கோவப்படுவதை நான் கண்டதே இல்லை.

இவருடன் இணைந்து யாழ் பழ்கலைக் கழகத்தில் கல்வி முதுமாணிக் கற்கைநெறியை (MED) தொடரும் வாய்ப்பு எனக்கு கிடைத்தமையை எண்ணி பெருமை கொள்கின்றேன். இவருடைய ஆளுமையையும், ஆற்றல்களையும் நாம் பரீட்சைக்குத் தயாராகிய நாட்களில் கண்டு கொண்டேன். நாம் ஒன்றாக பல நண்பர்கள் சேர்ந்திருந்து கற்போம் நீண்ட நேரங்களைச் செலவு செய்து ஒரு விடயத்தை மனப்பாடம் செய்தோம் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், மதுரநாயகம் சேரிடம் அந்த விடயத்தை கண்டதே இல்லை. திட்டமிட்ட நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பவர் என்பதால், திட்டமிட்ட நேரத்திற்குள் தனக்குத் தேவையான விடயங்களைக் கற்றுக்கொள்வார் . அதனை இரத்தினச் சுருக்கமாக எமக்கு விளங்கவைப்பார். பரீட்சை என்ற எந்த பதட்டத்தையும் நான் அவரிடம் கண்டதே இல்லை.

இவ்வான ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த நல்லதொரு அதிபராகிய மதுரநாயகம் சேர் கிளிநொச்சி மாவட்டத்தில் அன்று முதல் இன்று வரை சீரான போக்குவரத்து வசதியோ அன்றி பாதையோ அற்ற கிளி/வன்னேரிக்குளம் ம.வி இல் தனது முதல் கல்விப் பயணத்தை ஆரம்பித்து, கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி என நான்கு கோட்டப் பாடசாலைகளிலும் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக முத்திரை பதித்த ஒரு கல்வியியலாளன் என்றால் அதுமிகை அல்ல. யுத்த இடர்பாடுகள் அடிப்படைவசதிகள் கூட சரியாக கிடைக்காத காலத்திலும் கிளிநொச்சி வலயத்தில் வர்த்தக பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிந்த மணி விழா நாயகனாகிய இவர் துவிச்சக்கரவண்டியில் சவாரி செய்து கல்வியை வளர்த்த ஒரு பெருந்தகை.

சிலசமயங்களில் மனம் திறந்து என்னுடன் கதைக்கும் போது, தனக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வை ஒரு சில மேலதிகாரிகள் திட்டமிட்டே தடுத்தனர் என்பதை வேதனையுடன் பகிர்ந்துகொள்வார். இருந்தாலும் இறைவனுடைய அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு கிடைத்தமையால் தானும் தனது குடும்பமும் நன்றாக இருப்பதாக மகிழ்ச்சி அடைவார்.

இவரது துணைவியாரும் கிளிநொச்சி மாவட்டத்தின தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியவர். ஆசிரியராக , சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக, உதவிக்கல்விப்பணிப்பாளராக இருந்து இன்றும் பணி புரிந்து வருகின்றார் என்பதுடன் கிளிநொச்சி மாவட்ட வரலாற்றை இற்றைப்படுத்த முன்னின்று உழைத்தவர். கிளிநொச்சி வலய கீதம், மற்றும் ஒவ்வொரு புதன்கிழமையும் மாவட்ட செயலகத்தில் இசைக்கப்படும் கிளிநொச்சி மாவட்ட கீதம், பல பாடசாலைக் கீதங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை ஆக்கியுள்ளார். இந்தப் பெருமையும் மதுரநாயகம் சேருக்கே உரித்தானது. ஏனெனில் துணைவியார் தனது பணியைச் சிறப்பாக செய்வதற்கு மணி விழாநாயகனின் விட்டுக்கொடுப்பும், ஒத்துழைப்புமே காரணம் என்றால் அது மிகையாகாது. நான்கு குழந்தைகளை பெற்றெடுத்த இவர் அவர்களை சிறந்த கல்விமான்களாக்கி எமது மாவட்டத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறான பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட மணி விழா நாயகன் மதுரநாயகம் சேர் தனது பணிக்காலத்தில் எமது கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கத்தின் உபதலைவராகவும் பதவிவகித்து சங்க வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர். இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமையவும் நோய் நொடிகள் இன்றி நீண்ட ஆயுளுடன் தனது குடும்பம், பிள்ளைகள் , பேரப்பிள்ளைகளுடன் வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

''வாழ்க வளமுடன்''

**ச. பூலோகராஜா**
**தலைவர்**
**கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்**
**(கிளி / கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நவில்தொறும் நூனயம் போலும் பயில் தொறும் பண்புடையார் தொடர்பு"

படிக்குந்தோறும் நூல்நயம் போல பண்புடையாளரதுநட்பும் பழகுந்தோறும் இன்பம் பயக்கவல்லது. மணிவிழாக்காண விழைகின்ற திரு.க.மதுரநாயகம் அவர்களுடனான நட்பு எனக்குக் கிடைத்தமையும் அத்தகையதே. அவருடனான நட்பு எனக்குக் கிட்டியதை யான் பெரும் பேறாகக் கருதுகின்றேன். நாமிருவரும் ஒரேபாடப்புலத்தைச் சேர்ந்தவர்கள். நீண்டகாலம் ஆசிரியப்பணியிலும் அதிபர் சேவையிலும் பயணித்தவர்கள். அதனால் வயதில் சிறியவனாக இருந்தபோதிலும் ஆசிச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையின் வடபுலத்தில் அதிக இழப்புக்கள்,பேரவலங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற கிளிநொச்சிப் பிரதேச மண்ணில் இளைய சமுதாயம் கல்வி ஒன்றினாலேயே மேம்பாடடைய முடியும். என்பதைத் தன் கருத்திற்கொண்டு வர்த்தக பாடத்தைத் திறம்படக்கற்பித்து பலமாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல அடித்தளமிட்டவர். அவரிடம் கல்வி கற்றபலர் இன்று உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதையாரும் மறுப்பதற்கில்லை. மாணவர்கள் முன்னேற்றத்தில் மட்டுமல்லாது ஆரோக்கியமான ஆசிரிய சமூகத்தினாலேயே நல்லகல்வியைப் போதிக்கமுடியும் என்பதற்கிணங்க ஆசிரிய ஆலோசகராக இருந்து நல்லவழிகாட்டியாகவும் செயற்பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும். நான் கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய போது திரு.க.மதுரநாயகம் அவர்கள் ஆசிரிய ஆலோசகராக அடிக்கடி வருகைதருவதுண்டு.

மணிவிழாநாயகன் திரு.க.மதுரநாயகம் அவர்கள் கிளி/முருகானந்தாக் கல்லூரி, கிளிநொச்சி திருவையாறு ம.வி ஆகியவற்றில் அதிபராக இணைந்து அப்பாடசாலைகளின் வளர்ச்சிப் பாதையில் முக்கியபங்காற்றியது மட்டுமன்றி, இறுதிக்காலத்தில் கிளிநொச்சி அக்கராயன் ம.வி இல் அதிபராக இருந்து பலசாதனைகளை ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும். மேலும் மருத்துவம் மற்றும் கணிதத் துறைகளில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தெரிவாகியமையும் இவரது காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

**"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையில் பீடுடையது இல்"**

என்ற குறட்பாவை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது சாலவும் பொருந்தும். யான் எண்ணியசெயலைச் செய்வதற்கு கை ஒழியேன் என்னும் முயற்சியைப் போன்றதொரு மேம்பாடுடைய பெருமை வேறொன்றும் இல்லை என்றாற் போல எடுத்தகாரியத்தை சிறப்பாக முடித்துவைக்கும் ஆற்றல் எப்போதும் அவருடனேயே இருந்தது. அகவை அறுபதில் காலடி எடுத்துவைக்கும் மணிவிழாநாயகனின் அர்ப்பணிப்பான சேவை அவரது ஓய்வுக் காலத்திலும் கிளிநொச்சி மண்ணிற்குக் கிட்ட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**தி.வரதன்** SLPS-I
அதிபர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமையின் சிகரமே வாழ்க!

எமது பாடசாலையின் அதிபர் திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் 27.01.2021இல் சேவையில் இருந்து ஓய்வு பெறும் நிலையில் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். பன்முக ஆளுமை கொண்ட அதிபராக இப்பாடசாலையில் ஒன்பது ஆண்டுகள் சேவையாற்றி இப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

பல செயற்பாடுகளை திட்டமிட்டு சிக்கனமாக செயற்படுத்தியுள்ளார். அந்த வகையில் இப்பாடசாலையில் குடிநீர்ப்பிரச்சினை முக்கியமானதாக இருந்த வேளை அதற்கு தீர்வு கண்டுள்ளதுடன் பாடசாலையை பசுமை நிறைந்த இடமாகவும் மாற்றியுள்ளார். மாணவர்களின் கற்றல் ஊக்கிகளில் ஒன்றான பரிசளிப்பு விழா தொடர்ச்சியாக 8ஆண்டுகள் நடைபெற பல வழிகளிலும் நிதிப்பங்களிப்பைப் பெற்று சிறப்பாக விழாவை வழிநடத்திய பெருமையும் இவருடையதே! கற்றல் செயற்பாடுகளுக்கு பல்லூடக நவீன நூலகவசதிகளையும் ஏற்படுத்தியுள்ளார். ஆசிரியர் குழாத்துக்குள் முரண்பாடின்றி சுமூகமாக வழிநடத்தியுள்ளார். ஆசிரியர்கள் ஒருபோதும் குழுக்களாக செயற்பட்டதில்லை. அத்துடன் விழாக்காலங்களில் எல்லோரையும் மகிழ்விக்கும் வகையில் பழைய பாடல்களை இசையுடனும் உணர்வு பூர்வமாகவும் பாடிப் பாராட்டையும் பெற்றுள்ளார்.

1C தரப் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையை 1AB தரப் பாடசாலையாக தரமுயர்த்தி, கல்வி வளர்ச்சியில் மாவட்ட மட்டத்தில் உயர்தரத்தில் 2019இல் முறையே வர்த்தக, விஞ்ஞான, கலைப்பிரிவு மாணவர்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெற்று சாதனை படைக்க வழி சமைத்துள்ளார். தனது ஆளுமையால் பல சவால்களை எதிர்கொண்டு கத்தியின்றி இரத்தமின்றிப் போராடி ஆளுமையின் சிகரமாக சேவையாற்றியுள்ளார்.

இவருடைய தலைமைத்துவத்தில் எந்தவொரு செயற்பாட்டிலும் மாணவர்களின் பங்குபற்றலை ஊக்குவிக்கும் திறன் கொண்டவராக இருப்பதை நாம் அவதானித்துள்ளோம். காலை ஆராதனை நிகழ்வுகள் நாளாந்தம் ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவர் பாடசாலை நிகழ்வுகளான கலைவிழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் சமய நிகழ்வுகள் போன்றவற்றை தலைமையேற்று நடத்துபவர்களாக மாணவர்களே காணப்பட்டனர். இவ்வாறு மாணவர்களின் சமநிலை ஆளுமைப் பண்புகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் அதிபராக இவர் காணப்பட்டார். வாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் புதன்கிழமை காலை நற்சிந்தனையை ஆங்கிலத்தில் நிகழ்த்துவதற்கு மாணவர்களை வழிப்படுத்தியவர். பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களில் சகல தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று அத்திட்டங்களில் ஏனையோரையும் உள்வாங்கி, நேர்த்தியாக நிறைவேற்றுகின்ற திறன் கொண்டவர். பங்குபற்றல், முகாமைத்துவத்தை கடைப்பிடித்து, வகைகூறும் கடமைப்பாட்டினை ஏனையோரும் ஏற்கும் வகையில் திட்டமிடல்களை மேற்கொள்வார். எந்தவொரு விழாவையும் திட்டமிட்ட நேரத்திற்கு ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் ஆரம்பித்துவிடுவார்.

நேரமுகாமைத்துவம் கொண்ட அதிபராக தலைவராகத் தொழிற்பட்டார். பாடசாலையிலிருந்து இவரது இருப்பிடம் மிகவும் தூரத்தில் அமைந்தாலும் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு முன்னரே வருகை தருவார். பாடசாலை நிகழ்வுகள் உரிய நேரத்துக்கு ஆரம்பிப்பதற்கான திட்டமிடல்களை முன்கூட்டியே தீர்மானித்து செயற்படுவதுடன் ஏனையோரும் கடைப்பிடிக்கும் வகையில் அறிவுரைகள் வழங்குவார். அர்ப்பணிப்பும், ஆளுமையும் கொண்ட அதிபர் அவர்கள் ஓய்வுகாலத்தில் சகல சிறப்புக்களையும் பெற்று தனது குடும்பத்தினர் உற்றார், உறவினர், நண்பர்களுடன் உடல் நலத்துடனும், மகிழ்வுடனும் நீடுவாழ மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

**திருமதி.வ.இராசமூர்த்தி**
**பிரதி அதிபர்**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரி அன்னை பெற்றெடுத்த வயவனுக்கு மணிவிழா வாழ்த்து

எமது கல்லூரி அன்னை பவளவிழாக் காணும் இவ்வாண்டில் எமது கல்லூரியில் 1977 - 1980 காலப் பகுதியில் வணிகப்பிரிவில் கல்வி பயின்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி பல்கலைக்கழகப் பட்டதாரியாகி தன் ஆசிரியப்பணி, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் மற்றும் அதிபர் சேவைகளை கிளிநொச்சி மாவட்டத்தில் ஆற்றி மணி விழாக்காணும் எமது கல்லூரியின் புதல்வன் திரு.க.மதுரநாயகம் (வயவன்) அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு, பேருவகையடைகின்றோம்.

எமது கல்லூரி 1946இல் ஆரம்பிக்கப்பட்டு பல, கல்வியியலாளர்களையும், மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கியுள்ளது. இவர்களில் பலர் எமது கல்லூரி அன்னையின்பால் பற்றும் ஈடுபாடும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர்தான் எமது அதிபர் திரு.க.மதுரநாயகம் (வயவன்) அவர்கள்.

"வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழிக்கு அமைய மணிவிழா நாயகன் கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில் சிறந்த மாணாக்கனாக விளங்கியதுடன் பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா போன்றவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். அவரது ஆளுமையையும் தலைமைத்துவப் பண்பையும் இனம் கண்ட அப்போதிருந்த அதிபர் உயர்திரு. ஆ. இராமசாமி அவர்களும் அவரது ஒழுக்காற்று குழுவினரும் அவரை மாணவத் தலைவனாகத் தெரிவு செய்தனர். அது மட்டுமன்றி அவர் உயர்தர மாணவர் மன்றத்தின் பொருளாளராகவும் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் கல்வி பயின்ற ஏனைய நண்பர்களில் பலர் திறமையானவர்களாக காணப்பட்டனர். இவர்களில் பலர் முதல் தடவையே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி கல்லூரிக்குப் பெருமை சேர்த்த பிரிவாக 1980இல் பரீட்சை எழுதிய மாணவர்கள் திகழ்கின்றனர்.

விழா நாயகன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றும் காலத்தில் கல்லூரி அன்னை தனது விளையாட்டுப்போட்டிக்கு விருந்தினராக அழைத்து பெருமை கண்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலாக "வயவர்களின் சங்கமம் - 2018" நிகழ்வில் விழாநாயகன் கலந்து சிறப்பித்தமை மட்டுமன்றி தனது கல்வி பயண அனுபவங்களைக் குறிப்பிட்டதுடன் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களிற்கும் பயன்மிக்க கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியமை நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.

இவர் ஓய்வுக்காலத்தில் தனது சொந்த ஊரான உரும்பிராயில் வந்து, மனைவியுடன் இருந்து கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்கும் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவவேண்டும் என வேண்டி நிறைவு செய்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/வயாவிளான் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாண்புடைய மனிதர் மதுநாயகம்

மாண்புடையவர்களாக ஆக்கும் பருவமே மாணாக்கப்பருவம். மாண்புடைமைக்குக் கல்வி, ஒழுக்கம், பண்பாடு என்பன இன்றியமையாதனவாகும். இவற்றை முன்னிலைப்படுத்தி பள்ளி முதல்வராய் தனது பணிகளை அர்ப்பணிப்புடனும் துடிப்புடனும் ஆற்றிய அக்கராயன் உயர்நிலைப்பள்ளி முதல்வர் திரு.க.மதுரநாயகம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

25ஆம், 50ஆம் ஆண்டு விழாக்களிலும் பார்க்க 60ஆம் ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் மணிவிழா பெருக நிகழ்வது. "மணி" என்பது மண்ணுதல் - நீராட்டல் உடையது மணியைப்பட்டை தீட்டி கழுவுவது போல ஒருவரை மாசற்ற மணியாகக் கருதி எடுக்கப்படும் உயரிய விழா மணிவிழா. ஆனால் பட்டைதீட்டி கழுவாத மாசற்ற மணி திரு.க.மதுரநாயகம் அவர்கள், அவர் தம் அகவை அறுபது என்பதை அன்றி அவர் தம் துணைவியாக வாழ்க்கைத்துணை என்னும் வகையால் விழா எடுக்கப்படுகிறது.

பிறவியின் நோக்கம் என்ன?

' நிலையாமை உணர்ந்து, துறவு போற்றி, மெய்யுணர்ந்து, அவாவறுத்து பேறாம் பெருநிலையாம், செம்பொருள் எனப்படும். சிறப்படைதல் என்பது வள்ளுவம். எனவே இப்பிறவி நோக்கை வாழ்வில் அனைவருமே உணரச்செய்யும் விழாவே மணிவிழாவாகும். மணிவிழாக்காணும் மதுரநாயகம் குடும்பத்தினரை எனது குடும்பத்தினர் 1997ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னேரியில் நான் வாடகை மனையில் வாழும் போது அறிமுகமானவர்கள். திரு.க.மதுரநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அங்கு கல்வி கற்றவர். நன்செய், புன்செய் நிலங்களும் அவருக்குள்ளன. இவருக்கு முதல் ஆசிரியர் நியமனம் கண்டி மாவட்டத்தில் கிடைத்தது. ஆனாலும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களை தனி உறுவிருப்புடன் நேசித்தமையால் அந்நியமனத்தை நீக்கம் செய்து, கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஆசிரியர் பணிக்கு நியமனம் பெற்றார். இவரது வாழ்க்கைத்துணைவியாரும். கரியாலை நாகபடுவான், ஜெயபுரம், வன்னேரிக்குளம் முதலிய மிகவும் இடர்பாடுகளுள்ள பகுதிகளிலுள்ள பள்ளிகளில் பணியாற்றி, பள்ளியை விட்டு விலகும் போது மாணவர்கள் மாண்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணி நன்மாணாக்கர்களை உருவாக்கினார்கள்.

இவர் பள்ளி முதல்வராக கடமையாற்றும் போது, நேர்மைத்திறனும் ஆள்வினைத்திறனும், பழகும் மனிதப்பண்பாடும் கொண்டவராக விளங்கினார். ஒரு நிறுவனத் தலைவர் அதாவது பள்ளி முதல்வர், ஆசிரியர்களை பணியாளர்களை வசப்படுத்தி, வைக்கும் திறன் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் ஏற்ற சமயத்தில் கொடுக்க வேண்டியதை (விடுமுறைகளை) கொடுக்கும் குணமும் அவர்களுடன் இன்சொற்களால் பேசும் குணமும் இருந்தால் அடுக்கு அடுக்காக அன்பால் சூழ்ந்து கொள்ளப்பெறுவான் என்பதை வள்ளுவர்.

"கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்" என்றார்.

மேலும்,

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து இவ் உலகு" என்று கூறினார்.

அதாவது கடமை பிறழாமலும் கருணை குன்றாமலும் இருக்கும், வறுமை உடையோர்க்கே உலகம் உரிமை உடைத்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவகுத்த குறள். மணிகளுக்கு ஏற்ப வாழ்பவர்கள் தான் மணிவிழாக்காணும் மதுரம் குடும்பத்தினர்.

இவரும் இவரது துணைவியாரும் தமிழ் வளர்ச்சிப்பணிகளாகிய திருக்குறள் மாநாட்டிற்கும் அத்துடன் தமிழ் இலக்கிய கலைத்திறன் போட்டிகளுக்கும், தமிழ்ச்சங்கத்தினுடைய ஏனைய பணிகளுக்கும். தோளோடு தோள் நின்று உழைத்தவர்கள். இவர்களின் தொண்டைப் பாராட்டி தமிழ்ச்சங்கம் "தமிழ் எழில்" நல்முதல்வர் நன்மதிப்பு வழங்கி கௌரவித்தது இவரது துணைவியாருக்கும் தன்னிகரில்லாத தமிழ்ப்பணிக்காக தமிழ்ச்சங்கம் 'தமிழ் எழில்' நன்மதிப்பு வழங்கிக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் கோள் கேட்காத கோமான். எதற்கும் அஞ்சாதவர். இவர் பள்ளி முதல்வராகப் பணியாற்றிய முருகானந்தா கல்லூரி, திருவையாறு உயர்நிலைப்பள்ளி, தற்போது கடமையாற்றும் அக்கராயன் உயர்நிலைப்பள்ளி முதலிய பள்ளிகளில் நேரமுகாமைத்துவம், கற்பித்தல் முறைமைகள் என்பவற்றை சரியான முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி உள்ளார். இவரின் விடாமுயற்சியும் கடின உழைப்பும் இவரையும் இவரது குடும்பத்தையும் உயர்நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. எல்லா முயற்சிகளிலும் இவரது மனைவியாரின் பங்களிப்பு உள்ளது என்றால் மிகையாகாது. இவர்கள் நீடிய வாழ்வையும் பிணியற்ற வாழ்வையும் வாழ வாழ்த்துகின்றேன். மணிவிழா சிறப்புற அமைய மனதாரப் பாராட்டி வாயார வாழ்த்துகின்றேன். வாழும் நாளெல்லாம் உரிமையே, உடமையே, பதவியே என இருக்காமல் மணிவிழாக்காணும் காலத்தில் மேலும் பார்க்க வேண்டிய குடும்பப் பொறுப்புக்களைக் கவனித்து, பொதுப் பொறுப்புக்களை (தமிழ்த் தொண்டினை) ஏற்றுச் சிறப்புற வேண்டும் என தமிழ்த்தாயின் பெயரால் வேண்டுகின்றேன்.

"உள்ளத்தனையது உயர்வு"
"புகழ்ந்ததைப் போற்றிச் செய்தல் வேண்டும் " - குறள்

**வே.இறைபிள்ளை**
**வாழ்நாள் பெருந்தலைவர்**
**தமிழ்ச்சங்கம் –கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புன்னகையால் கட்டிப்போடும் கலைஞன்

மது! என்ற மதுரநாயகம்
எனக்குள் எண்பத்தொன்று முதல்
வாழும் உயிர்நண்பன்
வார்த்தைகளால் வசனங்களால்
எந்தவொரு மொழி ஆளுமையாலும்
விபரித்துவிட முடியாத நட்பு
எனக்கும் மதுவிற்குமானது

மது! பல்கலைக்கழக நண்பன்
எதையும் வெளிப்படையாக விமர்சிக்கும் குணாளன்
மதுவின் எளிமையான, இனிமையான வாழ்க்கை
எந்தவொரு சூழலையும் சமாளிக்கும் வல்லமை
எப்போதும் புன்னகையால் கட்டிப்போடும் கலைஞன்!
இதுவே மதுவையும் என்னையும்
பின்னிய கயிறு ஆகும்!

என் வாழ்க்கையின் எல்லாக் கட்டங்களிலும்
மதுவின் வாழ்க்கையின் எல்லாத் தருணங்களிலும்
நாங்கள் இணைந்தே பயணித்திருக்கின்றோம்
இனியும் இணைந்தே பயணிப்போம்.
வினைத்திறன் மிகு பாடசாலை அதிபராக
ஆளுமை மிக்க தலைவனாக
மாணவர்கள், ஆசிரியர்கள்
விரும்பும் முன்மாதிரியாக
அரச சேவையாற்றி , மணிவிழாக்காணும்
நண்பன் மதுவிற்கு
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மகிழ்ச்சியடைகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியமான நட்பின் வடிவம்
கடமை தவறாத காவலன்
சுயநலமற்ற சமூகசேவகன்
பிறேமாவின் கரம்பற்றிய நாயகன்
அறிவாளிகளின் தந்தை
அன்பு மருமகனின் மாமா
அழகு மழலையின் தாத்தா
பல்கலைக்கழக வட்டத்தின் பாடகன்
வாழ்க பல்லாண்டு!
தொடரட்டும் சமூகப்பணி...

**அன்பு நண்பன்**
**வேலு ஜெயராஜா (தொழிலதிபர்)**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பான நண்பனுக்கு மணிவிழா வாழ்த்து

இன்று மணிவிழா காணும் என் இனிய நண்பன் மதுரநாயகம் அன்பான உறவுகளின் அரவணைப்பில் நீயும் ஆறு பத்தை நிறைவு செய்தே அடுத்த அடி வைக்கிறாய்.... இன்று உனது பிறந்தநாளில் மனம் நிறைந்த வாழ்த்தினை மனதார சொல்கிறேன்.... என்றும் நீ உடல் நலமும் உள நலமும் பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறேன் நண்பா..... நீதி,நேர்மை, எளிமை, கண்டிப்பு, அர்ப்பணிப்பு என "ஆசிரியர்" என்றால் எப்படி இருக்க வேண்டுமென்று மற்றவர்களுக்கு கற்று கொடுத்தவன் நீ.....

அதே வரிசையில் நட்பு வட்டத்திலும் எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்காத அன்பு, கரிசனை, பிறர்க்கு உதவும் மனம் கோணாத உள்ளம் உன்னிடம் இருக்கும் வரை, உன்னை யாரும் ஈடு செய்ய முடியாது ... கள்ளம் கபடமில்லா சிரிப்புகள் ஒளிவு மறைவில்லா பேச்சுக்கள், உதவியென நாடின் தோள் கொடுக்கும் தோழமையான பண்பு, உதவி நாடிய எனக்காக உயிரையே பணயம் வைத்து தியாகம் செய்ய துடித்த தோழன் நீயே என அனைத்துமே இன்று நினைத்தாலும் மனதில் சுகம் சேர்கிறது...

போர்ச் சூழலில் பலரும் பல நாடுகளுக்கு புலம்பெயர்ந்த நிலையிலும் சொல்லொணா துயரங்களுக்கிடையில் நீ மட்டும் அர்ப்பணிப்பு பல செய்து ஆனந்தமான குடும்பத்தை அசாத்தியமாக காத்து, இன்று உன் குடும்பமே ஒரு பல்கலைக்கழகமாக திகழ வைத்தாய்....வளாக காலத்தில் ஆரம்பித்த நம் நட்பு இன்று வரை என்னிடம் உரிமையோடு உறவாடுவதை நினைக்கையில் நட்பின் ஆழம் புரிகிறது....

வளாக வாழ்வில் மரத்தடி நிழலில் ஒன்றாக அமர்ந்து முழுநேர அரட்டை, சின்ன சின்ன ஊடல்கள், வானுயர்ந்த அன்பு என அனைத்துமே நம் நட்பின் நினைவலைகளுக்குள் இன்றும் நிழலாடுகின்றன... மணி விழாக் காணும் உமக்கு மணியான உமது குடும்பம் இறைவனின் வரப்பிரசாதமே....

வாழ்க்கை என்பது ஒரு காட்டாறு அதில் இன்னொரு ஜெனனம் நிஜம் என்பது கிடையாது. அப்படி இருந்தாலும் உன்னைப்போல் நட்பு கிடைக்குமா? என்பது தெரியாது. வாழ்வில் பல படிகளில் பல மாற்றங்கள் கண்டாலும் நம் பாசத்திற்கு என்றுமே முற்றுப்புள்ளியில்லை.. என் உயிர் இருக்கும்வரை என் நண்பன் உன் முகம் என்றும் மறவேன்.. " "டேய் வாடா மச்சான்" என உரிமையோடு கூப்பிடும் உனது குரல் வெறும் வார்த்தை மட்டுமல்ல..அது உரிமையோடு என்னிடம் உறவாட நினைக்கும் ஒரு உன்னதமான இரத்த பந்தமில்லா நிலையான சொந்தமடா நீ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்ய வயதில் தொடங்கிய நம் நட்பு முதுமை பெறும் வயது ஆனாலும் நம் உறவில் சிறுமாறுபாடுமின்றி, அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து இருப்பது நம் நட்பு மட்டுமே...

இன்று முதல் உன் வாழ்வில் ஒளி மிளிரட்டும்.உன் மனதில் சாந்தம் நிலவட்டும். தெளிவு என்ற ஒன்றை உன் புத்தி அடையட்டும். உனக்கென உன் மனம்போல பொன்னான எதிர்காலம் காத்திருக்கின்றது. வாழ்க்கைப் பயணத்தில் அடுத்த அத்தியாயத்தில் அடியெடுத்து வைக்கும் எனது பால்ய நண்பன் உனது இன்றைய மணி விழா தினத்தில் உன்னை மனதார வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன்..

அன்புடன்
என்றும் உன் நண்பன்..
**ம. சேகர்**
தமிழ்நாடு.
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடி சூடா மன்னன் மதுரநாயகம்

இந்து சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்படும் ஈழமணித்திருநாட்டில், வடபுலத்தில் காடும் காடு சார்ந்த முல்லை நிலமும், வயலும் வயல் சார்ந்த மருத நிலமும் இரண்டறக் கலந்து, நீர் வளமும் நில வளமும் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் ஆளுகைக்குட்பட்ட வந்தோரை வரவேற்கும் அசைந்தாடும் நெல் வயலும் காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் காற்றிலே அலை கரை மோதும் வற்றாத குளங்களும் நிறைந்த அக்கிராஜ மன்னன் ஆட்சி செய்த அழகொளிர் பூமியே அக்கராயன்.

அக்கராயன் கிராமத்தை அழகுபடுத்தும் அக்கராயன் குளமானது அக் கிராமத்தையும் அதனை அண்மித்த ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் போன்ற கிராமங்களையும் வளம் மிகு பூமியாக்கும் நீரை வாரி வழங்குகின்றது. இக் கிராமத்தில் யாழ்ப்பாணம், தீவகம் போன்ற இடங்களிலிருந்து 1956ஆம் ஆண்டு வந்த மக்களை அரவணைத்து அது குடியேற்றமாக்கப்பட்டது. அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக அக்கராயன் மகாவித்தியாலயம் திகழ்கின்றது.

இதன் அதிபராக 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டு வரை கடமை ஏற்று நடாத்தும் திரு.க.மதுரநாயகம் அவர்களை நான் அறிந்து கொண்ட நாள் முதல் அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட உறவு இன்று வரையும் இணைபிரியா உறவாக வளர்ந்து வருவதை மகிழ்வுடன் கூறுகின்றேன். அதிபராகிய திரு.க.மதுரநாயகம் அவர்கள் மூலம் திருமதி.பிரேமா மதுரநாயகம் அவர்களும் அறிமுகமாகி, அவர்களது குடும்ப நண்பர் போன்று பழக நேர்ந்தது. திரு.க.மதுரநாயகம் அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க மனிதர். அது போன்றே அவரது குடும்பமும் வளர்ந்து வருகின்றதை பாராட்டாமல் இருக்க முடியாது.

தலைமை ஆசிரியராக அவர் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் அறிமுகமான பின் அவர் மூலமாக எனது 'சண்மலர் அறக்கட்டளை' நிறுவனமூடாக அக்கராயன், வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் போன்ற கிராமங்களில் பல்வேறு மனித நலச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முடிந்தது. குறிப்பாக அக்கராயன் மகா வித்தியாயல்தில் சரஸ்வதி சிலை, நுழைவாயிற் கதவு, மற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கான கல்வி மேம்பாடு என்பவற்றோடு பல சமூகப் பணிகளை அவர் மனமுவந்து சரியான முறையில் நடைமுறைப்படுத்த பெரிதும் உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நேரம் வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில், குழாய்க்கிணறு மூலம் குடிநீர் விநியோகம் மற்றும் முதியவர்களது நலம் சார்ந்த விடயங்களை நான் முன்வந்து எடுத்த போது, எனக்குத் துணை நின்று துரிதமாக அப்பணிகளை நிறைவேற்றிய தன்னலம் கருதா தலைமை ஆசிரியர் என்றால் அது மிகையாகாது.

அத்துடன் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு வசதி குறைந்த மாணவர்களைத் தெரிவு செய்து, சிறு உதவிகள் செய்த போதும் மிகவும் தெளிவாக அறம் சார்ந்து கண்ணியமாக வசதி குறைந்த மாணவர்களைத் தெரிவு செய்து, உதவிகள் புரிய உறுதுணையாக நிற்பவர். என்னால் இவரை என்றும் மறக்க முடியாது. இவரது அயராத உழைப்பினால் மாணவர்களுக்கான உயர்கல்வியை அமைத்துக் கொடுத்து, மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஊக்கமளித்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியுள்ளார். கற்றல் மாத்திரமன்றி இணைபாடவிதான செயற்பாடுகளினாலும் மாணவர்களை ஊக்கப்படுத்தி, விளையாட்டு, இசை, நாடகம், குறும்படம் போன்றவற்றில் தேசியம், மாகாணம், மாவட்டம் என சாதனை படைத்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறாக தன்னலம் கருதாது கல்விப்பணியோடு அறம் சார்ந்து செயலாற்றும் திரு.க.மதுரநாயகம் அவர்களது அளப்பரிய சேவையால் அக்கராயன் மகாவித்தியாலயம் வளர்ச்சியும், உயர்ச்சியும் பெற்று நிற்கின்றது. இவ் வளர்ச்சிக்கும், உயற்சிக்கும் அதிபரோடு தோளோடு தோள் கொடுத்து நிற்கும் உபஅதிபர் ஆசிரிய பெருந்தகைகள், மாணவர்கள், மற்றும் கல்விசாரா ஊழியர்களையும், பாடசாலைச் சமூகத்தையும் பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். மணிவிழா நாயகனின் ஓய்வுகாலம் சிறப்புற இறையருளை வேண்டுகின்றேன்.

**அன்புடன்,**
**சண்முகநாதன்**
**நெடுந்தீவு சண்மலர் அறக்கட்டளை**
**கனடா (ஸ்கந்தபுரம்–கிளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமையின் அடையாளம்

அறுபது ஆண்டுகள் நிறைந்து மணிவிழாக் காணும் நாயகன் அக்கராயன் மகாவித்தியாலத்தின் அதிபர் திரு.க.மதுரநாயகதிற்கு AVR அறக்கட்டளையின் சார்பாக நட்போடு, ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.


யாழ். பல்கலைக்கழகத்தில் தொடங்கியது எமது நட்பு. "மது" என்று எம்மால் அன்போடு அழைக்கப்படும் மதிப்புக்குரிய அதிபர் மதுரநாயகம் அவர்களின் பணிகளும் சேவைகளும் அளப்பரியன. தன்னலம் கருதாது, அனைவரையம் அனுசரித்து அன்போடு அரவணைத்து கடமையாற்றும் குணம்தான் அவரின் இன்றைய உயர்வுக்குக் காரணம். நான் அறிந்த வகையில் அதிபர் மதுரநாயகம் அவர்களுக்கு எதிரிகள் என்று எவரும் கிடையாது. ஏனெனில் தன்னுடன் முரண்படுபவர்களையும் தன் இன்முகத்தால் தன்வசப்படுத்தி காரியங்களை செயலாற்றும் சாதுரியமான மனிதர் இவர். இவர் இந்த இனிய குணத்தினாலும், மலர்ந்த முகத்தினாலும் தன் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களின் மனங்களிலும் நிறைவாக நிலைத்திருக்கின்றார். AVR அறக்கட்டளையூடாக வன்னி மாவட்டப் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுச் செயற்றிட்டங்களை மேற்கொண்ட பொழுது, தனது பாடசாலைக்கு மட்டும் உதவிகளைக் கோராது அயற் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றங்களில் மிக அக்கறை கொண்டு அப்பாடசாலைகளுக்கு எமது நிதி அனுசரணைகளை வழங்குவதற்கு வழிகாட்டியாக இருந்தார்.

இது தவிர வன்னி மாவட்டத்தின் தமிழ்மொழிப் பாட அடைவு மட்டத்தினை உயர்த்தும் நோக்கில் தனது துணைவியார் கிளிநொச்சி கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பிறேமா மதுரநாயகம் அவர்களின் வழிகாட்டலில் பல கருத்தரங்குகளையும், பயிற்சிப் பட்டறைகளையும் எமது AVR அறக்கட்டளை நிறுவனத்தினூடாக நடாத்தி மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்த பெருமையும் இவரையே சாரும். பண்டிதர் திருநாவுக்கரசு அவர்களுடைய தமிழ்ப்பாட பயிற்சிநூல்களை வழங்கியபோது அயற்பாடசாலைகளுக்கும் வழங்கவேண்டும் என பெருந்தன்மையுடன் கேட்டுக்கொண்ட பரோபகாரி.

போர் முற்றுகையின் பின்னர் 10 வருடங்களுக்கு முன்னர் நாம் அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு வருகை தந்திருந்த போது, அப்பாடசாலை எவ்வித வளங்களும் இன்றி குடிநீர் வசதி கூட இல்லாத ஓர் அவல நிலையிலேயே இருந்தது. அதிபர் மதுரநாயகமோ கற்பித்தலை விட மாணவன் கல்வி கற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூழலே ஒரு சிறந்த மாணவனை உருவாக்கும் என்பதனை உணர்ந்து, இப்பாடசாலைச் சூழலையும் வளங்களையும் மேம்படுத்துவதற்காக தமது நண்பர்கள் அரச அதிகாரிகள், பழைய மாணவர்கள், சமூகநிறுவனங்கள் போன்றவற்றை இலாவகமாக அணுகி அவர்களின் அனுசரணையுடனும் அயராத உழைப்புடனும் தனது கை கறைபடியாமல் இன்று இப்பாடசாலையை இம்மாவட்டத்தின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

போரினால் பொலிவிழந்த
அக்கராயன் பள்ளியிலே தடம் பதிக்க வந்த
அதிபர் தானே! மதுரநாயகம்
அன்று உங்கள் வியர்வைத்
துளியில் விதைத்த மாணவமணிகள் தான்
இன்று பல பெற்றோரின் மனதிற்கு
நிழல் தரும் மரங்களானதோ!
அன்று உங்கள் கம்பீர நடைவருவதைக்
கண்டு வியந்த பாடசாலை
இன்று நீங்கள்
விடைபெறுவதைக் கண்டு
விம்மி நிற்கிறதோ!
நம் நட்பெனும் வினா தந்த பல
பொற்கணங்கள் தான்
பிரியாவிடை வரை நம்மை
பிரியவிடாமல் தொடர்கிறதோ!
உங்கள் மணிவிழா நாம் காண்கையில்
அந்நாள் திரும்ப வராத திருவிழாவாகுமோ!

விழா நாயகனே! சேவை சேவையென சேவையைத் தவிர தனது தேவை ஒன்றை அறியாத நீங்கள் இனிவரும் உங்கள் ஓய்வு காலத்தை அன்பான குடும்பத்துடன் இணைந்து, மகிழ்ச்சியாக கழித்திட எங்கள் AVR அறக்கட்டளை நிறுவனத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.சிவகுமார் விசாலினி**
ஸ்தாபகர் : **AVR** அறக்கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதருள் மாணிக்கம்

மணிவிழாக் காணும் நாயகனே!
மதுரநாயமே!
பணிதனில் உயர்ந்த பக்குவமே!
பாராட்டும் பொக்கிஷமாய்!
கணித்துமை வாழ்த்தும் காலமிதே.
மனிதருள் மாணிக்கமே!

அறுபது ஆண்டுகள் அரும்பணியாற்றி,
ஆறுதல் அடையும் இந்நாள்
அன்புடன் வாழ்த்துகின்றோம்.
தேறிடும் வகையில் பற்பல பணிகள்
தேசம் மகிழ்ந்திடச் செய்தவனே!
கூறிடும் பணிகளை முழு மனதோடு
கூடிச் செய்த பெருவரமே!

வறுமையில் வாடும்
பள்ளிச் சிறார்களை
உரிமையோடு அணுகி
உண்மை அறிந்து
உதவிகள் புரிந்த உத்தமனே!
உள்ளம் நிறைந்த வித்தகனே!
பதவி வெறியிலாப் பண்புடனே!
பணிகள் செய்த மாதவமே!


அரும்பணியாற்றும் எம் நிறுவனத்தின்
அனைத்துப் பணிகளையும் தலைமையேற்று
விருப்புடன் விரைந்து நிறைவேற்றி
வெற்றிகளாக்கிய செயல்வீரா!
பொறுப்புணர்வான உமைப்போற்றி
பாமாலை சூடி வாழ்த்துகின்றோம்.

ஆதரவற்ற முதியோர்க்கும்
அல்லலுற்றிடும் குழந்தைகட்கும்
போதனை செய்து மாணவரின்
பெருங்குறை தீர்த்திடும் மன்னவனே!
சாதனை பற்பல பெற்றிடவே
சகல பணிகளி''லும் உழைத்தவனே!
வேதனையுற்றிடும் மனிதருக்கு
நாம் தந்திடும் நிதிகளை உதவிநின்றீர்
மணிவிழாக்காணும்
நாயகனை மனதார
மன்றத்தால் வாழ்த்துகின்றோம்.

**நெடுந்தீவு**
**(சண்மலர் அறக்கட்டளை)**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக இசைவாக்கம் மிக்க நல்ல மனிதன்

மணிவிழா நாயகன் கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருந்தும் 1987ஆம் ஆண்டு முதல் நியமனம் வன்னேரிக்குளம் மகாவித்தியாலத்தில் ஆரம்பமாகி கிட்டத்தட்ட 34 வருடங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் அதிபராகவும் இருந்து தனது கஷ்டத்தைப் பாராமல் கிளிநொச்சி மாணவர்களின் உயர்வுக்காக உழைத்த ஒரு உத்தமராவார். இவர் ஒரு வணிகப் பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றதோடு, அதிபர் சேவையிலும் முதலாம் தர அதிபராகவும் இருந்து அரும்பணியாற்றியுள்ளார்.

நான் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவன். அவரின் திறமையை 1987ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கண்கூடாகக் கண்டவன் என்ற முறையில் சிறந்த ஆசிரியர், சிறந்த அதிபர் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இவருடைய சேவைக்காலத்தில் பல இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. எல்லாவற்றையும் சமாளித்து, தனது கடமையை எல்லோரும் போற்றக் கூடிய முறையில் செயற்படுத்தி வந்தார். இவர் அமைதியும் தனது பணியில் மிகுந்த கரிசனையும் கொண்டவராக செயற்பட்டார்.

இவர் இறுதியாக, அதிபராகப் பதவி வகித்த பாடசாலை கிளி/அக்கராயன் மகாவித்தியாலயமாகும். இவரின் இறுதிக்காலத்தில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் இவரின் ஆற்றலை வெளிக்காட்டியுள்ளன. மணிவிழாக் காணும் நாயகன் கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் மொழியால், நடையால், பண்பான தனது நடத்தையால் இனமத பேதமின்றி எல்லோருடனும் அன்பாய் பழகுவார். இவர் எனது மனதில் மாத்திரமல்ல ஏனையோர் மனங்களிலும் நீங்கா இடம் பிடித்தார். எனது கிராமத்துக்கு அயற் கிராமத்தில் வாழும் இவர் சமூக இசைவாக்கம் மிக்க நல்ல மனிதராக எல்லோராலும் மதிக்கப்படுபவர். இவருடைய வளர்ச்சிக்கு இவரது துணைவியாராகிய திருமதி பிறேமா மதுரநாயகம் அவர்களின் பங்களிப்பும் போற்றுதற்குரியது. 'பிறர்பிள்ளை தலை தடவினால் தன் பிள்ளை தானே வளரும்' என்பார்கள். அதற்கு ஏற்ப இவரின் மூத்தமகள் ஒரு வைத்திய கலாநிதியாவார். இரண்டாவது மகள் ஒரு பொறியியலாளர் ஆவார். மூன்றாவது மகன் மருத்துவபீட மாணவராவார் நான்காவது மகன் க.பொ.த உயர்தரத்தில் நன்கு படித்து வருகின்றார்.

இவரது சேவை, இவர் சேவை செய்த கல்லூரிகளில் தொடர்ந்தும் நிலைத்து நிற்கும். மணிவிழா நாயகன் ஓய்வு காலத்தில் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேர்த்திமாருடன் நீண்ட காலம் ஆரோக்கியத்துடனும் இன்புற்றும் வாழ இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**திரு.அ.கனகரத்தினம்**
**ஓய்வுநிலை அதிபரும்,**
**சமாதான நீதிவானும்**
**கனகபுர கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உழைப்பால் உயர்ந்த உத்தமன்

1987 ஆம் ஆண்டு முதல் இற்றை வரைக்கும் சேவையாற்றும் நல்லெண்ணம் கொண்ட ஒரு உத்தமமான மனிதன் திரு.க.மதுரநாயகம் அவர்கள். அவர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர் போன்ற பொறுப்புக்களுக்கப்பால் குடும்பத்தில் நல்ல கணவன், நல்ல தந்தை எனும் பதவிகளையும் வகிக்கின்ற மனிதன்.

1987ஆம் ஆண்டு இவரது முதல் நியமனம் கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்திற்கு கிடைத்தது. அன்றைய காலப்பகுதியில், அப்பாடசாலை அமைந்துள்ள சூழலானது அவருக்குத் தெரியாது.அன்று,அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு வந்தார். நான் அப்பொழுது க.பொ.த. உயர்தரம் முதலாம் வருட மாணவனாக இருந்தேன். அப்பொழுது எமது பாடசாலை அதிபர் திரு.கி.சின்னராசா. அவர்களின் பணிப்பின் பேரில் மதுரநாயகம் ஆசிரியர் அவர்களை வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்திற்கு அழைத்துச் சென்றேன்.அப்பொழுது, துவிச்சக்கர வண்டியில் அவரும் நானும் சென்றோம்.. வன்னேரிக்குளம் செல்லும் பாதை தவிர போகும் வழி அடர்ந்த காடு. யானை, கரடி, புலி, பாம்புகள் வாழும் இடம். மிகவும் பயந்து பயந்து சென்றோம்.

மிகவும் கடினமான காலப்பகுதியிலும் தன்பணியை சிறப்பாக சேவையாற்றிய மனிதராவார். அக்காலப்பகுதியில் இந்தியன் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெறும். அப்பொழுதெல்லாம் ஆசிரியர்களும் பாதிக்கப்படுவதுடன் விசாரணைகளுக்கும் உட்படுவார்கள்.. இத்தகைய காலத்தில் சோர்வின்றி, பணியாற்றினார்.

2013ஆம் ஆண்டு தரம் வாய்ந்த அதிபராக கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு நியமனம் பெற்று வந்தார். அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து இப்பாடசாலைக்காக உழைத்து வரும் ஆளுமைமிக்க அதிபராக செயற்பட்டு வந்தார். அவரின் சேவைக்காலத்தில் தான் கல்வி, விளையாட்டு, கலை பண்பாடு முதலிய அனைத்து துறைகளும் வளர்ச்சியடைந்தன. அதுமட்டுமன்றி உயர்தரத்தில் விஞ்ஞான,கணித பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் உழைத்த மனிதன். தனது நண்பர்கள்,உறவினர்களிடம் உதவிபெற்று பாடசாலை,முதியோர் இல்லம், ஏழைச்சிறார்கள், முதியவர்கள் முதலிய எல்லாத் தரப்பினருக்கும் உதவி செய்து கொண்டிருக்கும் கஸ்பார் மதுரநாயகம் அவர்கள் நீண்ட ஆயுளுடனும், தேக ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியாகவும் வாழவேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.க. கனகலிங்கம்.**
**செயலாளர்,**
**பழையமாணவர் சங்கம்,**
**கிளி /அக்கராயன் மகாவித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருமையான பெட்டகமே!

*வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!*
*வானுயர்ந்த கான மரம் சூழ் அக்கராயன் ம.வியை*
*வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!*

*முப்பது வருடங்கள் முழுமையாக முடிந்த பின்பு*
*மூச்சு முட்டும் ஆசையிலே உன் முற்றம் நாடிவர*
*இப்போதும் இனிக்கின்றதே! என் மனக்கண்ணில் தெரிகிறதே!*
*உன்னோடு நான் இருந்த காட்சிகளே!*
*அப்போதும் அன்னை அவள் கல்வி அள்ளித்தான் சொரிந்தாள்*
*அன்று, இன்று போல் அக்கராயன் ம.வி இல்லைத் தான்*
*தற்போது தைரியமாய் உண்மையினைச் சொல்லிடுவோம்*
*தரமாக மிளிர்கின்றதே! எம் தாயின் திருக்கோயில் இன்று*

*கன்று ஒன்று தன் தாயைத் தவறவிட்டு தேடுதல் போல்*
*கல்லூரி பார்த்திடவே கால்கள் அங்கு சென்றனவே!*
*நின்று மனம் வியந்து நெடுவாசல் சூழ்ந்து, அங்கு பசுமை*
*நீள் மரங்கள் நிழலெல்லாம் குளிராக எனைத் தழுவிடவே!*
*இன்று திறந்ததுபோல் இடையிடையே புதுக்கட்டடங்கள்*
*இயல்பாக என் மூச்சைத் தடுத்துத்தான் விட்டதுவே!*
*முன்நின்று செய்தோரின் முகவரிகள் தெரியாமல் அவர்*
*முயற்சி தனை மனம் நினைத்து அக மகிழ்வடைகிறதே!*

*எதிலும் ஓர் ஒழுங்கு! எப்போதும் புன்னகையோடு கண்டிப்பு!*
*எண்ணி எதையும் துணிகின்ற ஊக்கமே அவர் துடிப்பு!*
*அதிலும் அலுப்பென்று அரைக்கணமும் இருந்திடாது*
*அனைவரையும் அணைத்து அன்பாட்சி*
*செய்துவரும் அதிபரை நான் கண்டேன் அங்கே*
*எனைத் தெரிந்து சில நிமிசமாகும் முன்னே உடன்*
*இதமாக மாணவர் தனைக் கூட்டி தலைமைதாங்கி எனைமதிப்பளித்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலும் வராத பாலகன்போல் பார்த்தவுடன் என் நிலைமை!
பக்கமதில் ஆசான்களாய் என் முன்னாள் மாணவர்கள்
கலைமகளை முன்னிறுத்தி கவினுறு கல்லூரி நடுவகத்தில்
கல்விக்கு உரமிட்டு கண்ணிமைபோல் காத்து வருபவரே!
மலை மீது இருப்பது போல் மங்கா நல்லெழில் காட்சியொடு
மாட்சி தரும் எம் மதிப்புமிகு அரும் பெட்டகமே!
விலையேது கல்விக்கு அதை விருந்தாக்கி தம் மாணவர்க்கு
விருப்புடனே நல்கி வரும் அதிபரோடு ஆசிரியர்க்கும்
சிலையாகும் கல்வி சிறார் வயதில் கற்றிட்டால் அதை
சிந்தித்து செயல் கொண்டு சிறந்திடுவீர் மாணவர்காள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கிடைத்திட்ட எம் மாணவர்களின்
கிளர்த்தெழுந்த மனதைத் தொடும் மகத்தான பல சாதனைகள்
அளிக்கின்றார் ஆண்டாண்டு தோறும் அவரவர் பங்குக்கு
அவர் பெற்ற பேறுகள் வர்த்தக, கலைத்துறையில் வரமாகும் பிரமாதம்
களிக்கின்றோம் கர்வமுடன் மருத்துவத் துறையிலும் இம்முறை
கண்டிட்டார் இடம் எடுத்தார் பல்கலைக்கழக மதில் மாணவராய்
தளிர்க் கரங்கள் தரமான எதிர்காலம் தங்கள் வசம் இருக்கையில்
தரவேண்டும் எம்தாய் நிலத்திற்கே தப்பாமல் செய்வீரே!

**தியாகராசா இரவீந்திரராஜா**
**(முன்னாள் ஆசிரியர்)**
**மண்கும்பான் மேற்கு, வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கைப் நோக்கிய பயணத்தில்...

அறிவொளி வீசி ஆதவன் பிரகாசமாய் யாழ் உரும்பிராய் மண்ணில் உதித்திட்ட சான்றோராய் விளங்குபவரே திரு.கஸ்பார் மதுரநாயகம் அவர்கள். துடிப்பான செயலாற்றி மிடுக்காக நடந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கல்விப் பயணமதை கச்சிதமாய் மேற்கொண்டார். தான் மட்டுமல்ல தன்னைச் சார்ந்தவர்களும் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்ற நல்ல மனப்பாங்கு கொண்டவர். மற்றவர்களுக்கு உதவி செய்பவர். கஷ்டப்பட்ட மாணவர்களுக்கு தனது நண்பர்களிடமிருந்தும், வேறு இடங்களிலிருந்தும் உதவிகள் பெற்று மாணவர்களின் கற்றலுக்கு உதவியவர் பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக தனது வெளிநாட்டு நண்பர்களிடமிருந்து உதவியினைப் பெற்றுக் கொடுத்த உத்தமராவார்.

அத்தோடு தன் நண்பர்களிடமிருந்து உதவிகள் பெற்று, பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவை சிறப்பாக நடத்திக் கொள்வதுடன் பெறுமதிமிக்க பரிசில்களையும் மாணவர்கட்கு வழங்கி ஊக்குவித்தவர். பாடசாலை முன்றலிலே திரு.பாலகிருஸ்ணன் அதிபர் அவர்களால் ஆரம்பித்து வைத்த நிழல் மரங்களை தொடர்ந்து பேணிக் காத்ததுடன் மென்மேலும் பாடசாலை வளாகத்தை வனப்பூட்டும் வகையில் மரங்கன்றுகள், பூஞ்செடிகள் என்பவற்றை நாட்டியதுடன் பாடசாலை மதிலையும் கட்டுவித்து கவினுறு நிலைக்கு மாற்றிய பெருமை திரு.க.மதுரநாயகம் அதிபர் அவர்களையே சாரும்.

எந்தெந்தப் பாடசாலைக்கு அதிபராகச் சென்றாரோ அந்தந்தப் பாடசாலையின் கல்வியை மேம்படுத்த அயராது உழைத்தவராவர். கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தை 1AB பாடசாலையாக தரம் உயர்த்தி விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளைத் தொடக்கி வைத்த பெருமை இவருக்குரியது. க.பொ.த உயர்தரப் பொதுப்பரீட்சையிலே கலை, வர்த்தகம் விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளிலே மாவட்ட நிலையில் 1ஆம் 2ஆம் நிலையினைப் பெற வழியமைத்தவராவர். 2019 இல் முதன் முதலாக வைத்தியத்துறைக்கு இ.ஹேமகிரி என்ற மாணவனை அனுப்ப தன் முயற்சியை மேற்கொண்ட பெருமையாளரும் இவரே. வருடந்தோறும் பத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் இவரது பணிக்காலத்தில் நடைபெற்ற பாக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அதிபர் என்ற பெருமை கொள்ளாது ஆசிரியர்களின் உள்ளங்களைப் புரிந்து கொண்டு, எல்லா ஆசிரியர்களையும் மதித்து, பண்பாக வழிநடத்தும் திறமையும், மனிதநேயப் பண்பும் கொண்டவராவார். நேர முகாமைத்துவத்தைச் சிறப்பாகக் கடைப்பிடிப்பவர். எடுத்துக்காட்டாக விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் கூட்டங்கள் என்பவற்றைக் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி உரிய நேரத்தில் முடிக்கும் திறமையைக் காணக்கூடியதாக உள்ளது.

நல்ல அதிபராக, நல்ல நண்பனாக, நல்ல பாடகராகச் செயற்படுபவர். பாடசாலை ஒளிவிழாக் காலத்தில் நிச்சயமாக அவரது பாடல் எமக்காக காத்திருக்கும். மாணவர்களதும் ஆசிரியர்களதும் அதீத வரவேற்பும் பாடல் இடம்பெறும் வேளையில் கிடைத்து விடும். “ நீரின்றி அமையாது உலகு” என்பதற்கிணங்க எமது பாடசாலைக்கு நிரந்தரமான நீர்வளத்தை தனது பெருமுயற்சியால் பெற்றுத் தந்தவர். பாடசாலையை வனப்புற வைத்தவர். இத்தகைய வாண்மைத்துவம் மிக்கவரும், வினைத்திறன் மிக்கவருமான இப்பாடசாலையின் அதிபரான மதிப்பிற்குரிய திரு.க.மதுரநாயகம் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**ஓய்வு நிலை ஆசிரியை**
**செல்வி நா.ரஞ்சினிதேவி**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புமிகு அதிபரே வாழ்க!

மருந்தாய் கிடைத்த வரமோ!
மதுரநாயகம் என்னும் முதல்வர்
இருளாய் கிடந்த பள்ளிதனை
இரு சுடராய் துலங்க வைத்தீர்!

முற்றிக் குறுத்த கனியாய்
மழலைகள் கல்விக் கூடமதை
வான் முட்டும் சரித்திரம் படைக்க
விண்ணவன் அருளிய கொடையோ நீவீர்!

பூவிலே துளிர்த்திடும் தேனாய்- நீங்கள்
பரிவினை விரித்திடும் கோலம்
எரி வினை துட்டரைக்கூட
ஏறெடுத்துப் பார்த்திட வைக்கும்

பள்ளியின் முன்றிலில் பாரும்
பண்பான உங்கள் முகம் தெரியும்
அழகிய சூழல்கள் யாவும்
அதிபரின் கொடையென்று கூறும்

வறுமையின் பிடியில் சிக்கும்
வளமற்ற மாணவர் வாழ்வை
உயர்த்திட என்றே நிதமும்
உதவிக் கரங்கள் விரித்தீர்!

கடமையில் கதிரவனை வென்றீர்
கொடையிலே கர்ணனையும் கடந்தீர்
தரணியைக் காத்திடும் பரனாய்
தண் பள்ளியை கைக்குள்ளே வைத்தீர்

அறுபது அகவையை எட்டி
அனுபவ அறிவை அளித்தீர்
கதிரோடு நிலவாகி நிதமும்
களிப்போடு வாழ்வாங்கு வாழ்வீர்!

திருமதி நந்தினி சிவானந்தன்
(ஆசிரியை)
கிளி / அக்கராயன் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைகோர்க்கும் சூரியன்

அற்புதக் கவிதை ஒன்றுக்கான சொற்கள் இலகுவில் வந்து வீழ்வதில்லை. அதே போன்றுதான் மனதிற்குப் பிடித்தவர் பற்றி எழுதுவதும். "மது சேர;" கடந்த நான்கு வருடங்களாகத்தான் இந்த சொல் எனக்கு அனுக்கமானது. தரையிற் சிந்திய ஒரு நெல் மணியைப் பார்த்ததும் எவ்வாறு காற்றின் திசைக்கு தலை சாய்ந்தாடும் ஒரு பச்சை வயல் வெளி நம் மனசுக்குள் விரியுமோ, அதே போன்று தான் இந்தப் பெயரைக் கேட்டதும் ஒரு கபடமற்ற கம்பீர ஆளுமையின் உருவம் மனதிற்குள் விரிவதை எவராலும் தடை செய்ய முடியாது.

உங்களுடைய பணி ஓய்வு நாளில் பலரும் உங்கள் Professional Achievements பற்றிப் பகிரக் கூடும் அவற்றையும் தாண்டி, உங்களது இன்னும் பல பரிமாணங்களை பகிர வேண்டுமென்பது தான் எனது பேரவா!

விமர்சனம் சூழ் உலகில் சிறு புன்னகையால் அதனைப் புறம் தள்ளி, உங்கள் இயங்கு நிலையிலிருந்து இறங்கி வராதவர் நீங்கள். எது வரினும் இயல்பாய் இரு என்பது உங்கள் நடத்தையின் மற்றொரு சாரம். அதிகாரத் தோரணையற்ற மென் பேச்சும், அபூர்வமான சொல்லாட்சிகளும், சக மனிதர்கள் மீதான நேசமும் புதுமையாளனாக உங்களை எப்போதும் நோக்க வைக்கும். இவரால் மட்டும் எப்படி முடிகின்றது என்று சிந்திக்க வைக்கும்.

வசீகர அழைப்புக்கொண்டது உங்கள் பேச்சு. காலை ஒன்றுகூடல்களில் ஒலிபெருக்கியூடு பிசிறற்று, சீரான ஏற்ற இறக்கத்தோடு வரும் உங்கள் குரலுக்கு நான் என்றும் பெரிய விசிறி. உங்கள் சாயற் பேச்சுக்களால் என் வகுப்பறைகளை இன்றும் நான் வண்ண மயமாக்கிக் கொண்டிருக்கிறேன்.

பல சந்தர்ப்பங்களில் ஒரு குடும்பத்தின் தந்தைக்கும் ஒரு பாடசாலையின் அதிபருக்கும் பல்வேறு ஒற்றுமைகள் உள்ளன. பிள்ளைகள் மீதான அவர்களின் பாசத்தையும், அக்கறையையும் விஞ்சி அவர்களது கண்டிப்பு இருப்பதால் அனேக பிள்ளைகளால் விரும்பப்படாதவர். ஆனால் இதற்கு நீங்கள் விதிவிலக்கானவர். உங்களுக்கு பிடித்த Greate Personality பற்றி ஆங்கிலத்தில் சிறிய Paragraph எழுதச்சொன்னால் மகாத்மா காந்தி, அப்துல்கலாம் போன்ற ஆளுமைகளோடு "அதிபர் மதுரநாயகம்" பற்றியும் எழுதும் எத்தனையோ மாணவர்களை நான் பார்த்து வியந்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பெயர்ப்பாளர் இல்லாமல் எவரோடும் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடிய உங்களின் ஆங்கிலப் புலமைகண்டு வியந்திருக்கின்றேன். செயல்களில் அகல் ஏற்றி உங்கள் பணியிடங்களை நீங்கள் மிளிரச் செய்திருக்கின்றீர்கள். 34 வருடங்களாய் ஒளி பரப்பி ஒரு சூரியனாய் ஓய்வெடுக்கப் போகின்றீர்கள். நீங்கள் சுட்டெரிக்கும் சூரியனல்ல. எல்லோரையும் கைகோர்த்துக் கொள்ளும் பேரன்புச் சூரியன் உங்களால் பதனிடப்பட்ட பல்லாயிரம் ஒளிச்செடிகள் காலாதி காலமாய் மிளிர்ந்து கொண்டேயிருக்கும். அதில் நானுமொருவர் என்பதில் அளவற்ற பெருமை. காலம் உங்களோடு பணிபுரிந்தவர்கள் அனைவருக்கும் ஒரு ஞாபகப் பழக்கூடையைப் பரிசளித்திருக்கின்றது. உங்கள் நினைவு வருகையில் அவர்கள் ஞாபகப் பழங்களைப் புசிக்கட்டும்.

தீரா மகிழ்வுடன் ஓய்வுக்காலத்தைக் கொண்டாடுங்கள் அன்பு ஆசானே!

**வி.யோகேஸ்**
**ஆசிரியர்**
**மு/ தென்னியங்குளம் அ.த.க பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரமாகக் கிடைத்திட்ட அதிபரே வாழ்க!

அனுபவம் என்பது அளவிட முடியாததொரு புதையல் ஆகும். அவ்விதமான பெறுமதிமிக்க புதையலே எமது தாய்ப்பாடசாலையாகிய கிளி / அக்கராயன் ம.வியின் அதிபரான திரு.க. மதுரநாயகம் என்னும் பெருமையாளர். இவர் தனது பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பல்வேறு வழிகளிலும் உறுதுணையாக இருந்தவர். அயற் பாடசாலையாகிய கிளி / அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் நடத்தப்படுகின்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் ஒத்துழைப்பு நல்கி தோளொடு தோள் நின்றவராவார். இவர் தேவைப்படும் நேரங்களில் தனது அனுபவத்தின் திறனால் அவ்வப்போது ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி எமது பாடசாலையினுடைய முன்னேற்றத்திற்கு துணையாக நின்றவராவார்.

மேலும் எமது பாடசாலையிலே வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வின் போது மாணவர்களுக்குரிய பரிசுப்பொருட்களைப் பெற்றுத்தந்து பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெறுவதற்கு உதவி புரிந்தவராவார். இதனை விட அறக்கட்டளை நிதியத்தினூடாக தனது நண்பரின் அனுசரணையுடன் பரிசளிப்பு விழாவினை நடத்துவதற்கும் ஒத்துழைப்பு நல்கியவர்.

எமது பாடசாலையில் நடைபெறுகின்ற போட்டிகள், விழாக்கள் என்பவற்றின் போது தனது பாடசாலைக்குச் சொந்தமான தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், ஒலிபெருக்கிகள் போன்ற பொருட்களை வழங்கியுதவியுள்ளார். அத்துடன் போட்டிகளை நடாத்துவதற்கும் நிகழ்வுகளைச் சிறப்பிப்பதற்கும் மேலதிகமாக துறைசார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் பாடசாலை நேரத்தைத் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தனது பாடசாலை ஆசிரியர்களின் உதவியையும் வழங்கியுதவியுள்ளார்.

இவரது சேவை மகத்தானது. மணிவிழாக் காணுகின்ற இவ் வேளையில் சகல சிறப்புக்களையும் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

**திரு.அ.சிவகணேசஷ்**
**அதிபர்**
**கிளி / அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழா நாயகனே ! மதுரநாயகமே!

மணிவிழா நாயகனே! மதுரநாயகமே!
பணிபல புரிந்து எம் பாடசாலையை வளர்த்தவனே!
நெறிமுறை வழுவா நிற்கும் நேர்மைத்திறம் கொண்டவனே!
அறுபதாம் அகவை இன்று அகிலத்தில் வாழ்வாய் நீடு

அக்கராயன் ம.வி அதிபராய் பொறுப்பேற்ற நாள் முதலாய்
திக்கெட்டும் புகழ் விளங்க தினந்தோறும் உழைத்தவனே!
கல்விப் பயிர்வளர்க்க கலங்கரை விளக்காய் ஒளிர்ந்து
காத்திரமாய் உழைத்து நின்ற உத்தமனே வாழ்க!

வளங்கள் பலகுவித்து வனப்புறு சோலையாய்!
மாற்றிவிட்டாய் எம் பாடசாலையை
கலைஞன் நீ என்பதனால் கலைக்கூடமாய்
மாறியது எம் பாடசாலை.

தரணியில் யார்க்கும் அஞ்சாத நெஞ்சினன் நீ
நிதானம் தவறாது நிலைகுலையாது
நிமிர்ந்தே நிற்பது நினது தனித்துவம்
நேரந் தவறாமை நினது மணிமகுடம்

பிதாவாய் நின்று பிரச்சினை தீர்ப்பது
நின் தலைமையின் மகத்துவம்
கலை வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்
தொழிநுட்பம்யாவும் துரிதமாய் வளர்ந்ததுன் பொற்காலம்

வார்த்தைகளில் நாகரிகம் வரம்புடன் பழகும் சுபாவம்
வன்முறையற்ற நிர்வாகம் சரளமாய் ஆங்கிலத்தில் உரையாடும் தனி அழகு
சரியெனப்பட்டதை பட்டெனக் கூறிவிடும் பக்குவம்
இவையாவும் உன் ஆளுமையின் அணிகலன்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடென்றும் மேடென்றும் கஸ்டமான பிரதேசமென்றும்
பாராது கடினமாய் உழைத்து
ஒன்பது ஆண்டுகளில் உயர்த்திவிட்டாய் எம் பாடசாலையை
அதிககாலம் பணிபுரிந்த அதிபர் என்ற பெருமையும்
உந்தனுக்கே உரித்தன்றோ!

வன்னேரி, ஜெயபுரம், பளை தொட்டு
முரசுமோட்டை, திருவையாறு கால்பட்டு
அக்கராயன் மகாவித்தியாலயத்தில் தடம் பதித்து
அறுபது வயதென்பதால் அகல்கின்றாய் ஓய்வுபெற்று
வாழிய மணிவிழா நாயகனே! வாழிய மதுரநாயகமே!

**திரு.ந.கிருஸ்ணானந்தன்**
**(ஆசிரியர்)**
**கிளி / அக்கராயன் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நட்டதெல்லாம் செழிக்க வைத்த நாயகமே! நீரூழி வாழ்க!

தடம் பலபதித்த தகைசால் நாயகன்
மடமை போக்கிய மனிதர்குல மாணிக்கம்
கடமைக்குச் செய்யாது கடமையைச் செய்து
கடலளவு புகழுடைய காய்கதிர்ச் செல்வன்.

சாந்தமான பேச்சும் சாதுரியமான துணிவும்
ஏந்திடாத் தன்மையுடன் எதிர்நீச்சலடித்து
வீழ்ந்திடாத நாயகன் வீறுகொண்ட பகலவனை
வாழ்கவென வாழ்த்துதற்கு வையகமே போட்டியிடும்.

தொட்டதெல்லாம் துலங்கிட வைத்தார்
நட்டதெல்லாம் நன்றாய் செழிக்க வைத்தார்
தெட்டத் தெளிவாய்த் திகழ்ந்திட்ட பதவிகளில்
பட்டாடை போர்த்தியே பாராட்டும் குவியப்பெற்றார்.

கல்விக் கடலின் கலங்கரை விளக்கானார்.
இல்லறம் சிறந்திடவே அறநெறி வழிநின்றார்.
நல்லறம் நாட்டிடவே நாளும் பொழுதும் உழைத்தார்.
'எல்" ஒளி போன்று எல்லோர்க்குமே நன்மை செய்தார்.

அக்கராயன் மட்டுமா? அனைத்துப் பள்ளிகளிலும்
அக்கறைகொண்டு அயராது உழைத்தார்.
ஏணியாகியே இணையற்ற மாணவச் செல்வமும் பெற்றார்.
எக்காலத்தவரும் போற்றும் மாண்புறு வாழ்வும் பெற்றார்.

ஊழிபெயரினும் கொள்கை பெயரா உத்தமச் சான்றோன் வாழி
ஆழியே வியந்திடும் அறிவுடை நாயகன் வாழி!
வாழ்வாங்கு நாம் வாழ வழிகாட்டிய வள்ளலே வாழி!
மணிவிழாக்காணும் மதுரகீதமே வாழி! வாழி!

**திரு.யோ.ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**
**கிளி / பிரமந்தனாறு ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரஞ்சீவியாக வாழ்ந்திட வாழ்த்துகின்றேன்.

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து எமது பாடசாலையின் பிரதான தூணாக பணியாற்றி வந்த எமது பாடசாலை அதிபராகிய திரு.க.மதுரநாயகம் அவர்கள் 27.01.2021 அன்று ஓய்வு பெற உள்ளார். இவர், இப்பாடசாலையில் பணியாற்றிய காலப்குதியில் இருந்து பாடசாலை அபிவிருத்தி செயற்பாட்டிலும் சரி, மாணவர்களது கல்வி, விளையாட்டிலும் சரி பாடசாலை மிக முன்னேற்றமடைந்துள்ளது.

மாணவர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, புதிய கட்டடங்கள், புனரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம், அனைத்து வசதிகளுடன் கூடிய நூலக அறை, பாடசாலையை பசுமை மிக்கதாக மாற்றியமை இவர்காலப்பகுதியில் ஆகும். கல்விச் செயற்பாட்டில் பாடசாலை முன்னேற்றமடைந்துள்ளது. க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தர மாணவர்கள் அதியுயர் சித்தியைப் பெற்றது இவருடைய காலத்தில் ஆகும். மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, விளையாட்டு விழா என்பவற்றை சிறப்பாக வருடந்தோறும். நடாத்தி வருகின்றார். இவர் ஓய்வு பெற்றுச் சென்றாலும் இவர் பாடசாலைக்கு செய்த உதவிகளை ஒரு நாளும் மறக்க மாட்டோம். அத்துடன் சிரஞ்சீவி வரம் பெற்று ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ அபிவிருத்திச் சங்கம் சார்பில் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ச.செந்தில்நாதன்**
**செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
Sri Lanka

# எழுத்தறிவித்த இறைவன்

கிளிநொச்சி அக்கராயன்குளம் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் மணிவிழாக்காணும் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நண்பன் கஸ்பார் மதுரநாயகம் அவர்களை வாழ்த்துவதில் 81 + பல்கலை வட்டம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

யாழ் .பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை மாணவனாக எமக்கு அறிமுகமான "மது" என்ற மதுரநாயகம் சீரிய சிந்தனையும்,நல்லறிவும் கொண்ட பழகுவதற்கு சிறந்த நண்பனாவான். எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதை ஆசிரியப்பணியை அறப்பணியாகச் செய்யும் ஆசிரியர் எப்போதும் மறக்கமாட்டார். அந்தவகையில் நிறைந்த கனவுகளோடு 1987 இல் வணிகப்பட்டதாரி ஆசிரியராக கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் தனது சேவையைத் தொடங்கினார். 11 வருட ஆசிரியசேவை, தொடர்ந்து 5 வருட ஆசிரிய ஆலோசகர் சேவை, 18 வருட அதிபர்சேவை என 34 வருடங்கள் தனது கல்விப்பணியைச் சிறப்பாக ஆற்றியுள்ளார்.

கிளிநொச்சி முருகானந்தாக்கல்லூரி, கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயம், கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகியவை இவரது அதிபர் சேவையினைப்பெற்று பெருமையடைந்து நிற்கின்றன. இவரது சேவைக் காலத்தில் பொதுப் பரீட்சைகளில் சித்தி வீதம் அதிகரித்தமை,அக்கராயன் மகாவித்தியாலயத்தில் வருடாந்தம் 8 தொடக்கம் 12 வரையான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றமை பாராட்டுக்குரியதாகும். 2019 ஆம் ஆண்டு ஒரு மாணவன் மருத்துவத் துறைக்கு தெரிவாகி பல்கலைக்கழகம் சென்றமை வர்த்தகப்பிரிவில் ஒரு மாணவி மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

இவர் தனது சேவைக்காலத்திலேயே கல்வியியல் பட்டப்பின் படிப்பு, கல்வியியல் முதுகல்விமாணி பட்டங்களைப் பெற்றார். இவரது பல்கலைக்கழக வாழ்வு அன்பான நண்பர்களை மட்டும் இவருக்கு கொடுக்கவில்லை. நற்பண்புகள் கொண்ட சக மாணவி பிறேமாவையும் வாழ்க்கைத் துணையாகக் கொடுத்தது.

பிறேமா இன்று கிளிநொச்சி மாவட்ட தமிழ் மொழிப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக தனது சேவையை சிறப்பாக ஆற்றி வருகின்றார். இவர்களின் பிள்ளைகள் மருத்துவர் சிந்துஜா, பொறியியலாளர் சானுஜா, 4ஆம் வருட மருத்துவத் துறை மாணவன் ஜெரோம், பல்கலைக்கழக புகுமுக மாணவன் அருணன் கல்வியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்து பெற்றோருக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவரது 34 வருட சேவைக்காலம் முழுவதுமே கஸ்டப் பிரதேசமாக இருந்தது.இவர் வசதியான இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று இருக்கலாம். தான்வாழும் பிரதேச சிறார்களின் நலன் ஒன்றையே கருதி சேவை செய்து வருகின்ற ஒரு தன்னலமற்ற ஆசிரியராக,அதிபராக ,எம்முன் உயர்ந்து நிற்கின்றார்.

யுத்தத்தால் கல்வியில் பின்தங்கிய கிளிநொச்சியை ,தன்னலமற்ற சேவையால் மீட்டெடுத்த பெருமை இவரைச் சேரும்.பாடசாலை வளர்ச்சிக்குத் தேவையான வளங்களை உரிய இடங்களில் பெற்றுக் கொடுத்தது இவரது ஆளுமைக்கும்,தலைமைத்துவத்துக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இவரது சேவைக்காலத்தில் சக ஆசிரியர்களுடன் நட்பாகவும் , மாணவர்களிடம் அன்புகலந்த கண்டிப்புடனும் பழகுவார்.இவர் சேவையாற்றிய காலத்தில் தனக்குரிய கடமைகளிலிருந்தும்,பொறுப்புகளிலிருந்தும் எப்போதும் பின்வாங்கியதே இல்லை.

சீரிய சிந்தனையாளனாய்,
சாதிக்கத் துடிப்பவனாய்
நட்பிற்கோர் இலக்கணமாய்
வாழும் நண்பனே!
அறிவு புகட்டும் ஆசிரியப்பணியில்
பெருமை பெற்று மிளிர்ந்தாய் நன்றாய்
அன்பின் உறைவிடமாம் பிறேமா துணை நிற்க
கல்வியில் உயர்ந்த அருமைச் செல்வங்கள்
சிந்துஜா. சானுஜா, ஜெரோம், அருணன்
ஏற்றம் கண்டு இன்புற மகிழ்ந்து
குன்றின் மேல் விளக்காய்
மணிவிழா தொடங்கி
பவளவிழா,அமுதவிழா, நூற்றாண்டு விழா எல்லாம் கண்டு
இன்பமாய் வாழ வாழ்த்துக்கள் கோடி.

அன்புடன்
**புலம்பெயர் சக நண்பர்கள்** (81+ பல்கலை வட்டம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி / அக்கராயன் மகாவித்தியாலயம் - ஆளணியினர் 2020



இருப்பவர்கள்:

இடம் இருந்து வலம் - திருமதி.ப.அருள்வாணி, திருமதி.சி.வித்தியாழினி, திருமதி.கெ.காஞ்சனா, திருமதி.சி.நந்தினி, திருமதி.ந.சுதர்சினி (வகுதித் தலைவர்), திரு.தி.நீதிராசா, திரு.க.மதுரநாயகம்(அதிபர்), திருமதி.வ.இராஜமூர்த்தி (பிரதி அதிபர்), திருமதி.ஜீ.லதாரஞ்சினி (வகுதித் தலைவர்), செல்வி.இ.விஜயலக்ஷி, திருமதி.ஸ்ரீ.ஜெயவதனி, திருமதி.அ.மரியமாலா

நிற்பவர்கள்: இடம் இருந்து வலம்

1ஆம் வரிசை - திருமதி.ச.நிருத்திகா, திரு.சு.கபிரியல், திரு.பா.கண்ணதாசன், திருமதி.த.சாந்தரூபி, திருமதி.உ.தயாநிதி, செல்வி.ஜெ.சத்தியஜீவிதா, திருமதி.உ.சர்மிலா, திருமதி.த.டயானி, திருமதி.ச.சாம்பவி, செல்வி.க.சுமித்திரா, செல்வி.ந.தர்ஜிகா, செல்வி.சி.பிறின்சியா, செல்வி.செ.கீர்த்தனா, திரு.சி.உதயகுமார், திரு.இ.கெங்காநேசன்

2ஆம் வரிசை - திரு.சௌ.மாதவன், திரு.கு.தஜீரதன்(சிற்றூழியர்), திரு.ந.கிருஸ்ணானந்தன், திரு.சி.கோகுலன், திரு.அ.அரவிந்தன், திரு.சி.குலராம், திரு.கி.கருணாகரன், திரு.க.இராகவன், திரு.பொ.ஜெகநேசன், திரு.கி.ஸ்ரீரஞ்சன், திரு.ப.நிமல்ராஜ், திரு.மு.சஞ்சயன், திரு.வே.முரலீசன், திரு.கா.தவராஜசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் – II

## மணிவிழா நாயகனின் வாழ்வும் பணியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அகவை அறுபது வரை

ஈழமணித் திருநாட்டின் இலங்கு சென்னி என விளங்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலே செம்மண்ணும் நன்னீரும் ஒருங்கே வாய்க்கப் பெற்று, பயிர் வளம் கொழிக்கும் உரும்பிராய்ப் பதியிலே திரு. சின்னப்பு கஸ்பார், திருமதி. இராசமணி கஸ்பார் மண இணையரின் ஐந்தாவது மகனாக, **1961.01.28** இல் பிறந்தார். அன்பான பெற்றோரின் அரவணைப்பும் ஒன்பது உடன் பிறப்புக்களின் அன்புப் பகிர்வும் இவரின் பிள்ளைப் பருவத்தை வளமாக்கியது. கத்தோலிக்க மதச் சூழலும் பங்குத் தந்தையர்களது வழிகாட்டலும் இவரை நேர்வகை மனப்பாங்குள்ள மனிதனாகச் செப்பனிட்டன.

ஆரம்பக் கல்வியை யா/உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைப்பிரிவுக் கல்வியை யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், க.பொ.த (உ.த) கற்கை நெறியை யா/வயாவிளான் மத்திய கல்லூரியிலும், வணிகமாணிப் பட்டப் படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பயின்றார். ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் கல்வியினாற்தான் எதனையும் சாதிக்க முடியும் என்ற உயர் குறிக்கோளுக்கமைய பல இடர்கள் மத்தியில் கற்று, தனது இலக்கை அடைந்துள்ளார். இவர் தன்னைப் பெற்றெடுத்த தாய், தந்தையரை நினைவில் நிலை நிறுத்தி, மானசீகமாக வழிபடுபவர்.

கல்வியில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்ட இவரது தாயார், இவரது கல்வியின் முன்னேற்றம் கண்டு ஊக்குவிப்பு வழங்கும் அதே வேளை, பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெறும் போது, தண்டனையும் வழங்கியுள்ளார். இவரது மூத்த சகோதரர்கள் இவரது கல்விக்கு என்றும் உறுதுணையாக இருந்து வந்துள்ளனர். யா/வயாவிளான் மத்திய கல்லூரியில் க.பொ.த (உ.த) வகுப்பில் கல்வி பயிலும் காலத்தில், இவரது நற்குண நற்செய்கைகளை அவதானித்த அதிபர், ஆசிரியர்கள் இவரை மாணவத் தலைவனாக நியமித்தனர். அதே வேளை க.பொ.த (உ.த) மாணவ மன்றத்தின் பொருளாளராகவும் செயற்பட்டவர்.

**1981**ஆம் ஆண்டு வணிக மாணிக் கற்கை நெறிக்குத் தெரிவாகி, யாழ் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். பல்கலைக் கழகத்தில் பயில்கையில், வணிக மன்றத்தின் பொருளாளராகவும் கத்தோலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தின் செயலாளராகவும் கலை கலாசார நிகழ்வுகளில் செயற்படு பங்காளியாகவும் திகழ்ந்தவர். 1985 ஆம் ஆண்டு வணிக மாணிக் கற்கையைப் பூர்த்தி செய்து, 1986 இல் வணிகமாணிப் பட்டத்தைப் பெற்று கௌரவிக்கப்பட்டார். அக் காலப் பகுதியில் யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் பகுதி நேர கணக்கியல் பாட ஆசிரியராகப் பணியாற்றினார்.

1986 ஆம் ஆண்டு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக (C.D.O) அரச பணியில் இணைந்து கொண்டார். அக் காலப்பகுதியில் தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் தங்கராசா, லீலா தங்கராசா, மண இணையரின் மகளான பிறேமா எனும் மங்கை நல்லாளின் கரம் பற்றினார்.கல்விப் பணி அவருக்கு விருப்பமானபணியாக இருந்த காரணத்தால் 1987 ஆம் ஆண்டு கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அப்பாடசாலையில் 05 வருடங்கள் சிறப்பாகச் சேவை செய்து மாணவர்களினதும் பெற்றோர்களினதும் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றுக்கொண்டார்.

1993 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பட்டப்பின் கற்கை நெறியை பயில்வதற்காக கிளி/ பளை றோ.க.த.க பாடசாலைக்கு இட மாற்றம் பெற்றார். தனது தொழிற் தகைமையைப் பூர்த்தி செய்த பின் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளி/பூநகரி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாரிய இடப் பெயர்வினால் பாடசாலைகள் நிலையான இடத்தில் இயங்க முடியாத நிலை காணப்பட்டது. பூநகரி மகாவித்தியாலயம் ஜெயபுரம் பகுதியில் இயங்கிய காலப்பகுதியில் பிரதி அதிபராக செயற்பட்டார்.

1998 யூலை வரை அப்பாடசாலையில் சிறந்த சேவை யாற்றினார். அப்போது, மத்திய கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் அவரும் அவரது துணைவியாரும் சித்தியடைந்து, கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையில் ஆசிரிய ஆலோசகர்களாக கடமையேற்றுக் கொண்டனர். அக் காலகட்டத்தில், கல்வி வழிகாட்டல் ஆலோசனைச் சேவையுடன் வலயமட்டக் கண்காணிப்புக் குழு (Z.M.P) அங்கத்தவராகவும் செயற்பட்டார். வர்த்தகப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டம் உயர்நிலையை அடைய பெரிதும் பங்காற்றினார்.

2003 ஆம் ஆண்டு தைமாதம் கிளி/முருகானந்தா கல்லூரியின் அதிபராகப் பதவியேற்று, 2006ஆம் ஆண்டு வரை பாடசாலையைத் திறம்பட நிர்வகித்து, பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றினார். 2004 ஆம் ஆண்டு மாவட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டா அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 05 பொறியியற் பீட மாணவர்களும் கிளி / முருகானந்தா கல்லூரியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டமை அவரது சேவைக்காலத்தில் இடம் பெற்ற சாதனையாகும். சுழற்சி முறையில் அதிபர்களை இடம்மாற்றம் செய்யும் போது, 2007ஆம் ஆண்டு தை மாதம் கிளி/திருவையாறு மகா வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைக்கும் பாடசாலையாக இப் பாடசாலை விளங்கியது.

இப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம் பெற்ற யுத்தத்தினால் பாரிய இடப்பெயர்வைச் சந்திக்க நேர்ந்தது. பாடசாலையின் முக்கிய ஆவணங்களையும் அழியாது பாதுகாத்ததோடு வவுனியா நலன்புரி நிலையத்திலும் பாடசாலையை இயங்க வைத்தவர். மீள் குடியேற்றத்தின் பின்னர் பாடசாலையை நிரந்தர இடத்தில் இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு பல்வேறு புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டார் தொடர்ந்து, பாடசாலை துரித கதியில் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் ஆண்டு ஒரு மாணவன் தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றமை பெருமைக்குரியதாகும். 2011ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சைப் பெறுபேற்றில் மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்ற பாடசாலையாக இப் பாடசாலை விளங்கியது. இதற்காக முதல் நிலையைப் பெற்ற மாணவனும் அதிபரும் மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களினால் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விழாவில் கௌரவிக்கப்பட்டனர். இக் காலப்பகுதியில், மாணவி ஒருவர் தேசிய மட்ட தமிழ் மொழிக் கலைத்திறன் பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று, பாடசாலைக்கு புகழ் சேர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.

2012ஆம் ஆண்டு மாண்புமிகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களின் 66 ஆவது பிறந்தநாளையொட்டி, நாடளாவிய ரீதியில் 66 பாடசாலைகள் சிறந்த பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டன. அவ் வகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/ திருவயைாறு மகா வித்தியாலயம் மாத்திரம் சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டது. இதன் பொருட்டு, 6 இலட்சம் ரூபா பெறுமதியான கணிணித் தொகுதிகள் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விழாவில் பாடசாலைக்கு அன்பளிப்பாக அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு பிற்பகுதியில் கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரை, இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். தனது இருப்பிடத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இப் பாடசாலைக்கு இன்று வரை குன்றும் குழியுமாக இருக்கும் வீதியூடாகப் பிரயாணம் செய்து ஓய்வு நிலையைப் பெறுகின்றார். இப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களுள் அதிக காலம் கடமையாற்றி, ஓய்வு நிலையைப் பெறும் அதிபராக இவர் காணப்படுகின்றார். இவரது பணிக்காலம் இப் பாடசாலையின் 'பொற்காலம்' என்று சொல்லுமளவுக்கு பாடசாலையில் பல நிலைமாற்றங்களை மேற்கொண்டவர். 2013 ம் ஆண்டு இப் பாடசாலையை 1AB தரப்பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு அரும்பாடுபட்டார். இதன் விளைவாக அவ்வாண்டிலேயே 1AB தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

"நீரின்றி அமையாது உலகு" என்னும் வள்ளுவன் வாக்கை மனங்கொண்டு, நீரின்றி வனாந்தரமாகக் காணப்பட்ட பாடசாலைச் சூழலை வனப்புறு பகுதியாக மாற்றி யமைத்தார். பௌதீக வளங்களை விரிவாக்கம் செய்தார். கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக தனது நண்பர்கள், உறவினர்கள், நலன் விரும்பிகள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோரின் அனுசரணையுடன் பல இணைபாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுத்தவர். வருடந்தோறும் பரிசளிப்பு விழா, தமிழ் மொழிப் பண்பாட்டு விழா, ஆங்கில தின விழா, விளையாட்டுப் போட்டி போன்ற விழாக்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுபவர்.

இவருடைய முகாமையின் கீழ் ஆசிரியர்களின் கூட்டு வலுவினால் இவரது காலப்பகுதியில் அடைவு மட்டங்கள் அதிகரித்து வந்துள்ளன. வருடந் தோறும் பத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு துறைகளுக்கும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர். குறிப்பாக 2019 ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த) பரீட்சையின் அடைவு மட்டம் உயர் நிலையைப் பெற்றுள்ளது. கணித பாட அடைவு மட்டம் 50% இலிருந்து 82% ஆக உயர்வடைந்துள்ளது . ஏனைய பாடங்களின் சித்தி வீதங்களும் அதிகரித்துள்ளன. க.பொ.த (உ.த) கணித விஞ்ஞானத் துறையின் சித்தி வீதம் ஒவ்வொரு வருடமும் 100% ஆகும். குறிப்பாக மாவட்ட நிலையில் உயிரியல் பிரிவில் ஒரு மாணவன் 2ஆம் நிலையைப் பெற்று, பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகி இருக்கின்றார். அத்துடன் சித்த மருத்துவத் துறைக்கும் ஒரு மாணவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வணிகப்பிரிவில் மாவட்ட நிலையில் 1ஆம், 7ஆம் நிலையைப் பெற்று, திறமைச்சித்தி அடிப்படையில் சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கலைத்துறையைப் பொறுத்தவரை 2015, 2017 ஆண்டுகளில் மாவட்ட நிலையில் முதலாம் நிலையைப் பெற்றிருந்தனர். 2019 இல் 04 மாணவர்கள் கலைத்துறையில் திறமைச்சித்தி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள் ளார்கள். பல்கலைக்கழகத்துக்கு மட்டுமன்றி கணிசமான மாணவர்கள் கல்வியியற் கல்லூரிகளுக்கும் சென்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைபாட விதானச் செயற்பாடுகள் என்ற வகையில் வருடந்தோறும், பரிசளிப்பு விழா சஞ்சிகைகளை வெளியிடுவதோடு, க.பொ.த (உ.த) மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும் "கனிவு" என்ற சஞ்சிகை, யாழ்ப்பாணத்திலிருந்து வந்து விடுதியில் குடும்பமாக தங்கியிருந்து இப்பாடசாலையில் கடமையாற்றிய திரு.மு.கணேசானந்தன் அவர்களின் வழிகாட்டலில் ஆங்கில மன்றத்தால் வெளியிடப்பட்ட "Star of Akkarayan" என்ற ஆங்கில சஞ்சிகை "நவசக்தி மாலை" என்ற சஞ்சிகை , திரு.சி. குலராம் அவர்களின் நெறிப்படுத்தலில் விஞ்ஞான மன்றத்தால் வெளியிடப்பட்ட "பிரபஞ்சம்" என்ற சஞ்சிகை திரு.சி.உதயகுமார் அவர்களின் நெறிப்படுத்தலில் தமிழ்மன்றத்தால் வெளியிடப்பட்ட "பிரவாகம்" போன்ற சஞ்சிகைகள் வெளியிடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தார். நாடகத்துறையிலும் குறும்பட ஆக்கத்துறையிலும் இவ் வித்தியாலயமானது குறிப்பிடத்தக்க சாதனைகளை நிலைநாட்டியமை கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

2016 ஆம் ஆண்டு ஆசிரியர்களான திரு. நா. சபாநாயகம், திரு. த. திவாகர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் "மாயமான்" என்ற நாடகம் மாகாண மட்டத்தில் பரிசு பெற்றமை, திரு.ச.சபாநாயகம் அவர்களின் நெறிப்படுத்தலில் எமது மாணவர்களினுடைய பங்குபற்றலில் "தாங்கும் வேர்கள்" என்ற நாடகம் தேசிய மட்டத்தில் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியை செல்வி இ.விஜயலக்ஷி அவர்களின் நாடகம் மாகாண நிலைப் போட்டிக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.எல்லாவற்றிற்கும் மேலாக உயர்தர மாணவர்களின் கூட்டு வலுவினால் உருவாக்கம் பெற்ற "நீருடன்" எனும் குறும் படம் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற குறும்படப் போட்டியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வித்தியாலயத்தில் மேற்கொண்ட கல்விப் பணியிலே எப்பொழுதும் விசுவாசமாக கடமையுணர்வுடன் பணியாற்றும் பிரதி அதிபர் திருமதி வசந்தாதேவி இராஜமூர்த்தி அவர்கள், மதிப்பிற்குரிய ஆசிரியர்கள், அலுவலக உதவியாளர் கு.தஜிரதன் இரவுக்காவலாளி திரு.ப.இராஜ்குமார் ஆகியோர் இவரது நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சாதனைகளை இவரது காலப்பகுதியில் நிலைநாட்டுவதற்கு, அவ்வப்போது ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்கள் அந்தவகையில், கிளிநொச்சி கல்வி வலயத்தின் முன்னை நாள் கல்விப் பணிப்பாளர்கள், தற்போதைய கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் ஆளணியினரும், முன்னைநாள் அதிபர்கள் ஆசிரியர்கள், கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவுடன் பயணிக்கும் வித்தியாலய ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினர், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள்,அரசியல் பிரமுகர்கள், நீர் வழங்கல் மற்றும் வகுப்பறைக் கட்டடம் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்த முன்னாள் அரச அதிபர் நண்பன் திரு. சுந்தரம் அருமைநாயகம்,நூலகக் கட்டடத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்த வடமாகாண பிரதம செயலாளர் நண்பன் திரு.அ.பத்திநாதன்,வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்த JRK International நிறுவன உரிமையாளர், நண்பன், தொழிலதிபர் திரு.வே ஜெயராஜா, வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு மூல கர்த்தாவாக செயற்பட்டு நிதி வழங்கி வரும் பிறேசில் நாட்டில் வசிக்கும் பேராசிரியர் இலட்சுமானந்த சிவம், அவ்வப்போது, பாடசாலைப் பரிசளிப்பு விழா, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் துவிச்சக்கர வண்டிகள் வழங்குவதற்கு உதவி புரிந்த பிரான்ஸ் அக்கராயன் பழைய மாணவர் சங்கம், மாணவர்களுக்கு கற்றல் தளபாடங்கள் வாங்குவதற்காக நிதியுதவி நல்கிய பழைய மாணவன் க.சிவநேசராஜா, கற்றல் உபகரணங்களை வழங்கிய சிங்கப்பூரில் வசிக்கும் நண்பர்கள் திரு.அ.அருணன், திருமதி.கௌசி அருணன், மாணவர் களுக்குப் பாதணிகளையும் புத்தகங்களையும் அன்பளிப்பு செய்த AVR அறக்கட்டளையின் ஸ்தாபகர்கள் திரு.திருமதி சிவகுமார்,சரஸ்வதி சிலையை அமைக்க உதவிய திரு.சி .பரமலிங்கம்,மாணவர்களுக்கு கற்றலுக்கான மாதாந்த நிதிக் கொடுப்பனவை வழங்கும் நெடுந்தீவு "சண்மலர் அறக் கட்டளை" ஜேர்மனி "ஸ்ருட்காட்" நிறுவனம்,விளையாட்டுத் துறை விருத்திக்காக நிதி வழங்கிய குணரட்ணம் மதியழகன்,பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான நன்கொடை வழங்கிய ஆசிரியர் திரு.சி.உதயகுமார், ஆகியோருடன் காலத்துக்குக் காலம் பாடசாலை வளர்ச்சிக்காக நிதிப்பங்களிப்பு நல்கிய நலன் விரும்பிகளை நன்றியுடன் மனங்கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

இவரது கடின உழைப்பின் பின்னணியில் இவரது மனைவி பிள்ளைகளும் உறுதுணையாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது துணைவியார் திருமதி பிறேமா மதுரநாயகம் அவர்கள் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்ததன் காரணமாக தொழில் ரீதியாகவும் இருவருக்கும் ஒற்றுமை காணப்பட்டது. கல்விப்பணியில் இவருடைய வெற்றிகளின் பின்னணியில் இவரது துணைவியார் பக்கபலமாக இருந்தார் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இவரின் கடின உழைப்பின் பேறாக, இறையருளின் வெளிப்பாடாக இவர் மீது கிருபை கொண்ட இறைவன் நான்கு பிள்ளைச் செல்வங்களை வழங்கி, இருவரை மருத்துவத் துறையிலும் ஒருவரை பொறியியற் துறையிலும் ஒருவரை கணிதத் துறையில் பல்கலைக்கழக புகுமுக மாணவராகவும் தகுதிப்படுத்தி ஆசீர்வதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக கல்விச் சமூகத்திற்கு தெரிவிக்கும் கருத்துக்கள் என்ற வகையில், கிராமப்புறப் பாடசாலைகளுக்கு வளப்பகிர்வு சமமானதாக அமைய வேண்டும். ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படும்போது, பதிலீட்டு நியமனங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆசிரியர்கள் நவீன கல்விமுறைகளின் வளர்ச்சிப் போக்குக்கு அமைவாக தமது கற்றல் கற்பித்தல் செயலொழுங்கினைத் திட்டமிட வேண்டும். ஆசிரியர்கள் மும்மொழிகளிலும் தேர்ச்சியடைய வேண்டும். ஆசிரியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவு விருத்தியாக்கப்பட வேண்டும். "கொரோனா" எனும் பேரிடர் அபாயத்தினால் மாணவர்களின் கல்வி பாதிப்படையாதவாறு அதிபர் ஆசிரியர்கள் தமது வகிபங்கை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். என தனது வேணாவினை தெரிவிக்கும் மணிவிழா நாயகன் ஓய்வுகாலத்தில் உடல் உள ஆரோக்கியத்தோடு இனிதே வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, ஆசிரியர் நலன் பேண் ஒன்றியத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

**தொகுப்பாக்கம்**
**திரு.தி.நீதிராசா**
**தலைவர்**
**ஆசிரியர் நலன் பேண் ஒன்றியம்**
**கிளி/அக்கராயன் ம.வி**




**யாழ்.பல்கலைக்கழக வணிக ஒன்றியத்தின் பொருளாளராக...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் / உரும்பிராய்
இந்துக்கல்லூரி மாணவனாக....




யாழ் / வயாவிளான் மத்திய கல்லூரி
மாணவனாக....



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
மாணவனாக...



ஆசிரியராக....




வணிகமாணிப் பட்டம்பெற்ற
போது....



பட்டப்பின் கல்வி டிப்ளோமா
பட்டம் பெற்றபோது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதுகல்வி மாணிப் பட்டம் பெற்றபோது....




அதிபராக....



அக்கராயன் ம.வி தமிழ்ப் பண்பாட்டு விழாவின் போது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பான பெற்றோர்க்கு மகனாக....



மதுரமான வாழ்க்கைத் துணைவனாக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில அறிவின் ஆரம்ப விளக்கு



அப்பா!
எனது பிறப்பினால் நீங்கள் பெருமையுற்றீர்கள்.
முதற்பிள்ளை பெண்பிள்ளை என்றால்
முகம் சுளிக்கும் சமூகத்தின் மத்தியில்
பெண்பிறந்தாள் என்று பூரித்துப் போனீர்கள்
வயிற்றில் சுமக்கவில்லை எனும் குறையை
மார்பிலும் தோளிலும் சுமந்து இன்புற்றீர்கள்

அம்மாவைப் பிடிக்குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று
அருகிருப்போர் வினவுகையில் அப்பாவைத்தான்
முதற்பிடிக்கும் என்று தயங்காமல் சொல்வதற்கு
தைரியம் தந்தீர்கள். எனது குழந்தைப் பருவத்தில்
வன்னேரிக்குளத்தில் கல்விப்பணிபுரிந்த நீங்கள்
வார இறுதி நாட்களில் என்னைத்தேடி வருவீர்கள்.

சந்தர்ப்பம் சூழ்நிலைக்கு ஏற்ப முக்கொம்பன் பாதை
கிளாலிப்பாதை, கொம்படிப்பாதை, ஊரியான்பாதை போன்ற
பாதைகளினூடாக துவிச்சக்கரவண்டியில் பயணித்து
களைத்துப்போய் வருவீர்கள். உங்களைக்
கண்டு மகிழ்வுறும் என் மழலை முகம்கண்டு
களைப்பினை மறப்பீர்கள்.

பூக்களைக் கேட்டால் சோலையைக் காண்பித்தீர்கள்.
நிலவைக் கேட்டால் இரவை வரச் செய்தீர்கள்.
கதைசொல்லுமாறு கேட்டால், கதையில் வரும் பாத்திரமாகவே மாறி
நான் தூங்கும்வரை கதை சொல்லி விழித்திருப்பீர்கள்.
நான் தவறிழைக்கும் வேளைகளில் அன்பினால்
மட்டுமே தண்டனை வழங்குவீர்கள்

கோபம் கொள்ளத் தெரியாத நீங்கள்
பொறுமை எனும் பெருங் குணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் மனம் வெல்ல கற்றுக் கொடுத்தீர்கள்
வாழ்விலே ஒருபொழுதும் கண்ணீர் வடிக்காத நீங்கள்
நான் கடக்க நேரிட்ட கடினமான நாட்களுக்காக
கதறினீர்கள், கண்ணீர் வடித்தீர்கள்.
எனது பள்ளிப்படிப்பு முதல் பட்டப் பின் படிப்புவரை
உங்கள் உடனிருப்பை வாரத்தைகளால் வடிக்கமுடியாது.
எனது 'ஆங்கில அறிவின் ஆரம்ப விளக்கு' நீங்கள்.
தேசிய ரீதியில் சாதனைப்படைத்து "சிசு உதான சாதனையாளர்" விருது
பெற்ற போதும் மருத்துவப்படிப்பை மகத்தாக முடித்த போதும்
பட்டப் பின் படிப்பில் சாதனை படைத்த போதும் புளகாங்கிதமடைந்தீர்கள்.

நான் மணம் முடித்த பின்பும் மகள் எனும் உரிமையை
நீங்கள் விட்டுக்கொடுத்ததே இல்லை. மாறாக முன்பிருந்த
அன்பைவிட பன்மடங்கு அன்பை அள்ளித் தந்தீர்கள்.
எனக்கு மட்டுமன்றி என் கணவருக்கும் தந்தையானீர்கள்.
உங்கள் பிறந்த தினத்தில் என்மகளைப் பெற்றெடுத்து
பெருமை கொண்டேன். அவளின் மழலை மொழியில்
மனம் மகிழ்ந்து மெய் மறப்பீர்கள் குழந்தையாய் மாறுவீர்கள்

இனிவரும் ஜென்மங்களிலும் உங்கள் மகளாகப்
பிறக்கும் வரம் வேண்டுகின்றேன். அகவை அறுபதைத் தொட்டு
நிற்கும் நீங்கள் அளப்பரிய மாணவர் பரம்பரையை
உருவாக்கி கல்விச் சமூகத்திடம் கையளித்துள்ளீர்கள்.
உங்கள் கல்விப் பணிவாழ்வே எங்கள் உயர்விற்கு வித்திட்டது
மணி விழாக் காணும் நாளில் மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துக்களுடன்
**மகள் – வைத்திய கலாநிதி சிந்துஜா றஞ்சித்குமார்**
MBBS, (Jaffna) , MD.Reading (Colombo).
**மருமகன் – பொறியியலாளர் கோ.றஞ்சித்குமார்**
B.Sc Eng (Hons), AMIE (SL)
பேர்த்தி - ஆத்விகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கமும் ஊக்கமும் அளித்த உளவியல் ஆசான்



அப்பா!
எடுப்பான தோற்றம்,
மிடுக்கான நடை,
முத்துப்பல் சிரிப்பழகு,
மதுரக் குரல் வளம் இவை
இறைவன் உங்களுக்கு அருளிய அருங்கொடைகள்

வாடிய பயிருக்கு வான்மழைபோல்
வரமாய் வாய்த்தீர்கள் அக்கராயன் மாணவர்க்கு.
பாலைவனமாக இருந்த இடங்களை
பச்சை ப்பசேலென குளிர வைத்தீர்கள்
வெள்ளைப் புறாக்கள் பள்ளியில் வலம்வர
வெள்ளை மனத்தோடு உழைத்த
பொன்மனச் செம்மல்
பள்ளி விழாக்களிலே உங்கள்
கான மழை கேட்டு , மாணவர்
காதுகளில் தேன் பாயும்.
விடுமுறை நாட்களில் எங்கள் வீட்டினிலும்
இதே நிலைதான்.

நேர முகாமைத்துவம், சிறந்த தலைமைத்துவம்,
ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன்,
நீதி நேர்மை, நியாயம் என
எத்தனையோ விடயங்களை
உங்கள் ஆளுமையின் அடையாளங்களாய்
பின்பற்றினேன், அதை நடைமுறைப்படுத்தியுமுள்ளேன்.
ஆனால், எத்தகைய சவால்களையும்
புன்சிரிப்புடன் எதிர்கொள்ளும் பக்குவம் மட்டும்
என்னால் முடியவில்லை ஏனெனில் அது உங்களுக்கேயுரிய
தனித்துவமான அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வயதிலே சிறுமணல் வீடுகள் கட்டுவேன்.
தடிகள் கொண்டு மாடிகள் அமைப்பேன், பாலங்கள் கட்டுவேன்.
தாதுகோபங்கள் கட்டுவேன்...
என் கைவண்ணம் கண்டு....
என் மகள் ஓர் இஞ்சினியர்தான்
என்று என்னை ஊக்குவித்தீர்கள்.
அன்று கட்டிய மனக்கோட்டை
இன்று நான் ஒரு பொறியியலாளராய்....
உங்கள் கனவு மெய்ப்பட்டது.
உங்கள் எண்ணமே எங்கள் வாழ்வு.

குழப்பங்கள் வரும் போது
தீர்க்கமான ஆலோசனை வழங்குவீர்கள்.
சிறு சிறு தவறுகள் இழைக்கும் போது
பக்குவமாய் சுட்டிக் காட்டுவீர்கள்.
எனது சிறிய வெற்றிகளையும் உலக
அதிசயம் போல் பாராட்டி, தட்டிக் கொடுப்பீர்கள்.
எனது மகள் கெட்டிக்காரி என்று
ஊக்குவிப்பீர்கள். அதுவே போதும்
எனது அடுத்த வெற்றிப் பயணத்திற்கு.

என் பெயர் சொல்லி நீங்கள் அழைத்ததில்லை
அம்மா....
என்று அன்பொழுக அழைப்பீர்கள்.
பட்டப்படிப்பாக இருக்கட்டும், மேற்படிப்பாக இருக்கட்டும்
எனது துறையில் நான் சிறந்து விளங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்த
உளவியல் ஆசான். நான் தடைகள் பல தாண்டி,
என் இலக்கை அடைவதற்கு என்றென்றும் உங்கள்
ஆசீர்வாதம் வேண்டுகின்றேன்.
ஓய்வு காலம் சிறப்புற இறைவனை வேண்டுகின்றேன்.
மனமார்ந்த மணிவிழா வாழ்த்துக்கள் நவில்கின்றேன்.

**அன்பு மகள்**
**பொறியியலாளர் ம.சானுஜா**
B.Sc Eng (Hons)
M.Phil ( Reading)
**ஆய்வு உதவியாளர்**
**பொறியியற் பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குதித்தோடும் ஜீவ நதியாய்...

என் தந்தைக்கு மணி விழா...
தோளிலும் மார்பிலும் சுமந்து
தூக்கி வளர்த்த என் அப்பாவுக்கு!
அகவை அறுபது.............
நம்பவே முடியவில்லை
காலச்சக்கரம் எவ்வளவு
விரைவாக ஓடிவிட்டது.
ஆனாலும் நம்பித்தான் ஆக வேண்டும்.
என் எண்ண அலைகள் நகர்ந்திடவே
எழுதிடுவேன் என் அப்பாவிற்கு மணிவிழா வாழ்த்து

என் தந்தைக்கு நிகர் இங்கு எவருமில்லை
இவர் நெஞ்சினிலே ஒரு துளி வஞ்சமில்லை.
பகை கண்டு பயந்தோடும் அச்சமில்லை- இவர்
பாசமழை பொழியும் வாச முல்லை.
கடமை கண்ணியம் இவர் வாழ்வின் எல்லை.
கடுகளவேனும் இடையூறு அதற்கு இல்லை.

ஒரு போதும் சுடுவார்த்தை சொன்னதில்லை
ஒருவரையும் புறம் கூறி வைததில்லை.
தண்டனைகள் தந்தெம்மை வளர்க்கவில்லை.
தரணியில் இவர் அன்பிற்கு ஈடு இணையில்லை.

சாத்திரங்கள் பேசித் திரிந்ததில்லை.
மூட நம்பிக்கை மீதிவர்க்கு ஈடுபாடில்லை.
மண் பொன் மீது மோகம் கொண்டதேயில்லை.
கல்விப் பணிதவிர வேறெதுவும் இவர் சிந்தையில் இல்லை.

எப்போதும் ஓர் இயங்கு நிலை அதிபராய்
ஆளுமையின் அடையாளமாய்
கோடி கொடுத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காத மதுர மரகதமாய்
நாடி வருவோர்க்கு குறையாது வழங்கும்
குவிந்த மணி ரத்தினமாய்
குதித்தோடும் ஜீவ நதியாய்......
தேடித் தேடி அலைந்தாலும்
கிடைத்தற்கரிய மனித மாணிக்கமாய்
மதிக்கப்படுபவர் என் அப்பா.

அப்பா எனது நண்பன்.
நல்ல சகோதரன், வழிகாட்டி.
ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றி
நிற்கும் அற்புதம்.
என் அப்பாவிற்கு இதயம் நிறைந்த
மணிவிழா வாழ்த்துக்கள்.

**அன்புமகன்**
**ம. அஜித் ஜெரோம்**
**மருத்துவ பீட மாணவன்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவலிகளைத் தாங்கி மௌனமாகப் பயணித்தவர்



மாதா, பிதா, குரு தெய்வம்.........
இந்த வரிசையில் யாருக்கு முதலிடம்?
என் அப்பாதான் எனக்கு முதலிடம்
அன்புகாட்டி அரவணைப்பதில் அன்னையாய்
அறிவுரை கூறி வழிகாட்டுவதில் தந்தையாய்,
அறியாமை இருளகற்றி அறிவொளி யேற்றுவதில் ஆசானாய்
அருள் பாலித்து அருளாசி வழங்குவதில் தெய்வமாய்
நான்கு குரவர்களின் மொத்த வடிவமுமாய்
என் அப்பா விளங்குவதால் அப்பா தான் முதலிடம்.

அப்பா என்ற மூன்றெழுத்து மந்திரத்தின் மகத்துவத்தை
முழுதாய் உணர்ந்தவன் நான்
அப்பா எனும் பெருவரத்தை
கடைக்குட்டியாகப் பிறந்து அனுபவிப்பவன் நான்
நான் பிறந்தவுடன் மகிழ்ச்சிக் கடலில் குளித்து,
கற்கண்டு வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்தது முதல்
இன்றுவரை உங்கள் அன்பு வெள்ளத்தில் மூழ்குபவன் நான்.
உங்கள் கல்விப்பணி வாழ்வின் வெற்றிகளையும்
சவால்களையும் அருகிருந்து பார்த்தவன் நான்.

நீதி , நியாயம், நேர்மை- இதைத்தவிர
நீங்கள் எதற்கும் அஞ்சாதவர்.
அருகிலுள்ள பாடசாலை வேண்டுமென
ஒரு போதும் மேலதிகாரிகளிடம் கெஞ்சாதவர்.
ஆனால், மௌனமாக மனவலிகளைத் தாங்கியவாறு
புன்னகையெனும் பொன்னகை அணிந்து
குன்றும் குழியும் சேறும் சக்தியும் நிறைந்த
பாதை வழியே பயணித்துப் பணி செய்தீர்கள்.
இன்று வரை செப்பனிடாத பாதைகளில் தானே
உங்கள் பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை அறுபதை நெருங்கிய வேளையிலும்
தொலைதூரம் பயணித்து நீங்கள் ஆற்றிய
கல்விப் பணியின் மகத்துவத்தை
எடுத்துக் கூற யாரிடமும் வார்த்தைகள் இல்லையப்பா.
புதிதாக வார்த்தைகள் தேவை அப்பா.
ஏழேழு பிறப்பிலும் உங்கள் மகனாகப்
பிறக்கும் வரம் வேண்டுமப்பா.
இன்னல்கள் நீங்கி இனிதே வாழ
இதயம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்கள் அப்பா.

**பாசமகன்**
**ம.அருணன்**
**கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன்**
**(கணிதப்பிரிவு )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிய குடும்பத் தலைவனாக....



ஆத்விகாவின் அன்பான அம்மப்பாவாக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான்கு கோட்டங்களிலும் முத்திரை பதித்த நாயகம்

மணி விழாக் காணும் நாயகனாக விளங்கும் அன்பிற்கும் பெரும் மதிப்பிற்கும் உரிய உயர்திரு க.மதுரநாயகம் அதிபர் அவர்களின் மகத்தான சேவைகளின் நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பை, பிறப்பிடமாகக் கொண்ட இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக விளங்கும் வன்னேரிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையில் எண்பதுகளில் ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியில் நான் அக்கராயன் ம.வியில் ஆசிரியராகக் கடமையாற்றினேன். கொத்தணிப் பாடசாலை அமைப்பு அக்காலத்தில் காணப்பட்டது. அக்கராயன் கொத்தணியின் அதிபராக திரு.கி.சின்னராசா அவர்கள் கடமையாற்றினார். கொத்தணியின் ஒரு அங்கத்துவப் பாடசாலையாக இருந்த கிளி/ வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில், இவரைச் சந்திக்க முடிந்தது. சிரித்த முகமும், எதையும் சிந்தித்து ஏற்றுக்கொள்ளும் திறனும், மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்காக சேவை ஆற்றும் அர்ப்பணிப்பும் இவரிடம் இயல்பாகவே குடியிருந்தன.

இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சி, இப்போதிருக்கும் நிலையில் இருக்கவில்லை. இன்று, யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் பாடசாலைக்கு வந்து மாலையில் வீடு செல்லும் ஆசிரியர்களையே நாம் காண்கின்றோம் . அன்று அப்படி இல்லை. சீரற்ற பாதைகளும், போக்குவரத்துப் பிரச்சினைகளும், யானைகளின் பயமுறுத்தலும், இந்திய இராணுவத்தின் அச்சுறுத்தல்களும் நிறைந்த காலப்பகுதியாகும்.

நுளம்புக் கடியும், அதனால் ஏற்படும் மலேரியா நோயும், மருந்துத்தட்டுப்பாடும், நிறைந்த சூழலில், தனது சிறு குழந்தைகளுடன் வன்னேரிக்குளம் பாடசாலையின் விடுதியில் தங்கி இருந்து சேவையாற்றுவது எல்லோராலும் முடியாத ஒன்று. தண்ணீர் வசதி கூட போதுமானதாக இல்லாத பிரதேசத்தில் மகிழ்வுடன் எதையும் சமாளிக்கும் பக்குவத்துடன் ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்குவதற்கு கடுமையான உழைப்பை நல்கியவர். அக்கராயன் கொத்தணியில் அங்கம் பெற்ற வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் போட்டிகள் பலவற்றில் சாதனை படைக்கக் காரணமாக விளங்கியவர் என்றால் மிகையில்லை. குறிப்பாக இவர் வணிகப் பட்டதாரியாக, வணிகப் பாடம் சார்ந்த ஆசிரியராக இருந்த போதும் ஆங்கிலத்தில் தேர்ச்சி உடையவராக விளங்கியதால், ஆங்கிலத்தை விருப்புடன் கற்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து, பங்குபற்ற வழிகாட்டியாக விளங்கியவர். அது மட்டுமல்ல அக்கராயன் கொத்தணிப் பாடசாலைகளில் வன்னேரிக்குளம் ம.வி மாணவர்களே அதிக இடங்களைத் தட்டிச் செல்லவும் காரணமானவர்.

கொத்தணிப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளில் இவரது பங்களிப்பு அதிகமாக இருக்கும். இளமையின் துடிப்பு நிறைந்த அந்தக் காலத்தில் மாணவர்களோடு மாணவராக இவரும் ஒரு விளையாட்டு வீரராக விளையாட்டுத் திடலில் நிற்பதைக் காணமுயும். பாடசாலைக் கற்றல் நேரம் தவிர்ந்த மேலதிக நேரங்களில், கற்பித்தலில் ஈடுபட்டதன் விளைவாக மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர இவரால் முடிந்தது.

இவருடைய துணைவியார் அக் காலத்தில் சிறந்த தமிழ்ப்பாட ஆசிரியராக விளங்கிய போது, மொழித்திறன் நிகழ்வுகள் மட்டுமன்றி சிறுவர் நாடகம், சமூக நாடகம், கிராமிய நடனங்கள் போன்றவற்றை மாணவர்களுக்குப் பழக்கி, நெறிப்படுத்தி, வெற்றிகளை ஈட்டியமைக்கு இவருடைய பங்களிப்பும், பக்கபலமும் காரணமாக அமைந்தது எனலாம். அக்காலத்தில் அழகியல் பாட ஆசிரியருக்கு மிகுந்த பற்றாக்குறை நிலவியமையும் கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். இவர் நெறியாள்கை செய்த 'தன்வினை தன்னைச் சுடும்' எனும் சிறுவர் நாடகம் கொத்தணி மட்டத்தில் முதல் நிலை பெற்றது மட்டுமல்லாது மாவட்ட மட்டத்தில் வளர்ச்சியடைந்த நகர்ப்புற பாடசாலைகளுடன் போட்டியிட்டு முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. துணைவியாரின் முயற்சிகளுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருப்பவர். இவ்வாறு ஆசிரியாகவும், கிளி/பூநகரி மத்திய மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும். கிளி/ பளை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், கிளி / முருகானந்தா கல்லூரி, கிளி / திருவையாறு மகா வித்தியாலயம், கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகவும் சேவையாற்றி கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய நான்கு கல்விக் கோட்டங்களிலும் தனது முத்திரையைப் பதித்தவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

சில காலம் ஆசிரிய ஆலோசகராக ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கியவர். இவ்வாறு ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதி அதிபராக, அதிபராக உயர்வடைந்து பாடசாலைகளின் வளர்ச்சிக்கு நற்பணி ஆற்றியமைக்கு இவரது பிள்ளைச் செல்வங்கள் இன்று நன்னிலையில் இருப்பது தக்க சான்றாகும். இறுதிக் காலத்தில் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றி சிகரம் தொடவைத்த பெருமைக்குரியவர். கிளிநொச்சி மாவட்ட கல்விப் புலத்தில் தடம் பதித்து, இன்று ஓய்வு பெறும் பெருமதிப்பிற்குரிய உயர்திரு.க.மதுரநாயகம் அவர்களை இன்றுபோல் என்றும் இளமையுடனும் நோய்நொடி இன்றி ஆரோக்கியத்துடனும் வாழ ஆண்டவனின் ஆசி வேண்டுகிறேன்.

**திருமதி மஞ்சுளா யோகநாதன்**
**பிரதி அதிபர்**
**கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி / அக்கராயன் ம.வி பரிசளிப்பு விழாவில்....



கிளி / திருவையாறு ம.வி விளையாட்டு விழாவில்...



கிளி / முருகானந்தா ம.வி சாரணர் அணியில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதருள் மாணிக்கம்

1998 ஆம் ஆண்டு வணிகபாட ஆசிரிய ஆலோசகராக திரு கஸ்பார் மதுரநாயகம் அவர்களைச் சந்தித்தேன். முதற் பார்வையிலேயே பிடித்துக் கொண்ட அவ்வுருவம் இன்றுவரை, எனது மனதைவிட்டு அழியவோ அகலவோ இல்லை. உருவம் மட்டும் அல்ல இவரது உயிர்ப்புள்ள பண்புகளும் கூட இன்றுவரை என்னை வழிநடத்தி வருகின்றன என்று சொன்னால் அது மிகையல்ல. அன்றைய நாட்களில் ஆசிரிய ஆலோசகராக அவரது பணிநிலையில் நான் ஒரு வணிகபாட ஆசிரியனாக பல்வேறு பரிமாணங்களில் அவரைப் பார்த்திருக்கின்றேன். எனது கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை மேற்பார்வை செய்தபோது, குறைகளை முன்னிறுத்தாது சிறந்த உளவியல் ஆலோசகராக செயற்பட்டதைக் கண்டேன். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மாதிரி வகுப்புக்களை நடைமுறைப்படுத்தி, கருத்தரங்குகளையும் ஒழுங்கு படுத்தி, முன்னுதாரணமான ஆசிரிய ஆலோசகராகத் திகழ்ந்தார். அப்போது கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் செயற்பட்ட திருமதி ப.மார்க்கண்டு அவர்களின் வழிகாட்டலில் க.பொ.த (உ.த) மாணவர்களுக்கான வினாத்தாள்களை வலயமட்டத்திலே தயாரித்து வழங்கும் பொறுப்பை ஏற்று நடைமுறைப்படுத்தினார்.

2003ஆம் ஆண்டு கிளி/முருகானந்தா கல்லூரிக்கு அவர் அதிபராக நியமிக்கப்பட்டபோது, அவரது தலைமைத்துவத்தின் கீழ் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவங்கள் பெறுமதி மிக்கவை. ஒரு அதிபருக்குரிய ஆளுமைகளுடன் பல்வேறு பணிநிலைகளில் ஒரு சிறந்த நிர்வாகியாக சிறந்த கல்வியாளனாக மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அக்காலத்தில் மதுரநாயகம் சேருடன் சென்ற கல்விச்சுற்றுலாக்கள் பல விடயங்களை எனக்குக் கற்றுத் தந்துள்ளன. மாணவர்களுடன் தானும் ஒரு குழந்தையாக மாறி, சமையல் பணியிலும் கலந்து கரம் கோர்த்து மகிழ்கின்ற அவரது வெள்ளை உள்ளம் போற்றுதற்குரியது.

நான் சாரணத்துறை ஆசிரியராகப் பணிபுரிந்த போது, சாரணர்களுக்கான பயிற்சி ஒழுங்குகளையும் சாரணர் பாசறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு உந்து சக்தியாக விளங்கினார். நான் அதிபராக வரவேண்டும் என்ற எண்ணத்துக்கு இவருடைய நடத்தைகளும் செயற்பாடுகளும் என்னுள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இவரது நேர்மையும், தியாகங்களும், அநீதிக்கு அடிபணியாத போக்கும், எத்தகைய விமர்சனங்களையும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் தன்மையும் இன்று வரை என்னை வழிநடத்தி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அதிபர் நியமனம் பெற்றபின், இளையவனான என்னையும் நட்புப் பாராட்டி பல விடங்களில் ஆலோசனை வழங்கி என்னை வழிநடத்தியிருக்கின்றார். இவரது அதிபர் பணி எண்ணிடலங்காத தியாகங்களுடன் கூடியது. மாணவர் கற்றலிலே பல இடர்பாடுகள் அனுபவிக்கும் காலத்தில் வாடும் பயிருக்கு வான் மழை போல் அமைந்தார். பரிசளிப்பு விழா, தமிழ்மொழித்தின விழா, ஆங்கிலதின விழா, விளையாட்டுப்போட்டி முதலிய விழாக்களில் நேர்த்தியான செயலொழுங்கும் நேரமுகாமைத்துவமும் நிகழ்வுகளை ஒத்திகை பார்த்து ஒழுங்கு படுத்தும் தன்மையும் இவருக்கே உரித்தான தனித்துவங்கள். இவர் கத்தோலிக்கனாக இருப்பதாலும் ஆங்கிலப்புலமை கொண்டவராக இருப்பதாலும் நேர்த்தியான செயற்பாடுகள் இவருக்கு கைவந்த கலையாகும் என நான் பல தடவை எண்ணியதுண்டு.

ஓய்வு காலம் நெருங்கிய வேளையிலும் பல மைல்கள் தூரத்தில் உள்ள கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயத்தில் விருப்புடன் பணியாற்றி ,பல நிலை மாற்றங்களை மேற்கொண்டவர். என்பதைக் கூறாமல் விட முடியாது. ஒவ்வொரு வருடமும் கணிசமான மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வருகின்றனர். க.பொ.த (சா.த) பெறுபேறுகளிலும் சிறந்த சாதனையைப் படைக்கும் பாடசாலையாக இப்பாடசாலை விளங்குகின்றது. அதுமட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்னிலை வகிப்பதற்கு இவரது வழிகாட்டல் இன்றியமையாதது மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிதி மூலங்களைத் தேடியறிந்து, தனது நண்பர்களிடமும் உதவி பெற்று பாடசாலையின் பௌதீக வளங்களை விரிவுபடுத்தியவர். இவரது பணி நலனுக்காக இறைவனால் வழங்கப்பட்ட அருங்கொடையே இவரது குடும்பம் என நான் எண்ணுகின்றேன். இவரது பணிக்கு பக்க பலமாக விளங்கும் அன்பான மனைவியும், வைத்தியர்களாகவும் பொறியியலாளராகவும் உயர்ந்து நிற்கும் பிள்ளைகளும் கடவுளின் அருட் கொடைகளே!

அரச பணியில் ஓய்வு பெற்றாலும் கல்விப் பணியில் இவர் தொடர்ந்து செயலாற்ற வேண்டும் அதற்கான உடல் உள ஆரோக்கியத்தை இறைவன் வழங்க வேண்டும் என இறையருளை யாசித்து, வாழ்த்துகின்றேன்.

**திரு.க.விக்னராஜா**
**செயலாளர்**
**(கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம்)**
**அதிபர்**
**கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மதுரநாயகம் என்ற மதுரமனத்தோடு என் பயணத்தின் சில குறிப்புகள்

கிளிநொச்சிக் கல்வி வரலாற்றில் அதிபர் திரு கஸ்பார் மதுரநாயகம் என்ற கல்விச் சேவையாளன் ஒரு மின்னும் நட்சத்திரம் . அவர் ஒரு கல்விப்புலத்து சாதனைக் குடும்பத்தின் தலைமகன். அவருக்கும் எனக்குமான கடந்த 32 வருட சமாந்தர காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். அவரது உருவத்தை முதன் முதலில் கண்டநாள் மனதில் இன்றும் பசுமையாகவே உள்ளது. அது நான் கல்வித்துறைக்கு வராத காலத்தின் ஒரு முக்கியமான நாள்.

இலங்கையில் இந்திய அமைதிப்படை ஆக்கிரமித்திருந்த 1988 இன் ஒரு நாளில், அன்று எனது முன்னைய பணியான உபதபாலதிபராக இருந்த காலத்தில், என்னையும் எனது அஞ்சல் சேவகர்களையும் பிடிவாதமாக இந்திய இராணுவம் அழைத்துச் சென்று எமது அலுவலகத்துக்கு சற்றே தொலைவில் இருந்த வைத்திய சாலை கட்டடத்தில் தேர்தல் நடத்துவதற்கு இரண்டு தினங்கள் முன்னராக சிறைவைத்தது.

வன்னேரிக்குளம் ம.வி இல் கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் மதுரநாயகம் அவர்களையும் எம்மோடு கொண்டுவந்து சிறைவைத்தார்கள். அம்முறை தேர்தற் பணிகளை ஆற்றுவதற்காக குறிப்பாக மதுரநாயகம் அவர்களை இந்திய ராணுவம் உலங்கு வானூர்தியில் ஏற்றி, யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்றனர் என்பதும் மிகவும் மறக்கமுடியாத சம்பவம். எம்மோடு சிறைவைக்கப்பட்ட போதுதான் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானோம்.

அது ஒரு கீர்த்தி மிகுந்த நாளே. இன்றுவரை அந்த மனிதரோடு எனக்கிருக்கும் உறவு மிகவும் ரம்மியமானது. அந்தக் குடும்பத்தின் சகல மகிழ்ச்சியிலும் எனக்கும் நெருக்கமான அபிமானம் உண்டு. இப்படி இருக்க நானும் அக்கராயன் மவியில் ஆசிரியராகி வன்னேரி ம.விக்கு ஆங்கில ஆசிரியராக மாற்றலாகி கற்பிக்கச் சென்றபோதுதான் அவருடனான நெருக்கம் அதிகரித்தது. அங்கு அவர் ஆங்கிலம் கற்பித்தார். ஒரு வர்த்தகப் பட்டதாரியான மதுரநாயகம் அவர்கள் அங்கிருந்த மிகவும் கனதியான ஆளணி உறுப்பினராக பாடசாலையின் முக்கிய பணிகளைப் பொறுப்பெடுத்திருந்தார்.

இப்போது போலல்லாது அன்றைய ஆசிரியர்கள் எமது மாவட்டத்தின் உள் கிராமங்களில் வீடுகளிலும், பாடசாலை சார் கட்டடங்களிலும், பாடசாலை சாரா அந்நிய அரச விடுதிகளிலும் தங்குவது தமது பொறுப்பும் கடமைக்கான தேவையுமாக கருதி கல்விப்பணி செய்தனர். அதனாற்தான் இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்புவரை கிளிநொச்சியின் கல்விப்பண்பாடு கனதியாக இருந்ததாக அவதானிகள் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் தமது பொறுப்பு இது என எண்ணினர். அந்த அணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விழுமியத்தொகுதி அங்கத்தவராக மதுரநாயகம் அவர்களும் இருந்தார்கள் எனச் சொல்ல முடியும்.

இத்தனைக்கும் கொடும் யுத்தத்தின் அசைவியக்கத்துக்கு ஈடுகொடுத்து மாந்தர்கள் செயற்பட்ட காலம் அது. வன்னேரி அழகிய கிராமம். அங்கே பாடசாலை ஆசிரியர்கள் தங்கி இருந்த வேறு திணைக்கள சிறிய 'குவாட்டஸ்சில்' தனியே சமைத்து உண்டு இருந்தபோதே நானும் அங்கே மாற்றலாகிச் சென்றேன். மதுரநாயகம் அவர்களது குவாட்டஸ்தான் என்னுடையதும், ஏனைய ஆசிரியர்களதும் ஓய்வு நேர விடுதி. பசியாறும், தாகம் தீர்க்கும் இடமாக அது ஆகியது. அங்கேதான் சிற்றுண்டிகளை உண்போம். ஏன் மதியம் பசித்தால் அவரது சமையல் எமக்கு விருந்தாகிவிடும்.

அவரது கருவாட்டுக்கறியும், எங்களது பாணும் இன்றும் நினைக்கும்தோறும் அவரது மென்மையான நேசமும், உணவின் சுவையும், உள்ளத்திலும், வாயிலும் நீரூறும் அனுபவமே. அருமையான சமையற்காரர். நாங்கள் அவரது சாப்பாட்டை முடித்து விட்டோமே என ஒருநாளும் சினந்தவரில்லை என்றால் அத்தகு அறச்சிந்தனை அவரது குடும்பப் பாங்கே என உணர முடிந்தது. பிறருக்கு உதவும் மனதை அவரது சமயம் ஊட்டிய மனித விழுமியமும் பெற்றோர் கற்பித்த சமூக வாழ்வும் எனலாம்.

மதுரநாயகம் என்ற சாதிக்கப்பிறந்த ஆளுமை எனக்கு நல்ல நட்பாக இருந்தமையால், ஒரு வகையில் சுமைதாங்கியாக அவர் ஆகிய பொழுதுகள் பல. பாடசாலை அதிபரான பின் பாடசாலை சார் முகாமைத்துவப் பொறிமுறை பற்றிய நுட்பங்களை அறிந்ததும் உண்டு. நான் பாரதி வித்தியாலயத்தில் அதிபராக இருந்து இடம்மாற்றப்பட்டபோது எனக்கு வேறோரு பாடசாலை வழங்கப்பட்டது. அதனை ஏற்கும் மனநிலையில் நான் அப்போது இருக்கவில்லை. தரப்பட்ட பாடசாலையை பணிப்பாளரிடம் பொறுப்பெடுக்க மறுத்து விட்டேன்.

அதற்குப் பதிலாக எங்காவது பிரதி அதிபராகப் போகிறேன் என்பது எனது தேவையாக இருந்தது. அதன்போது, நான் தெரிவு செய்த இடம் திரு மதுரநாயகம் அவர்களின் பாடசாலையான அக்கராயன் ம.வி .இந்தப்பாடசாலையை நான் கேட்டதும் இவரது பண்பை அறிந்ததாற்தான் அவர் எனக்கு ஆறுதலாக இருப்பார் என்பதை நான் உணர்ந்தேன். அவ்வாறே அவரும் ஒரு கண்ணியமான சகபாடியாக என்னைத் தேற்றினார். அவரோடு பிரதி அதிபராக ஒரு வருடம் பணியாற்றி, ஒருவித மன நெருக்கடியும் இல்லாமல் நாம் இருந்தோம் என்பது ஈண்டு குறிப்பிடத்தகுந்தது.

மதுரநாயகம் அவர்கள் பிறரிடம் காட்டும் வாத்சல்யத்துக்குபல சான்றுகள் உள்ளன. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு முறை அக்கராயனில் இருந்து துவிச்சக்கர வண்டியில் நான் யாழ்ப்பாணம் சென்று திரும்பும்போது, இவர்கள் வீட்டுக்கு மிகுந்த களைப்பில் சென்றேன். அது ஒரு பாதைகள் மூடிய காலம். யாழ்ப்பாணம் செல்வது மிகவும் கடினமானது. பாதைகள் தடைப்பட்ட காலம். அவர்களோடு கொஞ்சக்கால நட்பு மட்டுமே. எனினும் தம்பதிகள் என்னை உணவுதந்து உபசரித்ததுடன் வழிச்செலவுக்காக என்றுகூறி எனக்கு 35 ரூபாய் காசும் தந்து என்னை வழியனுப்பினர். அது இன்று 1000 ரூபாய் போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவத்தை இங்கு ஒழிக்க வேண்டும் எனவோ அதற்கு நான் வெட்கப்படவோ இல்லை. அத்தகு மனிதநேயம் கொண்ட குடும்பமாக இவர்கள் அன்றும் இருந்தார்கள். அன்று நீண்டகால நண்பராகவோ ஆழமாக பழகியவராகவோ இவர்கள் இருக்கவில்லை எனினும் இவர்களது உதவும் மனப்பாங்கு எவருக்கும் உதவும் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் 'மனிதக்காதல்' என்பதே இங்கு பதியப்பட வேண்டியது மனிதர்கள், நண்பர்கள் தவிப்புக்குள்ளான போதெல்லாம் உதவும் வழிகாட்டும் திறம் அவரிடம் இருந்தது. ஏனெனில், அவர் அத்தகு பட்டறிவிற்கு ஆளாகிய சம்பவங்களும் உள்ளன. அவை எமக்கு வழிகாட்ட ஏதுவாகின.

இவரது துணைவியார் வடமராட்சி, தும்பளை நெல்லண்டைக்கிராமத்தைச் சேர்ந்த திருமதி பிறேமா மதுரநாயகம். அவர்களும் இவரும் இந்த கல்வி மாவட்டத்துக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. மிக நீண்ட பரந்த எமது மாவட்டத்தில் ஒரு பெண் கல்வியியலாளராக அவர் செய்த அரியதொண்டு, அரிய சேவையை நிபுணத்துவ வல்லமையோடு அவராற்றிய பணியை இந்த மாவட்ட கல்விச்சமூகம் மறப்பதற்கில்லை. அது மெச்சத்தக்கது. இத்தகு மிகுந்த கல்வி உழைப்பாளிகளை உடையது இவரது குடும்பம். மதுரநாயகம் அவர்கள் பல பாடசாலைகளில் நல்லதோர் அதிபரராக கடமையாற்றியவர். இவர் இன்றுள்ள மிகவும் மூத்த அதிபர் என்ற இடத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

அதிபர் பணிக்காலத்தில் இவர் வஞ்சகமான சமூக நெருக்கடிகளை முகங் கொடுத்தார். அதிகாரிகளின் புரிதலற்ற அணுகுமுறைகளில் சிக்கிய சந்தர்ப்பங்களும் உண்டு . மதுரநாயகம் அவர்கள் உரும்பிராய் என்ற யாழ்ப்பாணத்து ஊரின்மைந்தன் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி பட்டதாரியாக இலங்கை ஆசிரியர் சேவையை ஏற்று கிளிநொச்சிக்குப் பணிக்கு வந்தவர். இவர் அதிபராகும் முன்னர் பாடத்துறையை வளப்படுத்திய ஆசிரிய ஆலோசகராக எமது வலயத்தில் பணியாற்றினார் என்பது நினைவு கொள்ளத்தக்கது. இந்தக் காலத்தில் நானும் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகராக கடைமையாற்றியதால், இந்த ஆளுமைகளோடு நெருங்கி உறவாடும் வாய்ப்பைப் பெற்றேன்.

அக்கராயன் மவி எனது பாடசாலை. அங்கேதான் நான் கற்றேன். அங்கேதான் நான் ஆசிரியனாக நியமனம் பெற்று பல வருடங்கள் கற்பித்தேன். அங்கேதான் திரு.க.மதுரநாயகம் அவர்கள் கடந்த 8 வருடங்களுக்கு மேலாக அப்பாடசாலை கல்வியில் உயர்ச்சியடைய அயராது உழைத்துள்ளார். தனிப்படவும் நன்றி உடையேன். கல்வி, பௌதிக மறுமலர்ச்சியை அக்கராயன் ம.வி இவரது காலத்தில் மேலும் எட்டியது. அதனால், நான் அவருக்கு நன்றி உடையேன்.

இந்தக்குடும்பத்தோடு எனக்கிருந்த உறவு மிகவும் கனதியானது. அவரது மூத்தபிள்ளை சிந்து ஒரு மருத்துவர். அவர் எனது குறிப்பிடத்தகுந்த மாணாக்கருள் ஒருவர். ஒரு நீண்டு கிடக்கும் கிளிநொச்சிக் கல்வி வரலாற்றில் திரு.திருமதி மதுரநாயகம் அவர்களது பணி ஒரு இரட்டையர் பணியாகப் பார்க்கப்பட வேண்டும். அத்தகு சிறப்புமிக்கது அது. இந்த மாவட்டத்தில் ஆங்கிலம் பேசும் தேர்ச்சி உள்ள அதிபர்களுள் இவரும் அடங்குவார். அது இந்த கடமைகளுக்கு பெரும் தகுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவரோடு கற்ற ஆளுமைகள் மிகவும் சிறப்பான இடங்களில் நிர்வாக சேவை அதிகாரிகளாகவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

அவர்களின் உதவியை எல்லாம் தனக்கென்று இல்லாது, தனது பாடசாலைகளுக்கு பெற்றுக்கொள்வதில் மதுரநாயகம் அதிபர் மிகவும் சமர்த்தர். அது அவரது பிரத்தியேக வாய்ப்பு. அதனால், இவர் பொறுப்பேற்ற பாடசாலைகளுக்கு வரப்பிரசாதமாக அவை அமைந்தன. நல்ல நண்பர்களைத் தேடியவர் நலிவுற்றோருக்கு ஆறுதலாகவும், ஆதரவாகவும், குரலற்றவர்களுக்கு குரலாகவும் இருந்தவர், இருப்பவர். நல்ல தகப்பனாக நிலைத்தவர்.நல்ல அதிபராக கல்விப்புலத்துக்கு பெருமை சேர்த்தவர். நல்ல முகாமையாளராக ஆசிரியர்களை வழிப்படுத்தி உண்மை நிலையில் கற்க விரும்பும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பெறுபேற்றை பெற்றுக் கொடுத்தவர் மாந்தருள் முன்மாதிரியாக சமூகத்தினால் அடையாளப்படுத்தப்பட்டவர்.

கண்ணியமான குடும்பத்தலைவராகத் திகழ்பவர். அருமையான நண்பராக முன்மாதிரியான சாதனையாளனாக எங்கள் மத்தியில் வாழ்பவர். நேர்மை தவறாது மனச்சாட்சிக்கு அருகில் இருந்தவர் உழைக்கமறுக்காது நடந்தவர். பேசவேண்டியதைப் பேசியும், மோனத்தவம் கொண்டும் காலத்தை வென்றவர். இவரால் ஏதாவது மனங்கள் நொந்தனவா என்றால் இல்லை என்பதே பதில். இவரால் பிள்ளைகள் இழப்பைச் சந்தித்தனரா என்றால் இல்லை எனவும், இவரால் பாடசாலை சிதைவுற்றதா என்றால் அப்படி ஒரு வார்த்தையே பிழையாகும். இவரது வழித்தடத்தில் வளர்ந்தது என்பதே விடை. இவரால், சகல நிலைமைகளும் காலங்களும் வெற்றிநடை போட்டன. வெற்றிபெற்றுக் கொடுத்த காலத்தின் மைந்தன்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்பதன் குறிகாட்டியானவர்களுள் ஒருவர். யாராகிலும் இவரைப் புரியாமல் இருந்தால் அதனை சில பொழுதில் உரியவர்களுக்கு காலம் புரியச் செய்யும் என்பதைத் துணிந்து கூறலாம். 'ஆளும் வளரணும் அறிவும் வளரணும்' என்பதற்கு ஏற்ப தானும் வளர்ந்து இந்த மண்ணின் கல்விக்கு ஏங்கும் பிள்ளைகளுக்கு சேவையை செழுமையாக நிறைவேற்றி, புனிதமான கல்விப்பணியை 27.01.2021 இல் நிறைவுறுத்துகிறார்.

மதிப்பு மிகு எங்கள் சக அதிபர் மதுரநாயகம் அவர்களது விலகல் இந்தத் துறைக்கு ஒரு நிபுணரின் இழப்பாகவே இருக்கும். ஆனால், இவரது தடங்கள் பலருக்கு வழித்தடமாகவும் இருக்கும். இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளையும் ஒவ்வொரு கணத்திலும் மகிழ்ச்சியையும் கொடுக்க எல்லோரும் இவருடனான அன்பு நிறை உள்ளத்தோடு வேண்டி நிற்போம்.

**பெருமாள் கணேசன்**
**அதிபர்**
**கிளி / சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணியமான அதிபர்

மதிப்பார்ந்த மதுரநாயகம் அதிபர் தொடர்பான விடயங்களைத் தாங்கி வரும் ''மதுரம்'' எனும் மணிவிழா மலரில் அவர் தொடர்பான சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த வாய்ப்புக்காக இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்விப் பயணத்தில் இவருடன் சேர்ந்து பயணித்த காலம் நிறைவான அனுபவத்தை எனக்குப் பெற்றுத் தந்தமை குறிப்பிடத்தக்கது. என்னுடைய சக ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, நல்லதொரு சகோதர நண்பனாக, குடும்ப உறவினராக அவருடன் நான் தொடர்புபட்ட வடிவங்கள் பலதரப்பட்டவை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கே உரித்தான வகையில் அவரின் நடிபங்கு என்பது தனித்துவமானது.

ஆசிரியராக இருந்தபோது சக ஆசிரியர்களுடன் அவர் நடந்து கொள்ளும் முறை அனைவரையும் அவர்பால் ஈர்த்துக்கொண்டது. ஆசிரிய ஆலோசகராக இருந்த போது, ஆசிரியர்களின் தவறுகளைக் கண்டு கொள்வதற்கு அப்பால் அவர்களின் நிறைகளைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துவதுடன் தவறுகளை நாகரிகமாக முன்வைக்கும் தன்மை ஆசிரியர்களை விருப்புடன் பணியாற்றத் தூண்டியது. இது வணிகத்துறை வெற்றிக்குப் பலம் சேர்த்திருந்ததை வணிகத்துறை வெளியீடுகள் சான்றுபடுத்தின.

திருவையாறு மகாவித்தியாலயத்தில் மதுரநாயகம் சேர் அதிபராக இருந்த போது நான் ஆசிரியராகக் கடமையாற்றிய காலம் பொன்னானது. பல அனுபவங்களை அவரின் மூலம் பெற்றுக்கொண்டேன். நேரமுகாமைத்துவம், விளையாட்டுப் போட்டிகளின் ஒழுங்கமைப்புக்கள், தமிழ் மொழித்தினப் போட்டிகளின் ஒழுங்கமைப்பு, பரிசளிப்பு விழாக்களின் முறையான ஒழுங்கமைப்பு, திட்டமிடல், ஒத்திகை பார்த்தல், முறைசாரா உள்ளக மேற்பார்வைகள், இணைபாடவிதான செயற்பாடுகளின் கூடுதலான அக்கறை என்பன கல்வி மீது மட்டுமன்றி பல்துறைசார்ந்த விடங்களிலும் அவரது அக்கறையை எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களை உற்சாகப்படுத்தி, மேலும் சிறப்பாக வேலை செய்யத் தூண்டுவதில் அவருக்கு நிகர் அவரே. பாடசாலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுகின்ற சவால்களைக் கையாளும் முறைகளைக் கண்டு நான் வியந்ததுண்டு. கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் வந்தபோதெல்லாம் சளைக்காது எதிர்கொண்டு வெற்றி கண்டவர். பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் போது பெற்றோரிடையே ஏற்படும் கருத்து முரண்பாட்டைக் கச்சிதமாகக் கையாளும் தன்மை இவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. எல்லோருடைய கருத்திற்கும் செவி சாய்த்து இறுதியில் முடிவைத் தனக்குரியதாக்கி அதில் ஆரோக்கியமான வெற்றி அடைந்துவிடுவார்.

மீள்குடியமர்வுக் காலப்பகுதியில் பாடசாலைக்கு அடிக்கடி வந்து போகும் சகோதர இன அதிகாரிகள், பிறநாட்டவர்களோடு சரளமாக ஆங்கிலத்தில் உரையாற்றுவார். மொழியாற்றல், கலையாற்றல், நிர்வாக ஆற்றல் என்பவற்றோடு நடை, உடை, தொடர்பாடற் திறன் அசைவுகள் அத்தனையும் ஒன்று சேர்ந்த ஓர் ஆளுமைமிக்க அதிபரின் ஓய்வு கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு வெற்றிடமே. இவரின் விதைப்பின் பயன்களை இவர் பணிபுரிந்த பாடசாலைகளும், மாணவர்களும் சிறப்பாய் எடுத்துக்காட்டுகின்றனர்.

தொழிலில் எந்தளவு அக்கறை கொண்டாரோ, குடும்பத்தார் மீதும் அக்கறை கொண்டு சமநிலை ஆளுமை கொண்டவராக இருந்தமைக்கு அவரது மனைவியும், பிள்ளைகளும் சான்றாக உள்ளமை கண்கூடு. அம்மணி பிறேமா மதுரநாயகம் அவர்களுடன் உடுவில் மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவரது தமிழ்த்துறை தொடர்பான ஆற்றல் தனித்துவமானது. மகன் அருணனுக்கு கற்பிக்கும் வாய்ப்பு திருவையாறு மகா வித்தியாலயத்தில் எனக்குக் கிடைத்தது. இவரின் பணியின் பயனாக இறைவன் வழங்கிய ஆசியும் அருளும் தொடர்ந்து கிடைக்க இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.சி.மகேந்திரன்**
**அதிபர்**
**கிளி / செல்வாநகர் அ.த.க. பாடசாலை**




**கிளி / திருவையாறு மகா வித்தியாலயத்தில்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேர முகாமையாளன்

கிளிநொச்சி மாவட்டத்தில் 34 வருடங்கள் கல்விப்பணியை நிறைவு செய்து 27.01.2021 அன்று ஓய்வு பெறும் திரு.க.மதுரநாயகம் அவர்களது மணிவிழா மலரில் அவர் கல்விப்பணியாற்றிய காலப்பதிவை வெளிக்கொணர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிளி/பூநகரி மகாவித்தியாலயத்தில் 1996ஆம் ஆண்டு வணிக பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக கடமையேற்ற இவர் ஆங்கிலப்பாட ஆசிரியர்கள் இல்லாத நிலையில் ஆங்கிலப் பாடத்தையும் கற்பித்தார். யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வால் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தும், பூநகரிப் பிரதேசத்திலிருந்தும் பெரும் தொகையான மக்கள் ஜெயபுரத்தில் குடியேறினர்.கிளி/பூநகரி மகாவித்தியாலயமும் இடம்பெயர்ந்து ஜெயபுரத்தில் இயங்கியது. பெரும் தொகையான மாணவர்களை உள்வாங்கியதாக இப்பாடசாலை அமைந்தது. இந்த வேளையில் தான் திரு. க.மதுரநாயகம் அவர்களும் ஆசிரியராக இணைந்து கொண்டார்.

அக்காலப்பகுதியில் பூநகரிக் கல்விக் கோட்டம் ஜெயபுரத்தில் தான் இயங்கியது. பூநகரிக் கோட்ட தமிழ்மொழிக் கலைத் திறன் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், மெய்வல்லுநர் போட்டிகள் பூநகரி மகாவித்தியாலயத்திலே நடைபெறும். இச் சந்தர்ப்பங்களில் இந் நிகழ்வுகளின் இணைப்பாளராகச் செயற்பட்டதை நான் அவதானித்துள்ளேன். இந் நிகழ்வுகளில் நேரகாலம் பாராது பணியாற்றியவர்.

இப்பாடசாலையில் வர்த்தகபாட ஆசிரியராகப் பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் பெருமளவான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லக் காரணமாக இவர் இருந்தார். இவரது காலத்து மாணவர்கள் பலர் இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் உயர் பதவிகளை வகிப்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய செயற்பாட்டை அவதானித்த அப்போதைய கல்விப்பணிப்பாளரால் பிரதி அதிபராக நியமனம் செய்யப்பட்டார். அதிகளவு மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ள இப் பாடசாலையில் அதிபருக்குப் பெரும் உதவியாக இருந்து மாணவர்களது ஒழுக்கம், கட்டுப்பாடுகள் என்பவற்றை பாதுகாத்தார்.

வன்னேரிக்குளத்திலிருந்து நாளாந்தம் உரிய நேரத்துக்கு துவிச்சக்கர வண்டியில் வருகை தருவார். நேரமுகாமைத்துவம் பேணுவது இவரது ஆளுமையின் அடையாளம். மாணவர்களை நல்வழிப்படுத்துவதிலும், முரண்பாடுகளை தீர்த்து வைப்பதிலும் தனித்திறன் வாய்ந்தவர். எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். மாணவர்களுடன் அன்பு கலந்த கண்டிப்புடன் பழகும் மனோபாவம் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த குரல் வளம் கொண்டவர். பாடசாலை நிகழ்வுகளில் பாடகராக வலம் வந்த சந்தர்ப்பங்கள் இன்றுவரை மனதில் பசுமையாக நிழலாடுகின்றன.

இவரது கல்விச் சேவையின் அதிக காலம் அதிகஷ்டப் பிரதேசங்களிலேயே அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. பலரும் ஏற்க மறுக்கும் பிரதேசங்களை விருப்பமாக ஏற்றுக் கொண்டு நிறைவான சேவையை வழங்கியவர். இவரது நிறைவான சேவையின் பின்னணியில் இவரது துணைவியார் திருமதி. பிறேமா மதுரநாயகம் அவர்கள் இருந்தார். என்று கூறினால் அது மிகையல்ல.

இவரது தன்னலமற்ற சேவையின் விளைவே இன்று அவரின் பிள்ளைகள் உயர்கல்வியில் சிறந்து விளங்கி வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் பிரகாசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய சேவையாளன் ஓய்வு பெற்றாலும் 'ஓய்வு என்பது நோக்கத்தை கைவிடுவதல்ல' என்ற கூற்றுக்கு அமைய மேலும் கல்விப் பணியில் சமூகத்துக்காக உழைக்க வேண்டும் என வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். உடல் உள ஆரோக்கியத்துடன் இனிதே வாழ இறைவனை வேண்டுகிறேன். மணிவிழா சிறக்க மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**திரு. சபாரத்தினம் லதிஸ்குமார்.**
**அதிபர்.**
**கிளி / கிராஞ்சி அ.த.க. பாடசாலை.**



**கிளி / பூநகரி மகா வித்தியாலய க.பொ.த. உயர் தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "விதைப்பவன் தூங்குவான். விதைகள் தூங்குவதில்லை"

எழில்மிகு உரும்பையூரில் விதைக்கப்பட்ட மதுரநாயகம் எனும் விதையானது மண்ணை முட்டி மோதி, கல்விச் செடியாக முளைத்தெழுந்து வளர்ந்து விருட்சமாகி விழுதுகள் பரப்பி, இன்று அகவை அறுபதைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காண்கின்றது.

தனது வரலாற்றை அறியாத சமுதாயம் நினைவாற்றலை இழந்துவிட்ட மனிதனுக்குச் சமமானது. அதேபோல ஆசிரியத்துவத்தில் பல்வேறு பணிகளை வினைத்திறனுடன் ஆற்றி 27.01.2021 இல் அரசபணியிலிருந்து ஓய்வுபெறும் எனது அன்புக்குரிய ஆசான் திரு.க.மதுரநாயகம் அவர்களின் கல்விப்பணி வரலாறும் பரந்துவிரிந்தது வினைத்திறன் மிக்கது.

1993ஆம் ஆண்டு ஜனவரிமாதம் பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்காக, கிளி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்திலிருந்து கிளி/பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலைவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அப்பொழுது, நான் அங்கு மாணவனாக இருந்தேன். இவர் பாடசாலைக்கு வந்து மிகச் சில நாட்களிலேயே எல்லோர் மனதிலும் இடம்பிடித்த ஆசிரியராக பரிணமித்தார். திரு.சு.அடைக்கலம் அவர்கள், அப்போது அதிபராக இருந்தார். மதுரநாயகம் சேர் ஒரு கத்தோலிக்கனாக இருந்த காரணத்தாலும் இவரது நல்லொழுக்க நற்செயல்களாலும் பாடசாலைச் சமூகத்தின் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தார்.

பங்குத்தந்தையும், பங்குமக்களும், மாணவர் குழாத்தினரும் இவரைப் பெரிதும் விரும்பினர். இவர் தனது மேற்படிப்பில் கவனம் செலுத்தியதை விட மாணவர்களின் ஒழுக்கத்திலும் கல்வி மேம்பாட்டிலும் கூடிய கவனம் செலுத்தினார். திரு.சு. அடைக்கலம் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றபின், திரு. க. மதுரநாயகம் அவர்கள் அதிபராகப் பணியாற்றினார். கரைச்சி, கண்டாவளை, பூநகரிக் கோட்டங்களில் மாத்திரமன்றி பளைக்கோட்டத்திலும் இவர் பாதம்பட வேண்டும் என்ற ஆண்டவரின் திட்டம் நிறைவேறியது. குறுகிய காலத்தில், பாடசாலையில் பல நிலை மாற்றங்களைச் செய்தார். மாணவர் மனங்களில் இடம் பிடித்தார்.

நிலையாகப் பணிபுரிந்து, பல நிலைமாற்றங்களை ஏற்படுத்துவார் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த புலோப்பளை மக்களின் அபிலாசைகளை 1996 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு சிதறடித்தது. அவர், கிளாலிக்கடல் கடந்து, மீண்டும் கிளிநொச்சிக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. குறுகிய காலத்தில் எனது பாடசாலையில் பல நிலை மாற்றங்களை ஏற்படுத்திய ஆசான் தனது ஓய்வு காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**செ.கனிஸ்ரன்**
**ஆசிரியர்**
**கிளி/ சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்.**
**பழைய மாணவன்**
**(கிளி/பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை)**



கிளி / திருவையாறு ம.வி – ஆங்கிலதின விழாவில்



கிளி / முருகானந்தா கல்லூரி – பரிசளிப்பு விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி / அக்கராயன் ம.வி ஆசிரியர் குழாத்துடன்....



கிளி / அக்கராயன் ம.வி பரிசளிப்பு விழாவில் பிரதம செயலாளருடன்....



கிளி / அக்கராயன் ம.வி பரிசளிப்பு விழாவில் முன்னாள் கல்வி அமைச்சருடன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் –III

## கிளி / அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சத்தியசீலன்:

சீலன் தரம் 7 இல் படிக்கிறான்.

அவனுக்குள் இனம்புரியாத ஓர் ஏக்கம் எப்பொழுதும் இருந்துகொண்டே இருந்தது. கசங்கிய காற்சட்டையும், கறைபடிந்து மங்கலாகிப்போன மேற்சட்டையும் அவனின் வறுமை நிலையினை எடுத்துச்சொல்லும் அடையாளங்களாகும்.

அந்த வகுப்பிற்குக் கற்பிக்கவென எத்தனையோ ஆசிரியர்கள் வந்து போனாலும், சத்தியன் ஆசிரியர் மீது மட்டும் அவன் அளவு கடந்த அன்பு வைத்திருந்தான்.

சத்தியன் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர்.

மாணவர்கள் சுத்தமாக ஆடை உடுப்பதிலும், தலை முடியை வகிடெடுத்து வாரி இழுத்து நேர்த்தியாக இருப்பதிலும், மாணவர்கள் சப்பாத்து அணிவதிலும் மிகக் கவனமாகச் செயற்படுவார். சத்தியன் சேர் ஒரு வகுப்புக்கு வந்து நிற்கிறாரெண்டால் அயல் வகுப்புகள் எல்லாம் அமைதியாகி விடும்.

தன்னுடைய வகுப்பிலே ஒவ்வொரு மாணவனும் நீலப்பேனை, சிவப்புப்பேனை, கறுப்புப்பேனை, அடிமட்டம், பென்சில் இவை கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்பதை மாணவர்களிடம் வலியுறுத்துவார். மாணவர் சிலரின், குடும்ப நிலை அறிந்தால் அவற்றினை அந்த மாணவர்களுக்கு தானே வாங்கிக் கொடுத்து உதவுவார்.

இந்த மாதிரியாக, மாணவர் மீதான சத்தியன்சேரின் கண்டிப்பும், மாணவர் ஒழுக்கம் மீதான கவனிப்பும், இயல்பாக அவரிடம் காணப்பட்ட இரக்க குணமும் மாணவர்கள் எல்லோருக்கும் அவரைப் பிடித்திருக்கச் செய்தன.

வகுப்புக்குச் சரியான நேரத்திற்கு வருவார். கற்பித்தலோடு, பொருத்தமான கதைகளும் சொல்லுவார். பயிற்சிகள் தருவார். எல்லோருடைய பயிற்சிக் கொப்பிகளையும் பார்ப்பார். சரி போடுவார். நன்று என்ற வார்த்தை எழுதி மாணவர்களை முகமலரச் செய்வார்.

சத்தியன் தமிழ்ப்பாட ஆசிரியராவார். மாணவர்கள் தமிழ் எழுத்துகளைச் சரிவர எழுத வேண்டும் எனவும், தமிழ்ச்சொற்களின் உச்சரிப்புகள் சரியாக இருக்க வேண்டும் எனவும் விடாப்பிடியாக நடந்து கொள்வார். அந்தளவுக்கு தமிழ்மொழி மீதும், தமிழ் எழுத்துகள் மீதும் விருப்பமுள்ளவராகக் காணப்பட்டர்.

விடயம் ஒன்றினை எழுதும்போது பந்தி அமைத்து எழதுவதிலும், அடுத்த பந்தி எங்கிருந்து தொடங்க வேண்டும் என்பதிலும் மிகக் கவனமாக இருப்பார்.

அரவு (கால்) எழுத்தினை எழுதி மேலே குற்றுப்போட்டு, இதுதான் இர்ரன்னா (ர்) என எழுதும் மாணவர்களிடம், அப்படி எழுதுவது தவறு என்பதை காரணங்கள் சொல்லி கண்டிப்பார்.

அரவு (கால்) என்பது தமிழிலுள்ள ஓர் எழுத்துக் கிடையாது. அதுவொரு துணைக்குறியீடு மாத்திரமே என்ற காரணத்தையும் அவர் சொல்லிக்கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எழுத்துகள் எல்லாம் வலம் சுழிப்போக்கிலே எழுதப்படுகின்றன. இரட்டைக் கொம்பினை எழுதும்போது, மேல் சுழியை எழுதிவிட்டு இடஞ்சுழியாக இழுத்து வந்து கீழ்ச்சுழியை முடிக்கிறது மாதிரி எழுதக்கூடாது. கீழ்ச்சுழியினை முதலில் எழுதி வலஞ்சுழிப் போக்கிலே சென்று, மேல் சுழியை முடிக்க வேண்டும் என்பதை கட்டாயமாகச் சொல்லிக் கொடுப்பார்.

அப்படிதான் எழுத வேண்டும் என்ற அவரது கட்டாயச் சட்டத்தினால் பிள்ளைகள் அப்படியே எழுதிப் பழகிவிட்டனர்.

'மாணவர்களே..! ஒரு மெய்யெழுத்திலுள்ள குற்றினை அகற்றும்போது, அந்த எழுத்து அதனுடைய உயிர்மெய் எழுத்தாக வரவேண்டும். ஆனால், அரவினை (ா) எழுதிக் குற்றுப்போடும் எழுத்தில், குற்றினை எடுத்தால் அரவு (ா) என்ற தமிழ்க் குறியீடுதான் கிடைக்கும். ஆகவேதான், அரவு (கால்) எழுதி குற்றுப் போடுவது தவறாகும்' என்பதைக் கவனமுடன் சொல்லிக் கொடுத்தபோது,

'என்னெண்டு வடிவாகச் சொல்லுங்க, சேர்' நிலானி துடுக்குடன் கேட்டாள்.

'கெட்டிக்காரப்பிள்ளை, நிலானி'

மாணவர்கள் கைகள் தட்டினார்கள்.

ஆசிரியர் மாணவரைப் பாராட்டினால், கைகள் தட்ட வேண்டும் என்பதை சத்தியன் ஆசிரியர் சொல்லிக் கொடுத்திருந்தார். மாணவர்களின் கைதட்டல்களின் ஓசைகளால் வகுப்பறை எங்கும் ஆரவாரம் நிரம்பி வழிந்தது. மாணவர் எல்லோருக்குமாகப் பொதுவான புன்னகையினை அள்ளி வழங்கி மகிழ்ந்தார்.

'இங்கை கவனியுங்க பிள்ளையள்' என்றுவிட்டு கரும்பலகையினை நோக்கிப் போனார்.

கரும்பலகையில் சில மெய்யெழுத்துகளை ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதினார். ஒவ்வொரு எழுத்திலிருந்தும் அம்புக்குறிக் கோட்டினைக் கிடையாகவும் வலப்பக்கமாகவும் இழுத்துவிட்டு, முடிவிலே அதனுடைய உயிர் மெய்யெழுத்தினை எழுதினார். அதற்குப்பிறகு சில விளக்கங்களைச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினார்.

சில்லிடும் தெளிந்த நீர் போல் வகுப்பு அமைதியாக இருந்தது. இவை முக்கியமான விடயம் என்பதும், இவை புதிய சிந்தனையாக இருக்கின்றன என்ற முக விகசிப்பும் மாணவர் முகங்களில் அப்பித் தெரிகின்றன.

'இத்தன்னா (த்) என்பதில குற்றினை எடுத்தால் தானா (த) கிடைக்கிறது. இப்பன்னா (ப்) என்பதில குற்றினை எடுத்தால் பானா (ப) கிடைக்கிறது. இவை போலத்தான், மற்றைய மெய் யெழுத்துகளும் இருக்கும்...' என்றார்

'ஓம் சேர்....' என்றுவிட்டு, 'இம்மன்னா (ம்) என்பது மானா (ம) என்றும், இந்தன்னா (ந்) என்பது நானா (ந) என்றும் படாரென எழுதிக்காட்டினாள், காவியா.

'பாராட்டுகள் காவியா'

வகுப்பறை எங்கும் கைதட்டல் ஓசை பலமாகப் பரவிப்படர்ந்து ஓய்கிறது. அந்தநேரம் காவியாவிடம் காணப்பட்ட மகிழ்ச்சியின் அளவுக்கு வரையறை எவ்வளவு என்று சொல்ல முடியாது. அப்படி மகிழ்ச்சியாக காவியா தெரிந்தாள்.

'சரி கொப்பிகளைக் கொண்டோடி வாங்கோ' என்று சொல்லி முடிக்கிறார்.

முதலில் ஓடி வந்தது அவன்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியன் சேர் சீலனின் கொப்பியினை வாங்கிப் பார்க்கிறார். பிறகு அவனின் முகத்தைப் பார்க்கிறார்.

'சரி போடுங்க சேர்..! பெரிய சரி போடுங்க...' அவன் தனக்கு விருப்பமான ஆசிரியரிடம் சிரித்தபடி கெஞ்சுகிறான்.

சத்தியன் ஆசிரியர் சரிகளைப் போட்டுக்கொண்டு அவனையே நோக்குகிறார். முகமெல்லாம் பல்லாகச் சிரிக்கிறான். சில்லறை காசுகள் குலுங்கி விழுவது போல் கணீரென அவனது சிரிப்பொலி வகுப்பறை எங்கும் பற்றிப் படர்கிறது. சிரித்தபடியே தன் மாணவர்களைப் பார்க்கிறான். பிறகு, சத்தியன் சேரினைப் பார்க்கிறான். அவனின் இந்த நிலை கண்டு சத்தியன் சேர் தனக்குள் சிரிக்கிறார்.

இப்படித்தான் சீலனுக்கும் சத்தியன் சேருக்குமான இனிய உறவு நீண்டு வளர்ந்தது.

-2-

இப்ப அவன் 8 ஆம் தரம் படிக்கிறான்.

முன்பைவிட பல மாறுதல்கள் அவனில் தெரிகின்றன. ஒவ்வொரு நாளும் தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடப்புத்தகத்திலுள்ள ஏதாவது பந்திகளை எழுதி வந்து காட்டுவான். அவற்றிற்கெல்லாம் சத்தியன் சேர் பெரியபெரிய சரிகள் போட்டுவிட்டு, நன்று என்று எழுதிக் கொடுப்பார். சிரித்த முகத்துடன் தனக்கு விழுந்த சரிகளை எண்ணிவிட்டு மற்றவர்களுக்குக் காட்டி இன்புறுவான், அவன்.

ஒருநாள் அவன் பாடசாலைக்கு வரவில்லை. அதுவொரு திங்கட்கிழமை. மற்றைய மாணவர்களிடம் அவன் ஏன் பள்ளிக்கூடம் வரவில்லை என்பதை சத்தியன் சேர் விசாரித்தார்.

'சேர் அவன் தாயோடு வேலைக்குப் போறவன் சேர்' என்று தமிழ்மாறன் சொன்னான்.

சத்தியன் ஆசிரியருக்கு என்னமோ போல் இருந்தது. மாணவர் எல்லோரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு பாடம் படிப்பிக்கத் தொடங்கினார். மனம் குழப்பமானார். ஆனாலும், அதை மாணவரிடம் காட்டிக்கொளள் விரும்பாதவராக, பாடங்களைப் படிப்பிக்கத் தொடங்கினார்.

அடுத்தநாள் அவன் பாடசாலைக்கு வந்தான். சத்தியன் சேரிடம் ஓடி வந்தான். 'குட் மோனிங் சேர்' என்று சொல்லி நின்றான்.

'குட் மோனிங், சீலன்'

அவனுக்குள் பாரிய மகிழ்ச்சி.

'ஏன் நேற்றும் பாடசாலைக்கு வரவில்லை' என்று சத்தியன் ஆசிரியர் கேட்டார்.

'சேர், நான் அம்மாவோடு மூண்டு நாளும் கதியால் வேலி போடப்போனனான். இஞ்சை பாருங்க சேர் என்ரை கையை. கதியால் இழுத்துக்குடுத்து கையெல்லாம் புண்ணாகிப் போட்டுது' என்று சிரித்துக் கொண்டு சொன்னான்.

சத்தியன் ஆசிரியர் கண் கலங்கினார். அவனின் சொக்கினை மென்மையாகக் கிள்ளினார். கன்னம் கிள்ளிய விரல்களைக் குவித்துத் தன் உதடுகளில் ஒற்றிக்கொண்டார். அவன் மகிழ்வுடன் தெரிந்தான்.

அவனுக்கு தாயும் ஒரு தங்கையும் மட்டும்தான் இருந்தனர். தகப்பனை இறுதி யுத்த காலத்தில் நெருப்பாயுதங்கள் உமிழ்ந்து துப்பிவிட்டன. தகப்பன் இறக்கும்போது அவனுக்குத் தன் தகப்பனின் உருவம் ஞாபகத்தில் இருக்கக் கூடிய வயதுமில்லை. தந்தை யாரென்று அவனுக்கு சரியாகத் தெரியாது. சாமிப்படத் தட்டிலே அவன் தந்தையின் படம் தெய்வமாகத் தெரிவார். தாய் சொல்லியிருக்கிறார். இவர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அப்பா என்று. அச்சு அசலாக அவனைப் போலவே அந்தப்படம் ஒளிரும். அதை அவன் அம்மா அவனிடம் சொல்லும்போது, அதில் அவனுக்கொரு மகிழ்ச்சி.

இதற்குப் பிறகு பாடசாலை போனால் சத்தியன் ஆசிரியரைக் காண்பதும், அவரிடம் தன் கொப்பியிலே சரி வாங்குவதும் அவனுக்குள் இருந்த சந்தோசங்களாகும். வீடு வந்தால் தன் தங்கையை வீட்டுச் சுவர்ப்புட்டியிலே இருத்திவிட்டு பாடங்கள் சொல்லிக் கொடுப்பான். சத்தியன் சேர் போலவே நடந்து காட்டுவான். அவனின் அந்த நடை பார்த்து அவள் கலகலவென சிரிப்பாள்.

தன்னை சத்தியன் ஆசிரியனாக மாற்றிப் பார்ப்பதில் அவனுக்குள் அலாதி விருப்பம்.

'ஒரு குடம் தண்ணி வார்த்து ஒரு பூ பூத்தது! இரண்டு குடம் தண்ணி வாத்து இரண்டு பூ பூதத்து..! மூன்று குடம் தண்ணி வார்த்து மூன்று பூ பூத்தது' என்றவாறு அவன் தங்கையிடம் சொல்லிக் கொடுக்கும்போது அவனை அறியாமலேயே எண் பற்றிய எண்ணப்பாங்கு அவனுக்குள் துருத்தி வளரத் தொடங்கியது.

தங்கை என்றால் அவனுக்கு உயிர். தங்கையோடு இருந்து ஒன்றாகச் சாப்பிடுவான். தங்கையோடு கடைக்குப் போய் பொருள்கள் வாங்கி வருவான். அவளோடு கூட இருந்து விளையாடுவான்.

'ராஜா வந்தார்'

'ஏன் வந்தார்? '

'நிறம் சொல்ல? '

'என்ன நிறம்? '

'சிவப்பு' என்று சொல்லிவிட்டு தங்கை சிவப்பு நிறத்தினைத் தேடி ஓடுவாள்.

இப்படியான விளையாட்டு மூலமாக நிறங்கள் பற்றிய தெளிவினையும் வளர்த்துக் கொண்டான்.

நிலவெறிக்கும் காலங்களில், பால் போன்ற மணல் முற்றத்திலே ஆனா, ஆவன்னா எழுதிக் காட்டி, அதைப்போல் எழுதச்சொல்லி தன் தங்கையைத் தூண்டுவான்.

அதே மணலிலே பூனை, யானை, கோழி, காகம், பூமரங்கள், ஆள்கள் என உருவங்கள் வரைந்து காட்டுவான். அவைமட்டுமன்றி, அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, தங்கை, தம்பி, ஆடு, மாடு என சொற்களை எழுதிப் பழக்குவான். தங்கையும் புழுகிப்புழுகி எழுதுவாள். வீட்டிலே இருவரும் மிகவும் சந்தோசமாகக் காணப்படுவர்.

சத்தியன் ஆசிரியரின் வரவிற்குப் பிறகுதான் அவனிடம் இப்படியான செயற்பாடுகள் வெளிப்படத் தொடங்கின. சத்தியன் ஆசிரியர் அவனுக்கு மிகவும் பிடித்த ஆசிரியாக எப்பவும் இருந்தார்.

இப்படித்தான் கடந்த வருடம் ஒருநாள், அந்த வலய அலுவலக அதிகாரிகளின் குழு பாடசாலைக்கு வந்தபோது, தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் அவனின் வகுப்பிற்கும் போனார். சத்தியன் ஆசிரியர் அங்கே நின்றார். ஆசிரிய ஆலோசகர் கொப்பிகளை வாங்கிப் புரட்டிப் பார்த்தார். கொப்பிகள் எல்லாம் அழகாகத் தெரிந்தன. எழுத்துகள் எல்லாம் உறுப்பெழுத்துகளாக இருந்தன. அனேக கொப்பிகளில் சிவப்புப் பேனாவால் நன்று என எழுதப்பட்டிருந்தது. அவற்றையெல்லாம் பார்த்த ஆசிரிய ஆலோசகருக்கு அவை மகிழ்வினைத் தந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதேச்சையாக அவனின் கொப்பிகளைப் பார்த்தார். சொற்கள் பல இடங்களில் பிழையாக எழுதப் பட்டிருந்தன. சொற்களுக்கிடையில் இடைவெளிகள் காணப்படவில்லை. பிழையாக எழுதப்பட்ட இடங்களில் சிவப்புப் பேனாவால் வட்டமிடும் சத்தியன்சேர், அப்படியொன்றும் அவனுடைய கொப்பியில் அடையாளமிடவில்லை. மாறாகப் பெரிய சரிகளும், நன்று என்ற வார்த்தைகளும் இடம் பெற்றிருந்தன.

ஈனா (இ) எழுதும்போது சுழிக்கு முன்னாகச் சென்று விசிறியிட்டு ஈனா (இ) எழுதினால் அந்த ஈனாவைச் (இ) சுற்றி சிவப்புப் பேனாவால் வட்டமிட்டுக் காட்டும் சத்தியன் ஆசிரியர், அவனது கொப்பியில் மாத்திரம் அப்படியொன்றும் வட்டமிடாமல் இருந்ததைப் பார்த்து ஆச்சரியமுற்றார். இதுபற்றி சத்தியன் ஆசிரியரிடம் எதுவும் சொல்லாமலே ஒரு புன்னகையுடன் ஆசிரிய ஆலோசகர் சென்றுவிட்டார்.

இளமை, இளைஞன், வளமை, இளம்புலி, இளநீர், மாதுளம்பழம் என வாசித்துப் பழக்கப்பட்ட மாணவர்கள் திரௌபதி, கௌரவர், கௌரி, கௌதினி, ஔவையார் போன்ற சொற்களை வாசிக்க இடர்பட்டனர். அவர்கள் எல்லோருக்கும் கீழ்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்.

ளானா (ள) என்பதும் 'ரௌ', 'கௌ', 'ஔ' என்பவற்றிலுள்ள 'ள' உம் ஒன்றுகிடையாது. ரௌ என்பதில் 'ரெ' வைவிட 'ள' இன் அளவு சின்னதாக இருக்க வேண்டும். இப்படி கௌ, ஔ என்பவற்றிலும் நோக்கலாம். ளானா (ள) என்பது ளகரம் எனவும், 'ரௌ', 'கௌ', 'ஔ' என்பதிலுள்ள 'ள' என்பது வெள்ளிக்கால் எனவும் அழைக்கப்படும் என்ற நீண்ட விளக்கம் ஒன்றைச் சொல்லி முடித்தார்.

இதற்குப் பிறகான நாட்களில்தான் மாணவர்கள் எவரும் இந்த எழுத்து விடயத்திலும் சரியான நடைமுறை ஒன்றினைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

அவற்றை எல்லாம் உற்று அவதானிக்கத் தொடங்கிய சீலனிலும் பல மாறுதல் ஏற்படத் தொடங்கின. எழுத்துகளை உறுப்பெழுத்துகளாக எழுத முயற்சித்தான். தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடப்புத்தகத்திலிருந்து பந்திகள் எழுதி வந்து, தன் கொப்பியினை சத்தியன் சேரிடம் காட்டுவதையும், வீட்டிலே தானொரு சத்தியன் ஆசிரியர் போலவும் பாவனைசெய்து தன் தங்கைக்குப் பாடம் கற்பிப்பதையும் சீலன் இடைநிறுத்தவே இல்லை.

3

இந்த ஆண்டும் இன்னொருமுறையாக வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் அந்தப் பாடசாலைக்குச் சென்றனர். தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் இப்ப சீலனுடைய வகுப்பிற்குப் போனார்.

எல்லோரும் எழுந்து நின்று 'வணக்கம் சேர்' என்று அழகிய தமிழ்மொழியிலே வணக்கம் சொல்லி வரவேற்றனர்.

'வணக்கம்.. வணக்கம். நல்லது பிள்ளைகள். எல்லோரும் அமருங்கள்' என்று அன்பு குழையக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்கள் தொடர்பாக கேள்விகள் கேட்கிறார். பிள்ளைகள் துருதுருவென பதிலிறுக்கின்றனர். ஆசிரிய ஆலோசகர் முகமலர்ககிறார். '

'சரி எல்லோரும் கொப்பிகளைக் கொண்டோடி வாங்க.'
எல்லோருடைய கொப்பிகளையும் பார்க்கிறார். இப்ப சீலனுடைய கொப்பியையும் நோக்குகிறார். கொப்பியின் முன்னட்டையில் சீலன் எனும் அழகான தன்பெயரை அவன் எழுதி இருந்தான். அந்த எழுத்துகள்கூட அழகாகத் தெரிந்தன. கொப்பியின் ஒவ்வொரு ஒற்றைத் தாளையும் தட்டி உள்ளே நுழைகிறார். அத்தனையும் உருண்டை வடிவ எழுத்துகள். இடைவெளிவிட்டு எழுதப்பட்டு எழுத்துப் பிழையில்லாமல் எழுதப்பட்ட சொற்கள், அவை. பந்திகள் எல்லாம் நேர்த்தியாக உள்ளன.

சீலனின் கொப்பிகளில் சரிகள் நீள்கின்றன. நன்று என எழுதிக் கையொப்பமிடுகிறார். சீலனின் சொக்கிலே அன்பாகக் கிள்ளிவிட்டு, சீலனைப் பாராட்டுகிறார்.

சீலன் மகிழ்விலே திளைக்கிறான். மற்றைய மாணவர்களைப் பார்த்துச் சிரிக்கிறான். அந்தச் சிரிப்பிலே வெற்றிக்களிப்பு குதூகலிக்கிறது. மாணவர்கள் எல்லோரும் எழுந்து நின்று கை தட்டு கிறார்கள்.

ஆசிரிய ஆலோசகர், சத்தியன் சேரின் தோளிலே மென்மையாகத் தட்டிவிட்டு வெளியேறுகிறார். ஆசிரிய ஆலோசகருக்குள், சத்தியசீலன் எனும் உருவம் மலையென உயர்ந்து பிரமிக்கச் செய்கின்றன. அவை அவரை மகிழ்வித்துப் போகின்றன. வெள்ளை மலர்கள் எழுந்து நின்று நன்றி சொல்லி மகிழ்கின்றன.

**திரு.சி.உதயகுமார்**
**ஆசிரியர்**
**கிளி / அக்கராயன் ம.வி**



**சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்குச் சின்னம் அணிவித்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலநிலை மாற்றம்

30 வருட காலம் நிலவும் வானிலை நிலைமைகளின் சராசரியே காலநிலை ஆகும். காலநிலையின் சராசரி நிலைமைகளில் ஏற்படும் கூடுதல் அல்லது குறைதல் போன்ற மாற்றம் காலநிலை மாற்றமாகும். காலநிலை மாற்றம் காரணமாக பூகோள வெப்பநிலை அதிகரித்து அதன் விளைவாக பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமாக வரட்சி, காற்றுப் பாங்குகளில் ஏற்படும் மாற்றம், சூறாவளி, மழைவீழ்ச்சி கிடைக்கும் காலப்பகுதிகள் மாற்றமடைதல், சூழல் வெப்பநிலை,



மழையின் தீவிரம், கடல் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள், பனிக்கட்டிகள் உருகுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மனிதனால் புவியின் பௌதிக அம்சங்கள் மாற்றப்படுவதால் காலநிலையும் மாற்றமடைகின்றது. 'காலநிலை மாற்றம் தொடர்பான நாடுகளுக்கிடையிலான சபையின் அறிக்கைப்படி வளிமண்டல வெப்பநிலை அதிகரித்து வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புவிமேற்பரப்பின் வெப்பநிலை அதிகரித்த காலப்பகுதியாக 1995-2006 வரையான காலப்பகுதி கண்டறியப்பட்டுள்ளது. 1906 தொடக்கம் 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையான 100 ஆண்டுகளுக்குள் வெப்பநிலையானது 0.74 பாகை செல்சியசினால் அதிகரித்துள்ளது.

காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் இயற்கைக்காரணிகளும் மானிடக்காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

i. பச்சைவீட்டு விளைவு
ii. எரிமலை வெடிப்பு
iii. சமுத்திர மேற்பரப்பில் ஏற்படும் வெப்பநிலை மாற்றம்
iv. சூரியக் கரும்புள்ளி
v. எல் - நினோ (EL - Nino)
vi. லா - நினோ (La - nino)
vii. காட்டுத் தீ
viii. இயற்கையின் சதுப்பு நிலங்கள்

காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகளாவன.

i. பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம்
ii. காடழிப்பு நடவடிக்கைகள்
iii. கைத்தொழிலாக்கம்
iv. உயிர்ச் சுவட்டு எரிபொருட்களைத் தகனமடையச் செய்தல்
v. விவசாய நடவடிக்கைகள்
vi. கால்நடை வளர்ப்பு (இரைமீட்கும் கால்நடை)
vii. திண்மக்கழிவு வெளியேற்றம்
viii. அணுகுண்டுப் பரிசோதனைகள்

இவ்வாறு பௌதிக மானிடக் காரணிகளின் செல்வாக்கினால் காலநிலையில் மாற்றம் ஏற்படுகின்றது. காலநிலை மாற்றத்தால் பூகோள வெப்பம் அதிகரிக்கின்றது. புவியின் சராசரி வெப்பநிலை 15 பாகை செல்சியஸ் ஆகும். இது தற்போது 100 ஆண்டுளுக்குள் 0.74 பாகை செல்சியசினால் அதிகரித்துள்ளது. பூகோள வெப்ப அதிகரிப்பினால் பல்வேறு பௌதிக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவையாவன.

i. முனைவுப் பனிக்கட்டிகள் உருகுதல்.
ii. கடல் நீர் மட்டம் உயருதல். (15 - 59உஅ வரை உயருதல்)
iii. சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை அதிகரித்தல்.
iv. சூறாவளி நிலமைகள் ஏற்படல்.
v. சமுத்திர நீரின் வெப்பநிலை அதிகரித்தலும் கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்படைதலும்.
vi. சில உயிரினங்கள் அருகிச் செல்லும் சில புதிய உயிரினங்கள் பெருகுதலும் விகாரமடைதலும்.
vii. உயிர்ப்பல்வகைமை பாதிப்படைதல்.

பூகோள வெப்ப அதிகரிப்பினால் மானிட நடவடிக்கைகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அவையாவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைவதால் உற்பத்திகள் குறைவடைகின்றமை.
ii. கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைதல்.
iii. வாழ்விடங்கள் அழிக்கப்படுதல்.
iv. நிலம் உவர்த்தன்மை அடைதல்.
v. மனிதனுக்கு நோய்களும் தொற்றுநோய்களும் அதிகரித்தல்.
vi. கடல்மட்ட வெப்ப அதிகரிப்பால் மீன்வளங்கள் பாதிப்படைவதுடன் மீன் அறுவடை குறைதல்.
vii. குடிநீர் மாசடைதல்.
viii. நிலம் உவர்த்தன்மையடைதல்.

இவ்வாறு ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் தீவிரத்தன்மையைக் குறைத்துக் கொள்வதற்கு மனிதன் முயற்சிக்க வேண்டும். மனிதனால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளாவன.

i. பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைத்தல்.
ii. புதுப்பிக்கக் கூடிய காற்றுசக்தி, சூரியசக்தி போன்ற புதிய வலுவளங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல்.
iii. மிதமிஞ்சிய பாவனையைக் குறைத்தல்.
iv. மீள் காடாக்கங்களை உருவாக்குதல்.
v. விவசாய நடவடிக்கைகளுக்கு சேதனங்களைப் பயன்படுத்துதல்.
vi. திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்.
vii. பொதுப் போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்தல்.
viii. தேசிய மற்றும் சர்வதேசக் கொள்கைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு இசைவாக்கம் பெறுதல்.

காலநிலை மாற்றங்களை இழிவளவாக்கிக் கொள்வதற்கான உலக நாடுகள் பல்வேறு செயற்றிட்டங்களையும் மகாநாடுகளையும் உருவாக்கியுள்ளன.

i. 1972ல் நடைபெற்ற ஸ்ரொக்ஹோம் மகாநாடு
ii. 1992ல் பிறேசிலில் றியோடி ஜெனிரோ புவி உச்சிமாநாடு
iii. 2015 காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் மகாநாடு

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு பௌதிக காரணிகளும் மானிடக் காரணிகளும் பங்களிக்கின்றன. அண்மைக்காலங்களில் மானிடக் காரணிகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய செயற்பாடுகளினால் மானிட நடவடிக்கைகளே அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. எனவே, காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் புவிக்கோளத்தையும் எம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**திருமதி. லதாரஞ்சினி ஜீவதாசன்**
**ஆசிரியர் – கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது அதிபரின் வகிபாகம்

'பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் கீழ் மிகப்பெரிய வகிபாக மாற்றம் அதிபரிடத்தில் ஏற்படுகின்றது. தாமே வழிகாட்டுபவர் அல்லது தலைமையாசிரியர் எனக் காட்டிக் கொள்ளும் பிரதான நிறைவேற்று அதிகாரியாகத் தமது வகிபாகத்தை அனேக அதிபர்கள் கருதுகின்றனர்' என 'கொட்டன்' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மட்ட முகாமைத்துவத்திலே அதிபரின் வகிபாகமானது, எப்போதும் கொள்கை நிறைவேற்றுதலும் நடைமுறைப்படுத்தலுமாக இருந்ததென ஆய்வுநூல் இனங்கண்டது. ஆனால், பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் கீழ் எமது அதிபரின் வகிபாகமானது தமது உத்தியோகத்தர் மீது அதிகாரத்தைப் பயன்படுத்தாது, அதனைப் பகிர்ந்து இடத்திற்கேற்றதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமைப்பதில் சமுதாயத்துடனும் உத்தியோகத்தர் குழுவுடனும் நல்லிணக்க முறையில் செயற்படுத்துபவராக இருந்துள்ளமையாகும். உயிரோட்டமான முறையில் மீள் வடிவமைக்கப்பட்டுள்ள பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் வினைத்திறனுள்ள எமது அதிபர் தமது உத்தியோகத்தர் குழுவுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து, பயிற்சி அளிப்பது, தகவல் பரிமாறுவது, வெகுமதியளிப்பது போன்றவற்றில் உதவுவதில் குறிப்பிடத்தக்களவு காலத்தைச் செலவிடுகின்றமையை நாம் அறிகின்றோம்.

பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் கீழ் எமது அதிபரின் புதிய வகிபாகமானது உத்தியோகத்தர் குழு, மாணவர், பெற்றோர் மற்றும் சமுதாயத்தினரிடம் பாடசாலையைச் சுற்றி இடம்பெறுகின்ற குறிப்பிட்ட விடயங்கள் குறித்து உரையாடுவதற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தவர்களாவர். உடன்பாட்டுடனான தீர்மானம் மேற்கொள்ளும் வடிவமைப்பை விருத்தி செய்து மற்றும் நியாயாதிக்கத்திற்கு ஒவ்வாதவற்றை அகற்றுவதன் மூலம் எமது பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர் எமது பாடசாலை குழுக்களுக்கு உண்மையான அதிகாரத்தைப் பாரப்படுத்துகின்ற ஒருவராக இன்றுவரை இருந்துள்ளார்.

எமது அதிபர் வகிபாகமானது ஊக்குவிப்பவராகவும், பயிற்றுவிப்பவராகவும், ஆதரவு உள்ள சூழலை உருவாக்குபவராகவும், நம்பிக்கையை வளர்ப்பவராகவும், துணிந்து முடிவெடுத்தலை ஊக்குவிப்பவராகவும், தகவலை சரியாக பரிமாற்றம் செய்பவராகவும் உயிரோட்டமுள்ள பங்குபற்றுதலுக்கு உறுதியளிப்பவராகவும், நேரமுகாமைத்துவத்தைப் பேணுபவராகவும் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், எமது அதிபர் புதிய கருத்துக்கள் மற்றும் ஆய்வுகளில் கற்றல்-கற்பித்தல் தொழில்சார் கலந்துரையாடல்களைத் தமது உத்தியோகத்தர் குழுவுக்கு பாடசாலையினுள் பெற்றுக் கொடுத்தல், நிதி, நன்கொடை அதிகரிப்புக்கு, உத்தியோகத்தர் குழுவினரிடையேயும் தமது நண்பர்களுக்கும் உற்சாகம் ஊட்டுவார்.

எமது அதிபர் தமது ஆசிரியர்களின் நம்பிக்கையீனங்களைத் துடைத்தெறிந்து அதிலிருந்து அவர்களை விடுவித்து கற்றல் கற்பித்தல் பிரதான செயற்பாடுகளில் முழுக்கவனத்தையும் அவர்கள் செலுத்தும் வகையில் வழிகளை மேற்கொண்டார். எமது அதிபரின் காலத்தில் போதியளவு பௌதிக வளம் கிடைக்கப்பெற்றதுடன் மாணவர்களின் க.பொ.த சாதாரண தர, உயர்தரப் பெறுபேறுகள் உச்ச நிலை அடைந்துள்ளமை, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கோட்டமட்ட, மாகாண நிலைகளில் பங்குபற்றி வெற்றியீட்டியமை என்பன குறிப்பிடத்தக்கதாக உள்ளது. எமது அதிபரின் வகிபாகம் அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு ஒரு 'பொற்காலம்' என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**திருமதி. சுதர்சினி நந்தகோபாலன்**
**ஆசிரியை**
**கிளி / அக்கராயன் ம.வி**



**திருவையாறு ம.வி யில்**



**முன்னாள் மாகாணசபை உறுப்பினர்**
**கௌரவ சு.பசுபதிப்பிள்ளை அவர்களால்**
**பாடசாலைக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ROLE OF ENGLISH LANGUAGE IN THE TERTIARY EDUCATION.

Language is our significant source of communication. It is the way through which we share our ideas,feelings,views,and thoughts with others.Language separates us from animals and makes us human.There are thousands of languages in the world .Each country has their peculiar nationwide language in addition to multiplicity of local languages spoken and understand by their people in different regions.In Sri Lanka Tamil & Sinhala languages are considered as official and national languages while English is the link language and it is taught as second language at the most educational levels particularlyfrom Primary level to University level.

Education inits general sense is ''a form of learning in which the knowledge, skills, values, beliefs and habits of a group of people are transferred from one generation to the next through discussion, teaching, training, and / or research." (Wikipedia). In other words, Education is a process of enlightenment and empowerment through which individuals can develop their skills and abilities to developing and secure a better quality of human life. It aims at the growth of body, mind, intellect and soul. It also brings change in behavior and nurtures good qualities of citizenship like morality, honesty and humanity. And no one can deny that without education one can't perform successfully in any aspect of life.

In the present time, English becomes the most important and vivid means of global communication which prevents our isolation from the world, and a window to the rapid progress and development in all spheres of life. It is the most spread and commonly used language among different nations and individuals worldwide for cultural and educational exchange. In addition, the use of English language becomes now a must not only at the level of local but global education as well. Many countries long ago have started making use



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of English and have even been promoting the benefit its use for education receivers as globally useful language for further studies in future.

In Sri Lanka, students can follow their Primary and Secondary level education in their mother tongue either in Tamil or Sinhala except the English Medium Schools where they can follow their studies in English medium. It depends on their choices. But the question is how many students acquired adequate English Knowledge from their school to use in day to day life and in their higher Studies. The answer is, one out of five people can speak or at least understand English. Majority of Sri Lanka students, particularly from rural area considers the word of English as a magical and a mystical word. It is because many students are unaware of the importance of English language. They just learn English as a subject to the final examination.

Some students are unable to achieve their ambition, because of their English result in Ordinary Level. If a student wants to get LLB degree from a university in Sri Lanka, he/she should have minimum credit pass in English. It is good to have an ambition but they should know about the qualifications needed to achieve the ambition.

Students who have entered into the university with lack of English Knowledge have to struggle with studies. As they followed their primary & secondary education in their mother tongue, it is difficult to follow their higher studies in English medium. Both unknown language and unfamiliar subjects make them feel that higher education is difficult. Advertisements like English group classes for university students and individual classes for University Students in the university surroundings reveal the English knowledge of Freshers. If you want to study your degree easily then should have a sound knowledge in English.

English is playing a major role in many fields like Education, Medicine, Engineering Business and etc. Students are unaware of it. Let's see why we have to learn English language. As mentioned earlier, to follow some courses at the university, we should have a credit pass in English Language in ordinary level examination. A good result in English is needed to select some courses at the Universities.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Not only in abroad but in Sri Lanka also higher studies are conducted in English. If you want to continue the higher studies then you have to study English. This will pave the way to pursue and obtain more career opportunities.In the contemporary period the job market with local or foreign companies need employees who can communicate with partners and clients all over the world. As a bilingual person you could become a Translator or a Language Teacher or an English Marketing Professional for a global company.

**Conclusion.**

No matter being in which country, what medium of instruction is, or what subjects are

Studied, English is truly there as an integral part of the studies or education.For internationalization of higher education, English is not only locally but globally required as source of accessing students' major knowledge in all fields, communicating with the most reputed universities worldwide, pursuing a variety of degree programs and finding high-quality jobs and positions in educational Institutions and foreign companies elsewhere.

**Miss. Keerthana Selvakumar**
**Teacher**
**KN/ Akkarayan M.V**



கிளி / அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்களுடன் மகிழ்வான தருணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரின் கண்ணன் பாடல்



'புரட்சிக்கவி, புதுமைக்கவி, பூமிக்கெல்லாம் உயர்ந்தகவி பாரதியார்' என்று சொல்வதில் மிகையில்லை. தமிழ் தந்த பெயராலே தமிழ்த்தாயின் சேயாகி கவிக்கொரு களம் அமைத்துக் கொடுத்தவர் பாரதியார். மரபுக்கவியுடன் நல்வரவுக் கவியாய் புதுக்கவிக்கும் புடம் போட்டவரே பாரதி. இவரின் முப்பெரும் பாடல்களிலே பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு, கண்ணன் பாட்டு என்பன உரம் ஊட்டுவனவாக உள்ளன. அன்று ஆழ்வார்கள் கிருஸ்ணரை தெய்வமாக்கி ஆன்மாக்களை அடியவர்களாக்கி பல்வேறு உறவுகளை அமைத்துப் பாடல்கள் பல பாடினர். ஆனால் பாரதியாரோ முற்றிலும் விதிவிலக்கானவர். கண்ணனைக் குழந்தையாகவும், தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், தெய்வமாகவும், காதலனாகவும், காதலியாகவும், சேவகனாகவும் கொண்டு இரசம் ததும்ப வசப்படுத்தும் கவிதைகளை கண்ணன் பாட்டிலே அமுதத் துளிகளாக்கினார். இடைக்குல சிறுவனின் ஆநிரையும், வேய்ங்குழலும், அவன் அன்பும் ஏனைய கவிஞர் வார்த்தைகளில் சொல்லோவியங்கள் ஆகின.

வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர், பாரதி பற்றிக் கூறுகையில் 'பாரத நாட்டின் குல தெய்வமாகிய கண்ணனுக்கு மாலை சூடாத கவிகள் அருமையானவை' என குறிப்பிட்டுள்ளார். கண்ணனை ஆயர்பாடியில் குழலூதும் கண்ணனாகவும் மகாபாரதத்திலே பகவத்கீதை உபதேசம் செய்த கண்ணன் ஆகவும் காண்கின்றோம். ஆனால், பாரதியார் மனதை முதலில் கவர்ந்தது குருசேஷ்திர கண்ணனே. இந்தியக் கவிதை உலகில் பாரதியார் பற்றிக் குறியீட்டுக்கவிதை எழுதியமை சிறப்பானது. கண்ணன்பாட்டை முதன் முதலில் பாரதியின் சீடர் பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் ஆயிரத்து தொளாயிரத்து பதினேழில் பதித்து பெருமை சேர்த்தவராவார். கண்ணன் பாட்டின் பெருமையினை பாரதி புகழ் பரப்பிய கவிஞர் திருலோகசீதாராம் அவர்கள் கூறிய கருத்து கண்ணன் பாட்டின் புகழைப் பறைசாற்றுகிறது. எல்லாவற்றிலும் சிகரமாக விளங்குவது கண்ணனின் காதற்காட்சிகள் தான். சாதாரண ஆண்-பெண் காதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெகிழ்ச்சியின் பல்வேறு கவசங்களையே கையாண்டு தெவிட்டாத தேவ சுகத்தைத் தந்தது என்றார். கண்ணன் என் சேவகன் என்ற பகுதியில் நகைச்சுவை மிதமிஞ்சி நிற்கின்றது. 'ஏனடா நீ நேற்றைக்கு இங்கு வரவில்லை என்றால் பாட்டியார் செத்து விட்ட பன்னிரெண்டாம் நாள் என்பான். பானையிலே தேள் இருந்து பல்லால் கடித்ததென்பான்.' என்ற பாடலை சான்றாகக் கூறலாம். தொல்காப்பியம் கூறும் அகத்துறை உள்ளத்துப் புணர்ச்சியையும் மெய்யுறு புணர்ச்சியையும் கண்ணன் பாட்டிலே பசுமரத்தாணியாய் படைத்துள்ளார்.



கண்ணனை தோழனாக கருதும் பாட்டிலே கண்ணனின் உபாயம், கேலி செய்தால் பொறுத்துக்கொள்ளும் தத்துவம், பிறர் நன்மைக்காய் நிறைந்த பொய் சொல்லும் தத்துவம், என்பவற்றை அழகாக கூறியுள்ளார். இவ்வுலகில் தாய்க்கு நிகராக யாரை கூற முடியும்? தன் பிள்ளையை அள்ளியெடுத்து பக்குவப்படுத்தி மனங்களிப்பு அடைவாள். எமக்காக அத் தாய் காட்டும் விளையாட்டு எத்தனை? இதனால்தான் போலும் பாரதியார் கண்ணனின் தாய் என்னும் தலைப்பில் தாயின் அன்பினை சுவைபட எடுத்துக் கூறியுள்ளார். இன்பம் பயக்கும் இனிய நூல்களின் தார்ப்பரியத்தை என்னவென்று சொல்ல முடியும். இவரின் கண்ணன் பாட்டின் கவியழகும் பண்ணழகும் தித்திக்கும் தேன் சுவையாக உள்ளது. பாரதி தேசம் அந்நியரின் ஆதிக்கத்திற்கும் அடி பணிந்த காலம் அது. அவருடைய கவிக்காலம், அதில் பாரத தேசத்தின் குலதெய்வமாம் பக்தி மிகுந்த கண்ணனின் செயலிலும் திருவிளையாட்டிலும் மனதை பறிகொடுத்தே கண்ணன் பாடலை எழுதியுள்ளார். பாரதி தந்த உலகில் காதல், பக்தி எனும் இரண்டும் நாணயமாக கண்ணன் பாட்டின் உணர்வுகள் கருத்தமைத்து செல்கின்றன.

இந்த மானிட உணர்வுகளிலுள்ள இன்பத்தை அள்ளித்தரும் பாடலாக கண்ணன் பாடல் விளங்குகின்றது. பண்டைய கால நாயன்மார்களும் ஆழ்வார்களும் உறவு நிலையில் வைத்து பாடல்கள் பாடினர். இந்த உன்னத நிலையை மாற்றாமல் கண்ணன் பாட்டிலே முகிழ்ந்த இனிமையும் சிறந்த தத்துவமும் செறிவாய் உள்ளன. இவ்வாறு பொருட்செறிவும் கவித்துவமும் மிக்க பாரதியாரின் கண்ணன் பாடலை நாமும் படித்து இன்புறுவோம்.

**அ.கோபிகா**
**தரம் 8D (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பின் மேன்மை

இவ்வுலகிலே யாசிக்கத் தெரிந்த மனிதன் வாசிக்க மறந்து விடுகின்றான். ஆனால் வாசிப்பை நேசிக்க வேண்டும் என்பதை உணர்ந்து விட்டால் வாழ்வே சொர்க்கமாகிவிடும். தாயின் கருவறையில் கருவுற்ற நாள் முதலே மனிதன் கற்கத் தொடங்குகின்றான். தன் சிசுவுக்கு தொப்புள் கொடி மூலம் உணவளிக்கும் தாய் கருவில் உருவாகிய குழந்தைக்கு சிந்தனையாற்றலைக் கூட்டி மூளை விருத்தியடையவும் உதவ வேண்டும்.

வாசிப்பு துன்பத்தைப் போக்கி இன்பத்தைக் கொடுக்க வல்லது. கற்பனைத் திறனும் கருத்துணர்வும் வாசிப்பின் இரு கண்களாகின்றன. "ஒரு சிறந்த வாசிப்பாளனால் தான் உயர்ந்த எழுத்தாளனாக திகழ முடியும். உடலின் அழகிற்கு போசாக்குணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவிற்கு உளரீதியான ஆரோக்கியத்திற்கு வாசிப்பு அவசியம் அன்றே! வாசிக்கும்போதுதான் நல்ல தொழில் வாய்ப்புக்கான ஆணிவேரை கண்டு பிடித்து விடுகின்றோம்.

வாசிப்பு மனிதனை பாதாளத்தில் தள்ளும் ஓர் விடயமல்ல. எதிர்கால வெற்றிக்கான திறவு கோல். குழந்தை முதல் முதியோர் வரை வாசித்து அறிவினை வளர்த்து பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றை அறிய முடியும்.

ஒரு மனிதனின் குழப்பமான மனநிலையை மாற்றி அதனை தன்னெறிப்படுத்துகின்ற பண்பையும் வாசிப்பு வழங்குகின்றது. "தேனிருக்கும் இடத்தினை தேடி மொய்க்கும் வண்டு போல் நூல் இருக்கும் இடத்தினை தேடி நாமும் செல்லுவோம்." என்பதற்கேற்ப நாம் திகழ வேண்டும்.

வாசிப்பு ஒரு மனிதனை மேன்மையடையச் செய்யும். ஆபிரகாம்லிங்கன், அப்துல்கலாம், மகாத்மகாந்தி ஆகியோர் வாசிப்பின் சிகரங்களாக இருந்துள்ளனர். இருபத்தொராம் நூற்றாண்டிலே காலடி வைத்த மனிதன் அனைத்து சவால்களுக்கும் ஈடுகொடுத்து வாழ வேண்டும். இதற்கு வாசிப்பு உந்து சக்தியாக விளங்கும்.

எவனொருவன் வாசிக்காமல் இருந்தானோ அவனது மூளையில் அறியாமை என்ற தூசி படிந்து கொள்கின்றது. அத்தூசியைத் தட்டி அறிவூட்டுவதும், சான்றோனாக்குவதும், பண்பாளனாக்குவதும், மனிதாபிமானம் ஊட்டுவதும் வாசிப்பே. வாசிப்பின் போதுதான் மனிதன் பூரணமடைகின்றான். "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி நிற்கின்றது." ஆழம் காண முடியாத அற்புதசாதனை தரும் வாசிப்பை நாமும் பின்பற்றுவோம்.

**ஜீ.பிரலவி**
**தரம் – 7A (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியமே சமூக மாற்றத்தின் திறவுகோல்



வரிவடிவ எழுத்துக்களில்
வகை வகையாய் சமூகமதை
பரிதியொளி போலேயிங்கு
படம் பிடித்துக் காட்டிவிடும்.

இதயம் திறந்து பேசுவதும்
இதழ் விரித்து வாசிப்பதும்
மாறுபாடு இல்லாத
மானசீக சேவையிது.

குட்டுப்படும் மானிடரை
குனிவின்றி நிமிர வைக்க
அன்னையாய் வழி நடத்தும்
அன்புப் பெண் இலக்கியமே.

காதல் தோல்வியினில்
கருத்துரைக்கும் கவிதைகளை
கச்சிதமாய் எழுதிக்காட்டும்
காகிதத்தாள் அரவணைக்கும்.

நூலெடுத்துப் பார்க்கையிலே
நல்ல பல கருத்துரைத்து
காலத்தின் மானிடத்தை
காத்திரமாய் தெளிய வைக்கும்.

சாதிக்கொடுமை தந்த
சமூகத்தை அறிய வைக்கும்
உரிமைக் குரல் கொடுக்க
உணர்வினை ஊட்டி வைக்கும்.

வசந்தத்தின் வருகையிலே
வாழ்க்கையே இனிமை தரும்
நிஜமான மனிதத்தோடு
நூலாகப் பரிணமிக்கும்

தொல்லை தரும் அனர்த்தமதில்
மானிடமே அழிகையிலும்
வாழ்ந்து விட்ட வாழ்க்கையினை
இலக்கியமே உணரவைக்கும்.

மரித்தவரின் வாழ்க்கையிலும்
இருப்பவரின் வாழ்க்கையிலும்
கவியிலும் கதையிலும் கானத்திலும்
காட்டிவிடும் கண்ணாடியாம்.

உண்மைகளை வெளிப்படுத்துவதும்
உரிமைகளை சுட்டிக் காட்டுவதும்
நன்மைகளை செய்வதும்
நளினமிகு இலக்கியம் தான்.

மனிதனின்றி நூலுமில்லை
நூலுமின்றி மனிதமில்லை
மதிப்பின்றேல் யாருமில்லை
நூறாண்டு கால வழமையிது.

**ஜீ.கீதன்**
**தரம் – 9^A (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எல்லாம் மனமே....

மருதூர் கிராமத்திலுள்ள கல்லூரி அன்றைய தினம் மிகவும் கோலாகலமாகக் காணப்பட்டது. வெண்ணிற சீருடையுடன் வெள்ளைப் பூக்களாய் முகமலர்ச்சி காட்டி சிட்டுக்குருவிகளாய் சிறகடிக்கும் மழலைகளின் மகிழ்ச்சியிலே தன்மனதை பறிகொடுத்தபடி கல்லூரி நுழைவாயிலிலே அப்படியே நின்று விட்டாள் பூரணா. குழந்தைகளின் கள்ளம் கபடமற்ற சந்தோச களிப்பு கண்டு அவள் மனதை ஏதோ ஒன்று நெருடியது.

'என்ன மேடம், அப்பிடியே நிக்கிறீங்க' என்று கல்லூரி அதிபர் பரமசிவம் அவளின் நினைவைத் தட்டி எழுப்பினார். ஓம்! ஓம் சேர். காலம் எப்படியோ மாறிற்று. நான் செய்த கடமை இப்ப போல கிடக்குது. அந்த கால நினைவிலே நிண்டிட்டான் என்று கூறி தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள் பூரணா.

பூரணா ரீச்சர் என்றால் இக் கல்லூரியில் கணித பாடத்தில் பிரபல்யமானவர். கற்பித்தல் அவருக்கென்று தனிக்கலை. கண்டிப்பானவர் என்று வெளிப்பார்வையில் கூறினாலும் உள்ளிருக்கும் அன்பினை யாராலும் அளந்து விட முடியாது. பத்து வருடங்களுக்கு முன் இப் பாடசாலையை விட்டு விலகிச் சென்றாலும் அவரின் நினைப்பு, தான் கடமை செய்த கல்லூரியிலே தான் நிலைத்திருந்தது. அறுபது வயதை கடந்து விட்ட போதிலும் இளமையின் துள்ளல், சுறுசுறுப்பான பண்பு என்பன அவளை விட்டு இன்னும் விலகவில்லை.

நீண்ட காலங்களின் பின் இப்பாடசாலையில் காலடி எடுத்து வைத்தமையால் பூரித்துப் போனாள் பூரணா. ஏழைப்பிள்ளைகளுக்கு நிதியுதவி, கற்றல் சாதனங்கள் என தன்னால் முடிந்த உதவிகளை வெளிநாட்டிலிருந்து கொண்டே அவ்வப்போது செய்து வந்தாள். இன்று அவளை சிறப்பிக்கும் விதமாக பரிசளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினராக அழைத்தார்கள். அங்கே பிரதம விருந்தினராக வந்து சிறப்பித்த வங்கி முகாமையாளர் சாதுரியனின் சிறப்புரை இடம் பெற்றது.

'தட்டிக் கொடுக்கும் ஒவ்வொரு தடவையும்
விழாமல் எழுந்து விடுகின்றோம் வெற்றிப்படியில்
அடி வைக்கின்றோம். விடாமுயற்சியும் ஊக்குவிப்புமே
வாழ்வில் சாதனை படைக்க உதவும். என்னுடைய
நிலையும் அப்படித்தான் இருந்தது. நான் இப்போது
இந்த நிலைக்கு வரக்காரணம் இங்கு வீற்றிருக்கும்
கணித பாடத்தின் மங்காத புகழரசியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணா ரீச்சர் தான்' எனக் கூறி தன்னுடைய சிறப்புரையை நிறைவு செய்தார். கண்பார்வை மங்கி விட்ட பூரணா ஆசிரியர் பிரதம விருந்தினராக தனக்கருகே இருந்த வங்கி முகாமையாளரை கூர்ந்து அவதானித்தார். கண்கள் பனிக்க தன் மென்மைக் கரங்களால் ஒரு முறை அவனை குறும்பனே நீ, எனக் கேட்டுக் கொண்டார். அவனும் கண்கள் கலங்கி நாவிலிருந்து வார்த்தைகள் வெளிவராது தலையை மட்டும் சம்மதத்திற்கு அறிகுறியாக அசைத்துக் கொண்டார். அப்போது கடந்தகால நினைவுகளில் பூரணா ஆசிரியர் மூழ்கினார். சாதுரியன் தரம் - 8 இல் இக் கல்லூரியிலே கற்கும் காலந் தொடக்கம் அவனுக்கு கணித பாட ஆசிரியராகவும் வகுப்பாசிரியராகவும் இருந்தார். படிப்பென்றால் வேப்பங்காயாக நினைப்பவன் தான் சாதுரியன். அவனின் சுட்டித்தனத்தினாலும் குறும்பினாலும் ஆசிரியர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவனாக இருந்தான். மாணவர்கள் இவனின் தொல்லை தாங்க முடியாது 'குறும்பன்' என்று அழைத்தனர். பூரணா ஆசிரியரும் 'குறும்பன்' என்ற பெயரை கைவிட மாட்டார். மாணவர்கள் மேசைகளில் ஏறிநின்று துள்ளுவதும் அமைதியாக இருக்கும் பிள்ளைகளை அடித்து அழப்பண்ணுவதும் அவனுக்கு நன்கு பிடித்திருந்தது. வெளிறிய காற்சட்டை, அழுக்கான மேற்சட்டை என்பவற்றுடனே பள்ளிக்கு வருவான். வறுமையின் பிடி வெளியிலே தெரிந்தாலும் அவனின் உள் வேதனையை யாரும் அறிந்ததே இல்லை. படிப்பிலே 'மக்கு' என சொல்லும் அளவிலே அவனது படிப்பிருந்தது.

வயதும் அனுபவமும் மிக்க பூரணா ஆசிரியரால் தான் அவனது மனப்புழுக்கத்தை அறிய முடிந்தது. பூரணா ஆசிரியர் என்றால் சாதுரியனுக்கு பிடிக்காது. 'குறும்பன் இஞ்சை வா' என்று பூரணா ஆசிரியர் அழைத்தபோது ஒரு வித இறுக்கமான முகத்துடன் கைகளை கட்டிக்கொண்டு நின்றான். ஆனால், அன்று மாறாக பூரணா ஆசிரியர் தன் அன்பை காட்ட தொடங்கினார். 'குறும்பன், ஏனப்பு இப்படி இருக்கிறாய்? எனக்கு உன்னில நல்ல விருப்பம். நான் சும்மாதான் வெருட்டிக் கதைக்கிறனான். என அவனுக்கேற்ற முறையில் கதையை தொடங்கினார்.

இந்த பாறைக்குள் இவ்வளவு இரக்கமா? என்று அவன் நினைத்தானோ தெரியாது. அன்பின் அடைக்கலம் கிடைத்தமையால் கண்கள் முட்டி நீர் அவனையும் அறியாமல் கண்களை உடைத்துப் பிரவாகித்துப் பாய்ந்தது. பூரணா ரீச்சர் பதறிப்போய் விட்டார். 'குறும்பா, அழாதை அப்பு' என்று அவனை தடவியபடி விசாரித்தார். 'ரீச்சர்'.ரீ'ச்'ச'ர்..' என்று விக்கி அழுதான். 'எனக்கு அப்பா அம்மா என்று பெயருக்கு தான் இருக்கின்றார்கள். நான் மாமாவோட தான் வாழ்கின்றேன். காலையிலே மாடுகளை மேய விட்ட பின் பசுப்பாலை வீடுகளுக்கு கொண்டுபோய் குடுத்துத்தான் பள்ளிக்கூடத்திற்கு வாறனான். பின்னேரத்தில மாடு மேய்க்கப் போவன். களைப்பில இரவில படிக்கிறதில்லை' என்று சோகம் ததும்பக் கூறினான். அப்போது பூரணா ஆசிரியருக்கு மேலும் அவனைப்பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ' சரி குறும்பா அப்ப உன்ர அம்மா, அப்பா எங்கே? என்று கேட்டார். 'நான் தரம் 1 படிக்கேக்க அம்மா வயலில் புல்புடுங்கி சம்பளம் பெறுவார். அப்பா கூலி வேலைக்குப் போவார். பள்ளிக்கூடம் விட்டவுடன் வீட்டுக்குப் போனதும் காலையில சமைச்ச சாப்பாட்டை சாப்பிட்டு பக்கத்து வீட்டில விளையாடுவேன் மாலை நேரம் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வந்ததும் என்னை அழைத்துச் செல்வார். ஒருநாள் பொழுதுபட்டும் அம்மா வீட்ட வரவே இல்லை. அப்பத்தான் அம்மா எங்கையோ என்ன விட்டிட்டு போட்டார் என்று மாமா சொன்னார். அதால அப்பாவும் என்னை மாமா வீட்ட போய் இரு என்று சொல்லிட்டு போயிட்டார்' என்று கண்ணீருடன் கூறினான்.

அதன் பின் இதுவரை காலமும் தன் தாய் தந்தையை காணாத ஆதங்கமும் மன உளைச்சலும் தான் அவனை குறும்பன் என சொல்ல வைக்கும் குழப்படிக்கு ஆளாக்கியது. அதன்பின் பூரணா ஆசிரியர் அவனுக்கு ஆறுதல் கூறினார். அன்புடன் அறிவுரை கூறினார். அவனை வகுப்புத் தலைவன் ஆக்கினார். அன்று தொடக்கம் பூரணா ஆசிரியரின் அன்பிலே திளைத்தான். தரம் 11 இல் சிறந்த மாணவனுக்குரிய பரிசிலை பெற்றதுடன் மாவட்டத்தில் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் பெறுபேற்றில் முதன்மை மாணவனாகவும் திகழ்ந்தான். அச் சந்தோசக் களிப்பை பூரணா ஆசிரியரின் அன்பு மழையிலும் ஏனைய ஆசிரியர்களின் பாராட்டுதலிலும் அனுபவித்தான். அவன் உயர் கற்றலுக்காக நகர்ப்புற பாடசாலை சென்று விட்டான். யுத்த சூழ்நிலையால் பூரணா ஆசிரியருக்கும் சாதுரியனுக்கும் இடையிலிருந்த தொடர்பு இல்லாது போனது. அன்று இருந்த சாதுரியனா என வியக்கும் அளவு பூரணா ஆசிரியரை, 'சாதுரியனின் வங்கி முகாமையாளர்' என்ற பதவி வியப்பில் ஆழ்த்தியது. 'நல்லா இரு ராசா' என்ற பூரணா ஆசிரியரின் வாழ்த்தில் மனம் பூரித்தான் சாதுரியன். ஆசிரியரும் அவனுக்காகத் தான் செய்த புண்ணியத்தை எண்ணி பெருமையடைந்தபடி நிகழ்விலே கலந்து ஆனந்த மழையிலே மூழ்கினார்.

**உ. சாம்பவி**
**தரம் – 10$^{C}$ (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



**கல்விச் சுற்றுலா– உயர்தர வகுப்பு மாணவர்களுடன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொரோனா எமக்கொரு இயமனா?

கண்ணுக்குத் தெரியாத உயிரி
கருவையே அழிக்கும் எதிரி
குழந்தையின் முகத்துக்கும் இரங்காய்
குமுறிடும் குரலிற்கும் கலங்காய்.



மூச்சு விடுவதை விரும்பாய்
பேச்சையே அடக்கியே வளர்வாய்
தொண்டையில் தங்கியே நிற்பாய்
தொல்லைகள் பலவும் செய்வாய்.

குடியினைக் கெடுத்துமே நின்று
கும்மாளம் போடுவாய் என்றும்
மதியினில் மாண்புறும் மாந்தரை
மிதித்துமே ஆதிக்கம் செய்வாய்.

கூடியே களித்திட்ட எம்மை
குழி தோண்டிப் புதைத்திட வந்தாய்
தனிமையை நாடிட வைத்து
தாண்டவம் ஆடுவாய் இங்கு.

உறவுகள் கதறிடச் செய்து
உடலங்கள் தகனத்தை எய்த
பூமித்தாய் சரீரமும் சாறாய்
பிழிவதைக் கண்டு நீ விலகு.

**ந.யுவதீசன்**
**தரம் – 9$^{C}$ (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமையே பலம்



**'ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடிவிளையாடு பாப்பா – ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா'**

என்றார், புதுக்கவி பாரதி. இவரது பாடல் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பழமொழி ஒற்றுமையின் பலத்தை எளிமையாக்கிக் குறிப்பிடுகின்றது. பூமித்தாய் பெற்றெடுத்த புதல்வர்களே நாம். 'தேசம்' என்னும் சோலையில் ஒற்றுமையாகப் பூத்துக் குலுங்குவோம். புதுயுகம் படைப்போம். எதிர்வரும் தடைகளை உடைத்து வெற்றிநடை பயில்வோம். சண்டையில்லாத வாழ்வுக்கு ஒற்றுமை ஆணிவேர் அன்றோ! ஒற்றுமை என்னும் ஆணிவேர் எமது பதவியை, புகழை, உயர்வை நிலைபெறச் செய்யும். இனிமை எனும் தேனைத் தரவல்லது ஒற்றுமை. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதை திரைப்படப் பாடலில் கவிவரியாக்கிய கவிஞனின் பாடலும் மனங்கொள்ளத்தக்கது.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது பழமொழி. தனிமனிதனால் சாதிக்க முடியாத விடயங்கள் எத்தனையோ உள்ளன. தனிமனிதனால் செய்ய முடியாத காரியங்கள் பலர் கூடிச் செய்யும் போது சாதிக்க முடிகின்றது. ஒற்றுமையுடன் செயற்படும் போது நன்மை, தீமைகள் ஆராயப்பட்டுச் செய்யும் செயல்கள் செம்மையுறும். பண்டைக்காலச் சமூகத்தினர், குளம் அமைத்தல், விவசாயம் செய்தல், கிணறு தோண்டுதல் என எத்தனையோ வேலைகளை பலர்கூடியே மேற்கொண்டனர். ஒருகை தட்டி ஓசை பிறப்பதிலும் பார்க்க. பல கைகள் தட்டும் ஓசையே மேலானது.

விண் செல்லும் விந்தைமிகு செயற்பாடுகள் முன்னேற்றமடைந்த காலம் இந் நவீன காலம். தேனீக்கள் பல சேர்ந்து மலர்களிலே தேன் எடுத்து தேன் கூடு கட்டுகின்றன. பல தேனீக்களின் செயற்பாடுகளே தேன் கூட்டை அமைக்கக் காரணமாயின. இது ஒற்றுமையின் பலத்தை உள்ளங்கை நெல்லிக்காயாய் எடுத்துக் காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டையில்லாத வாழ்வு சமாதானத்தை உண்டுபண்ணும். சமாதானம் மிக்க வாழ்வு நிம்மதி, மகிழ்வு, சுபீட்சத்தைக் கொடுத்து விடும். இவ்வாறிருக்க ஒற்றுமையே அடிநாதமாகிவிடுகின்றது. சண்டையின் பின் ஏற்படும் ஒற்றுமையை விட சமாதானத்தின் மூலம் ஏற்படும் ஒற்றுமையே மேலானது. புவியியற்துறை, கல்வித்துறை, அரசியற்துறை என எத்தனை எத்தனை துறைகள் உள்ளன. அத்தனை துறைகளின் வளர்ச்சியும் ஒற்றுமையின் பலத்தால் தான் இயங்குகின்றன.

உயர்வு பெறுகின்றன. ஜனாதிபதி இல்லாத நாடு இருக்க முடியாது அன்றி தலைவர் இல்லாத நாடும் இருக்கமுடியாது. நாட்டின் தலைமை மக்களின் ஒற்றுமையால் உருவான பதவி. இதனால் நாட்டின் தலைவன் மக்களின் நலனில் அக்கறை கொள்வான். இவ்வாறான சமூகத்தை உடைய நாடே முன்னேற்றமடையும் ஒற்றுமை இல்லாவிட்டில் கொலை, கொள்ளை, பொறாமை, களவு என்னும் துர்நடத்தைகள் மேலோங்கும் நாடு முன்னேற மக்களின் கூட்டான ஒத்துழைப்பு அவசியம். இல்லாவிட்டால் அழிவே ஏற்படும். ஒற்றுமை இல்லாத மக்களும், ஒன்றுபடாத வார்த்தையும், சமூகத்தைச் சீரழிக்கும் நாடும், நாமும், பிறரும் முன்னேற நம்பிக்கை, வெற்றி, மகிழ்வு பெற்று ஒன்றுபட்டு உழைப்போம்.

**த. அபிநயன்**
**தரம் – 9ஊ (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



**ஆசிரியர் தின வரவேற்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஊடகங்களின் செல்வாக்கு

சமூகத்தைத் தாங்கிடும் தூணாக விளங்குவது ஊடகம் . ஊடகமானது மக்களுடைய வாழ்வியலை எடுத்துரைக்கும் சக்தி வாய்ந்தது. மானிடராக அவதரித்த ஒவ்வொருவரும் தலை நிமிர்ந்து வலுப்பெற சமூக ஊடகங்களை வலுப்படுத்த வேண்டும். சமூக ஊடகங்களை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். வலைத்தளங்களின் மூலமாகத் தகவல்கள் பெறவும், தொழில்சார் நன்மைகளைப் பெறவும் உந்து சக்தியாக விளங்குவது ஊடகம், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் எனப் பல சமூக ஊடகங்கள் நம்மோடு பின்னிப் பிணைந்துள்ளன. அல்லாடும் மன சஞ்சலத்தால் தடுமாறுவோர்க்கு பொழுது போக்குச் சாதனமாகவும் விளங்குகின்றன. தேனில் மூழ்கிக் கிடக்கும் வண்டுகள் போல் சமூக வலைத்தளங்களில் இளைஞர், யுவதிகள் மூழ்கிக் கிடப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மாணவ சமுதாயத்தின் துரிதமான வளர்ச்சிக்கும் ஊடகங்கள் பங்களிக்கின்றன என்றால் மிகையில்லை. தகவலைக் கடத்தும் உன்னத கருவி ஊடகம் ஆகும்.

பால் குடிக்கும் குழந்தை முதல் பல் விழுந்த கிழவர் வரை ஊடகத்தில் ஈடுபாடு கொண்டுள்ளனர். அச்சு வழி ஊடகங்களாக கணினி, வலைப்பின்னல், சஞ்சிகை என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். தேடிக்கற்றல் எனும் விடயத்தில் கல்விக்குரிய அனைத்து விடயங்களையும் அள்ளி வழங்குகின்றன. மாணவனின் பேச்சுத்திறனையும், அறிவுத்திறனையும் மேம்படுத்துகின்றது ஊடகம். சமூக ஊடகங்களை இளைஞர், யுவதிகள் அதிகம் பயன்படுத்துகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும். தொடர்ச்சியான சமூக ஊடகப் பாவனையால் மன அழுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் 47% ற்கு மேலானோர் மன அழுத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என ஆய்வுகள் கூறுகின்றன. பேதையர் போதைக்கு எவ்வாறு அடிமை ஆகிறார்களோ அதே போல் சிலர் சமூக ஊடகங்களுக்கு அடிபணிகின்றனர். இதனால் துரிதமாக முடிவெடுக்கும் திறன் முடக்கப்படுகிறது. நேரத்தை முறையற்றவாறு பயன்படுத்தும் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வேலையில் முன்னேற்றமின்றி தோல்வியைச் சந்திக்க வேண்டி உள்ளது. சிலரின் நிஜ வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் சமூக ஊடகங்கள் உலகிற்கு ஒளி கொடுக்கும் உன்னத செயலையும் செய்து வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் நடக்கும் கொள்ளை நோய் மற்றும் போராட்டம் இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தம் என்பவற்றை உடனுக்குடன் பெற்றுத்தருகின்றன. சமூக உறவுகளையும், இன ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஒன்றுபடுத்தும் சக்தி ஊடகமே இது. அது போல் சமூக விடயங்களைக் கூற உதவுவதும் ஊடகங்களே.

ஊடகவியாலாளர்கள் பொறுப்புடையவர்களாகவும், அர்ப்பணிப்புள்ளவர்களாகவும் திகழும் போது ஊடகம் உண்மைத்தன்மையுடையதாக விளங்கும். பொறுப்புணர்வுள்ள ஊடக சமுதாயம் உருவாகும். பொறுப்பற்ற ஊடக சமூகத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது நம் எல்லோரினதும் கடமை ஆகும். ஊடகங்கள் சுடச்சுட ஒளிரும் பொன்னாக முலாம் பூசப்பட வேண்டியவை. சமய, சமூக, நல்லிணக்கங்களை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட வேண்டும். உண்மையான ஊடகவியலாளர்களை சமூகத்திலிருந்து நசுக்கி விட சிலர் நினைக்கின்றனர். அவர்களை பணயக் கைதிகளாக்கி இலை மறை காயாக உள்ள விடயங்களை மற்றும் அச்சுறுத்தலாக உள்ள விடயங்களைக் கூற தடைவிதித்துள்ளனர். சமூகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊடகங்கள் பங்களிக்கின்றன. தகவல் தொழிநுட்ப முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைந்து கைக்குள் வசப்படுத்தும் உத்வேகத்தை ஊடகங்கள் வழங்குகின்றன. ஊடகமானது மனித அபிவிருத்தியை அழிக்கும் சக்தியாக மாறிவிடக் கூடாது.

கலைஞர்கள் தங்களுடைய ஆற்றல்களை வெளிக் காட்ட ஊடகங்கள் களமமைக்கின்றன. மாணவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்த ஊடகத்துறையினர் போட்டிகளை நடத்தி பரிசில், விருது முதலியன வழங்கப்படுவது சிறப்பானது. மொழி அபிவிருத்திகளுக்கும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கும் திலகமாய் விளங்குவதும் ஊடகமே. சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்திய நிகழ்ச்சிகள் பெரெழுச்சியாக ஊடகங்களில் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. தரம் குறைந்த அவசர செய்திகளால் உயிர்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. வரம்பு மீறிய விமர்சனங்களே வாழ்வைச் சீர் குலைக்கும். எது எப்படி இருந்த போதிலும் நியதிகளை மாற்றமுடியாது. இரவிருந்தால் பகலிருக்கும் என்பதற்கேற்ப ஊடகமானது அதீத நன்மைகளைச் செய்கின்ற போதிலும் தீமைகளும் இருக்கவே செய்யும். தீமைகளை அகற்றி நன்மைகளைப் பெற்று உலகை வெல்வோம்.

**பா.பருநிலா**
தரம் – 8A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் வேண்டாம் ஈனச் செயல்கள்



ஞாலம் மீதினால் நற்புகழ் ஓங்கிட
ஞானத்தமிழ் எங்கள் நற்றமிழ்
பண்டைய பழந்தமிழர் வரலாற்றை
பண்போடு காத்திட்ட பண்டைத் தமிழ்
இயல் இசை நாடகத்தால்
இன்பங்கள் தந்திடும் இன்பத்தமிழ்
வீரச்சமர் வெற்றிகள் கண்ட
வீரத்தமிழ் இன்று???........

பள்ளிப் பருவத்திலே
பாலியற் பலாத்காரங்கள்
வேலியே பயிரை மேய்ந்திடும்
விபரீதம் தொடர்கிறது.
நாமே நம்மை அழித்தால்
அழிந்திடும் எம் சமூக வாழ்வு.
இனியும் வேண்டாம்
ஈனச் செயல்கள் எம்மிடம்.

மூலை முடுக்கெங்கும்
முகப்புத்தக முனைப்புக் கொண்டு
பாடநூல்களின் பயன்பாடு மறந்து
காணொளி சினிமாக்கள்
எங்கும் கலந்து கொண்டதால்
கல்விப் புலமும்
கரையொதுங்கிக் கொண்டது.
சங்கே முழங்கு என
சரித்திர வெற்றி கண்ட நாம்
எதுவுமற்ற ஏதிலிகளாய்
தினம் தினம் ஏமாற்றுகின்றோம்
எம்மவரை.

காத்திட வேண்டிய பழக்கங்களை - நாளும்
கை கழுவி விடுகின்றோம்
சாத்திர விதிமுறை இன்றியே
சடங்குகள்
சம்பிரதாயங்கள் தொடர்கிறது.
இலக்கணம் வகுத்து வாழ்ந்திட்ட
தமிழ் இனம் காண இயலாத
இனங்களாய் மறைகிறது.
களியாட்ட கலாசாரத்தில் உட் புகுந்தே
மேன்மையுறு பண்பாடு அழிகிறது.

அன்பும், கருணையும்
அடிவற்றிப் போயிட
நீதியும், நேர்மையும்
நிலையற்றுப் போயின.
நிலையற்ற மாந்தராய்
நித்தமும் வாழ்கின்றோம்.
போதையின் பாதையில்
போன தடுமாற்றத்தால்
பொய்யும் புரட்டுக்களும்
சொல்லியே மாள்கின்றோம்.

வீதி விதிகள் மீறியே - எம்
விதிகள் நாளும் அழிகிறது - மீதி
போதையின் பாதையில் நாளும்
புதையுண்டு போகிறது.
நெஞ்சம் அழுகிறது,
நினைவு நிலை தடுமாறுகின்றது.
வஞ்சனையோடு வலி கண்டு
வாழ்வு சுமக்கிறது நெஞ்சம்.

த. தனுசியா
க.பொ.த. சா.த -2020
கிளி / அக்கராயன் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய நோக்கு

இலக்கியம் என்பதற்கு இதுவரை எத்தனையோ விளக்கங்கள் காலந்தோறும் தரப்பட்டு வந்துள்ளன. நம் யாவர்க்குமே இலக்கியம் என்றால் என்ன? அது எது? என்று தெரியும். ஆனால் யாவரையும் திருப்திப்படுத்தக் கூடிய அளவில் இதுவரை எந்த விளக்கமும் அமையவில்லை என்றே கூறலாம். இதுவரை கூறப்பட்டு வந்த விளக்கங்களை நோக்கும் போது இலக்கியம் என்பது ஒருவகைப் புனைந்துரைத்தல் என்றும், அழகியல் இன்பம் தரும் வகையில் அமைக்கப் படும் மொழியமைப்பு முறை என்றும் கூறலாம். இவ் வகையில் இலக்கியம் என்பது சமுதாயத்தின் பிரதிபலிப்பு என்றும் கூறிக் கொள்ளலாம். இது ஒரு கணப்பொழுது வாழ்க்கையைக் காட்டி நல்வழிகாட்டலைச் சொல்வது எனலாம்.

மேலும் இலக்கை இயம்புவதாகவும் இலக்கியம் இருக்கும். ஒரு இலக்கியத்தினூடாக ஒரு மணித்துளி நேர வாழ்க்கையைப் பார்க்க முடியுமென்றால் அதுவே சிறந்த இலக்கியமாகக் கருதப்படும். இந்த இலக்கியங்கள் மொழியைக் கொண்டு கற்பனை செய்வதற்கான திறனாக அமைகின்றன. அன்றாடக் கருத்துக்களை அல்லது சிந்தனை நுட்பங்களைச் சொல்வதற்கான முயற்சி அல்ல அது மொழி மூலம் மொழிக்கு அடியில் உள்ள படிமத் தொகையைப் பயன்படுத்தி ஆழ்ந்து செல்லும் ஒரு தேடல் என இயம்பலாம்.

இலக்கியம் மனிதர்கள் தங்களுக்கு நிகழும் வாழ்க்கைக்கு மேலதிகமாக விரிந்த வாழ்க்கையை மேலதிகமாக மொழியினூடாகக் கற்பனை செய்து அறிவது. ஒருவரின் வாழ்க்கை அளிக்கும் அனுபவங்கள் எல்லைக் குட்பட்டவை. ஆனால் இலக்கியம் பல்லாயிரம் பேரின் அனுபவங்களை ஒருவர் அடைய வழிவகுக்கிறது. காலத்தால் கடந்து போன வாழ்க்கையை நாம் வாழவும், நாளை நிகழ விருக்கும் வாழ்க்கையைச் சென்றடைந்து விடவும் உதவுகின்றது.

இலக்கியமானது எல்லாப் பால் நிலைகளிலும், எல்லா நிலங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லாவகை இக் கட்டுக்களிலும், எல்லாவகைப் பரவசங்களிலும் நாம் சென்று வாழ்வதற்கான வழியைக் காட்டுவதாகும்.

வாழ்க்கை அளிக்கும் அனைத்தையும் இலக்கியமும் அளிக்கும். இலக்கியம் ஒரு மெய்யறிதல் வழி ஆகும். மெய்யைச் சென்றடைய மூன்று வழிகள் உள்ளன. தர்க்கம், கற்பனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுணர்வு. இலக்கியம் கற்பனையை முதன்மையாகக் கொண்ட அறிவுப் பாதை. உள்ளுணர்வும் தர்க்கமும் அதற்கு உடன்வருபவை. இவ்வாறாக இலக்கியங்கள் பற்றிப் பலரும் பலவாறு கூறினாலும் இவ் ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் ஒவ்வொரு சிறப்புக்க ளுடன் புதிதாக எழுதப்பட்டன.

இலக்கியங்கள் ஆரம்ப காலத்திலே ஏட்டு வடிவிலே எழுதப்பட்டன. சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர்காலம், 19ஆம் நூற்றாண்டு, போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் என எல்லாக் காலப்பகுதிகளிலும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஆரம்ப காலத்தில் இலக்கியங்கள் செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டன. சங்க காலத்தில் அகத்திணை புறத்திணை பற்றிக் கூறும் இலக்கியங்களும், சங்க மருவிய காலத்திலே அற நூல்களும், பல்லவர் காலத்திலே பக்தி இலக்கியங் களும், சோழர் காலத்தில் பெரும்பாலா னவை உலகியலைச்சிறப்பித்துக் கூறும் இலக்கியங்களும், காவியங்களும் தோற்றம் பெற்றன. சோழப் பெருமன்னர் காலத்திலே தமிழிலக் கியம் ஒரு புதுவழியியற் சென்றது எனலாம்.

இதனை விட பரணிகள், தூது இலக்கியங்கள், இலக்கண நூல்கள், உலா என்பவையும் நாயக்கர் காலத்திலே தோற்றம் பெற்றன. இவ்வாறாகத் தோற்றம் பெற்று வந்த இலக்கியங்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் மக்களின் வாழ்க்கை முறையும் கலாச்சாரங்களும் மாற்றமுற இலக்கிய வளர்ச்சிப் போக்கிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியது. சாதாரண கல்வியறி வுடைய மக்களும் கற்று அறியக்கூடிய வகையிலே இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அச்சியந்திர வருகையின் மூலம் ஏட்டு வடிவிலே இருந்த இலக்கியங்கள் அச்சுக் கூடமேறி நூல்களாக அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டன.

19ஆம் நூற்றாண்டிலே இவ்வா றாக இருந்த இலக்கியப் போக்கு 20ஆம் நூற்றாண்டிலே முற்றிலும் மாற்ற மடைந்து புதிய பரிமாணத்திலே எழுச்சி பெறலாயிற்று. 20ஆம் நூற்றாண்டிலே மக்களது செல்வாக்கு அதிகம் இருந்தால் அவர்களோடு தொடர்புடைய நவீன இலக்கியங்கள் தோற்றம் பெறலாயிற்று. கவிதைகள், உரைநடை இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள், நாடக இலக்கியங்கள், இலக்கிய விமர்சன நூல்கள் என இலக்கியங்கள் தோற்றம் பெற்றன இக் காலப்பகுதியிலே நவீன இலக்கியப் போக்கிற்கு அடித்தளமாக இருந்தவர் சுப்பிரமணிய பாரதியாரே. பண்டைய இலக்கியத்தில் இருந்து நவீன இலக்கியம் நோக்கிய அழகிய குறியீடாக பாரதியாரே விளங்கு கின்றார்.

இவ்வாறாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்த இலக்கியங்கள் ஆரம்ப காலத்தில் இருந்து தற்காலம் வரை மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த ஒன்றாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் தான் தோன்றுகின்ற காலத்து அதிகார வர்க்கத்தின் கருத்து நிலையில் பிரதிபலிப்பதாக இருந்தாலும் பிற்காலத்து மக்களோடு ஒன்றி சமூகத்திலுள்ள எல்லா விடயங்களை யும் அலசி ஆராய்ந்தது என்றால் மிகையாகாது. இலக்கியத்திலே கருத்தாழமே முக்கியமான அம்சமாகக் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் மரபு வழியாக ஒரே முறையைப் பின்பற்றியும், உண்மை, பொய்களை அறிய முடியாமலும் இலக்கியங்கள் தோன்றினாலும், நவீன இலக்கியங்கள் பிற்காலத்தில் அக் கருத்தைத் தகர்த்தெறிந்து எழுச்சி பெற்றன.

இவ்வாறு இலக்கியங்கள் மொழி யைத் துணையாகக் கொண்டு மனித உணர்ச்சிகளுக்கு உருக் கொடுக்கின்ற சிருஷ்டித் தொகையாக இற்றை வரை காணப்படுவதோடு ஒவ்வொரு காலப் பகுதியிலும் தனது வளர்ச்சியை அதிகரித்து இற்றை வரை நிலைத் துள்ளமையும், இனி மேலும் இலக்கியங்கள் பாரிய வளர்ச்சியைக் காணும் என்பதிலும் சிறிதும் ஐயம் இல்லை.

**பு.வினுஜா**
**2014 கலைப்பிரிவு**
**(யாழ் பல்கலைக்கழக மாணவி)**




**பிறந்தநாள் நிகழ்வு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனும் கலைகளும்

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்" என்ற பக்திப் பாடல் கலைகளின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகிறது. கலை என்பது தனித்துவமானது. அழகுணர்வு மிக்கது. இரசனையை உண்டு பண்ணுவது. கலைகள் வேத காலத்தில் துளிர்த்தன. பின்னைய காலங்களில் விருட்சங்களாகின. செழிப்புடன் தழைத்தன. அறுபத்து நான்கு கலைகளுக்கும் அதிபதி சரஸ்வதி ஆவார். இத்தனை கலைகளும் மனிதனின் உறைவிடங்கள் ஆகின. இவற்றை இயல், இசை, நடகம், நடனம், சிற்பம், கட்டடம், ஓவியம் என சொல்லில் அடுக்கிக்கொண்டே செல்லலாம். இன்பம் பயப்பனவும் கலைகளே. கிராம மக்கள் வேலையை இலகுபடுத்த இன்பத்துடன் ஆடினார், பாடினார். மனிதன் துன்பத்தை மறக்க இசையை இரசிக்கிறான். பணம் சம்பாதிக்கும் வழியையும் கலைகளூடாக நிகழ்த்துகிறான். மனிதன் தனது வாழ்வை பொருளாதார வளமாக்க இசைக்கச்சேரி நிகழ்த்துகின்றான். வானொலி நாடகங்களை வானலையில் தவழவிட்டு புகழைப் பெறுகின்றான். தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பொழுது போக்காக மட்டுமின்றி மூலதனத்தின் முன்னணியாகவும் விளங்குகின்றன.

கலைகள் மனிதனைப் பண்படுத்துகின்றன. புண்பட்ட மனங்களை இசையின் மென்மையூடாகப் பண்படுத்துகின்றன. இசையாலே வசமாகா இதயம் ஏது? என்பர். இசை ஒருவனை மயக்கவைக்கும் சக்தி வாய்ந்தது. அதே போன்று அபிநயம் ஒருவனை வசப்படுத்தும் ஆற்றல் மிக்கது. கலைகள் மகிழ்வை உண்டு பண்ணுகின்றன. மிக மகத்துவம் வாய்ந்த மனிதனுக்குள் புதைந்து கிடக்கும் உணர்வுகள் பல்வேறு வடிவங்களில் முகிழ்ந்தெழுகின்றன. கவிதை, கட்டுரை,சிறுகதை, நாவல் என அவற்றின் வடிவஙகள் பரிணமிக்கின்றன. மொழி சார் கலை , நுண்கலை, பயன்கலை, பருண்மை கலை, கவின் கலை, நிகழ்த்து கலை, என பல்வேறு வடிவில் துளிர்விடுகின்றன. மனிதனது இயங்கியலை, அவனது நடத்தைக் கோலங்களை, அழகியலோடு கூடிய வாழ்வியலைத் தீர்மானிக்கும் திறனாக உருவெடுக்கின்றன. ஆரம்ப காலங்களிலே தொடர்பாடல் மொழியாகவே கலைகள் அமைந்தன. மொழியின் தோற்றத்தின் முன்னர் கலைகளின் தோற்றம் வரிகளாகின. பின்னர் கலைகளும் இலக்கியங்களும் மன்னரின் வாழ்வோடு ஒன்றிப் போயின. அதிகாரமொன்றைக் கட்டியமைக்கக் கூடிய காலப் பெருவழியில் ஊற்றெடுக்கும் வழியாகக் கலைகள் விளங்கின. மனித வாழ்விலே முடங்கிக் கிடக்கும் இனத்திற்கு விடுதலையளிக்கும் செயற்பாட்டைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வல்லது கலை. எமது தமிழ்ப் பாரம்பரியத்தில் அன்று இசை மூலம் இறைவனை அடைந்தனர். அப்போது திருவிழாக்களில் கரகம், தப்பாட்டம், நிகழ்த்தினர் பரதமும், சங்கீதமும் பம்பரமாய்ச் சுழன்றன. மயிலாட்டம், ஒயிலாட்டம்,பொம்மலாட்டம், சிலம்பம் ஆகிய கலைகள் அழிந்து செல்வது கவலைக்குரியது. இவற்றை அரங்கேற்றும் கலைஞர்களுக்கும் இன்றைய நாகரீக மோகத்தில் மதிப்பற்றுப் போயின. இவற்றைக் காக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

மனதிற்கு அமைதியையும், உத்வேகத்தையும், சாந்தத்தையும் உண்டு பண்ணுவது கலைகளே. மனதிற்குள் ஆழங்காண முடியாத பொறுமையையும், நிம்மதியையும், சிந்தனைத் தூண்டல்களையும், செயல் வடிவங்களையையும் கொடுப்பது கலைகளன்றோ! கலைகள்

மனிதனின் ஆற்றல்களோடு பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல ஒன்று பட்டு இருக்கிறது. அவன் உண்ணும் போதும், உறங்கும் போதும், உடுக்கும் போதும் கூட உடலின்அங்க அசைவுகள், பேச்சுக்கள் அனைத்தும் கலைகளையே புலப்படுத்துகின்றன. நாடகக் கலையின் தோற்றுவாய் குறும்படங்களிலும், திரைப்படங்களிலும் விசாலமாகி உள்ளது. கோடிக்கணக்காகப் பணம் சம்பாதிக்க நொடிப்பொழுதிலான கலை உணர்வுகள் வேர் ஊன்றின. ஆனால் நம் மூதாதையர் பேணி வந்த நாட்டுப் புற கலைகள், நாட்டார் பாடல்கள் வழக்கொழிந்து போவதும், கூத்துக்கலை குறைந்து போவதும் சங்கடமான விடயங்கள். ஆனாலும் எமது பாரம்பரிய கலைகளை நவீன உலகிற்கேற்ப பயன்படுத்தி வருகின்ற போதிலும் அவற்றைப் பேணிக் கொள்ள வேண்டும்.

மனிதனின்றி கலைகளில்லை. கலைகளின்றி மனிதனில்லை. காலமெல்லாம் கலைகள் பேணி காவியம் படைப்போம்.

**கெ. கவிதரன்**
**தரம்:–** *08*B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேடில் விழுச் செல்வம் கல்வி

கல்வி என்னும் கண்ணுக்கு அறிவெனும் எண்ணம் அழகுபடுத்துகின்றது. கலைகளின் நாயகி, கல்வியின் அதிபதி கண்கண்ட தெய்வம் சரஸ்வதி. கல்வி கலைகளை வளர்த்து, கவினை ஊட்டி அறிவுக்கு விருந்தளித்து அகிலத்தில் உயர்ந்து நிற்கின்றது. கல்வி ஒருவனை வாழவைக்கும். நிம்மதியாய் உறங்கவைக்கும், நிசத்தினைத் தெளிவிக்கும், விவேகத்தை உண்டு பண்ணும் என்று சொல்வது மிகையல்ல.

கல்வியின் பெருமையையும், கல்வி கற்றோரின் சிறப்பையும் கனியும் பாடல்களால் கவிஞர்கள் தெளிவுறுத்தியுள்ளனர்

“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் - மன்னனுக்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோனுக்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு”

என்னும் பாடலின் மூலம் கல்வியின் சிறப்பை அறிய முடியும் அன்றோ.

“வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது,
கொள்ளத்தான் முடியாது......”

என கல்வியின் நிலைபேற்றை பாடலினுள் கூறியுள்ளனர்.

கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றுப்பிற

என வள்ளுவர் பகர்ந்துள்ளார். கொடுக்கக் கொடுக்கக் குறைபடாது, எடுக்க எடுக்க ஊற்றெடுப்பது, பழகப் பழகப் பண்பைக் கொடுப்பதும் கல்வியே.

எத்தனை அழகு நிறைந்திருந்தாலும் கல்வி அறிவு இல்லா விட்டால் அத்தனை அழகும் வீணாகிப் போய் விடுமல்லவா? வாழ்வை மேம்படுத்துவதும் கல்வியே, வழிப்படுத்துவதும் கல்வியே.

“கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்”

என் கல்வி கற்றோரின் சிறப்பை எடுத்து இயம்புகின்றது.

கல்வி அறிவு இல்லாவிட்டால் அறிவிலி என்றும் கூறுவார். ஒளியற்ற உலகம் போல் இருளான வாழ்விலே மூழ்கிக்கிடக்க நேரிடும். பாசி மூடிய பவளம் போலவும், கூடை கவிழ்ந்த விளக்குப் போலவும் அறிவொளி இல்லாத மனிதனாக வாழும் நிலை ஏற்படும். எனவே வாழ்வாங்கு வாழ கல்வி என்னும் அறிவுக்கண்ணைத் திறப்போமாக.

**ஜெ.சங்கீர்த்தனா**
**தரம்:-** 08[D]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிவான மொழி பேசி காரியம்
## ஆற்றுபவரே வாழி ! வாழி !



பூவுலகில் வந்துதித்த இணையற்ற பொக்கிசமே!
காலமகள் பெற்றெடுத்த கல்வியின் இலக்கணமே!
கற்றோர்க்குச் சான்றாகி நிற்கும் சாகித்தியமே!
கல்வி கற்க வந்த பிள்ளைகளை பெற்றோரைப் போல்
பற்றோடு பக்குவமாய் வழிநடத்தும் பெருமகனே!
நிலையான உங்கள் புகழ் நித்திலத்தில் என்னென்றும் நிலைத்திடவே
தலை வணங்கி வாழ்த்துகின்றோம். நித்திலத்தில்
தாள் பணிந்து என்றென்றும் வணங்குகின்றோம்

தொலைதூரம் பயணித்து நம் கலைக்கூடம் தேடி வந்து
விலைமதிப்பற்ற பல சேவைகள் புரிந்த சேவையாளனே!
கடின உழைப்பினால் காலத்தை வென்ற காவிய நாயகனே!
நேர முகாமைத்துவத்திலே நிற்காமல் ஓடும் கடிகாரமே!
கல்வி எனும் துறைமுகத்தில் கலங்கரை விளக்காய் ஒளிர்பவரே!
காலத்தால் அழியாத பணிபுரிந்த கலைச் செம்மலே!
கலை மகள் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.
மதுரகீத மிசைத்து மகிழ்விக்கும் மதுரக்குரலோனே!
புன்னகை பூத்த முகத்தில் “கடுகடுப்பு” ஒருநாளும் கண்டதில்லையே!
கனிவான பேச்சினால் காரியம் சாதிக்கும் பக்குவமே!
எதிரியையும் நண்பனாக அணைத்துக்கொள்ளும் அருமருந்தே!
ஒன்பது ஆண்டுகள் எம்பள்ளியின் வளர்ச்சிக்காய்
ஓயாது உழைத்த உத்தமரே! உங்கள்
எதிர்காலம் சிறப்புறவே மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்
பா.டினேஸ் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பா. யோகினி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பா.மேதிலா (பேராதனைப் பல்கலைக்கழகம்)
பா. கிருபாலினி (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசானின் மகத்துவம்

அறிவின் ஒளியில் அகிலங்கள் பிரகாசிக்க
வித்திட்ட நம் ஆசான்கள்!
காலைப் பொழுதின் கதிர் பரந்தது போல
கல்வியறிவை ஊட்டி
உள்ளேயிருந்து உலகினைக் காட்டி
நட்சத்திரங்களாய் பிரகாசிக்க
இன்று..
நம் தெய்வங்களுக்கு வாழ்த்துக்களை
வாரி வழங்க வரிசையாய் காத்திருக்கின்றோம்!

சிறகுகள் விரித்து எழுந்திட
கல்வியைப் போதித்து
ஐந்து வயது தொடக்கம் ஆயுள்வரை..
கல்வி என்னும் பாதையிலே.
வெற்றி நடை பழக்கியவர்கள் நம் ஆசான்கள்.
பழக்கவழக்கம், பணிவு, அடக்கம் பண்புகள் கொண்ட
மாணவர்களாக மாற்றியவர்கள்.
வெண்கட்டியால் நம் வாழ்விற்கு ஒளி தந்து
நம்மை நாமே எடைபோட வைத்தவர்கள்!

எமக்கு விளக்கம் சொல்லி
தன் கைரேகைகளை கரும்பலகையில் தொலைத்தவர்கள்!
அழகான கையெழுத்தில் நம் பிழைகளைத் திருத்தி
தலையெழுத்தை மாற்றியவர்கள்!
வகுப்பில் பிடித்த சண்டைகள்,
வம்பளந்த நாட்கள், வத்தி வைத்த சம்பவங்கள்
இவைகளையெல்லாம் மன்னித்து அன்பால் திருத்தியவர்கள்
நம் ஆசான்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் பல கண்டு கண்ணீர் மழையிலே
நனைந்த போது
ஆறுதல் என்னும் குடைபிடித்து
சமாதானப்படுத்தி சமாளிக்க கற்றுக் கொடுத்தவர்கள்!
தோல்விகள் பல வந்த போதிலும் உற்சாகத்தைத்தந்து
வெற்றியை எட்டச் செய்தவர்கள் நம் ஆசான்கள்!

இவர்கள் எல்லோரும் திசை காட்டும்
கலங்கரை விளக்குகள்
வருடம் பூராவும் எமக்காக உடல் வருந்தி
உழைப்பவர்கள்
நாங்கள் வருடத்தில் ஒருமுறைதான்
அவர்களை மனதிலிட்டு நினைக்கின்றோம்!

என்றுமே! அவர்களின் இதயங்களை
நன்றி மழையிலே நனைத்திடுவோம்
ஒவ்வொரு பிள்ளையும் உன்னதமாக
உருவாக்கி விட்ட நல்லாசிரியரை மறந்திடவே முடியாது.
அவருக்கு விருதுகள் இல்லை! விளம்பரமுமில்லை!
விளக்குகளாகி வித்தைகள் புகட்டிய மேன்மையில்
உயர்ந்திடச் செய்திடுவோம்.

**செல்வி. சு.சானுஜா**
**க.பொ.த சாதாரணதரம் (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அநாதை

கண்ணிலே நல்ல சோகம்
காண்கையிலே ஏனோ பாவம்
தலையுமோ விரிந்த கோலம்
தெரிந்தவர் யாருமில்லை

உடையுமோ நைந்துபோக
உடலுமோ சோர்ந்துபோக
நடையுமோ தளர்ந்து போக
நாதியாய் சிறுமி நிற்கும்.



பள்ளிக்கோ செல்வதில்லை
படிப்பிக்க யாருமில்லை
பிச்சையோ அவளின் வாழ்வு
மிஞ்சுதே அவளின் சாவு.

அழுகுரலோ உந்தன் கீதம்
அற்றுப்போகும் சொந்த பாசம்
சிரிப்பைக் காணாதோ உந்தன் முகம்
சலித்துப் போனதோ உந்தன் வாழ்க்கை.

அன்பு காட்ட யாருமின்றி
அரவணைக்கப் பெற்றோருமின்றி
குதூகலிக்க நண்பர்களின்றி
குமுறியதோ உந்தன் வாழ்வு.

சு.புதியவன்
தரம் - 8^A (2020)
கிளி / அக்கராயன் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடல்

தேடல் என் தென்றல்
தேடலின் உச்சம்தான்
வாழ்க்கையின் முதற்படி
தேடல் வெற்றியா?
இல்லை தோல்வியா?
உன்னால் முடியும்
தேடுவது கிடைக்கும் - உனக்கு
சுத்தமான தேன் தேவை என்றால்
தேடித்தான் எடுக்க வேண்டும்
எத்தனை நாளோ? எத்தனை வருடமோ?
உன்னிடம் தேடல் இருந்தால் மட்டுமே
வெற்றி அடைவாய்
நீ முன்னேற வேண்டுமானால்
நிச்சயம் பொறுமை வேண்டும்
பொறுத்திருப்பவர்
இந்த உலகத்தையே ஆள்வார்.
தேடல் இருந்தால்
தெய்வமும் கைகொடுக்கும்
நிச்சயம் உன் தேடலில்
வெற்றி கிடைக்கும்
தேடு. தேடு தேடிக்கொண்டேயிரு.

ச.சஞ்ஜீவிதா
தரம் – 12 (2020)
2021 கலைப்பிரிவு
கிளி / அக்கராயன் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகங்களும் சமூகமும்

வளர்ந்து வரும் உலகில் இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சமூக வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணிகளில் ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். இன்று மனிதனுடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக ஊடகங்கள் காணப்படுகின்றன. வாழ்க்கைக்குத் தேவையான தகவல்கள் இன்று ஏதோ ஒரு வகையில் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாம் முதலில் ஊடகமென்றால் என்ன என்பதனை நோக்க வேண்டும். 'தகவல் கடத்தும் ஒரு கருவியே ஊடகமாகும்'

மனித நாகரீகத்தின் வளர்ச்சியில் ஊடகங்கள் குறிப்பிடத்தக்கன. இன்று பல்வேறு கட்டங்களைத் தாண்டி ஊடகமானது தனது வளர்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. சமூகத்தின் தினசரி வாழ்க்கையில் பிரிக்கமுடியாத ஒன்றாக ஊடகங்கள் காணப்படுகின்றன. இன்றைய நூற்றாண்டிற்குரிய தலைமுறை யினரே ஊடகங்களில் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஊடகங்களை பல் முளைத்த பாலர் முதல் பொல் ஊன்றும் முதியவர் வரை பயன்படுத்துகின்றனர்.

ஊடகங்கள் பலவகைப்பட்டவையாகும். இலத்திரனியல் ஊடகங்கள், அச்சுவழி ஊடகங்கள் என பல்வேறு வகைப்படும். வானொலி, தொலைக்காட்சி, கணினி, வலைப்பின்னல் என்பன இலத்திரனியல் ஊடகங்களாகும். ஊடகங்கள் கல்வி வளர்ச்சியில் அளப்பரிய சேவையைச் செய்கின்றன. அறிவு விருத்தி, தகவற் பரிமாற்றம், தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் என்பதற்கு மிகவும் உதவுகின்றன. நாம் ஊடகங்களும் சமூகமும் பற்றி ஆழமாக சிந்திப்போமானால் மானுடவியல் ஊடகமின்றி வாழாது இறந்துவிடும் இயக்கமற்ற தன்மைக்கு சென்று விட்டது. சமூகத்தின் அத்திவாரம் முதல் கட்டடமாக பரிணமிக்கும் காலம் வரை ஒத்துழைக்கின்றது.

ஊடகமென்பது ஜனநாயகத்தின் நான்காம் தூண். பல இலட்சம் மைல் தொலைவிலுள்ள செவ்வாய்க்கிரகத்திற்கு செயற்கைக்கோள் அனுப்பியதை பெரும் சாதனையாக ஓயாமல் தொலைக்காட்சியிலும் செய்தித்தாள்களிலும் கூறுகின்ற ஊடகங்களை பல்வேறுபட்ட தவறுகளையும் பிறழ்வுகளையும் ஏனோதான் எடுத்துக்காட்ட மறந்து போகின்றோம். செய்தி வாசிப்புக்கள் தங்களுக்குள் ஒரு புதிய விதியை வைத்திருக்கிறது போலும். ஆளுங்கட்சி நடத்தும் தொலைக்காட்சியில் முதற்செய்தியே அவர்கள் செய்த சாதனையாகும். ஊடகங்களால் கொலைகள், கற்பழிப்புக்கள், களவுகள், கடத்தல்கள், வதந்திகள் பரப்புதல் என்பன தலைதூக்கி ஆடுகின்றன.

சில ஊடகங்கள் பொய்யான வதந்திகளைப் பரப்பி சமூகத்தைச் சீர்குலைக்கின்றன. அரசியல் நாடகத்தை நடத்தும் ஒரு மேடையே இன்றைய ஊடகங்கள் தான். மாணவ சமுதாயத்தின் சீரழிவுகளுக்கும் ஊடகங்கள் உதவியா கின்றன. பல்வேறுபட்ட நன்மைகளையும் தீமைகளையும் சமூகத்திற்கு வழங்கும் ஊடகங்களின் நன்மையான விடயங்களை நாடி அவற்றிலிருந்து சமூகம் பயன டைந்தால் மட்டும் ஊடகங்களும் சமூகமும் எப்போதும் வளர்ச்சி நிலையில் பின்னிப்பிணைந்திருப்பதே சிறப்பானது.

**க.சாலினி**

**தரம் – 8[ய] (2020)**

**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரும்பிப்பார்

கோயிற் திருவிழா
கொடியேற்றத்துடன் ஆரம்பம்
இளசுகளின் கூட்டத்தால்
கும்பிட இடமில்லை
கும்பிட்டு வரம் வேண்டி
பக்தி செலுத்தினாரா?
கச்சான் கடையிலும்
ஐஸ்கிறீம் வானிலும்
இளைஞர் கூட்டம்
பொழுதைப் போக்கினர்.

கண்ஜாடை காட்டி
கன்னியர் பக்கம் கவர்ச்சியூட்டினர்
மங்கை இதழில் பொங்கும் சிரிப்பு
கோயிற் திருவிழா
காதலர் பூங்காவாய்
கனிவதைத் திரும்பிப்பார்.
ஆன்மீகம் போகிறது பண்பாடு
திரும்பிப்பார் உன் நிலையை

பள்ளி மேசையில்
பையன் இருக்கிறான்.
கல்விப் படிப்பினில்
நெஞ்சம் குழைகிறான்.
கொட்டாவி வாயிலே
சொட்டாது விடுகின்றான்
எச்சில் வாயிலே
இலையான் மொய்க்கையில்
தன்னை மறந்துமே
துயிலும் கொள்கிறான்.
சட்டம்பி வார்த்தையை
அசட்டை செய்கிறான்
எதிர்கால வாழ்விற்காய்
கையேந்தித் திரிகின்றான்.

பொயிலை நறுக்கு
வெத்திலைக் கூறு
போதைப் பொருளும்
அரக்கன் ஆக்குது
அம்மா ஆரு
அக்கா ஆரு
அப்பா ஆரு
கேட்க வைக்குது.
போதை மெத்துது
ஆடை கழன்று
அரையில் நிற்குது
அவனின் நிலையோ
மோசமாகுது
திரும்பிப் பார்க்கையில்
கண்கள் கூசுது
நெஞ்சம் வெடிக்குது
திரும்பிப் பாரந்த
அசிங்க வாழ்வை
திருந்திக்கொள் நீயும்
எதிர்கால நல்வாழ்வுக்காய்

சொல்லில் வடிக்கவோ
வார்த்தைகள் போதாது
எண்ணி இருக்கையில்
கண்கள் கலங்குது
எதிர்கால வாழ்வுக்காய்
உன்னை நீயே
திரும்பிப்பார்.
நிச்சயம் வாழ்வில்
சுபீட்சம் உண்டாகும்.

**அ.கீர்த்தனா**
**தரம் – 11A (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரங்களைப் பாதுகாப்போம்

**'மரங்கள் பூமியின் வளமாகும்.**
**அவை இயற்கையின் வரங்களாகும்**
**அவை எமது உதவிக்கரங்களாகும்**
**அவற்றைப் பாதுகாப்பது நம் கடமையாகும்**

அவை எமது அளப்பரிய உடைமையாகும்' என்ற கவிதைக்கிணங்க, மரங்கள் இயற்கை மாதா எமக்களித்த ஒரு பெரிய கொடையாகும். அவற்றால் நாம் பெறும் பயன்கள் அளவற்றவை. அவை எமது சுவாசத்திற்கு பெரிதும் துணைபுரிகின்றன. எப்படியென்றால், அவை காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன. இதனால் நாம் உயிர்வாழ்வதற்கு மரங்கள் அவசியமாகின்றன. அது மட்டுமல்லாமல் மரங்கள் எமது சுற்றாடலுக்கு அழகூட்டுகின்றன. மரங்கள் இயற்கையின் கொடையாக காணப்படுகின்றன. மனிதனுக்கு அவை நிழற் குடையாகவும் காணப்படுகின்றன.

மரங்களிலிருந்து நாம் இனிய கனிகளைப் பெற்றுக் கொள்கின்றோம். கனிகளை உண்பவன் ஆரோக்கியத்திலும் அழகிலும் செல்வந்தனாகக் காணப்படுவான். மற்றும் மரங்கள் அதிகமாகக் காணப்படும் இடம் காடு எனப்படும். காடானது விலங்குகளின் வாழிடமாகக் காணப்படுகின்றது. இதிலேயே பறவைகள் தமது இனத்தைப் பெருக்குகின்றன. மற்றும் அங்குள்ள தாவரங்களே அவற்றின் உணவாக காணப்படுகின்றன. இதனால் சூழல் சமநிலையும், உணவுச்சங்கிலியும் சிறப்பாக நடைபெறுகின்றன. மற்றும் மரங்களை நடுவதால் மண்சரிவு, மண்ணரிப்பு என்பன வரும் அபாயம் குறைகின்றது. இதனால் மனிதன் புவியில் பயமின்றி வாழ்கின்றான். இதனால் புவியில் உயிரினங்கள் சுதந்திரமாக வாழ்கின்றன.

மேலும், இப்போது மனிதர்களுக்கு மரங்களின் தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதனால் பலா, மாமரம், வேம்பு என்பன வீடுகளில் வளர்ப்பதுண்டு. இதனை வீட்டில் வளர்ப்பதற்கு இடவசதி தேவைப்படுகின்றது. இதனால் நாம் தூரஇடங்களுக்கு செல்லும்போது வெற்றிடங்களில் மரங்களின் விதைகளை எறிவதன் மூலம் மரங்கள் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே மரங்களை வளர்ப்போம், எமது நாட்டைப் பாதுகாப்போம்.



**கு.காவியா**
**தரம் – 8D (2020)**
**கிளி / அக்கராயன் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பள்ளிப்பருவம்

*சின்னச் சின்ன சிறார்களாய்*
*நாம் துள்ளித் திரிந்து*
*பல்கலையும் பயின்றகாலம்- பள்ளிக்*
*காலம்*
*துன்பம் மறந்து துயரம் மறந்து*
*நெஞ்சிலே சிறிதும் வஞ்சம் இல்லாது*
*மகிழ்வுடன் நடைபயின்ற காலம்.*

*முதல் நாள் என்னவோ அழுகைதான்*
*பள்ளியைக் கண்டாலே*
*பூஞ்சாண்டியின் சாயல்*
*போகப் போக பழகியதே நம் பள்ளியின்*
*சாயல்*
*அம்மாவைப் போல அரவணைப்பும்,*
*அப்பாவைப் போல பாதுகாப்பும்*
*நல் ஆசான்களால் எமக்கு அளிக்கப்பட்ட*
*அன்புப் பரிசு.*

*நண்பர்களிடம் சிறிய சண்டையும்*
*பட்டப் பெயர்களும்,*
*ஆசிரியரிடம் தண்டனையும்*
*வாங்கி - அடுத்த நிமிடமே சேரும்*
*சினேகிதம்*
*கிடைக்குமா! இப் பூமிதனில்.*

*தொடர்ச்சியான படிப்பு*
*அதிலும் சில கட்டடிப்பு*
*அதிபரின் கையில் சிக்கினாலோ...!*
*அந்தோ! பரிதாபம்! அஞ்சி ஒளித்து*
*ஓடிய*
*காலங்களும் இனிதே. ஆசிரியரின்*
*கையில் சிக்கினால் தொலைந்தோம்.*
*என்னதான் அடித்தாலும், பேசினாலும்*
*சொல்வதென்னவோ!*
*நம் நன்மைக்கே அதுவும் ஏனோ*
*புரிவதில்லை நம்மில் சிலருக்கு....*

*பன்னிரெண்டு வருட பள்ளிப் படிப்பு*
*எப்போதான் முடியும் என்று*
*கடவுளிடம் கேட்டோம்*
*முடிந்த பிறகு தான் தெரிகின்றது*
*பள்ளி என்பது திரும்ப கிடைக்காத*
*"கடவுளின் பூந்தோட்டம்" என்று*
*நாம் பட்டாம் பூச்சியாய் சிறகடித்த*
*காலங்களும் அதுவே!*

**பழைய மாணவி**
**ஸ்ரீ. நிரோஜினி**
**2019 கலைப்பிரிவு**
**(யாழ் பல்கலைக்கழகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேதம் பாராத பெரியவர்

அக்கராயன் மண்ணிலே
குன்றிலிட்ட தீபமாய் மிளிரும்
எம் பள்ளியின் தந்தையாய் ஒளிரும்
நல் முதல்வர் மதுரநாயகம்,
நானிலம் போற்றும் உத்தமர்
இனிமேல் தோன்றார்.
இவர் போல் நல்மனம் கொண்டவர்.

மாணவர் கட்டிய மனக்கோட்டைகள்
கலைந்திடாமல் காப்பதில் வல்லவர்.
மாணவர் நலனுக்காய் ஆற்றிய பணிகள்
அலை கடலதனையும் மிஞ்சிய வெற்றிகள்

நேர் கொண்ட அரிய நூலறிவும்
சீர் கொண்ட நிலையான பகுத்தறிவும்
பார் தந்த பயணத்தின் பட்டறிவும் கொண்ட
நேர்மைத்திறன் மிக்க நீதி வழுவா சோழன் இவர்.

நீர்வளம் நிலையாக பெற்றுத்தந்தவர்.
பௌதீக வளங்களும் பெற்றுத்தந்தவர்.
ஆசிரியர் குழாத்தையும் ஒன்றுபட வைத்தார்.
அவனியில் இவருக்கு ஈடிணையேது?

செந்தமிழ் வளர்த்த புலவர் வழியினிலே
தாய் மொழித்திறன் வளர்க்கும் தாயவளை
இல்லறத் துணையாகக் கொண்டவரே!
இணை பிரியா அன்றில்கள் போல் வாழ்பவரே!

பேதம் பாராத பெரியவராய்
மாணவர் எம்மைக் கனிவுடன் வளர்த்து
தலைமைத்துவத்திலே தழைத்தோங்க வைத்து
இமயம் தொட்ட சிகரம் இவரே!
எங்கும் எதிலும் எம் அதிபர் புகழே
சங்குநாதமாய். உலகெங்கும் ஒலிக்கட்டும்!
புகழ் ஓங்கட்டுமே!

**பழைய மாணவன்**
**பு.மிதிலன்**
**2012 கலைப்பிரிவு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்**
**கற்கையை நிறைவு செய்துள்ளார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு

பண்பாடு என்பது மனிதனின் கைவண்ணத்தில் தோன்றியதாகும். இப் பண்பாடானது மனிதனின் பல்வேறுபட்ட வாழ்க்கை நடைமுறைகள் அனைத்தையும் உள்ளடக்கியது எனலாம். இப் பண்பாட்டின் கூறுகளாக கலை, இலக்கியம், சமயம், சட்டம், சமூகம் எனப் பலவற்றை நோக்க முடியும். இப் பண்பாட்டின் வழியே தோற்றம் பெற்றதே இந்துப் பண்பாடாகும். இது இந்துக்களை இன்று வரை வளப்படுத்தி வருகின்றமை சிறப்பிற்குரிய விடயமாகும். இந்த இந்துப் பாண்பாடானது நுட்பமான பல விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதற்கு தமது பங்களிப்பை வழங்கிய வகையில் பெண்களின் வகிபங்கு மிகவும் பிரதானமானதாகக் கூறப்பட வேண்டியது. அந்த வகையில் ஆரம்பகாலப் பெண்களாக காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியார், ஆண்டாள், சங்ககால ஔவையார், இல்லத்தரசிகள் போன்றோரையும் பிற்பட்ட காலப் பெண்களாக தங்கம்மா அப்பாக்குட்டி, பிளவெஸ்கி அம்மையார் போன்றோரையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இவ்வாறு நோக்கின், இல்லறத்தில் தூய்மை பேணி கற்பிலே சிறந்து விளங்கும் உலகியல் வாழ்க்கை வாழ்ந்து இறையின்பத்தை எய்திய புனிதவதி எனும் பெயருடைய காரைக்காலம்மையார் ஆவார். இவர் பரமதத்தனுடன் வாழ்ந்து அவர் கேட்டதற்கிணங்க இறைவனிடம் வேண்டி மாங்கனிகளைப் பெற்றுக் கொடுத்தார். இதனால் பரமதத்தன் தனது மனைவி தெய்வப்பெண் எனக்கருதி வேறு வாழ்க்கையைத் தேடிச் செல்ல அம்மையார், 'கணவன் வேண்டாத இவ் உடல் எனக்கும் வேண்டாம்' எனக் கூறி தசைகள் நீங்கிய பேயுரு கேட்டுப் பெற்றார். இறைவனிடம் தீராத பக்தி கொண்டு இறைவனை 'அப்பா' என நினைத்து உருகி வழிபட்டார். இவ்வாறு உலகியல் வாழ்க்கை வாழ்வதனூடாகவும் இறை இன்பத்தை அடையலாம் என சங்கமருவிய கால மக்களுக்கு எடுத்துக் காட்டி இந்துப் பண்பாட்டினை வளம் பெறச் செய்தார். இது மட்டுமன்றி கல்விப் பணியாக திருவிரட்டை 'மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம் என்பவற்றை இயற்றி மக்களுக்கு இறை இன்பத்தை உலகியல் இன்பத்தோடு சேர்ந்து நாடச் செய்தார். இவருடைய அற்புதத்திருவந்தாதியிலே, 'ஏழ் பிறப்பும் அவர்க்கே அன்றி மட' எனத் தொடங்கும் பாடலடியானது உலகியல் வாழ்க்கை நிலையில்லாதது. அவ்வாறு வாழ்ந்தாலும் வாழ்க்கையை இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியமை சிறப்புக்குரிய விடயமாகும்.

மேலும், கி.பி 7ஆம் 8ஆம் நூற்றாண்டிலே பாண்டிய, பல்லவ மன்னர்களின் காலத்திலே நலிவுற்றிருந்த இந்துப் பண்பாட்டை வளப்படுத்திய பெருமை மங்கையர்க்கரசியாரையும், திலகவதியாரையுமே சாரும். பாண்டிய மன்னனான கூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் சமண மதத்திற்கு அடிமைப்பட்டு இருந்த அவனது மனைவியான பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரும் திருஞானசம்பந்தரை பாண்டிய நாட்டிற்கு வரவழைத்தனர். இதனை அறிந்த சமணர்கள், சம்பந்தர் தங்கி இருந்த மடத்திற்கு தீ வைத்தனர். அத் தீயானது பாண்டிய மன்னனைச் சென்றடைந்து வெப்பு நோயாக மாறியது. பின்பு சம்பந்தர் சென்று அவனது வெப்பு நோயையும், பிறவிப் பிணியாகிய கூனையும் நீக்கி அவனை குன்றசீர் நெடுமாறன் ஆக்கியார். இப் பெருமை மங்கையக்கரசியாரையே சாரும். அவரது பாண்டிய நாட்டிலே இந்துப் பண்பாடு வளம் பெற வேண்டும் என்ற நோக்கமே இதற்கு காரணமாக அமைந்தது. இவ்வாறான மங்கையர்க்கரசியாரை சம்பந்தர் சிறப்பிக்கும் போது 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைம் மடமானி' என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் சமண மதத்தை தழுவி இருந்த வேளையிலே திலகவதியாரின் தம்பியான மருள்நீக்கியாரும் சமண மதத்திலே மூழ்கியிருந்தார். இதனால் துயருற்று திலகவதியார் இறைவனிடம் இறைஞ்சி வேண்ட சிவனும் அவருக்கு சூலை நோயை உண்டாக்கினார். அப்போது மருள்நீக்கியாரும் திலகவதியாரை நோக்கி வர அவருக்கு நீறணிவிக்க அவரும் 'கூற்றாயினவாறு எனத் தொடங்கும் பதிகம் பாட சூலை நோய் நீங்கியது. பின்பு அப்பருக்கு கொடுமைகளைச் செய்த பல்லவ மன்னனான மகேந்திரவர்மனும் சைவ சமயத்திற்கு மாறினான். இவர்கள் இருவரையும் இந்துப் பண்பாட்டை நோக்கி வளப்படுத்திய பெருமை திலகவதியாரையே சாரும். இத் திலகவதியார் தனக்கு நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் இறந்ததும் திருமணம் செய்யாது தவ வாழ்க்கை வாழ்ந்து திருவீரட்டானேஸ்வரர் ஆலயத்திலே தங்கி இருந்து தொண்டு செய்து இந்துப் பண்பாட்டை வளப்படுத்தியிருந்தமை சிறப்புக்குரிய விடயமாகும்.

மேலும், சங்ககால ஒளவையாரும் நெல்லிக்கனியை தான் உண்ணாது இந்துப் பண்பாட்டை வளப்படுத்த அதியமான் நீண்ட காலம் உயிரோடு இருக்க வேண்டும் என்பதற்காக கொடுத்தார். இவர் பிள்ளையார், முருகன் என இருவர் மீதும் பக்தி கொண்டு பனுவல்களைப் பாடியுள்ளார். மேலும் சமூகத்தில் இந்து மதக் கருத்துக்களை வளப்படுத்தியதோடு அல்லாமல், பல விழுமியக் கருத்துக்களை மக்களுக்கு போதிக்கும் முகமாக மூதுரை, நல்வழி, வாக்குண்டாம், ஆத்திசூடி என்பவற்றை அருளியுள்ளார். இந் நூல்கள் அன்று வரை இந்துப் பண்பாட்டை வளப்படுத்தி வருகின்றமை சிறப்பிற்குரிய விடயமாகும்.

இதனை விட இல்லத்தரசிகள் பலர் இந்துப் பண்பாட்டை வளப்படுத்தியமை பற்றி பெரியபுராணத்திலே சேக்கிழார் குறிப்பிடுகின்றார். நாவுக்கரசர் மீது விருப்புக் கொண்ட அப்பூதியடிகள் அவருக்கு விருந்தளிக்க எண்ணி அவரை வரச் செய்து விருந்து பரிமாறிய வேளையிலே வாழையிலை வெட்டச் சென்ற அவரது மகனான மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்த போதும் தனது மகனுடைய உடலை மறைத்து அப்பூதியடிகளின் மனைவி அப்பருக்கு உணவு பரிமாறினார். இதே போல சிறுத்தொண்டநாயனாரும் அடியவர் ஒருவர் மானிட இறைச்சியையே விரும்புகின்றார் என்பதனை உணர்ந்து தனது மகனையே கொன்று அறுத்து சமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு பரிமாறியிருந்தமையானது 'தாய்மையைக் காட்டிலும் இறை பக்தியே மேலானது' என்பதை சுட்டி நிற்கின்றது.

இவர்களின் வழி வந்த இந்துப் பண்பாட்டை வளம்படுத்தியவர்களிலே தங்கம்மா அப்பாக் குட்டியும் ஒருவராவார். இவர் நாவலர் பரம்பரையின் தோன்றலாக வந்ததால் அவரைப் போலவே இந்துப் பண்பாட்டை வளப்படுத்தியிருக்கின்றமை நோக்கத்தக்கதாகும். இவரது சைவ சமூகப் பணிகளை பேராசிரியர் ஆறுதிருமுருகன், அகில இலங்கை இந்துமன்றம் போன்றவர்கள் இன்று வரை நினைவு கூர்ந்து வருகின்றனர். இவர் சமயமானது 'மக்களைப் நேர்ப்படுத்தி நேரிய வாழ்வு வாழ வழி காட்டுவதாகும். நாட்டு நலத்தைப் பேணுவதே சமயத்தின் நோக்கமாகும். சைவ அருளாளர்கள் அனைவரும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது மட்டுமன்றி இவர் சமயத்திற்காக தன்னை அர்ப்பணித்து பிரம்மச்சரியம் பூண்டு தனது ஆசிரியத் தொழிலை துறந்து உலகெங்கும் காற்றாய்ப் பறந்து இந்துப் பண்பாட்டைப் பரப்பினார். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று சைவமதக் கருத்துக்களைப் பரப்பினார். இதோடு நின்று விடாமல் ஏழை மாணவர்களுக்கும், ஆதரவற்றோருக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பல்வேறு உதவிகளைப் புரிந்தார். உணவு, உடை, உறையுள் எனப் பல உதவிகளை புரிந்துள்ளார். 'அன்னபூரணி' எனும் மடம் அமைத்து அன்னதானப் பணிகளையும் மேற்கொண்டார்.

மேலும், பிரம்மஞானசங்கத்தினை பிளவெஸ்கி அம்மையார் தோற்றுவித்தார். இச் சங்கத்தினூடாகப் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இந்துப் பண்பாட்டை வளப்படுத்துவதில் பெண்களை சிறப்பானவர்கள் என்ற கருத்தை வேரூன்றச் செய்தார். பெண்களின் கல்விப்பணிகள், ஏழை மாணவர்களுக்கான உதவிகள் என அனைத்தையும் இப் பிரம்மஞான சங்கத்தினர் மேற்கொண்டார். இதே போன்று நவீன சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்து அதனூடாக நிவேதிதா அம்மையாரும் பல சமய, சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார்.

இவ்வாறு இந்துப் பண்பாட்டை வளம்படுத்துவதிலே புண்ணிமை நாச்சியம்மை, பண்டிதை பொன் பாக்கியம், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், பல்கலைக்கழக முதற் இந்துநாகரிகப் பெண் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஆகியோர் இன்று வரை இந்துப் பண்பாட்டை வளப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ் இந்துப் பண்பாட்டு மூலமாக சமய, கல்வி, சமூகப் பணிகள் இன்றுவரை அனைத்து நாடுகளிலும் பரவிச் செறிந்து காணப்படுவது பெருமைக்குரிய விடயமாகும்.

**இ.மஞ்ஜிதா**
**பழைய மாணவி**
**2015 கலைப்பிரிவு**
**யாழ் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் மனம் கவர்ந்த அதிபரே..!

அனுபவப் பெட்டகம் இவர்
ஆரவாரம் செய்யாத ஆழ்கடல் இவர்
ஆரம் சூடுவதற்கு ஆற்றல் உடையவர் - வாழ்க்கை
அரங்கில் வரமாய் வந்துதித்த முதல்வரிவர்.

முள்ளுப் பாதையில் பயணம் செய்தவர்.
முயன்றே வாழ்வில் வெற்றி கண்டவர்.
முன்னேற முயல்வோருக்கு முன்னுதாரணம் இவர்.
முற்றிலும் இவர் வாழ்வியல் ஒரு நூலே.

நரைமயிர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனுபவம்.
திரை விழுந்தாலும் தேயாத உடற்பலம் .
கரை சேர்ந்த தோணி காவியவை ஏராளம்.
முறையாக வாழ்வமைத்த முழுமனிதர் இவர்.

விரலசைவால் விளக்கம் தரும் விவேக வித்தகர்.
பிரளயமே வந்தாலும் பிரளாத உறுதியினர்.
கரகோசம் செய்து இவரை நாம் போற்ற வேண்டும்- அவர்
கரம் பற்றும் எழுத்தாணி நாமாக வேண்டும்.

வழிகாட்டும் தலைவரிவர்
ஒளியூட்டும் பட்டறிவின் உறைவிடமிவரே
தெளிவான சிந்தனை ஆக்கிய மனிதர்
மலிவாக கிடைக்காத மகத்தான மாணிக்கம் இவர்.

முற்றிய கரும்பே இனிக்கும்
முழு நெல்லி முன் கசப்பின் பின் இனிக்கும்
இறைவன் துணையிருக்க அவர் வாழ்வினிக்கும்
விதையாகி கனிந்த விருட்சம் இவர்.
கருகாது காப்போம் அரும் பெரும் சொத்திவர்.

எம் மண்ணின் மைந்தனாய்
மணிவிழா காணும் மதுரநாயகம் ஆசானை
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**ப.கஜேந்திரன்**
**கிளி / அக்கராயன் ம.வி**
**2018 க.பொ.த உயர்தரம்**
**(யாழ் பல்கலைக்கழகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் அதிபர் பற்றி



ஆன்மீக தேடல்களுடன் - கல்வி
ஒளியேற்றும்
பின்தங்கிய மாவட்டத்தின்
சாதனை நாயகன்.

தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும்
பணியாகக் கொண்டு
ஆசிரியத்துவத்தை வளர்த்தெடுக்கும்
அருமை ஆசான்.

சிலர் விமர்சனங்களை முன்வைக்க
காய்க்கின்ற மரங்களுக்குத்தான்
கல்லெறி விழும் என அதையும்
கடந்து செல்லும் குருவானவர்.

அன்பின் ஊற்றாய்
பண்பின் அடையாளமாய்
மாணவர்களுக்கு வழிகாட்டும்
உன்னத தந்தை.

நேர்மையும் நீதியும்
என்றுமே தழைக்க தன்னையே
தந்துவிட்ட
சமூக சேவகன்.

அறிவையும் திறமையையும்
நல் மனப்பாங்கினையும் விழுமியங்களாக்கி
வாழ்ந்து காட்டும்
கல்வித் தெய்வம்.

ஆன்மீகத்துடனும் அறிவியலுடனும்
ஆலோசனைகள் பல தந்து
நல் வழிகாட்டியவரின்
நீண்ட ஆயுளுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.வவிகரன் (2013 கலைப்பிரிவு)**
**வ.ரேகா (2014 கலைப்பிரிவு)**
**அக்கராயன் பழைய மாணவர்கள்**
**யாழ் பல்கலைக்கழக**
**கல்வியை நிறைவு செய்தவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர முகாமைத்துவம்

நேர முகாமைத்துவம் என்பது குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு குறிப்பாக செயல், திறன் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக செலவழிக்கும் சரியான நேரக்கட்டுப்பாட்டை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான செயன்முறையாகும். வேலை, சமூக வாழ்க்கை, குடும்பம், பொழுதுபோக்கு, தனிப்பட்ட விருப்பங்கள் மற்றும் ஈடுபாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் இதனுள் அடங்கும். குறித்த பணிகள், திட்டங்கள் மற்றும் எமது குறிக்கோள்களை ஒரு குறிப்பிட்ட திகதிக்கு இணங்கச் செய்து முடிக்கப் பயன்படும் திறன்கள், கருவிகள் சிறந்த நுட்பங்கள் ஆகியவற்றால் நேரமுகாமைத்துவத்தைப் பேணமுடியும்.

ஆரம்பத்தில் முகாமைத்துவம் என்பது, வணிக அல்லது வேலை நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக இருந்ததெனினும் இறுதியில் அது ஒவ்வொரு தனிமனித செயற்பாடுகளிலிருந்து உருவாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. நேர முகாமைத்துவ அமைப்பு என்பது, செயற்பாடுகள் அதற்குப்பயன்படுத்தப்படும் கருவிகள், நுட்பங்கள் மற்றும் முறைகள் என்பவற்றின் ஒட்டுமொத்த வடிவமாகும். மனிதனின் எந்தவொரு திட்ட வளர்ச்சியிலும் நேரமுகாமைத்துவம் பொதுவான ஓர் தேவையாகும். ஏனெனில் குறித்த திட்டத்தை நிறைவுறுத்தும் காலம் மற்றும் அதன் நோக்கத்தை அது தீர்மானிக்கின்றது.

நேரமுகாமைத்துவம் பற்றி அவுஸ்ரேலிய எழுத்தாளர் 'பீட்டர் டுக்கர்' பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*'நேர வளங்கள் முழுமையாக நெகிழ்வற்றது. அதனை மாற்ற முடியாது, வைத்துப் பயன்படுத்த முடியாது, நேரத்துக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிவகைகளும் இல்லை'*

இவ்வாறான காரணங்களுக்காக நேர முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது என்று இவர் குறிப்பிடுகின்றார். எந்தவொரு வேலையாக இருந்தாலும் அதன் உச்சப் பயனைப் பெறுவதற்கு நேரத்தை வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தல் அவசியமாகின்றது.

நாம் நாளாந்த வேலைகள் பலவற்றைச் செய்துமுடிக்காமல் எனக்கு நேரம் போதவில்லை என்று எத்தனைமுறை சாட்டுக் கூறியிருப்போம். பல வேலைகள் இருப்பதால் நேரம் போதாதென்று தான் சிந்திப்போம். ஆனால், அது உண்மை அல்ல. நான் எனது நேரத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான் உண்மை. பாடசாலை மாணவர்களாகிய நாம் எமது சிறு வயதிலிந்தே நேரத்தை முகாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக் கற்றுக் கொள்வதனூடாக எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ளப்போகும் பெரிய சவால்களை இலகுவில் வெற்றி கொள்ளும் ஒருவராக மாற முடியும். நாம் அதிகாலையில் எழுவதிலிருந்து இதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும். இதுவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் பொறுப்பற்று செயற்பட்டிருப்போம். அதாவது

- ♣ காலையில் உரிய நேரத்தில் எழாதிருத்தல்.
- ♣ எழுந்த பின்பு எமது வேலைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடாமை.
- ♣ ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடங்களை அன்றே செய்யாது காலையில் அவதிப்படுதல்.
- ♣ நேரசூசியின் படி புத்தகங்கள் எடுத்துவைக்காமல் இருத்தல்.
- ♣ பெற்றோரின் சொல் கேட்காமல் நேரம் கிடைக்கும் வரை வேறு பொழுதுபோக்குகளில் இருந்து விட்டு குறுகிய நேரத்துக்குள் பதற்றமாகத் தயாராகுதல்.

போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்போம், இன்றிலிருந்து இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு எமது கடமைகளை நாமே உரிய நேரத்தில் சரிவரச் செய்வதனூடாக எந்நேரத்திலும் தெளிவான உள்ளம் கொண்டவர்களாக இருக்க முடியும்.

எம்மைச் சுற்றியுள்ள விடயங்களுக்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைப் பின்வரும் அட்டவணை மூலம் இனங்காணலாம்.

| | அவசரம் | அவசரமற்ற |
|---|---|---|
| முக்கியமானது | 1 | 2 |
| முக்கியமற்றது | 3 | 4 |

இங்கு 1 என அடையாளமிடப்பட்ட பகுதி அவசரமானதும் முக்கியமானதுமாகவுள்ள எமது வாழ்வில் வரும் நோய், மரணம், விபத்து போன்ற பிற்போடமுடியாத தேவைகளைக் குறிக்கும். இதற்கு நாம் எப்போதும் தயாராகவும் காலத்தை ஒதுக்கியும் வைப்பது அவசியம்.

இரண்டாவது அவசரமானது ஆனால் முக்கியமற்றது. நாமே எல்லாத் தேவைகளையும் செய்ய முற்படுவதால் அடிப்படையாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மறந்து அநாவசியமானதும் அவசியமற்றதுமான வேலைகளில் ஈடுபட வேண்டிய சூழல் ஏற்படலாம். அவ்வாறான விடயங்களைத் தவிர்ப்பதன் மூலமும், இன்னொருவருக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலமும் எமது நேரத்தைச் சேமித்துக் கொள்ளலாம்.

மூன்றாவது அவசரமற்றது. முக்கியமற்றதுமான விடயங்களுக்கு நேரத்தைச் செலவழிப்பது அநியாயமானது என்பது மேலோட்டமாகவே விளங்கும். இவ்வாறான விடயங்கள் இலகுவில் காலத்தை வீணாக்கி விடும். பெறுமதியான காலத்தை தொழில் கடமைக்காக, கல்விக்காக, சமூகத்திற்காக, குடும்பத்திற்காக செலவிடாமல் தொலைக்காட்சி பார்த்தல், கைத்தொலைப்பேசிக்கும் சமூக வலைத்தளங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையாதல், அவசியமற்ற அழைப்புக்கள், போதைவஸ்த்துக்கு அடிமையாதல், தேவையற்ற நண்பர்களின் சகவாசம், சமூக விரோத செயல்களில் ஈடுபடுதல் என்பன எம்மை அறியாமல் எமது நேரத்தை வீணாக்க நேரிடும். இங்கு வெளிப்படையான உண்மை என்னவென்றால், இவ்வாறான தேவையற்ற விடயங்களில் தலைப்போடாமல் பிரயோசனமான விடயங்களுக்காக காலத்தை முகாமைத்துவம் செய்ய முடியுமாயின் இல்லாமல் போகும் காலத்தை உள்ளதாக்கிக் கொள்ள எம்மால் இயலும்.

நான்காவது கட்டத்தில் உள்ளது முக்கியமானது. ஆனால் அவசரமற்றது. வாழ்க்கையில் இவ்விடயங்களைச் செய்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில் எமது எதிர்காலம் இதிலேயே தங்கியுள்ளது. எமது எதிர்காலத்தைச் சரியாகத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டிய விடயங்களுக்கு கூடிய காலத்தைச் செலவிடுவது பெறுமதியாக அமையும். நிகழ்காலத்தில் இவை பயனற்றதாக இருப்பினும் ஏதாவது ஒரு நாளைக்குத் தேவைப்படும் மிகமுக்கிய நடவடிக்கைக்காகத் தயாராவது இக்கட்டத்தில் விளக்கப்படுகின்றது. உதாரணமாக பதவி உயர்வுக்காகத் தயாராகுதல், வீடுகட்டுவதற்கான ஏற்பாடு செய்தல், தடைதாண்டல் பரீட்சைகளுக்கான தயார்ப்படுத்தல், நேர்முகத் தேர்வுகளுக்காக படிப்படியாக எம்மைத்தயார்செய்தல் போன்ற எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் விடயங்களுக்குத் திட்டமிடுதல் இக்கட்டத்தில் விளக்கப்படுகின்றது.

மேற்குறித்த நான்கு விடயங்களின் ஊடாகவும் எவ்வாறு எமது நேரத்தை முகாமை செய்வதென்று ஓரளவு தெளிவடைந்திருப்போம். இதனைச் சரியாக நடைமுறைப்படுத்தும் போது கடமை தவறாது நடந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஒரு சாதாரண மனிதனால் நூற்றுக்கு நூறு வீதம் அனைத்து விடயங்களிலும் சரியாக நடந்து கொள்ள முடியாது. எனினும் இயலுமானவரை சரியாக முயற்சிப்பது பயனுள்ளதாக அமையும். நேரத்தை முகாமை செய்வதனால் எமது கடமைகளைச் சரிவரச் செய்ய இயலும். கடமைகளைச் சரிவரச் செய்வதனால்

- நேரம் மீதமாக்கப்படும்,
- யாருக்கும் பயப்படத்தேவையில்லை.
- மனநிறைவாக இருப்பதை உணரலாம்.
- பொய் சொல்ல வேண்டிய தேவை ஏற்படாது.
- மற்றவர்களில் தங்கி வாழவேண்டிய அவசியமில்லை.
- நாம் சொல்லுமிடங்களில் நற்பிரஜையாக மற்றவர்களால் மதிக்கப்படல்.
- சிறந்த தலைமைத்துவப் பண்பினை வளர்த்துக் கொள்ளலாம் என்று பல்வேறு நன்மைகளை அடைய முடிகிறது.

நேர முகாமைத்துவத்திற்கான வழிமுறைகளாகப் பின்வரும் சில விடயங்களை நோக்குவோம்.

1. முக்கியமாகச் செய்ய வேண்டிய விடயங்களை அடையாளப்படுத்துதல், மனப்பாடம் செய்தல், பாடலாக அல்லது கவிதையாக மாற்றல், எழுதிவைத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஒட்டுதல், நினைவுக் குறிப்பேடு பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் ஞாபகத்தில் வைத்திருக்க முடியும்.

2. குறித்த நேரத்திற்கு வேலை செய்ய கடிகாரத்தில் நேரத்தைக் கூட்டி விடுதல், உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருத்தல், வேலைகளை முறையாகத் திட்டமிடல்.
3. கல்வி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் காலையில் அல்லது இரவு நேரத்தில் தமது கடமைகளுக்கான சரியான நேரத்தை ஒதுக்குதல்.
4. எமக்கு மிகச் சிரமமானது என நினைக்கும் ஆனால் கட்டாயம் செய்ய வேண்டிய பணிகளை சவாலாக எடுத்து முதலில் அவற்றை நிறைவு செய்யும் மனப்பாங்கை உருவாக்கல்.
5. செய்கின்ற வேலைகளுக்குப் பொருத்தமானதும், தேவையான அளவும் ஓய்வெடுத்தல்.
6. எமக்கும் பொருத்தமான சூழலை உருவாக்கல்.'. பாதகமான சூழ்நிலைகளை சாதகமாக்குவதற்குரிய மனப்பாங்கை உருவாக்கிச் செயற்படல்.
7. வேலைப்பழுவால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்க தாம் விரும்பும் மகிழ்வான பொழுதுபோக்கான செயற்பாடுகளுக்கான நேரத்தை ஒதுக்குதல்.
8. உறக்கத்திற்குத் தேவையான நேரம் வழங்கல் - இது மறுநாள் உற்சாகமாக செயற்பட வழிசமைக்கும்.
9. உணவுத்தேவைகள் தொடர்பில் கவனமெடுத்தல் - உரிய நேரத்திற்கு உணவுண்ணல்.
10. நேர்க்கணியமான மனப்பாங்கை விருத்தி செய்தல்.

மேற்குறித்த விடயங்களூடாக நாம் எவ்வாறு நேரமுகாமைத்துவத்தைப் பின்பற்றி செயற்பட வேண்டுமென அறிந்திருப்போம்.

நேரமுகாமைத்துவத்தைப் பின்பற்றி வாழ்வில் வெற்றிகண்ட பல்வேறு பெரிய மனிதர்களை நாம் நூல்களில் தேடித்தேடிப் படித்துள்ளோம். ஆனால் எமக்கு அருகில் எம்முள் ஒருவராக இருக்கும் ஒருவரைக் கண்டுகொள்ளாமல்விடுவது எமது வழக்கமாக உள்ளது. அவ்வாறு நான் இனங்கண்ட ஒரு நல்ல மனிதர் சிறந்த நேரமுகாமையாளன் எனது பாடசாலை அதிபர் மதிப்புக்குரிய திரு. க. மதுரநாயகம் அவர்கள். எதுவித குறையும் விடாது சிறப்பாக செயலாற்றுவதிலும் மிகுந்த திறனுடையவர். தனது கடமையின் பல மைல் கற்களைக் கடந்து நீண்ட நாளைய தனது அனுபவங்களால் பல்லாயிரக் கணக்கானோரை வழிகாட்டி இன்று மணிவிழாக்காணும் நாயகனான எமது அதிபருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

ஆகவே, மாணவர்களாகிய நாங்கள் எம்முள் இருக்கும் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றமடைய நேரத்தைத் திட்டமிட்டு சிறந்த முறையில் செயற்பட வேண்டும். காலம் கடந்த ஞானம் வருவதால் எந்தப் பயனும் கிடையாது என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

**ச. கயலினி**
**2015 க.பொ.த உயர்தரம்**
**பழைய மாணவர்**
**யாழ் பல்கலைக்கழக மாணவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தியாகம்

உறக்கமின்றிக் கண்ணிடுக்க
உணர்வலையோ மனம் நெருட
தாதிப்பணிக் கடமைக்காக
தன்னையே மெழுகாக்கிடுவாள்.

வைத்தியத்தின் பணிக்காக
வாழ்க்கையினை அர்ப்பணித்து
இன்ப துன்ப நிகழ்வுகளை
இழந்து விட்ட தாதியிவள்

குந்தியிருந்து கதிரையிலே
குனிந்து சவளும் தலையுடனே
அடி வயிற்றில் பீதியுடன்
'அல்' முழுதும் அரைத்தூக்கம்

வாந்தி எடுக்கும் ஒரு கிழவர்
வயிற்றோட்டச் சிறு குழந்தை
வயிற்றைக் குமட்டும் காயத்துடன்
வலியால் துடித்தான் ஓர் இளைஞன்.

மூச்சடைக்கும் காச நோயும்
முரண்டு பிடிக்கும் நோயாளியும்
தாதி பொறுப்பில் வசப்படவே
தவிப்புக் கொண்டார் தாதியரே.

'வாட்டின்' தூய்மை பேணவென
வாளியிலே நீரெடுத்து
'மொப்பர்' கொண்டு நிலந்துடைத்து
மூன்று வேளை சேவை செய்தாள்.

மூன்று வயதுக் குழந்தையவள்
முகத்தின் நிழலில் வந்தாட
'அம்மா' என்ற குரலோசை
அவள் காதில் வந்து கனவாகும்.

செய்யுந் தொழிலே தெய்வமென்று
சொந்த விடயம் ஒதுக்கிட்டாள்
மருந்து வில்லை எடுத்திட்டாள்
மறந்திடாது கொடுத்திட்டாள்.

அம்மா வடிவத் தாதியிவள்
அர்ப்பணிப்பில் தியாகியிவள்
ஓய்வற்ற பம்பரமாய்
ஒற்றுமை பேணி உழைத்திடுவாள்.

கடமைதனைக் கண்ணாக்கி
கவலைதனை மண்ணாக்கி
தாதிப் பணியை உயர்வாக்கி
தியாகம் செய்யும் செம்மலிவள்

**சி.டிலக்சன்**
**தரம் - 9[C] (2020)**
**கிளி/ அக்கராயன் ம.வி**



# பாகமாடுதல் (Role)

பாகம் அல்லது Role என்பது பாகமாடுதல் எனக்கொள்ளப்படும். அதாவது ஒரு பாத்திரத்தைத் தாங்கியிருத்தலாகும். அத்துடன் இது ஒரு நாடக நுட்பமாகவும் கொள்ளப்படுகின்றது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் ஆளுமை, விசேட பண்புகள், நடிப்பு, செயற்கைநடை என்பவற்றை எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்துவதாகும். நாடகத்தை எடுத்துக் கொண்டால் அதில் தரப்படும் பாத்திரத்தை நாம் பார்த்த, அனுபவித்த விடயங்களை வைத்து நடித்தலும் பாகமாடுதல் எனக் கொள்ளமுடியும். ஏனெனில் அவருடைய பங்கை நடிகன் ஏற்றுள்ளான் என்பதாலாகும்.

Role என்ற வார்த்தையானது Latin சொல்லான Rotula அடியாத் தோற்றம் பெற்றது. Rotula என்பது மரக்குற்றி எனப் பொருள்படும். அதாவது நடிகருக்குத் தேவையான வசனங்கள் மரக்குற்றியைச் சுற்றி ஒட்டப்பட்டிருக்கும். மேடையில் நடிகருக்கு அந்த வசனம் ஞாபகப்படுத்தப்படும். இதனாலேயே Role என தோற்றம் பெற்றது. வகிபாகமானது ஒரு 'பாகத்தின் வெளிக்கொணர்கை' ஆகும்.

ஒரு வீட்டை எடுத்துக்கொண்டால் ஒருவர் குடும்பத்தலைவனாகவும், பிள்ளைகளுக்கு அப்பாவாகவும், மனைவிக்கு கணவனாகவும் இருப்பார். அதேநேரம் சமூகத்தில் ஒரு அமைப்பில் அங்கத்தவராகவும் வேலைபார்க்குமிடத்தில் Manager ஆகவும், ஆலயத்தில் சிறந்த பக்தனாகவும் காணப்படுகின்றார். இது போன்றே ஒவ்வொருவருக்கும் சமூகத்தில் வெவ்வேறு வகிபாகம் மாறுபட்டுக் காணப்படுகின்றது.

இப் பாகமானது பிரதானமாக இரண்டு வகைப்படும்.

01. Social Role - சமூகபாகங்கள்
02. Personal Role - தனியாள் வகிபாகம்.

சமூகப் பாகங்கள் என்பது மனிதன் தனது வாழ்நாளில் பல்வேறு பாகங்களைத் தாங்கியிருப்பார்.

"Police, Principal, Peon, Meson, Post man, Teacher, Painter, Tailor, Driver, Politition, Manager, Farmer, Actor, Writer, Engineer, Doctor, AGA, Lecturar"


என்று கூறிக்கொண்டே போகலாம். இது சமூகத்தில் ஒரு மனிதனை அடையாளப்படுத்தும். அவர் பெற்றுள்ள பதவிநிலை அந்தஸ்து அல்லது அவர் செய்கின்ற தொழிலை முதன்மையாக வைத்து அடையாளப்படுத்தப்படுகிறார். சமூக வகிபாகமானது ஒருவனது சமூக அந்தஸ்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாள் வகிபாகமானது சமூகத்தில் ஒருவருக்கு இருக்கும் பெயர், மதிப்பு என்பவற்றைக் குறிக்கும். இதில் அவரிடமுள்ள தனிப்பட்ட திறன்கள், தீய பழக்கங்கள், அவரது நடை, உடை, பாவனை முதலியன கணிக்கப்பட்டு சமூகத்தால் அவருக்குக் கொடுக்கப்படும் அந்தஸ்து இதுவாகும். உதாரணமாக நல்ல பெடியன், கள்ளன், கெட்டிக்காரன், ரவுடி, நோஞ்சான் என்று பல பட்டப்பெயர்கள் சூட்டப்பட்டிருக்கும். இது அவரது குடும்பம் மற்றும் உறவுகளையும் பிரதிபலிப்பதாக அமையும். கெட்டவனாக இருந்தால் வீதியால் செல்லும் போது இன்னாரின் மகன் என்று சுட்டிக்காட்டப்படுகின்றான்.

வகிபாகத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில் அது முழுமையானதாக இருக்க வேண்டும். நிரம்பப் பெற்றதாக இருந்தால் தான் மற்றவர்கள் அதனை முழுமையாக விளங்கிக் கொள்ளமுடியும். இது தனியாள் வகிபாகத்திற்கும், சமூக வகிபாகத்திற்கும் பொதுவாகும். தனியாள் வகிபாகத்தை ஒரு கல்லூரி மாணவனை அல்லது மாணவியை எடுத்துக்கொண்டால் அவரது பாகம் எவ்வாறு அமையும் என்பதைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக வகிபாகத்தின் பங்கு**

சமூகவியல் கருத்துப்படி தனியாள் வகிபாகத்தில் முரண்பாடுகளுடன் கூடிய எதிர்பார்ப்புக்களும் கேள்விகளும் இணைக்கப்பட்டிருக்கும் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாத போது அங்கு முரண்பாடு தோன்றுகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக மாணவனைக் குறிப்பிடலாம். வகிபாகத்தின் பங்கானது உறுதித்தன்மை இல்லாமல் போகும்போதும் வன்முறை உருவாகலாம். ஒவ்வொருவருடைய வகிபாகமும் அவரது தராதரத்திற்கு ஏற்பவும், வெவ்வேறு தளத்திற்கேற்பவும் வேறுபடுகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக ஒரு கடையில் Ware house இற்கு பொறுப்பாக இருப்பவர் அதில் மிகவும் நேர்த்தியாக செயற்படுகின்றார். அவர் வீடு வரும்போது வீடு குப்பையாக இருக்க மனைவியிடம் ' எல்லாம் ஒழுங்காக அடுக்கி இருக்க வேண்டும்' எனக் கூற மனைவி இது Ware house இல்லை இது வீடு என்கிறார்.

அடுத்து சமூகத்தில் வகிபாகத்தை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்று பார்த்தால் எனது வகிபாகம் மற்றவர்களுக்கு எவ்வாறு விளங்குகின்றது என்பது முக்கியம். அதாவது நாம் வகிக்கும் பாகத்தை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளும்போது மற்றவர்கள் நன்கு விளங்கிக் கொள்வது சாத்தியமாகின்றது.

வகிபாகமானது வாழ்க்கைக்கான ஒரு தந்திரோபாயமாக சமுகவியல் கருதுகின்றது. வாழ்க்கையின் போக்கைத் தந்திரமானதாக மாற்றி நடாத்திச் செல்ல இயங்குவியற் தன்மை முக்கியம் பெறுகின்றது. இவ் இயங்குவியற் தன்மைக்கு உதாரணமாக சீசனுக்கு ஏற்றவாறு வியாபாரத்தைக் குறிப்பிடலாம். அதேபோன்று Status என்பது ஒரு சமூக வகுப்பு என்றும் குறிப்பிடப்படுகிறது.

நடிகர்களுடைய வகிபாகத்தை நோக்கின் அது பரப்புக் கூடியதாகக் காணப்படும். அதாவது அவனுக்கு எல்லா விடயத்திலும் பரந்த அறிவு இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. நடிகனானவன் எவ்வாறு செயற்றிறனைக் காட்டி நடிப்பை மேற்கொள்கின்றானோ அந்தளவிற்கு நடிக்கும் வகிபாகம் சிறந்ததாக அமையும். ஒரு பாத்திரத்தை ஏற்று நடிப்பதற்கு அப்பாத்திரத்தின் அனைத்து இயல்புகளையும் உள்வாங்கி நடிப்பதன் மூலம் அது சிறந்ததாக அமையும்.

இவ்வகிபாகமானது இடத்திற்கிடம் வேறுபடுவதை அவதானிப்போம். உதாரணமாக ஓர் ஆசிரியரை எடுத்துக் கொண்டால் அவர் பாடசாலையில் ஆசிரியராகவும், தனது பிள்ளைகளுக்குத் தகப்பனாகவும், ஒரு கணவனாகவும், கிராம அமைப்பில் ஓர் உறுப்பினராகவும் தளத்திற்கேற்ப வேறுபடுகின்றார். இந்த மாறுபடல் தான் சமூகவியல் பங்கு எனக் குறிப்பிடப்படுகின்றது. அதேநேரம் சமூகவியலில் Role என்பது ஒரு நபரிடம் எதிர்பார்க்கப்படுகின்ற சமூக நிலைக்கு ஏற்றவாறான அவரின் நடத்தையாகும். இது இவ்வாறு சில தன்மையில் அமைகின்றது. ஒருவரது நடத்தை இன்னொருவருக்கு முன்மாதிரியாக அமைகின்றது. சமூக நிலையில் ஒருவரிடம் ஏற்படும் அந்தஸ்து மற்றும் அதில் ஏற்படும் சிரமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரிடம் காணப்படும் ஆளுமை மற்றும் திறனை ஆதரிக்கும் பண்பு சமூக சூழ்நிலையில் ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும் விடயங்கள் சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்தல் போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம். குழந்தையை எடுத்துக் கொண்டால் அது பிறந்ததிலிருந்து தான் உள்ள சூழலில் உள்ளவற்றைக் கற்றுக் கொள்கின்றது. அதன்மூலம் தனது அனுபவத்தையும் பெறுகின்றது. மற்றவர்களது உணர்வுகளை உள்வாங்கி விளையாட்டுடன் கூடிய நடித்தலை சிறுவயதிலிருந்தே கற்பனை மூலம் உருவாக்கி சூழலைப் புரிந்து கொள்கின்றது. எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களில் சமூகவியலில் வகிபாகத்தின் பங்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

## உளவியல் ரீதியான பார்வை

உளவியல் வகிபாகத்தின் தன்மையானது சமூகத்தில் முக்கியமானதாகும். உளவியலைப் பொறுத்தமட்டில் வகிபாகம் என்பது கடமை, பொறுப்பு, சலுகை, தனிச்சுதந்திரம், அந்தஸ்து, கடமைப்பட்டிருத்தல் என்பன சேர்ந்த தனியான ஒரு சமூகநிலை அல்லது பதவி நிலையாகும். உதாரணமாக அப்பாவின் பதவி நிலையானது சமூக அமைப்புடன் கூடிய எதிர்பார்ப்பாக உள்ளது. இருந்தாலும் கலாசாரம், சமூகம் மற்றும் வேறு சந்தர்ப்பங்களில் வித்தியாசமான எதிர்பார்ப்புள்ள தந்தையாக இருக்கக்கூடும்.

ஐக்கியநிலை என்பதை எடுத்துக் கொண்டால் தற்காலத்தில் பிள்ளைகள் பெற்றோரை நிராகரிப்பதில்லை. எனினும் வெளிநாடுகளிலிருந்தும் சரி, எமது நாட்டிலும் சரி அனேகமாக பெற்றோர்கள் பிள்ளைகளின் திருமணத்தை தெரிவு செய்வதில்லை. பிள்ளைகளே அதைத் தெரிவு செய்கின்றனர். ஆனால் சில பிரதேசங்களில் குழந்தை பிறந்த உடனேயே திருமணம் நிச்சயிக்கப்பட்டுவிடுகிறது.

வகிபாகமானது மனித நடத்தையோடு மிக உறுதியாகப் பின்னிப் பிணைந்துள்ளது என்றும் மனிதனது ஒவ்வொரு நடத்தையும் வகிபாகமாக வெளிப்படுகின்றன. சேக்ஸ்பியர் 'உலகம் ஒரு நாடக மேடை அதில் நாம் அனைவரும் நடிகர்கள்' என்று கூறுகின்றார்.

சமூகத்தில் ஒருவர் கூடுதலான வகிபங்குகளை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு விடயத்தையும் புரிந்து கொள்ளும் நிலையும், புலக்காட்சியும் விரிவடைவதால் ஒத்துணர்வு என்ற உளவியல் நிலை மேம்படக் கூடியதாக இருக்கும். வகிபங்கை வளமுடன் ஆற்றுகை செய்வதற்கு இவ் ஒத்துணர்வு பொருத்தமான விசையாகத் தொழிற்படும். இதற்கு உளவியல் துணை புரிகின்றது.

வகிபாகம் என்பது நடிகரின் செயற்பாடுகளை வெளிப்படுத்தப் பயன்படுகின்றன. மக்கள் தமக்குரிய பாத்திரங்களைத் தாமாகவே ஏற்று நடிக்கின்றனர். மனித நடத்தையை எதிர்வு கூறவும் அவதானிப்பதற்காகவும் ஒரு கருவியாக செயற்படுகின்ற மனித எண்ணக்கருக்களைத் தாங்கள் ஆற்றுகின்ற போது வகிபாகமானது முக்கிய இடம் வகிக்கின்றது.

**ச.சுஜீவன்**

**பழைய மாணவன்**

**2012 க.பொ.த உயர்தரம்**

**யாழ் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்துள்ளார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் – IV

## கல்வியியற் கட்டுரைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் தரத்தை உயர்த்த என்ன செய்யப் போகின்றோம்...!



இலங்கையின் கல்வி வரலாற்றில் பேசுபொருளாகவும், விமர்சனத்திற்குரியதாகவும் இன்று வடக்கு மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலையின்போக்கு பற்றியதாகவே உள்ளது. அண்மைக்காலமாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் வட மாகாணக் கல்வியியலாளர்களிடையே மட்டுமல்லாது, ஊடகங்களினாலும், கல்வி நடைமுறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களாலும், அரசியல்வாதிகளாலும் பல்வேறு வகையிலான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஒரு சிலரால் கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களமும், வலயங்களும் சரியாகத் தமது கடமைகளை ஆற்றவில்லை என்ற குறைபாடு முன்வைக்கப்படுகின்றது. இன்னும் ஒரு சாராரால் எல்லா வளங்களும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட போதும். அதிபர்களும், ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் கடமைகளை ஆற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது. இன்னும் சிலரால் எல்லாம் சரியாக இருந்தும் பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படாததால், அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை என்றும், பெற்றோர்களுடன் சேர்ந்து மாணவர்களும் அதிகளவில் தொலைக்காட்சிகளைப் பார்வையிடுவதிலும், செல்லிடத் தொலைபேசிகள் அல்லது ஸ்மாட் போன்களைப் பார்வையிடுவதிலும், தொலைக்காட்சி விளையாட்டுக்களில் ஈடுபடுவதனாலும், கல்வியின் மீதான நாட்டம் குறைந்து வருவதாகவும் சிலர் கருதுகின்றனர்.

பாடசாலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்குத் தனியார் கல்வி நிலையங்களின் அதிகரித்த செயற்பாடுகள் தடையாக இருப்பதாகவும், இரு வெவ்வேறு நிலைப்படுத்தப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகளினால் மாணவர்களிடையே மனக்குழப்பங்கள் ஏற்படுவதால், கல்வியில் முழுமையான ஈடுபாட்டைக் காட்டமுடியாது போவதாகவும் பெரும்பாலான அதிபர்கள் குறிப்பிடுகின்றனர்.

சில ஆசிரியர்களும், ஒருசில அதிபர்களும்கூட பெண் மாணவிகள் மீது தகாத முறையில் நடந்து கொள்வதால் மாணவிகள் பாடசாலைகளுக்கு வருவதற்கு அச்சப்படுவதாக சமூகவியலாளர்களும், மனிதஉரிமை அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் குற்றம் சாட்டுகின்றனர். அதேவேளை தமிழ் பிரதேசங்களை அரசாங்கம் பாரபட்சமாக நடத்துவதால் கல்விசார்ந்த முதலீடுகளை வடக்கில் மேற்கொள்வதில்லை என்றும் வடக்கிற்கும், தெற்குக்கும் இடையில் பாரிய வளப் பகிர்வுக் குறைபாடுகள் இருப்பதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களிடையே போதைவஸ்து மற்றும் மதுபாவனை காரணமாகக் கல்விகற்கும் வயதிலேயே தவறான பழக்கவழக்கங்களுக்கு ஆளாகிவிடுகின்றனர். மேலும் இளம் வயதிலேயே பாரிய வலுக்கூடிய மோட்டார் வண்டிகளைப் பெற்றோர்கள் வாங்கிக் கொடுத்து அவர்களின் விருப்பப்படியெல்லாம் நடப்பதால் அவர்களுக்குக் கல்வியின் மீதான நாட்டத்தைவிட வெளிநாடு போனால் ஏராளமான பணத்தைச் சுலபமாக உழைக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கியிருப்பதாகவும் பெரும்பாலான கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய அனாவசியமான செலவினங் களுக்குப் பணத்தை வழங்கும் பெற்றோர்களும், அவர்களுக்குத் தேவைக்கும் அதிகமான பணத்தை அனுப்பி வைக்கும் புலம் பெயர்ந்தவர்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமாக இருக்கின்றனர் என்ற பாரிய குற்றச்சாட்டும் பெற்றோர்கள் மீதும் புலம் பெயர்ந்தவர்கள் மீதும் முன்வைக்கப்படுகின்றது.

இத்தகைய ஒரு சூழமைவில் மேற்குறிப்பிடப்பட்ட குற்றச் சாட்டுக்களை முற்றாகவே நிராகரிக்க முடியாத போதும், பல்வேறு வாதப்பிரதிவாதங்களின் மத்தியில் தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சிப் போக்கைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இவை தொடர்பான கருத்துக்களுக்கான விளக்கங்களையோ அல்லது நியாயப்படுத்தல்களையோ, முன்வைப்பதைவிட்டு, வடமாகாணம் உண்மையில் கல்வித்தரத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று கண்டறிந்தால், அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளை முன்னெடுப்பதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

ஆனால் கடந்த பத்து ஆண்டுகால க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்துபார்க்கும்பொழுது, வடமாகாணம் கல்வியில் பின்தங்கியிருக்கவில்லை என்பதையும், அதேவேளை ஏனைய மாகாணங்கள் வட மாகாணத்தை விட விரைவான முன்னேற்றத்தையும் வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகள் குறைந்தளவு வீதத்திலான பெறுபேற்று வளர்ச்சியையும் அடைந்துள்ளமையைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. ஆனால், இதற்கு எதிர்மாறாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏனைய மாகாணங்களைவிட வடமாகாணம் மிக உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏனைய மாகாணங்களைவிட வட மாகாணப் பரீட்சைப் பெறுபேறுகள் முதல் இரண்டு நிலைகளில் தொடர்ச்சியாக உயர்வாகக் காணப்படுவதால், மேல்மாகாணத்தைவிட அதிகளவிலான தகுதிச் சித்திகளை (Merit Pass) வடமாகாண மாணவர்கள் பெற்றுள்ளதால் 2019 ஆம் ஆண்டு பெறுபேறுகளுக்குஅமைய அதிகளவிலான மாணவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளுக்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய உயர்பெறுபேறுகளின் வீதத்தைப் பார்த்தால், வடமாகாணம் கல்வித் தரத்தில் மேல்நிலையில் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த இருவேறு முரண்பட்ட நிலைகளுக்கான காரணம் தொடர்பாக கல்வியாளர்களினால் கடந்த சில ஆண்டுகளாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பொழுது க.பொ.த. உயர்தரத்தில் மிக உயர்ந்த பெறுபேறுகளையும்,சாதாரண தரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்நத பெறுபேறுகளையும் கொண்டிருப்பது தொடர்பாகப் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வந்த யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர், பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கத்தினால் இலங்கையில் உள்ள 10259 பாடசாலைகளினதும் கற்றல் அபிவிருத்திதொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகள்,கற்றல் உபகரணங்கள், ஆசிரியர்கள், அதிபர்களுக்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வழங்கப்படும் பயிற்சிகள் போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக அரசின் பாதீடுகளிலும் அதிகளவிலான நிதி கல்விக்காகவும் ஒதுக்கப்படுகின்றன.

2. மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கற்றல் கற்பித்தல் விருத்தியை மேம்படுத்திக் கல்விப் பெறுபேறுகளை உயர்த்துவதற்காக கற்றல் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், ஆசிரியர்களின் வாண்மை விருத்திச் செயற்பாட்டிற்காகவும், மாணவர்களின் உயர் மட்டக் கற்றல் செயற்பாடுகளுக்காகவும் தரஉள்ளீடு மூலம் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை பாடசாலைகளுக்கு நேரடியாகவே வழங்கப்படுகின்றது. இந்த நிதியைக் குறிப்பிட்ட கல்வி ஆண்டிற் குள்ளேயே பயன்படுத்தி முடிக்கப்படவேண்டுமென்ற அறிவுறுத்தலுடன் இந்நிதி எவ்வித பாரபட்சமும் இன்றி தேசிய பாடசாலைகள் தவிர்ந்த சகல மாகாணப் பாடசாலைகளுக்கும் மாணவர் தொகை அடிப்படையில் பங்கிட்டு வழங்கப்படுகின்றது. இந்த நிதி முறையான திட்டமிடல் மூலம் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்காகப் பயன்படுத்தவில்லை என்று மேற்பார்வை அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. கடந்த காலங்களில் பாடசாலைகள் இந்த நிதியைப் பயன்படுத்துவதில் அவதானிக்கப் பட்ட குறைபாடுகளாகப் பின்வருவன இனங்காணப்பட்டுள்ளன:

தர உள்ளீட்டு நிதியில் கொள்வனவு செய்யப்படும் கற்றல் உபகரணங்கள், எழுதுகருவிகள் என்பன பெரும்பாலான பாடசாலைகளில் நிதியைச் செலவழித்து முடிக்கவேண்டுமென்பதற்காக வருடமுடிவிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் இவை ஆசிரியர்களினால் கற்றல் நடவடிக்கைகளில் உரிய நேரத்திற்குள் முழுமையாகப் பயன் படுத்தப்படாது, பெரும் பாலான கற்றல் உபகரணங்கள் அதிபரின் அலுவலகத்தில் உள்ள அலுமாரிகளில் அல்லது ஆய்வுகூடங்களின் அலுமாரிகளின்மேல் தேக்கி வைக்கப்படுகின்றது. இதற்கு வருட ஆரம்பத்திலேயே ஆசிரியர் கூட்டங்களை வைத்து கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப் படவேண்டிய செயற்பாடுகளைப் பாடசாலைகளின் ஆசிரியர்களின் முழுமையான பங்கேற்புடன் அவற்றிற்குத் தேவையான வளங்களைப் பாடத் தேர்ச்சி அடிப்படையில் பட்டியலிடப்படவேண்டும். அதற்கமைய கிடைக்கின்ற அல்லது கிடைக்க இருக்கின்ற தர உள்ளீட்டு நிதியைப் பாடரீதியாகப் பகிர்ந்து கொடுப்பதுடன், அவை உரிய தேர்ச்சிகளைக் கற்பிப்பதற்கு ஒழுங்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை உள்ளக மேற்பார்வைகளின் மூலம் மதிப்பிட்டுக் கொள்ளவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடையவையாக இருப்பதுடன், உரிய நிதி, உரிய காலப்பகுதிக்குள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அதே வேளை செயற்பாட்டு ரீதியாக வளங்களைப் பயன்படுத்திக் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும் பொழுது மாணவர்களும் ஆர்வத்துடன் ஈடுபடுவதுடன், அவர்களின் வரவின்மை, இடைவிலகல் போன்றவையும் குறைவடையும்.

பல பாடசாலைகளில் கல்வித் தரமேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட தரஉள்ளீட்டு நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படாது, ஒவ்வொரு வருடமும் குறித்த தொகைப்பணம் மீதமாக்கப்பட்டு சேமிப்பாக வங்கிகளில் வைப்பில் இடப்படுகின்றன. அல்லது வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

*தரஉள்ளீட்டில் கொள்வனவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படாது அலுமாரிகளில்*
*இருக்கும் பயன்படுத்தாதுள்ள கற்றல் உபகரணங்கள் விஞ்ஞான உபகரணங்கள்*





இதன்மூலம் சில பாடசாலைகளின் சேமிப்புக்கணக்கில் பலஇலட்சம் ரூபாவரை இருப்பில் காட்டப்படுகின்றது. இது அரசின் கல்விக் கொள்கைக்கு எதிரான நடவடிக்கை மட்டுமல்லாது, மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் துஸ்பிரயோகமாகவே பார்க்கப்படும். இது தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப் பாடுகள் தொடர்பாக இடம் பெற்ற கணக்காய்வு அறிக்கையில் இந்த துஸ்பிரயோகம் வெளிக்கொணரப் பட்டுப் பலர் தண்டிக்கப்பட்டும் இருக்கின்றார்கள். எனவே இத்தகைய குறைபாடுகள் பாடசாலைகளில் தொடர்ந்தும் இடம்பெறாது பார்த்துக் கொள்வது அதிபர்களின் பொறுப்பு மட்டுமல்லாது, பாடசாலையின் ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வி அதிகாரிகள் எல்லோரதும் பொறுப்பும் கடமையுமாகும். இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காகவே இதனைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு ஒவ்வொரு வருடமும் கிடைக்கின்ற தர உள்ளீட்டு நிதி தொடர்பாகவும் எந்தெந்தச் செலவினங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது தொடர்பாகவும் பகிரங்கமாகக் காட்சிப் படுத்துவ தற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதன்மூலம் பாடசாலையின் வெளிப் படைத் தன்மையும் பேணப்படும்.

இந்நிதியில் இருந்து ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனுடைய தாக்குவதற்கும், அவர்களின் தொழில் வாண்மையை மேம்படுத்துவதற்காகவும், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காகவும், உயர்மட்டக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக (Higher Order Learning and Teaching Process) ஒரு குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்நிதியைப் பயன்படுத்துவது தொடர்பாகப் பாடசாலைகள் முறையான திட்டம் வகுத்துச் செயற்படுத்தவேண்டும். ஆசிரியர்களின் கற்பித்தலில் எதிர் நோக்கும் இடர்ப்பாடுகள் இனங்காணப் படுவதுடன் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களிடம் இருந்தும் கற்றல் தேவைகள் இனங்காணப்பட்டு அவர்களின் அபிப்பிராயங்கள் பெறப்படவேண்டும். இவ்வாறு பெறப்படும் அபிப்பிராயங்கள் கல்வி அபிவிருத்திக் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு அவை முன்னுரிமைப்படுத்தப் பட்டு செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்படவேண்டும். ஆசிரியர்களுக்கான உயர் மட்டக் கல்விச் செயற் பாடுகள் தொடர்பான செயலமர்வுகள் வருட நடுப்பகுதிக்குள்ளாகவே நடத்தி முடிக்கப்படுவதற்கேற்ற வகையில் திட்டமிடப்பட வேண்டும். ஆனால் பல பாடசாலைகள் வருடமுடிவில் அவசர அவசரமாகப் பொருத்தமற்ற வளவாளர்களை ஒழுங்கு செய்வதுடன், ஆசிரியர்களின் கற்றல்- கற்பித்தல் செயல்பாட்டிற்குத் தேவையற்ற விடயங்கள் தொடர்பாகவுமே செயலமர்வுகளைத் நடத்தி முடிக்கின்றனர். அதேவேளை வருட இறுதியில் இந்தச் செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்படுவதால் மாணவர்களின் இறுதிநேரக் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், ஆசிரியர்களின் சுமையும் அதிகரிக்கின்றது. இதனால் எதிர்பார்த்த இலக்கும் அடைய முடியாது போகின்றது.

பல பாடசாலைகளில் தரஉள்ளீட்டு நிதி தொடர்பான கணக்குப் பதிவேடுகளைப் பேணுவதிலும், பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் அதிபர்களே ஈடுபடுவதால் அங்கே நம்பிக்கையின்மையும் சந்தேகமும் ஏற்படுகின்றது. ஆனால்,இவை தொடர்பான அனைத்துப் பொறுப்புக்களையும், நடவடிக்கைகளையும் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுக்களிடம் கையளித்துவிட்டு, அதிபர்கள், கண்காணிப்பாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் செயற்படும் பொழுது, வெளிப்படைத் தன்மை பேணப்படும்.

கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்காகக் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அழிபொருட்களாக இருந்தாலும், அவற்றிற்காகத் தனியான பொருட்பதிவேட்டில் பதியப்பட வேண்டும். இதன் மூலம் யாரால் எந்தத் தேவைக்காக எவ்வளவு பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பன போன்ற விபரங்ளையும் அறிந்து கொள்ளலாம். இது மறைமுகமான ஒரு அளவீடாகவும் இருக்கும்.

அதேவேளை வலய மட்ட மேற்பார்வைக்குழு தரஉள்ளீட்டு நிதியின் பயன்பாடு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளையும், வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும். தர உள்ளீட்டு நிதியானது, பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்காகக் கிடைக்கப்பெற்ற வரமாகவே அதிபர்கள் கருதவேண்டும்.

3. ஏனைய மாகாணங்களில் ஆசிரியர் நியமனங்கள் போதியளவு வழங்கப்படுவது போன்றே வட மாகாணப் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரித்து, அவர்களிடம் இருந்து விளைதிறன்மிக்க உச்சப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும்பாலான பாடசாலைகள் தவறிவிட்டன. வடமாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணி எண்ணிக்கைக்கு மேலாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதும் முறையான திட்டமிடல் மற்றும் ஆசிரியர் நியமனங்கள், இடமாற்றக் கொள்கைகள், ஆசிரியர்களுக்கான வேலைப் பகிர்வுகள் என்பன கடைப்பிடிக்காமையால், சமமற்ற ஆசிரியர் வளப்பங்கீடுகள் காணப்படுகின்றன. நகரப்புறப் பாடசாலைகளில் அதிகளவிலான ஆசிரியர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் புறங்களில் குறைந்தளவு எண்ணிக்கையிலான ஆசிரியர்களும் நியமிக்கப்படும் நிலையில் பாடசாலைப் பொதுப்பரீட்சைகளிலும் நகர, கிராமப்புற ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. வடமாகாணத்தில் கிழக்கு மற்றும் தென் மாகாணங்களைவிடக் குறைந்தளவு பாடசாலைகளும், மாணவர்களும் உள்ளபோதும், கிளிநொச்சி மாவட்டம் 14:1 என்ற விகிதத்திலும், ஏனைய மாவட்டங்களில் மாணவர், ஆசிரியர் விகிதம் 12 : 1 என்ற விகிதத்திலும், கிழக்கு மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் 18:1 என்ற விகிதத்திலும் காணப்படுகின்றது. மேல்மாகாணத்தில் மாணவர், ஆசிரியர் விகிதமானது 21: 1ஆக இருக்க தேசியரீதியில் 18: 1 ஆகக் காணப்படுகின்றது. அந்தவகையில் வடமாகாணத்திலேயே அதிகளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக இலங்கையின் 97 வலயங்களிலும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி 97 ஆவதாக தர வரிசைப்படுத்தப்பட்ட தீவகவலயத்தில் மாணவர்- ஆசிரியர் விகிதமானது 12:1 ஆக இருப்பது ஆசிரியவளம் தொடர்பான பகுப்பாய்வுக்கு அப்பாற்பட்ட ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. ஆனால் இவை பாடசாலைகளின் தேவை அடிப்படையில் தகைமைகளை அறிந்து நியமிக்கப்படாததால்,வடமாகாணத்தில் பல பாடசாலைகளில் சமநிலையற்ற ஆசிரியர் வளங்கள் காணப்படுகின்றன. இதுவே வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக உள்ளது என்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை-01 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 01**

**வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளின் ,ஆசிரியர் மாணவர் விகிதம்**

| | மாவட்டம் | தமிழ் மொழி | | ஆங்கிலமொழி | | சிங்கள மொழி | | மொத்தம் | | மாணவர் ஆசிரியர் விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆசிரியர் | மாணவர் | ஆசிரியர் | மாணவர் | ஆசிரியர் | மாணவர் | ஆசிரியர் | மாணவர் | |
| 1 | யாழ்ப்பாணம் | 8,525 | 93,223 | 1,179 | 24,930 | -- | --- | 9,704 | 118,153 | 12:1 |
| 2 | கிளிநொச்சி | 2,131 | 29,929 | 91 | 1,891 | ---- | ----- | 2,222 | 31820 | **14:1** |
| 3 | மன்னார் | 2,330 | 29,992 | -- | ---- | ----- | ---- | 2,330 | 29992 | 12:1 |
| 4 | முல்லைத்தீவு | 1,968 | 25,129 | 65 | 878 | 154 | 2187 | 2,187 | 28,082 | 12:1 |
| 5 | வவுனியா | 2,234 | 24,448 | 467 | 3,913 | 349 | 8037 | 3,050 | 36,398 | 12:1 |
| | மொத்தம் | **17,188** | **202,721** | **1,802** | **31,612** | **503** | **10224** | **19,493** | **244,445** | **12:1** |

ஆயினும்,வடமாகாணத்தில், சில பாடசாலைகளில் விஞ்ஞானம்,கணிதம்,ஆங்கிலம் போன்ற வகுதி ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவுகின்றது.

ஆனால், 13 ஆம் திருத்தச் சட்டத்தில் கல்வி மாகாணங்களுக்கே பகிரப்பட்டுள்ள விடயமாதலால், தேவையான வகுதிகளிலான பட்டதாரி ஆசிரியர்களை இனங்கண்டு நியமிக்கவேண்டிய பொறுப்பு வடமாகாணக் கல்வி அமைச்சையே சார்ந்தது. அதேவேளை சில வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாகக் காணப்படும் நிலையில் பல பாடசாலைகளின் அதிபர்கள் தம்மிடம் உள்ள ஆசிரியர் ஆளணியின் தொகையை வெளிப்படுத்தாது, கல்வி வலயங்களுக்குத் தெரியப்படுத்தாதும் இருப்பதால் பல ஆசிரியர்கள் முடக்கப்பட்ட நிலையிலும் இருக்கின்றனர். ஒரு பாடசாலையில் ஆளணிக் கோப்புக்கு மேலதிகமாக ஆசிரியர்களை வைத்திருக்கும், அதிபரிடம் இருந்தே அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்கள் அறவீடு செய்யப்படும் என்ற சுற்றறிக்கையை எவரும் கவனத்தில் எடுத்ததாகவும் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் போதிய ஆசிரியர்களை நியமிக்கவில்லை என்று மத்திய கல்விஅமைச்சைக் குறைகூறுவதை விட்டு இத்தகைய குறைபாடுகள் நீக்கப்படுவதற்கான முயற்சிகளை வடமாகாணக் கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களமுமே பாரபட்சமின்றி எடுக்கவேண்டும். இந்த நிலையில் ஆசிரியர் நியமனங்களில் வடமாகாணம் புறக்கணிக்கப்படுவதாகக் கூறுவதும் ஏற்க முடியாதது.

4. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையின் மாகாண ரீதியிலான தர வரிசைபபடுத்தலில் வடமாகாணம் 9 ஆவது நிலையிலும்,கிழக்கு மாகாணம் 8 ஆவது நிலையிலும் காணப்படுவதற்கான பிரதான காரணிகளில் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெறத் தவறியோர்களின் வீதமும் தங்கியுள்ளது என்பதை அதிபர்கள் கவனத்தில் எடுப்பதில்லை. பாடசாலை மட்டத்தில் நடத்தப்படுகின்ற பரீட்சைகளின் பெறுபேற்றுப் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாணவரும் எந்த நிலையில் இருக்கின்றார்கள் என்பதை அறிய முடியும். ஏனைய சில மாகாணங்களின் சித்தியின்மை வீதத்துடன் ஒப்பிடும் பொழுது, வடமாகாணப் பாடசாலை மாணவர்களின் சித்தியின்மை வீதம் அதிகமாகக் காணப்படுவதைப் பின்வரும் அட்டவணை 2இன் மூலம் அறியலாம். இங்கு 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இறுதி நிலையில் இருந்த தென்மாகாணம் தற்பொழுது கடந்த ஆறு வருடங்களாக முதலாவது நிலையிலேயே உள்ளமைக்கு சித்தியின்மையின் குறைந்தளவிலான வீதமும் ஒரு காரணமாகும்.

*அட்டவணை:2*

வடக்கு கிழக்கு தென் மாகாணங்களில் 2008-2019 இல் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதோர் வீதம்:

| ஆண்டு | வடக்கு | கிழக்கு | தென் | தேசிய நிலையில் |
|---|---|---|---|---|
| 2008 | 3.50 | 5.23 | 7.53 | 6.22 |
| 2009 | 2.71 | 4.95 | 8.17 | 6.98 |
| 2010 | 4.83 | 3.96 | 5.94 | 6.31 |
| 2011 | 3.58 | 3.80 | 5.42 | 4.74 |
| 2012 | 2.78 | 2.85 | 4.48 | 4.13 |
| 2013 | 2.39 | 2.26 | 3.89 | 3.67 |
| 2014 | 3.75 | 2.27 | 2.39 | 3.17 |
| 2015 | 4.53 | 2.95 | 2.07 | 3.18 |
| 2016 | 4.47 | 3.69 | 1.86 | 3.11 |
| 2017 | 3.46 | 3.08 | 1.23 | 2.46 |
| 2018 | 2.55 | 2.18 | 1.11 | 2.00 |
| 2019 | 2.63 | 2.48 | 1.60 | 2.29 |

இத்தரவுகளின் படி வடமாகாணத்தில் 2018 இல் சித்தியின்மை வீதம் 3.55 வீதமாகவும் 2019 இல் 2.63 வீதமாகவும் இருக்க தேசிய நிலையில் இது முறையே 2.00 வீதமாகவும்,2.29 வீதமாகவும் இருந்தது. ஆயினும் வடமாகாணத்தில் 2015 இல் 4.53 வீதமாகவும்,2016 இல் 4.47 வீதமாகவும், 2017 இல் 3.46 வீதமாகவும் இருந்து வந்த சித்தியின்மை வீதத்தைக் குறைப்பதற்காக, சித்தியடைவதற்கான எல்லைப்புள்ளியில் இருக்கும் மாணவர்களின் சித்தியடையும் வீதத்தைக் கூட்டுவதற்காக ஒரு செயற்திட்டத்தை வடமாகாணக் கல்விஅமைச்சராக இருந்த கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்களினால் 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டதால் சித்தியின்மை வீதம் முன்னைய ஆண்டுகளைவிட இவ்விரு ஆண்டுகளிலும் கணிசமாகக் குறைவடைந்துள்ளன. அதேவேளை 2008,2009 ஆம் ஆண்டுகளில் வடக்கில் இறுதி யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில் சித்தியின்மை வீதம் அதிகமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக 'ஆசியா பவுண்டேசன்' அமைப்பின் அனுசரணையில் க.பொ.த. சாதாரண தரப் பெறுபேற்றை உயர்த்துதல் என்ற குறிக்கோளை வைத்து 2017 ஆம் ஆண்டில் பாடசாலைகளின் கல்வித்தர மேம்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு கடந்த இரு தவணைப் பரீட்சைப் பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒவ்வொரு மாணவரினதும் தற்போதைய நிலை பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதன்மூலம் இவ்வருடம் சித்தியெய்தத் தவறப்போகும் மாணவர்கள் யார் யார், அவர்கள் எத்தனை புள்ளிகளினால் அந்த வாய்ப்பை இழக்கப்போகின்றனர், அவ்வாறான மாணவர் களில் ஒவ்வொரு பாடரீதியாக 14 % ற்கும் 34% வீதத்திற்கும் இடையிலான புள்ளிகளைப் பெறும் மாணவர்களின் விபரங்கள் வழங்கப்பட்டு அவர்களை எவ்வாறு ஒரு சில புள்ளிகளை மேலும் பெறச்செய்து சித்தியடையச் செய்யலாம் என்ற ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஒவ்வொரு அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் சரியான முறையில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தினால், சித்தி பெறத்தவறும் மாணவர்களின் வீதத்தைக் குறைத்து தமது பாடசாலைகளின் சித்திவீதத்தைக் கூட்டமுடியும் என்ற ஒரு நம்பிக்கை அப்போது ஒவ்வொரு அதிபரிடமும் ஏற்பட்டது. இந்தத் துரித நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிட்டால், வடக்கில் சித்தியின்மை வீதம் மேலும் அதிகரித்திருக்கும்..

இந்தத் துரித செயற்றிட்டத்தை வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக வலயங்களுக்கும் நேரடியாகச் சென்று அதிபர்களுக்கான விளக்கங்களை வழங்கியதில் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை எடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, ஆறுதல் நிறுவனத்தின் துரித கற்றல் ஊக்கிகள், வலயங்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் எடுத்த முயற்சிகள் என்பன காரணமாகவும் 2017/2018 ஆகிய ஆண்டுகளில் சித்தியின்மை வீதம் குறைவடைந்தது.

ஆயினும் சித்தி பெறவேண்டிய புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெறக்கூடிய இத்தகைய மாணவர்களுக்குச் சில குறுங்காலப் பயிற்சிகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சில தேர்ச்சிகளில் மட்டும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வந்தால் குறுகிய காலத்தினுள் அவர்களை ஆகக்குறைந்த அளவிலான 'சாதாரண சித்தியைப்' பெறவைக்கமுடியும். இதனால் சித்தியின்மை வீதத்தின் போக்கை மேலும் குறைத்திருக்கலாம்.

5. 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுகளில் ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலேயே மிகவும் குறைந்த அடைவை வடமாகாணம் பெற்றுள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணை 3 இன்மூலம் அறிந்து கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அட்டவணை:03*

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா.த) பரீட்சையில் பாடங்களினதும் பெறுபேற்றுப் பகுப்பாய்வுகள்.

| வலயம் | சைவ நெறி | கத்தோலிக்கம் | கிறிஸ்தவம் | இஸ்லாம் | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் | வரலாறு | விஞ்ஞானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 91.17 | 92.48 | 85.42 | 50.00 | 89.77 | 61.83 | 74.82 | 81.89 | 63.11 |
| தீவகம் | 77.10 | 83.93 | 69.23 | 33.33 | 75.91 | 21.66 | 53.30 | 58.78 | 33.51 |
| கிளிநொச்சி | 81.66 | 89.86 | 64.74 | 83.33 | 84.61 | 33.38 | 63.43 | 69.39 | 47.85 |
| மடு | 88.13 | 99.03 | 71.43 | 81.48 | 94.25 | 22.25 | 63.07 | 74.50 | 35.59 |
| மன்னார் | 95.07 | 98.69 | 87.67 | 85.94 | 95.53 | 54.94 | 71.70 | 81.77 | 55.14 |
| முல்லைத்தீவு | 82.73 | 92.14 | 100 | 76.92 | 90.81 | 39.59 | 63.35 | 77.78 | 50.00 |
| தென்மராட்சி | 83.57 | 85.42 | 66.67 | | 84.78 | 47.00 | 68.48 | 68.63 | 55.82 |
| துணுக்காய் | 80.68 | 92.86 | 50.00 | | 85.71 | 25.10 | 60.12 | 71.02 | 38.78 |
| வடமராட்சி | 86.98 | 91.25 | 81.82 | | 89.93 | 54.97 | 73.43 | 74.00 | 57.42 |
| வலிகாமம் | 86.61 | 91.25 | 81.65 | | 86.77 | 42.28 | 66.00 | 68.55 | 45.15 |
| வவுனியாதெற்கு | 88.39 | 97.13 | 83.47 | 86.51 | 92.09 | 52.62 | 66.73 | 77.48 | 56.72 |
| வவுனியாவடக்கு | 84.77 | 93.62 | | | 85.36 | 33.05 | 62.13 | 68.83 | 37.87 |
| **மாகாணநிலை** | 86.03 | 93.56 | 78.57 | 84.09 | 88.43 | 46.01 | 67.55 | 74.19 | 51.89 |
| **தேசிய நிலை** | 85.49 | 92.61 | 86.28 | 82.64 | 87.05 | 62.36 | 71.08 | 83.51 | 65.45 |

இங்கு காட்டப்பட்ட அட்டவணை 3 இன்படி சமயம்,தமிழ்,கணிதம்,வரலாறு ஆகிய பாடங்கள் கணிசமான அளவு உயர்ந்த பெறுபேற்றைக் கொண்டிருந்தபோதிலும், ஆங்கிலம்,விஞ்ஞானம் ஆகிய பெறுபேறுகள் வீழ்சியடைந்த நிலையிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றன. இப்பெறுபேறுகள், பின்வரும் பல விடயங்களை வெளிப்படுத்தப்படுகின்றன.

01. தமிழ் மொழிப் பாடத்திலான பெறுபேற்றில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மடு, மன்னார், முல்லைத்தீவு, வடமராட்சி வவுனியா தெற்கு ஆகிய வலயங்களே, மாகாண நிலை, மற்றும் தேசிய நிலையிலான பெறுபேற்று வீதத்தை அண்மித்ததாக உள்ளது. ஏனைய வலயங்களில் சராசரியாக 20 வீதமான மாணவர்கள் தமிழ் மொழியில் சித்திபெறத் தவறியமையே வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சியிலான மந்த நிலைக்குக் காரணமாகும். தமிழ்மொழியில் கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், இலக்கணங்கள், பாடலுக்குப் பொருள் கூறுதல் போன்றவற்றில் திரும்பத் திரும்பப் பயிற்சிகளை வழங்கி வருவதுடன், நூல்களை வாசிப்பது மற்றும் கையெழுத்துச் சஞ்சிகைகளைத் தனியாகவும், குழுவாகவும் தயாரிக்க ஆசிரியர்கள் வழிப்படுத்த வேண்டும். இதனால் மாணவர்களிடையே தேடலும், கற்பதிலான விருப்பமும் ஏற்படும். க.பொ.த. உயர்தரம் கற்பதற்கான கட்டாய பாடமாக தமிழ் இருப்பதால் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

02. ஆங்கிலமொழிப் பாடத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி, வவுனியா தெற்கு ஆகிய வலயங்களே மாகாண நிலையிலான அடைவு மட்டத்திலும் உயர்வாகக் காணப்படுகின்றன. ஏனைய வலயங்களில் ஆங்கில பாடத்திலான அடைவு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கான காரணங்களாக கல்வி அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களில் பலர் நியமனப் பாடம் என்ற வகையில் ஆங்கிலத்தை ஒரு கற்பிக்கும் பாடமாக எடுத்துக் கற்பிக்கின்றார்களே ஒழிய அவர்களிடம் ஆங்கில அறிவு தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

பெரும்பாலான தொண்டர் ஆசிரியர்கள், ஏதோ ஒரு வகையில் பாடசாலைகளில் கற்பிக்க வேண்டுமென்பதற்காக ஆங்கிலத்தைக் கற்பித்துக் கொடுக்கத் தொடங்கியதால், நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்பொழுது அவர்களின் விருப்பமில்லாமலேயே ஆங்கில ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டது. இதனால் அவர்கள் ஆங்கிலத்தைத் தமிழ் மொழியிலேயே கற்பிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட பின்னராவது தமது ஆங்கில மொழி அறிவை வளப்படுத்தும் வகையில் தேடலில் ஈடுபடுவதில்லை. அவர்களில் பலர் வெளிவாரிப் பட்டதாரிகளாகக் கலைத்துறைப் பாடங்களில் சித்தி பெற்றுவிட்டு அதனை ஒரு காரணமாக வைத்து தமது பாடவகுதியை மாற்றிக்கொண்டு செல்ல முயற்சிப்பதால் ஆங்கில பாடத்திற்கான ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்ந்தும் நிலவுகின்றது.

ஆங்கில பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களால் வழங்கப்படுகின்ற பயிற்சிகள் வினைத்திறனுடையதாகவும், கவர்ச்சிகரமானவையாகவும், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கவில்லை.

பல்கலைக்கழகங்களிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும், கல்வியியல் கல்லூரிகளிலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மேலும் வினைத்திறனுடையதாக்கப்படுவதுடன், சர்வதேச தரத்திற்கு மாணவர்களைத் தயார்படுத்தலுக்கு அமைவாகவும் வழங்கப்படவேண்டும்.

2004-2009 இன் முன் ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, LIGHT HOUSE SCHOOLS மற்றும் RESC ஆகிய செயற்றிட்டங்கள் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதற்குப் பெறுமதியான கல்வி உபகரணங்களும் ஆங்கில நூல்களும் மற்றும் நிதியும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. அவற்றின்மூலம் ஆங்கிலக் கல்வி மேம்படுத்தப்பட்டது. தற்பொழுது அவற்றிற்கான நிதியும் ஒதுக்கப்படாததால், அவை தற்போது செயற்படுவதில்லை ஆயினும் அவற்றை மூடுமாறு கல்வி அமைச்சு அறிவிக்கவில்லை. ஆனால் அவை தொடர்பான பயிற்சிகளில் கலந்து கொண்டவர்கள் அதனைத் தொடர்ந்தும் தமது பாடசாலை வேலை நேரத்திற்குள்ளேயே செயற்படுத்தியிருந்தால், ஆங்கில பாடத்திலான கல்வி நன்கு வளர்ச்சியடைந்திருக்கும். எல்லாவற்றிற்கும் நிதி இருந்தால் தான் செயற்படுத்தலாம் என்ற மனோநிலையில் இருந்து அதிபர்களும், ஆசிரியர்களும் விடுபடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மொழியிலான படங்களுடன், கூடிய சிறிய வாசிப்புத் துணை நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுப்பது குறைவாகக் காணப்படுகின்றது.

சிறிய நாடகங்கள் (Role Play),உரையாடல்கள் (Dialogue) விவாதங்கள், (Debates) போன்றவற்றைக் குழுவாக முன்வைக்கச் செய்யும்பொழுது இயல்பாகவே மாணவர்களின் ஆங்கில மொழித்திறன் அதிகரிக்கும்.

03. ஆங்கில பாடத்தைப் போன்றே விஞ்ஞான பாடத்திலான பெறுபேறுகள் வடமாகாணத்தில் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. தேசிய நிலையிலும் வடமாகாண நிலையிலும் விஞ்ஞானம் குறைந்த மட்டத்திலான சித்திவீதத்தைக் கொண்டிருப்பது, அபிவிருத்தி அடைந்த ஒரு மாகாணத்திற்கு ஏற்றதல்ல. 1975 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடர்ச்சியாக அதிகளவிலான வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், விஞ்ஞான ஆசிரியர்களையும் உற்பத்தியாக்கித் தந்த வடமாகாணம் இன்று விஞ்ஞான பாடத்தில் ஏன் தாழ்ந்த நிலையில் இருக்கின்றது என்பது கல்வியியலாளர்களினால் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். வடமாகாணத்தில் சராசரியாக 50 வீத மாணவர்கள் விஞ்ஞானத்தில் சித்தி பெறவில்லை. இவ்வாறான பின்னடைவுக்கான காரணங்களாகப் பின்வருவன எடுத்துக் காட்டப்படுகின்றன:

பெரும்பாலான பாடசாலைகளில் முழுமையான வளங்களைக் கொண்ட ஆய்வு கூடங்கள் அமைக்கப்படாதபோதும், ஆய்வு கூடங்களைக் கொண்டுள்ள பாடசாலைகளிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் விஞ்ஞானத்தைக் கற்பிப்பதற்காக ஆய்வு கூடங்களுக்கு மாணவர்களை அழைத்துச்சென்று செயன்முறை ரீதியாக முன்னெடுப்பதும் குறைவாக உள்ளது.

ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளிலும்கூட பல பாடசாலைகளில் அவை பயன்படுத்தப்படாமலேயே புதிதாகப் பொதிசெய்யப்பட்ட பெட்டிகளில் வைக்கப்பட்டு அலுமாரிகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு சில பாடசாலைகளைத் தரிசனம் செய்த பொழுது, இவை அவதானிக்கப்பட்டன.

பல பாடசாலைகளில் வசதியான கட்டிடங்களைக் கொண்ட ஆய்வுகூடங்களும், நூலகங்களும் விருந்தினர்களுக்கான உபசரணைகளை மேற்கொள்வதற்கும் ஆசிரியர்கள் ஓய்வு எடுக்கும் அறையாகவும், அதிபர்கள் கூட்டங்களை வைக்கும் இடமாகவுமே பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருக்கும் பலர் யுத்த காலத்தில் மாணவர்களாக இருந்தமையால், ஆய்வுகூடப் பயிற்சிகளை முழுமையாகப் பெற்றிருக்காத நிலையில் புத்தகங்களிலும் கரும்பலகைகளிலும் விஞ்ஞான பாடத்தைக்கற்று வந்தவர்களாதலால், விஞ்ஞான உபகரணங்களைக் கையாளும் திறன் குறைந்தவர்களாக இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான ஆசிரியர்கள் விஞ்ஞானபாட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைக் கொண்டு கற்பிப்பது குறைவாக உள்ளதாக சில அதிபர்கள் தெரிவிக்கின்றனர். பெரும்பாலான வினாக்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றமையால் மாணவர்களின் பாடநூல்களுக்கு மேலாக ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளுக்கு அமைவாகக் கற்பித்தலை மேற்கொள்ளப்பட வேண்டும்.. இது விஞ்ஞான பாடத்திற்கு மட்டுமல்லாது அனைத்துப் பாடங்களுக்கும் பொருந்தும்.

அதேவேளை ஆய்வு கூடங்கள் என்ற கட்டடங்கள் இல்லாவிட்டாலும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான செய்முறைகளில் சுமார் 60 வீதமானவை எமது வீடுகளிலும், புறச் சூழலிலும், தருணத்திற்கேற்ற முறையில் தயாரிக்கக் கூடிய உபகரணங்களையும் கொண்டு (Improvised Apparatus) பாடசாலையின் வகுப்பறை மட்டத்திலோ அல்லது ஆய்வுகூடத்திலோ செய்யக் கூடியது என்பதை ஒரு விஞ்ஞான ஆசிரியர் ஏற்றுக் கொள்வார்.

விஞ்ஞான பாடத்தில் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய மூன்று பகுதிகளும் இணைந்தாக இருக்கும். சில ஆசிரியர்கள் உயிரியல் விஞ்ஞானப் பிரிவைக் கற்றிருந்தால் அவர்கள் பௌதிகவியல் தொடர்பான கற்பித்தலில் ஆர்வம் காட்டமாட்டார். அதேபோன்று கணிதப்பிரிவில் கற்றவர்களால் உயிரியல் பாடப்பரப்புக்களைக் கற்பிப்பதற்கு விருப்பம் குறைவாக இருப்பதால் சில பகுதிகளைக் கற்பிப்பதைத் தவிர்த்துவிட்டு அடுத்த பகுதிக்குச் செல்லும் ஆசிரியர்களில் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது இயல்பாகவே ஏற்படக்கூடிய குறைபாடுதான் ஆயினும் இத்தகைய சந்தர்ப்பங்களில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் குறித்த தேர்ச்சிகள் தொடர்பான பயிற்சிகளையும் செய்முறைகளையும் வழங்கி வருதல் வேண்டும். அதேவேளை அதிபர்கள் சில மாற்று ஒழுங்குகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஒரு பாடசாலையில் ஒன்றிற்கு மேற்பட்ட வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பிப்பவர்களில் பாடத்தேர்ச்சிகளை அவரவர் ஆற்றலுக்கேற்ப பிரித்துக் கொடுத்துக் கற்பித்தலை மேற்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால், மாணவர்களும் உற்சாகமாகச் செயற்படுவார்கள்.

விஞ்ஞான பாடம் தொடர்பான வினாக்களில் அறிவுறுத்தல்களைச் சரியாக விளங்கிக் கொள்ளாமை, தடித்த எழுத்தில் உள்ள வாக்கியங்களை அல்லது சொற்களைக் கவனிக்காமை போன்ற தவறுகள் மாணவர்களால் விடப்படுகின்றன. உதாரணமாக பல்தேர்வு வினாக்களில் சில சொற்கள் தடித்த எழுத்தில் காட்டப்பட்டிருக்கும். அவ்வாறான சொற்கள் மாணவர்களின் கவனத்தைக் கலைத்துவிடாமல் இருப்பதற்காகவே தடித்த எழுத்தில் போடப்படுகின்றன. இவற்றைக் கவனிக்காத மாணவர்கள் அதற்கு எதிரான கருத்தாக விளங்கிக் கொண்டு தவறான விடைகளைத் தெரிவு செய்வதால் புள்ளிகளை இழக்கின்றனர். உதாரணமாக 'அல்லாதது' 'பொருத்தமற்றது', 'அமையாதது' என்பன போன்ற எதிர்மறையான சொற்கள் தடித்த எழுத்தில் காட்டப்பட்டிருக்கும். இவ்வாறான வினாக்கள் தொடர்பான பயிற்சிகளை ஆசிரியர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரவேண்டும். அதேவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய எதிர் மறையான கருத்துக்களைக் கொண்ட வினாக்களைத் தவிர்த்தல் வேண்டும் என்று கல்வி உளவியலாளர்கள் தெரிவித்தபோதும் பரீட்சை வினாத்தாள்களில் இடம்பெறுவதை வினாத்தாள்களைத் தயாரிக்கும் குழு கவனத்தில் எடுக்கவேண்டும்.

பகுதி-2 இல் கட்டமைப்பு வினாக்கள் பெரும்பாலும் செய்முறையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், ஆசிரியர்கள் செய்முறை ரீதியான பயிற்சிகளைக் கொடுத்து வருவதுடன், கணிதக் கணிப்பீட்டு விடைகளுக்கான அலகுகள் குறிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் புரியவைத்தல் வேண்டும். அலகுகள் குறிக்கப்படாத விடைகளும் புள்ளிகளை இழக்கின்றன.

விஞ்ஞான பாடத்தின் இரண்டாவது வினாத்தாளின் மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் தேர்ச்சிகள் மற்றும் குறிக்கோள்கள் எவை என்பது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இத் தேர்ச்சிகளையும், குறிக்கோள்களையும் அடையக்கூடிய வகையில் ஆசிரியர்கள் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கவேண்டும். இதற்கமைய பாடநூல்களில் உள்ள விடயங்கள் மட்டும்தான் பரீட்சை வினாக்களில் இடம்பெறும் என்று மாணவர்கள் தவறாகக் கருதக்கூடாது. பாடநூல்களுக்கப்பால் நடைமுறையில் உள்ள அறிவியல் சார்ந்த பொது விடயங்களும் வினாத்தாளில் இடம்பெறுகின்றன என்பதை ஆசிரியர்களும், மாணவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். ஏனைய பாடங்களை விட விஞ்ஞான பாடத்திலேயே அதிகளவிலான புள்ளிகளை எடுத்து அனைத்து மாணவர்களையும் சித்திபெற வைக்கமுடியும்.. எனவே விஞ்ஞான பாடத்திலான அதிஉயர் சித்தியைப் பெற வைப்பது என்பது வினைத்திறன் மிக்க ஒரு ஆசிரியரின் கையிலேயே உள்ளது.

விஞ்ஞான ஆசிரியர்கள் இல்லாத கிராமப்புறப் பாடசாலைகள் தமது கிராமத்தில் அல்லது அண்மித்த கிராமங்களில் க.பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்று பல்கலைக் கழகம் செல்வதற்காகக் காத்திருக்கின்ற மாணவர்களை கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் தற்காலிகமாக விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பதற்காக நியமித்து அவர்களின் மூலம் விஞ்ஞான பாடத்திலான பெறுபேற்றை உயர்த்தலாம்.இவர்கள் பல்கலைக் கழகம் செல்ல உள்ளதால் தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கவேண்டுமென்று போராடமாட்டார்கள். அதேவேளை மாணவர்களும் விருப்பத்துடன் கற்பார்கள். இவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை கொண்டு நிறுவனங்களிடம் இருந்தோ அல்லது அந்தந்தப் பிரதேச அரசியல்வாதிகளிடம் இருந்தோ அன்பளிப்பாகப் பெற்று வழங்கலாம்.

எனவே, க.பொ.த. சாதாரணதரத்தில் அதிகளவிலான மாணவர்களை விஞ்ஞான பாடத்தில் சித்தி பெறவைப்பதன் மூலம் வடமாகாணத்தில் மீண்டும் விஞ்ஞானக் கல்வியின் தரம் உயர்வடையும். இதன் மூலமே அதிகளவிலான விஞ்ஞானப் பட்டதாரிகளும், மருத்துவர்களும், பொறியியலாளர்களும் உருவாக்கப்படுவார்கள். இது எமது பொறுப்பு வாய்ந்த நல்லாசிரியர்களினதும், அதிபர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனெஸ்கோவினால் (UNESCO) வெளியிடப்பட்ட எம்.சம்கியுட்ட என்ற கல்வியியலாளரின், 'EDUCATION ON THE MORE' என்ற நூலில் ஒரு ஆசிரியரின் வகிபாகம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் கொண்டு தனது கடமைகளை ஆற்றிவரவேண்டும்.

1. மாணவர்கள் கற்கும் முறைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துபவர்.
2. மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுபவர்.
3. கல்வியின் மூல வளங்களைச் சேகரித்துப் பாதுகாப்பதுடன், அவற்றை மாணவர்கள் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் வழிகாட்டல்களை மேற்கொள்பவர்.
4. மாணவர்களின் தேவைகளையும், கல்வியின் நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக் கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவராக இருப்பவர்.

யுனெஸ்கோவின் இந்தக் குறிப்புக்களையும், எமது குழந்தைகளின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்யக்கூடியவர்களாக எமது ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதனையே எமது மாணவர்களும் எதிர்பார்க்கின்றனர் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

ந.அனந்தராஜ், **B.A.(Hons.), M.A., Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS**



**கிளி / அக்கராயன் ம.வி ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழாவில்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வகுப்பறையில் கற்றலுக்கான நேர்நிலைச் சூழலை உருவாக்குதல்

வகுப்பறையில் ஓர் ஆசிரியர் மகிழ்ச்சியான, சகிப்புத்தன்மை நிறைந்த, மாணவருக்கு ஆதரவான சூழலை உருவாக்கினால் அது கற்றலுக்கான நேர்நிலைச் சூழலாக அமையும். அதற்கான சில உத்திகள் பின்வருமாறு அமைகின்றன.

1. ஆசிரியர் மாணவர்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

- ♠ தனது தேவைகள் பற்றி ஆசிரியர் அறிந்துள்ளார் என உணரும் மாணவன் ஆசிரியருக்கு தரும் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.
- ♠ இதன்போது மாணவனின் கற்றல் சார்ந்த நடத்தை அதிகரிக்கும்.
- ♠ கற்றலுக்கு எதிரான நடத்தைகள் இழிவடையும்.

2. ஆசிரியர் வகுப்பறையில் பொருத்தமான ஒழுங்கு முறையொன்றினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

- ♦ மாணவர்கள் ஆசிரியர்களிடமிருந்து தாங்கள் பின்பற்றத்தக்க நேர்த்தியான ஒழுங்குமுறை ஒன்றினை எதிர்பார்க்கின்றனர்.
- ♦ மாணவர்கள் தமது ஆசிரியர்களிடம் தொடர்பு கொள்ளவேண்டிய முறைபற்றி அறிய விரும்புகின்றனர்.
- ♦ ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களின் நலன் பற்றி தவறாது விசாரித்தல் வேண்டும்.
- ♦ ஆசிரியர் தொடர்ச்சியாக மாணவர்களின் நடத்தைகள் பற்றிய பின்னூட்டலை வழங்குதல் வேண்டும்.
- ♦ ஆசிரியர் பாடவிடயம் தொடர்பாகவும் நடத்தைகள் தொடர்பாகவும் தாம் மாணவர்களிடம் எதிர்பார்ப்பதை தெளிவாக மாணவர்களிடம் தெரிவிக்க வேண்டும்.
- ♦ பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆசிரியரிடம் தெளிவான ஒழுங்குமுறை ஒன்று காணப்படல் வேண்டும்.
  அவையாவன
- ♦ வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான வழிமுறைகள்.
- ♦ பாடத்தினை ஆரம்பிப்பதற்காக தினமும் புதிய நுட்பங்களை கையாளல்
- ♦ கற்றல் சாதனங்களை மாணவரிடத்தே விநியோகிக்கும் ஒழுங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதல் நாள் வகுப்பறைக்கு சமுகமளிக்காத மாணவர்கள் தொடர்பாகக் கவனமெடுத்தல்.
- ஒப்படைகளை நிறைவு செய்யாத மாணவர்கள் மீதான கவனம்.
- மாணவர்களின் கற்றல் நேரத்தினைக் குழப்பாதவகையில் மாணவர் வரவினை சரிபார்த்தல்.
- மாணவர்களை விரைவாக குழுவாக்குதல்.
- தளபாடங்களை தேவைக்கேற்ப ஒழுங்கமைத்தல், மீள ஒழுங்கமைத்தல்.
- மாணவர்களிடம் வினவுதல், மற்றும் மாணவர் விடையளித்தல்.
- குழுச் செயற்பாடுகளுக்கான தலைவரைத் தெரிவு செய்தல் என்பனவாகும்.

3. ஆசிரியர் தினமும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கூறுதல் வேண்டும்.

- பொருத்தமான ஆரம்பம் சரியான முடிவைத்தரும். ஆகவே ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் மாணவர்களுக்கு தவறாது வணக்கம் கூறுதல் வேண்டும்.
- மாணவர்கள் வணக்கம் கூறும் வரையில் ஆசிரியர் காத்திருக்க வேண்டியதில்லை.
- ஆசிரியர்களது வணக்கத்திற்கு சரியாக துலங்காத மாணவர்கள் மீது போதிய அக்கறை செலுத்துதல் வேண்டும்.
- வணக்கம் செலுத்தும்போது சுறுசுறுப்பான உடல்மொழியினை வெளிப்படுத்தல் வேண்டும். புன்னகையோடு கண்தொடுகையும் அவசியமானது.

4. ஆசிரியர் தன்னைப்பற்றி மாணவர்களுக்கு தெரிவித்தல் வேண்டும் அல்லது தன்னை நன்கு அறிமுகப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவர்கள் ஆசிரியரைப்பற்றி வெவ்வேறுவிதமான புலக்காட்சியினைக் கொண்டிருப்பர்.

சில மாணவர்கள் ஆசிரியரைப்பற்றி தவறான எண்ணங்கள் கொண்டவர்களாக இருப்பர். சில மாணவர்கள் ஆசிரியர் பற்றி எதுவும் அறியாமல் இருப்பர். ஏனைய ஆசிரியர்களுடன் ஒப்பிட்டு தவறான முடிவுகளுடன் இருப்பர். ஆகவே ஆசிரியர்

- தன் விபரங்கள் பற்றி,
- தனது இலட்சியம் பற்றி
- தனக்கு மாணவர்களிடம் பிடிக்கும் விடயங்கள்,
- பிடிக்காத விடயங்கள்,
- மாணவர்கள் தன்னிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் எதையெல்லாம் தன்னிடம் விசாரிக்க கூடாது
- தனது கொள்கை பாடசாலை மீது தான் கொண்டிருக்கும் பற்று என்பவை பற்றி மாணவர்களுக்கு கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தன்னைப்பற்றிய விடயங்களோடு தனது வாழ்க்கைப்பற்றிய முக்கியமான விடயங்களையும் கதைபோல் கூறி மாணவர்களுக்கு அறிமுகமாகலாம்.

ஆசிரியர் இடைக்கிடை தன்னைப்பற்றி மாணவர்கள் கொண்டுள்ள அபிப்பிரயாங்கள் பற்றி தேடிப்பார்த்தல் வேண்டும் இதனால் மாணவர்கள் தன்னை விளங்கிக் கொண்டிருக்கும் அளவைக் கண்டுகொள்ளலாம்.

5. ஆசிரியர், மாணவர்கள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களின் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அறிந்திருக்க வேண்டும். மாணவர்களைப்பற்றி நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். பொதுவாக மாணவர்களின்

- ♠ கலாசாரம்
- ♠ விருப்பங்கள்
- ♠ இணைபாடவிதானச் செயற்பாடுகள்
- ♠ ஆளுமை
- ♠ கற்றல் பாங்குகள்
- ♠ இலக்குகள்
- ♠ மனவமைவு

மேற்கண்ட மாணவர்கள் தொடர்பான விடயங்களுக்கு ஏற்ப கற்பித்தலை ஒழுங்கமைக்க வேண்டும்.

மாணவர்கள் தொடர்பான மேற்கண்ட விடயங்கள் தனது கற்பித்தலில் கவனத்தில் எடுக்கப்படுகின்றதா என ஆசிரியர் தொடர்ச்சியான பிரதிபலிப்பில் ஈடுபடல் வேண்டும்.

மாணவர்களின் விருப்பங்கள் ,கற்றல் பாங்குகள், மனவமைவு, என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் குழு விளையாட்டுக்களை உருவாக்கி அதனை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

- ♣ ஆசிரியர் தொடர்ச்சியாக வகுப்பறைக் கூட்டங்களை நடத்துதல் வேண்டும்.
- ♣ மாணவர்களின் ஆக்கத்திறன், புதுமைபுனைதல் திறன்களை ஊக்குவிப்பதற்கான திட்டமொன்றினை ஆசிரியர் தயாரித்து அதனை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.
- ♣ மாணவர்களின் கலாசாரம் தொடர்பாக ஆசிரியர் கற்றுக் கொள்ள வேண்டும்.
- ♣ மாணவர்களுடன் ஆசிரியர் முடிந்தளவு நகைச்சுவையாக உரையாடுதல் வேண்டும்.

6. ஆசிரியர் மாணவர்களில் கட்டுப்பாட்டினை நிலைநாட்டுவதற்காக வெகுமதிகள் அளிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

- ♠ கடந்த பல வருடங்களாக மாணவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு வெகுமதிகள் அளிப்பது தொடர்பான ஆய்வுகள், வெகுமதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் சுய ஊக்கலைத் தடுப்பதாகவும், ஆசிரியர் மாணவர்களிடையே உறவுநிலைச் சிக்கல்களைத் தோற்றுவிப்பதாகவும் கூறுகின்றன.

- ♠ அத்துடன் மாணவர்கள் வெகுமதிக்காகவே தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதாகவும், சுயகட்டுப்பாடு தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தாத நிலையும் காணப்படுகின்றது.
- ♠ மனித மூளையானது இயல்பாகவே சுய வெகுமதியளிக்கும் ஒரு அமைப்பினைக் கொண்டுள்ளது. மாணவர்கள் சவாலான கல்விசார்ந்த விடயங்களிலும், நடத்தைசார்ந்த விடயங்களிலும் வெற்றிபெறும்போது தொடர்ந்து இயங்குவதற்கான தூண்டலை (endorphins) உருவாக்குகின்றன.
- ♠ இக்கட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் அவர்கள் வெற்றி பெற்றது எவ்வாறு? எக்காரணிகள் அவர்களது வெற்றிக்கு பங்களிப்புச் செய்தன போன்ற கலந்துரையாடல்களை நிகழ்த்துதல் வேண்டும்.
- ♠ மாணவர்கள் வெற்றியடைய ஏதுவாக அமைந்த காரணிகள் எவை? மேலும் அவற்றை எவ்வாறு விருத்தியாக்கலாம் போன்ற வினாக்களை ஆசிரியர் வினவலாம்.
- ♠ மேலும் புதிய சவால் நிறைந்த செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்கலாம்

7. ஆசிரியர் தீர்ப்பளிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

- ■ இவர்கள் கற்க மாட்டார்கள், இவர்கள் சோம்பேறிகள், இவர்கள் உருப்பட மாட்டார்கள், இவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள், இவர்களைத் திருத்த முடியாது என மாணவர்களை நோக்கிய தீர்ப்பளித்தலை தவிர்த்தல் வேண்டும்.
- ■ ஆசிரியர் மாணவனை நோக்கி தீர்ப்பளிக்கும் போது மாணவன் ஆசிரியர் தொடர்பான அவநம்பிக்கைக்கு உள்ளாகுகின்றான்.
- ■ மாணவர்களை ஒதுக்குதல், அவர்களுக்கு வேறு பெயர்கள் சூட்டுதல் என்பன ஆசிரியர் அவர்களுக்கு கற்பிப்பதற்கான பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கின்றார் என்பதை அர்த்தப்படுத்துகின்றது எனலாம்.
- ■ மாணவர்களுக்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்ட வகுப்பறைகளில் மகிழ்ச்சியும், ஒத்துழைப்பும் இல்லாமல் போய்விடுகின்றது.
- ■ மாணவர்களுக்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்ட வகுப்பறைகளில் ஆசிரியர் நேர விரயத்தையும்,சக்தி விரயத்தையும் எதிர்நோக்குவார். ஆகவே மாணவர்களின் நடத்தைசார் பிரச்சினைகளை ஆசிரியர் நேரடியாகக் கையாள வேண்டும்.

8. ஆசிரியர், மாணவர்- மாணவர் உறவினைக் கட்டியெழுப்பும் விளையாட்டுகளையும், செயற்பாடுகளையும் வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்

- மாணவர்- மாணவர் உறவு ஆரோக்கியமாகக் காணப்படுமிடத்து வகுப்பறைகள் மகிழ்ச்சிகரமானதாகவும், முரண்பாடுகள் குறைந்ததாகவும் காணப்படும். ஆகவே ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர் - மாணவர் தொடர்பினை விருத்தியாக்கும் விளையாட்டுகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இத்தகைய விளையாட்டுக்கள் போட்டியிடுவதைத் தவிர்த்து நகைச்சுவையாகவும் ,அதே வேளையில் நேர்நிலை மனப்பாங்கினை ஏற்படுத்துவதாக தெரிவு செய்யப்படல் வேண்டும்.
- இத்தகைய விளையாட்டுக்கள் குழு உணர்வினை ஏற்படுத்தவதாகும் .
- அத்துடன் புதிதாக வகுப்பறைக்கு வந்த மாணவர்களை இலகுவில் ஏனைய மாணவர்களுடன் இணைப்பதற்கான வழியாகவும் அமையும். மாணவர்கள் வெட்கப்படல் ஒதுங்கியிருத்தல் போன்ற நடத்தைகளையும் இழிவாக்க உதவும்.
- வகுப்பறை சார்ந்த விளையாட்டுக்கள் மாணவர்கள் விருப்பத்துடன் வகுப்பறைக்கு வரும் மனநிலையை விருத்தியாக்கும்.

9. ஆசிரியர் தான் தவறுகளை ஏற்றுக்கொள்பவராகவும், தனது தவறுகளுக்கு மனம் வருந்துபவராகவும் இருத்தல் வேண்டும்.

- ♣ ஆசிரியர் தான் தவறுகளை ஏற்றுக்கொள்பவராகவும், தனது தவறுகளுக்கு மனம் வருந்துபவராகவும் இருக்கும் அணுகுமுறையானது, வேறெந்த அணுகுமுறைகளை விட அதிக நன்மை தரக்கூடியது ஏனெனில் ஆசிரியர் மீதான மாணவர்களின் நம்பிக்கையை மிக வேகமாக இது உருவாக்குகின்றது.
- ♣ தவறுகளை ஒப்புக்கொள்ளல் ஒருவரின் உயர்ந்த மானிடப் பண்பாக இருப்பதுடன், அவரை மற்றவர்கள் நம்பிக்கையுடன் அணுகவும் வழியேற்படுகின்றது.
- ♣ இவ்வணுகுமுறை சுயமதிப்பீட்டினை மாணவர் மத்தியில் வளர்ப்பதற்கு ஏதுவாகுகின்றது. அத்துடன் மாணவர்களுக்கான முன்மாதிரி நடத்தையாகவும் அமைகின்றது.

10. வெற்றியைக் கொண்டாடுதல்.

- ♣ வெற்றியைக் கொண்டாடுதல் என்பது சாதனையை அங்கீரிப்பதற்கான தன்னிச்சையான நிகழ்வாகும்.
- ♣ வெற்றியைக் கொண்டாடுதல் என்பது வெகுமதியளித்தலுக்குப் புறம்பானதாகும். ஏனெனில் வெகுமதியளித்தல் என்பது நிபந்தனைக்குட்பட்டதாகும்.
- ♣ வெற்றி பெற்ற விடயத்தில் உள்ளடங்கியுள்ள விசேட தன்மையினை மாணவர்களிடம் பகிர்ந்துக் கொள்ளுதலே இதன் அடிப்படையாகும்.
- ♣ வெற்றிக் கொண்டாட்டம் வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோரும் ஒரு நிலையை அடைந்தவுடன் இடம்பெறுமாயின் சிறப்பானதாக அமையும். உதாரணமாக ஒரு செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தலைக் குறிப்பிடலாம்.

க. சுவர்ணராஜா
ஓய்வுநிலை பீடாதிபதி,
தேசிய கல்வியிற் கல்லூரி,
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வாண்மை விருத்தியில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தியின் (SBPTD) வகிபாகம்



ஆசிரியர் வாண்மை விருத்தியில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தியின் (SBPTD) வகிபாகம்.

'பாடசாலை' பாடசாலை மூலமே அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒரு நிறுவனமாகும். வளங்களைப் பகிர்வதும் அதனை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான வழிகாட்டல்களை வெளியிலிருந்து மட்டுமே மேற்கொள்ள முடியும். பாடசாலைக்குள் காணப்படும் பலம் , பலவீனங்களை இனங்காண்பதன் மூலம் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும். கற்பித்தல் பலவீனத்தில் ஏற்படும் தன்மைகள் அந்த இடத்திலேயே மாற்றியமைக்கும் போது ஆசிரியர்க்கு ஏற்படும் இடரை உடனடியாகவே நீக்கும் ஒரு செயற்றிட்டமாகவே 'பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி [School-Based Professional Teacher Development (SBPTD) வேலைத்திட்டம் விளங்குகின்றது.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக காலத்திற்குக் காலம் பல்வேறு செயற்றிட்டங்கள் விதந்துரைக்கப்படுகின்றன. அந்தவகையில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் அறிமுகமாகிய அண்மைக்கால சில செயற்றிட்டங்காவன

- SBA – (1998)
- SBM – 2005
- TQM – 2006
- ESQM – 2009
- PSI/EPSI – 2005 / 2018+2025
- SBTD – 2013
- SBPTD – 2019-2025
- GEMP – 2019-2024

முதலானவற்றைக் குறிப்பிடலாம். இந்நிலையில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை முன்னெடுத்து 2019 - 2024 வரை மீளவும் ஆசிய அபிவிருத்தி வங்கியானது தன்னுடைய நிதிப் பங்களிப்பை SBPTD செயற்றிட்டத்திற்காக வழங்கியுள்ளது. அதனை பாடசாலைகள் கடந்த காலத்தை விட இன்னும் தெளிவான சிந்தனையோடு முன்னெடுக்க வேண்டும் எனும் வகையிலான ஒரு எதிர்பார்ப்பாகவே இக் கட்டுரை அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடையும் உலகிற்கு பொருத்தமான ஆக்கத்திறனும் மென்திறனும் இணைந்த சமபலமான ஆளுமை நிறைந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் உன்னத நோக்குடன் பாடசாலையிலுள்ள ஒவ்வொரு ஆசிரியரும் தமது தொழில்சார் அறிவு, , நம்பிக்கை, நாணயம் போன்றவற்றைப் பேணி தொழிலின் கௌரவத்தை நிலைநாட்டும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்றிட்டமே பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில் சார் ஆசிரியர் அபிவிருத்தி (School-Based Professional Teacher Development (SBPTD) வேலைத்திட்டமாகும்.

10/2013 சுற்றறிக்கை மூலம் 2013ல் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டமானது, மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக் கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களின் தொழில் அபிவிருத்திக்குரிய தேவைகளை இனங்காணல், திட்டமிடல், மற்றும் நடைமுறைப்படுத்துதல் முதலான செயற்பாடுகளை உள்ளடக்கியதான தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான ஆசிரியர் விருத்தி செயற்பாடுகளை பாடசாலைகளில் முன்னெடுப்பதையே பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் வெளிப்படுத்துகிறது. நடைமுறையிலுள்ள பல்வேறு ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் பாடசாலையுடன் நேரடியாகத் தொடர்புபடத் தவறியுள்ளமையே SBPTD பலப்படுத்தக் காரணமெனலாம்.

ஆசிரியர் அபிவிருத்தியானது. பல்வேறு நிறுவனங்கள் மூலமாக தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கல்வி அமைச்சு , மாகாணம் , வலயம், கோட்டம், முதலான கல்விக் காரியாலயங்கள் பல்கலைக்கழகம், தேசியகல்வியியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆசிரிய மத்திய நிலையங்கள், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அரச தனியார் நிறுவனங்களினூடாக ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்த போதும் பெரும்பாலும் பாடசாலைகளின் குறிப்பான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொருத்தமானதாக அமைவதில்லை.

கொள்கை வகுப்போரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளை விட பாடசாலைகளில் இனங்காணப்பட்ட தமது தேவைகளுக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை பாடசாலைகளே நடைமுறைப்படுத்துவதன் மூலம் உயர்ந்த அடைவுகளை எட்ட முடியும் என்பது நிதர்சனமே. தன்னை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமே இதுவென ஆசிரியர்கள் உணரும் போது அவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பும் இதன் மூலம் ஈட்டக் கூடியதாக இருக்கும்.

ஆசிரியர்களுக்கு எத்தகைய பயிற்சிகள் தேவை என்பதை வரும் வழிமுறைகளுடாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

- பிரச்சினைகளின் பகுப்பாய்வு
- உள்ளக/வெளியக மேற்பார்வை
- ஊகித்தறியும் செயலமர்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ நெருக்கடியான சம்பவநுட்பம்
- ♦ வகிபாகத் தொகுதியினருடனான (ஆசிரியர்கள்)நேர்முகம்
- ♦ அவதானிப்பு
- ♦ மனப்பாங்கு அளவீடுகள்
- ♦ செயலாற்றுகை மதிப்பீடு
- ♦ சிறுகுழுக் கலந்துரையாடல்கள்
- ♦ பெற்றோர், பொதுமக்கள், ஊடகங்கள் முதலானவற்றின் தகவல்கள்

இவ்விதம் இனங்காணப்படும் பிரச்சினைகளைக் கொண்டு பாடசாலை மட்டத்தில் இவற்றை எவ்விதம் செயற்படுத்துவதென வலுவான திட்டமிடல் ஒன்றை பொருத்தமான முறையில் தயாரித்துக் கொள்வது சிறப்பானது. அத்தகைய செயற்பாடுகாளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ♣ ஆசிரியர் பெற்றோர் கூட்டங்கள்
- ♣ மாதிரிக் கற்பித்தல் (Model teaching)
- ♣ சகபாடிப் பயிற்சிகள் (Peer-coaching)
- ♣ செய்து காட்டல் (Demonstration)
- ♣ தொழில்காட்டுநர் மூலம் வழிகாட்டல் (Mentoring)
- ♣ ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழிகாட்டல்கள்
- ♣ செயல் ஆய்வு
- ♣ சம்பவக்கற்கை
- ♣ கண்காணிப்புப் பயணம்
- ♣ அனுபவப் பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பம்

இத்தகைய செயற்பாடுகளினூடாக ஆசிரியர்களுக்கான பயிற்சியை தனி ஒருவருக்கோ அல்லது பலர் இணைந்த குழுவாகவோ வழங்க முடியும்.

பாடசாலை மட்டத்தில் இச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் வேலைத்திட்டத்தினை நிறுவனப்படுத்துதல் பிரதானமானது.

அந்தவகையில் பின்வருவனவற்றினை படிமுறையாக முன்னெடுக்கும் போது SBPTD இன் வெற்றி மேலோங்கும்.

- ♣ ஆசிரியர் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு குழுவை நியமித்தல்.
- ♣ இக்குழு ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களை இனங்கண்டு தயாரித்தல்.
- ♣ செயற்பாடுகளை சிறந்த முறையில் மீளாய்வு செய்தல்.
- ♣ இனங்காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் இணைத்துக் கொள்ளல்.
- ♣ ஒவ்வொரு பாடசாலையும் தமது வரவு செலவுத் திட்டத்தில் பாடசாலைமட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்காக போதிய நிதியை ஒதுக்குதல்.
- ♣ ஆசிரியர்களை பயிற்சியின் போது ஆர்வத்தோடு பங்குபற்ற வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♣ தமக்கானது தாமே தம்மை சிறந்த முறையில் மேற்பார்வை மற்றும் சுயமதிப்பீடு செய்து அறிக்கைப்படுத்துதல்
- ♣ பெற்றுக்கொண்ட அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து பரஸ்பரம் விருத்தியுறல்
- ♣ செலவு இன்றிய செயற்பாடுகளைத் திட்டமிடுதல்.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளின் எதிர்பார்ப்பானது இன்னமும் பாடசாலைகளால் எட்டப்படவில்லை என்றே கருதமுடியும். இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 7 வருடங்கள் நிறைவுற்றும் இதன்மீதான வலுவான வகிபாகத்தை இன்னும் பாடசாலைகளால் உணர முடியாதுள்ளது. இச் செயற்றிட்டத்தை பாடசாலையில் வெற்றிகரமாக முன்னெடுக்கும் போது

- ♣ மாணவர்களிடையே பல்வேறுபட்ட கற்றல் தேவைகளுக்கேற்ற வகையான விடய அறிவும் அறிவியல் போதனைத் திறன்களும் விரிவடையும்.
- ♣ மாணவர்களின் சமூக உணர்சித் திறன்கள் (social – Emotional skills) அறிவு சார் திறன்களை இலக்காகக் கொண்டு புதிய கண்டு பிடிப்புக்களுக்கு ஊக்குவிக்க முடியும்.
- ♣ பாடசாலையின் பண்புத் தரத்தினை உறுதிப்படுத்தும்வகையில் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆண்டுக்கான வேலைத்திட்டங்களுடன் இனங்காண முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

SBPTD செயற்றிட்டமானது பாடசாலை தொடர்பான வெளிவாரி மதிப்பீட்டின் போது பாடசாலையின் பண்புத்தர சுட்டியின் மீதான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதறகும் காத்திரமான பங்களிப்புச் செய்கின்றது. இச்செயற்றிட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கும் பாடசாலைகள் பின்வரும் ஆவணங்களைப் பேணுவதும் அவசியமாகின்றது.

- ♦ SBPTD தொடர்பான திட்டமிடல்
- ♦ SBPTD சம்பவத் திரட்டுப் பதிவேடு
- ♦ வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்குமான தனித்தனி கோவைகள்
- ♦ ஆசிரியர்களின் முன்மொழிவு ஆலோசனைகள்.

வலயத்தினால் பெறப்பட்ட அனுமதிக் கடிதங்கள் தவணைக்குரிய முன்னேற்ற அறிக்கை செயற்றிட்டம் தொடர்பாக பங்காற்றியதின் பிரதிபலிப்பு, குறிப்பேடு, நிதி நடவடிக்கை தொடர்பான பதிவேடுகள், வளவாளர்களின் வரவு மற்றும் சம்மதக் கடிதங்கள் இவற்றிற்கு மேலதிகமாகவும் அந்தந்தப் பாடசாலையில் உள்ள ஆவணங்களைப் பேணமுடியும்.

காலத்தின் தேவையறிந்து மாற்றங்களை உள்வாங்கி கல்வியைப் புதுப்பிப்பது கல்விச் செயற்பாட்டில் பிரதானமானதாகின்றது. அந்தவகையில்தான் இன்று ஆசிரியர்வாண்மை விருத்தியில் SBPTD பேசுபொருளாகியுள்ளது. இது பாடசாலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் ஆசிரியரின் தேவை, கற்போனின் தேவை என்பவற்றை அறிந்து அதற்கேற்ப திட்டமிடுவதால் வெற்றியடைய முடியும் என்பது எதிர்பார்ப்பாகும் புதிய கல்விச் சீர்திருத்தம் 2023ல் உள்ளீர்க்கப்படும்போது ஆசிரியர்கள் தயாராவதற்கும் இது துணையாகும். இதேபோன்று பொதுக்கல்வியை நவீன மயப்படுத்தும் (General Education modernigerlion project) GEMP செயற்றிட்டமும் 2019 -2020 முதல் அறிமுகமாகியுள்ள புதிய செயற்றிட்டமாகும்.


எனவே கல்வியின் புதிய போக்குகளுக்கு ஏற்ப பாடசாலைகளும் அறிமுகப்படுத்தப்படும் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதன் மூலம், பாடசாலையின் பண்புத்தரத்தையும் ஆசிரியர்களின் கௌரவமான தொழிலின் மகத்துவத்தையும் பேணிக்கொள்ள முடியும் என்பது எதிர்பார்க்கப்படும்.


உசாத்துணை நூல்கள்

- ♠ பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் - கையேடு
- ♠ கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள்.
- ♠ இணையத்தளம் - NIE - கல்வி அமைச்சு.



**திருமதி . மீனலோஜினி இதயசிவதாஸ்**
**அதிபர், கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி**
BA(Hons),P.G.D.E, M.E.D, PGDEM



**கிளி / அக்கராயன் ம.வி – மரம்நாட்டு விழாவில்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்விக்கட்டமைப்பின் ஏற்பாடுகளும் பிள்ளைகளுக்கான கல்வியின் சம மற்றும் ஆக்கமலர்ச்சி ஆட்சிக்கான வாய்ப்பின் நிலைமையும் ...



இலங்கையில் 10165 பாடசாலைகளினூடே இலங்கை பிள்ளைகளுக்கு கல்வி வழங்கப்படுகின்றது இலங்கையிலுள்ள 9 மாகாணங்களில் 99 வலயங்களில் அதாவது 312 கோட்டங்களாக இந்தப் பாடசாலைகள் அமைந்துள்ளன.

அறிஞர்களால் கல்விச்சிந்தனையாளர்களால் உலகெங்கும் சகலருக்கும் சமமான கல்வி தரமான கல்வி பற்றி பேசப்படுகின்ற அதே வேளை 1943 களில் கன்னங்கரா என்ற நல்லுள்ளம் கொண்ட அறிஞர் இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தியதால் இந்த நாட்டில் 97 சதவீதம் மக்களிடம் எழுத்தறிவைக்காண முடிகின்றது.

இத்தோடு சகலருக்கும் கல்வி வாழ்வுக்கான சமவாய்ப்புக்கான சிந்தனையை அறிஞர்கள் முன் மொழிந்தார்களே தவிர அதனை இந்த நாட்டில் பிரயோகிக்க இன்றுவரை கல்வி ஏற்பாடுகளால் சாத்தியமாகியுள்ளதா?. என்பதே எழும் வினா.

இலங்கை சமூக கட்டமைப்பில் இது நெறிப்படுத்த முடியாதுள்ளது குறிப்பாக கீழைத்தேச மரபுகளும் சிந்தனையும் ஒருமித்த மனப்பாங்கும் கல்வியை பிள்ளைகளுக்கு சமமாக வழங்க ஏற்பாடு செய்துள்ள அதிகார முறைமைகளில் உள்ள பலவீனங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வு மிக்கவசதிகள் என்பனவும் அரசியல் சாசனத்திலுள்ள எற்பாடுகளும் இலங்கை பூராகவும் பருமட்டாக 70 வீதமாவது சமத்துவமான கல்வி வாய்ப்பை வழங்க முடியாது போகிறது. என்பது அவதானிப்பு. 2012 களில் மகிந்த அரசு முன் மொழிந்து நடைமுறைப்படுத்திய 1000 பாடசாலைத்திட்டம் உண்மையில் ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

அது உதவி அரச அதிபர் பிரிவுக்கு ஒன்று என்ற முதற்கட்டம் ஒரு நம்பிக்கை தருவதாக ஆரம்பமானது. அது இனம் மதம் பிரதேசம் கடந்து செயற்பட வைக்கப்பட்ட சிந்தனை. அதனால் பெரும்பாலும் ஏழைச்சமூகம் வாழும் கிராமங்கள் பயனடைந்தன. உள்ளூர் அதிகாரிகளின் அரசியல் மற்றும் சமூக புறக்கணிப்புகளை அது தகர்க்கச் செய்தது. இதனால் பயனடைந்த கிராமங்கள் தவிர்ந்த ஏனையவை அரசாங்கம் மாறியவுடன் நின்று போனதனால் ஏறத்தாழ 350 பாடசாலைகள் அளவில் மட்டுமே அந்த 1000 பாடசாலை திட்டம் நீட்சி அடைந்தது என்பது துரதிஸ்டவசமானது.

இன்று உலக மயப்பட்ட கல்வி விரிவாக்கத்துக்கு இலங்கை ஈடுகொடுக்க வேண்டியுள்ளதும் அதன் எழுச்சிகளாலான சிந்தனையால் புதிய ஏற்பாடுகளில் இலங்கை தன்னை நிலைநிறுத்தப் போராடுகிறதும் காணப்படுகிறது.

சமூகமும் கல்வியும் பண்பாடும் பற்றி மீள் எழுச்சியின் அவசியம் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| குறிப்பாக | |
| பின்நவீனத்துவம் | Post modernism, |
| தொழிநுட்ப முதலாளித்துவம் | Techno capitalism |
| தகவல் மீநிலைப் பெருஞ்சாலை | Information super highway |
| உலகளாவிய பெருஞ்சந்தை | Worldwide mega market |
| புதிய வறுமை | New poverty |
| கோளவெகுசனப்பாடு | Global popular |

போன்றன கோளநோக்கில் சிந்தியுங்கள் பிரதேச நோக்கில் செயற்படுங்கள் பிரதேச நோக்கில் சிந்தியுங்கள் கோளநோக்கில் செயற்படுங்கள் think locally act globally என்பன மனித குல இயங்கு முறைமைகளால் எழுச்சி கொண்டுள்ள உலகளாவிய எண்ணக்கருக்களாகும்.

இவை அடிப்படையில் கருத்தியல் தெளிவற்ற கோசங்களென்கிறார்கள் கல்வி அறிஞர்கள். இந்நிலையில் உலக ஓட்டத்தில் ஒட்டாது ஒரு நாடு தன் பிரசைகளை உலகிற்கான பிரசைகளாக ஆக்க முடியாது. இதனை ஆக்குவதற்கான துறை கல்வித்துறை ஒன்றே. கல்வியின் நோக்கம் பற்றி விளக்கும் சமூகவியலாளர்களின் கருத்துக்கள் இன்றளவும் கல்விச் செயற்பாட்டில் முக்கியத்துவம் பெற்றுவருகின்றன.

சமூகவியற் கல்விக்கொள்கை ஆக்குவோரால் தீர்மானிக்கப்பட்ட கல்வியின் நோக்கங்கள் இன்றும் பெறுமதி மிக்கதாகவே நிலை பெற்றுள்ளன..

19 ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சு சிந்தனையாளரான எமில் துர்கயெம் "கல்வி மூத்த தலைமுறையினரின் குறிக்கோளுடன் கூடியது என்றும் அறிவு விழுமியம் சமூக செயற்பாடு என்றும் பண்பாடானது மூத்த தலைமுறையினரால் இளந்தலைமுறையினருக்கு வழிவழியாக கடத்தப்பட கல்வியே உதவுகிறது. இது மீள் உற்பத்திப்பணி. இதனை மரபுவழிக் கல்விமுறைகள் சரியாக செய்துவந்தன என வெளிப்படுத்தினார். இது தொழிற்பாட்டு வாதம். ஒவ்வொரு சமூக நிறுவனத்திலும் பேணப்பட வேண்டும். இதில்தான், அவர் கல்வி "இளந்தலைமுறைகளை முறையாக சமூகமயப்படுத்தும் தொழிற்பாடு " என்றார். அவற்றை சரியாக முன்னெடுக்க பாடசாலைகளுக்கான கவனிப்பு அவசியம். அத்தோடு மரபுகடந்தும் இன்றைய பாடசாலைகள் புதிய தொழிற்பாட்டு வாதங்களை வரித்துக் கொள்ளவேண்டும், எனின் எமது நாட்டுக்குள் உலகளாவிய சிந்தனையை வசப்படுத்திக் கொண்டு கல்வியை நெறிப்படுத்தவேண்டியது கல்விக்கான பணி செய்யும் மனிதர்களின் பொறுப்பு. அது சாத்தியமாகி உள்ளதாக எண்ண முடியவில்லை. "

''கல்வி மனிதனை மேன்மைப்படுத்தவும் சமூக இடைவினை உறவுகளில் இணக்கப்பாட்டை உயர்த்தவும் தேசிய ரீதியில் வினைத்திறன் மிக்க மனித வளத்தை அதிகரிக்கவும் உதவுகிறது. இது கல்வி என்ற ஊடகத்தில் பொருத்தமான கலைத்திட்டம் உள்ளடக்கமாக வரும்போதே மேற்கூறப்பட்ட கருத்தியலோடு இணைய முடிகிறது அது வரன்முறையாக எம்மால் எமது கிழைத்தேச மரபுகள் தழுவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் கையயளிக்கப்பட்டு வந்த கல்வியாலேயே சாத்தியமாகியது கல்வியின் கலைத்திட்டம் மாறி இப்போது மனிதர்கள் கல்வியை இயற்கையை அறைகூவலுக்கு உள்ளாக்குவதற்கும் வெறும் பொருளாதார நலனுக்கான தொழில் பற்றிய பிரக்ஞையிலுமாகவே கல்விப் பரிமாற்றம் இன்று நிலை மாற்றமுற்றுள்ளது.

கோளமயமாதலில் பொருளாதாரத்தைத் துரிதப்படுத்தும் பிரதான மைய விசையாகவும் பொருளாதார வல்லாண்மைக் காரணியாகவும் கல்வி வலுப்பெற்று விட்டது. மேலும் சுதேசியப்பண்பு தகர்ப்புக்குள்ளாகி வருகிறது.குடி நகர்வு உலக செயற்பாடுகளில் முதன்மை பெற்றுள்ளது. இதனால் கல்வியின் பயன்பாடு புதிய மாற்று தேவைகளுக்குமாகியுள்ளது.

கோளமயமாதல் நாடுகளின் எல்லைகளை நீக்கி நாடுகளுக்கிடையிலான நுண்ணிய சிறப்பம்சங்களைப் புறந்தள்ள மக்கள் நாடுகள் கடந்து தொழில் தேடியும் கல்வி தேடியும் குடிநகர்வடைகிறார்கள். இங்கு தனித்துவமான மனித விழுமியம் அற்றுப்போகிறது. சான்றிதழ் நோக்கிய கல்வித்தேடல் , அதற்கே சமூக அங்கீகாரமும் எனவாகி விட்டது.

மறுபுறம் எமது சூழலில் இன்றும் வகுப்பறையில் தனது வகுப்பு பிள்ளைகளை அந்த கிராமத்துக்கான அந்த சுற்றயலுக்கான பிரசையாக்கும் மனோநிலையில் பெற்றோர் இருப்பதும் ஆசிரியர்கள் தம்மை நவீன உலகிற்கு மாந்தர்களை ஆக்கும் பொறுப்பு மிக்கவர்களாக பெரும்பாலும் கருதாமை காணப்படுகின்றது.

ஆசிரியர் விருத்தி கற்கைகளில் இவற்றுக்கான ஏற்பாடுகளால் மற்றும் ஆசிரியர்களின் சுய தேடலால் மட்டுமே தாம் எங்கிருக்கிறோம் என்கின்ற புரிதல் எழும். ஏனெனில் மாணவர் மையக்கல்வி என்ற கோட்பாட்டிலும் கூட ஆசிரியம் மைய விசையாகின்றது.

வளப்பங்கீடுகளில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான அணுகுமுறை இன்மை ஆய்வுகள் இல்லாது தீர்மானிக்கப்படும் வளஅளவுகள், வளத்தரங்கள் பல கல்விச் சமமின்மைக்கு இட்டுச் செல்கின்றன. இதனை மாணவர்களின் மெல்லக்கற்கும் நிலையை ஆக்கும் காரணி எனவும் கூறமுடியும்.

மாகாணமட்ட கல்வி நிர்வாகங்களில் இலங்கை பூராகவும் பலவீனமான நிலைமையால் உள்ள வளங்களின் பங்கீட்டை இதய சுத்தியோடு சரியாகப் பகிர, வளங்களை நெறிப்படுத்த அதிகாரிகள் செயற்படுவதில்லை. அல்லது செயற்திறன் இன்மை எனக் கல்வி அவதானிகள் கருதுகிறார்கள்..

கல்வி படிமலர்ச்சி கல்விசார் உளவியல் கல்வி முகாமைத்துவ கோட்பாடுகள் கல்வி அளிப்பு முறைகள் கல்வி தத்துவம் போன்றன வற்றை தமது கல்விக்கூடாக பெறாதவர்களால் கல்வி மேலாண்மை செய்யப்படுவதும் நெறிப்படுத்தப்படுவதும் இதன் நிலைமைக்கு காரணமாகிறது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளப்பங்கீடுகளில் ஒருதருக்கு ஒரு நியாயம் மற்றவர்க்கு வேறு ஒரு நியாயம் என நடக்கின்றதும், அரசியல் வாதிகளின் பொருத்தமற்ற தலையீடும் அதிகாரிகளின் அகவயத்தன்மையும் அவர்களின் கோட்பாட்டு நிலை அறிகை குறைபாடுகளும் இதனை ஏற்படுத்துகின்றன.

கல்விப்பணிப்பாளர்கள், அதிகாரிகள் போன்றோரின் மனப்பாங்கும் பின்தங்கிய பாடசாலைக்கு சக்திமிக்க ஆசிரியர்களை வழங்கி சமப்பகிர்வை ஓரளவுவெனினும் நிறைவுசெய்ய முனைவதில்லை. இதனால் பின் தங்கிய பாடசாலைகளில் பிள்ளைகள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள்.

உதாரணமாக பிள்ளைகளின் தொகை அதிகமுள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்கு சர்வதேச கொடையாளர்களின் உதவி கிடைக்க அதிகாரிகள் முனைய மாட்டார்கள். ஒரு பொது நலன் கருதி பின்தங்கியுள்ள பாடசாலைக்கு பௌதீக வளங்களால் ஆசிரியர் வளங்களால் கல்விக்கான துணை உதவுனர்களால் அந்தப் பாடசாலையை மேலும் வேறு வளங்களால் நிறைவுப்படுத்தி முன்னேற்ற விசேட கவனம் கொள்ள மாட்டார்கள்.

அவர்கள் , அங்கு கற்கும் பிள்ளையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் , வளங்கள் என்பதை புரிய மறுத்தல் இதன்பாற்படுகிறது. அரசியல்வாதிகள் தமது எதிர்கால வாக்குவங்கியை மையமாக வைத்து வளங்களைப் பகிர்வார்கள்

இதனால் மிதமிஞ்சிய நிலை ஒரு பாடசாலையிலும் பற்றாக்குறை மறு பாடசாலையிலும் தொடர்கிறது. இது மட்டுமன்றி தமக்கு தேவையான அதிபர்கள் என்ற பட்டியலும் தமக்கு தேவையான ஆசிரியர்களின் பட்டியலும் இதன்பாற்பட்டு வளப்பகிர்வில் செல்வாக்குச் செலுத்துகிறது. இதனால் கல்வி அடைவு தாழ்நிலையில் ஆகும். இதைவிட பாடசாலைக்கு வழங்கப்படும் ஆசிரியர் பங்கீடுகளில் ஆசிரியர்களின் வசதிக்காக சிலருக்கும் அதிகாரிகளின் அகவயங்களால் சமனற்ற பங்கீடுகளும் செய்யப்படுகின்றன.

இவை அனைத்தும் பிரசைகளின் உரிமை மீதான விடயமாகப் பார்க்கப்பட வேண்டும். அத்தோடு எதிர்கால சந்ததிகளின் மீதான புறக்கணிப்பாக நோக்கப்பட வேண்டும்.

நிர்வாக ரீதியாக அதிபர்களின் வசதிகளில் அதிகார தொழிற்படுத்தலில் மேலாண்மையின் நேர்நிலை பாதுகாப்பும் ஒத்துழைப்பும் முகாமையாளர்களான வகை கூறுவோருக்கு அவசியம்.

கற்பிப்போம் என்று ஒப்பந்தம் செய்து வந்த ஆசிரியர் கற்பிக்க மாட்டாது பாடசாலையில் பொழுதைப்போக்கின் அது பிள்ளையின் கல்வி அடைவை பாதிக்கும்.அதற்கான சட்ட நடவடிகையை அந்த பாடசாலை முகாமையாளர் செய்ய அவருக்கு மேலதிகாரிகள் வசதி செய்து ஏற்ற ஒழுங்குகள் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்த நிலைமை பரவலாகவே காணப்படுவதில்லை. இதை விடவும் ஆசிரியர்களின் சலுகைகள் என்ற அடிப்படையில் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பதிற் பணிக்கான கல்விக் கட்டமைப்பில் ஏற்பாடுகள் இல்லாமை மிகவும் பாரதூரமான சமமற்ற கல்வி நிலையை தோற்று விக்கும் காரணியாகும்.

உதாரணமாக ஒரு பெண்ணாசிரியை தனது பிரசவ லீவில் 84 நாட்கள் பெற்றால் பதிற் பணியாளர் ஒருவரை கல்விப் பணிமனை தருவதில்லை. ஆளணி கட்டமைப்பில் குறித்த வளம் காணப்படினும் அதனால் பயன் இல்லாது போகிறது. அது தரமற்ற கல்வி வழங்க ஒரு காரணியாகிறது. இவற்றுக்கான ஏற்பாடுகளின் அவசியம் பற்றி கல்வி அமைச்சு நிலையியல் புரிதல் வரவேண்டும் .

இவை அனைத்தும் சமத்துவமான கல்வி வாய்ப்பை இலங்கை பூராகவுமுள்ள பாடசாலைகளுக்கு கிடைக்கச் செய்வதில் பெரும் சிதைவை ஏற்படுத்துகின்றன.

எனவே இவற்றை ஒரு சீரான நியாயமான நடைமுறைப்படுத்தலுக்கு கொண்டு வரும்போது பொது மதிப்பீட்டில் குறித்த பிரதேசம் எழுச்சி கொள்ளும். வேலைக்காக தம்மை அர்ப்பணிப்போர் திருப்தி அடைவர். கல்விப்புலத்தில் உழைக்க முடியாதவர்கள் அந்நியப்படுவர். கல்வி என்பது உழைக்கும் மாந்தர்களால் ஆகும். உயர்வான கல்விவாழ்வை இளையோர் அனுபவிப்பர்.

பிள்ளையிடம் ஆக்கமலர்ச்சியும் எமது எதிர்பார்க்கையும்

'மனித அனுபவங்களின் நுண்ணறிவுத் துறையினூடே புதுமை புதுப்பெறுமானம் காணும் பங்களிப்புக்களின் விளைவு ஆக்கத்திறன்' வீஸ்னர்

கல்வி என்ற எண்ணக்கரு இடம் பொருள் ஏவல் என்பதுபோல பல பரிமாணங்களை கொண்டது. கல்வியில் ஆக்கமலர்ச்சி பற்றிய எண்ணக்கருவும் மிக முக்கியமானது.

உலக இயக்கத்தில் தவிர்க்கமுடியாத ஒரு பதம் இது என்பது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே.

இந்த உலகம் ஆக்கங்களின் பிரத்தியட்சமே.. குறிப்பாக இந்துக்களின் ஆன்மீக தத்துவத்தில் இறை இயலில், படைத்தல் என்ற பதம் இதன் பாற்படும்.

ஆக்கமலர்ச்சி ஒவ்வொரு உயிரியின் இயல்பிலும் இரண்டறக் கலந்ததுவே. இந்த பின் புலத்தில் கல்வியில் சிலவற்றை நோக்குவோம்..

பாடசாலையில் முறைமைப் படுத்தப்பட்ட பெறுபேற்றில் குறைந்த பிள்ளை அறிவாற்றல் இல்லாதது, வாழத்தகுதி இல்லாதது என்ற முடிவுகளும் அவர்களிடமுள்ள ஆக்க மலர்ச்சிக்கு அங்கீகாரம் இல்லாது இக் கல்விமுறை சீரழிப்பதையும் நாம் அவதானிக்க வேண்டும்..

ஒரு சூழல் தனக்கான பிரசையை ஆக்கும் சூழலே. நாம் எதிர்பார்க்கும் பெறுபேற்றுக்கான பிள்ளைகளை சிதைக்கின்றது, என்பது ஒரு புறமிருக்க அதன் மறுவளமாக ஆக்கமலர்ச்சியுடைய பிள்ளைகள் எமது கல்வி கட்டமைப்பிலிருந்தும் கல்வி ஏற்பாடுகளைப் புறந்தள்ளியும் அந்தச்சூழலில் வளர்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச்சூழல் பிள்ளையிடம் ஆக்கமலர்விற்கான தூண்டிகளை ஏற்படுத்தி விடுகின்றமை அவதானிக்க முடிகின்றது.

இன்று சமூகத்தில் பொருளாதார நிலையில் உயர்ந்தும் பலரின் பொருளாதாரத்துக்கு ஆதார சுருதியாகவும் காணப்படும் முயற்சியாண்மையாளர்கள் இந்த ஆக்கமலர்ச்சி எண்ணக்கருவில் விளக்கப்படும் பண்புகளை உடையவர்களாக உள்ளனர். இது இயற்கை எமக்களிக்கும் கொடை.

சூழலுக்கு விரோதமான கல்வி அமைப்பை உருவாக்கியுள்ள நாம் மீன்களை மரம் ஏறச்சொல்கிறோம் என்கிறார் ஒரு கல்வியியலாளர்.

விசித்திர ஏற்பாடுகளுக்கும் மரபுவழியான நடத்தைகளுக்கும் விலகி தாமே புதியனவற்றை சூழலினால் உருவாக்கி தன்னை தகவமைப்பது மனித மற்றும் இயற்கை ஜீவராசிகளின் பண்பு என்பதை நாம் மனங்கொள்ளவேண்டும்.

பாடசாலை ஏற்பாடுகள் கட்டாயப்படுத்தப்படுவதை இவ்வாறாக விலகி தமது அறிகைத் தேடல், ஆக்கமலர்ச்சியுடைய வழியைப் பின்பற்றும் பிள்ளைகளின் அடைவுகள் எமது கல்வியமைப்பை மாற்றி யோசிக்காது மாற்றிப்பிரயோகிக்க இடமளிக்காது உள்ள சூழலில், அடைவு எட்டாதுள்ளமை தோல்வி நிலை என்றே கருதுகின்றோம் என்பதே எமது பலவீனம் எனக் கூறலாம்.

ஆக்கமலர்ச்சி பற்றிய பல ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் உள்ளன. கில்பட் என்ற பிரயோக உளவியலறிஞர் ஆக்கத்திறனின் பண்புகளை 24 ஆகக் காட்டினார் அவற்றில் சில

| | |
|---|---|
| • பிரச்சினை பற்றிய நுண்ணுணர்வு | sensitivity |
| • துரிதமாக சிந்தித்தல் | ideational fluency |
| • சிந்தனையில் நெகிழ்ச்சி | flexibility |
| • சுயத்துவம் | originality |
| • துரித அகமுனைப்பு | intuitive leap |
| • விடாமுயற்சி | persistance |
| • புதியன கோடல் | seeking new relationship |

இத்தகு ஆக்கமலர்ச்சிக்கான குறிகாட்டிகள் பாடசாலை ஏற்பாட்டில் இதுவரை காணப்படவில்லை ஆனால் மனிதக்குழந்தையிடம் அது உண்டு.

'மரபுவழியான நடத்தையை விட்டு மாற்று வழியில் சிந்தித்தலும் ஆக்க மலர்ச்சியின் வெளிப்பாடாகின்றது. புதிய தொடர்புகளை கண்டறிதலும் பழைய அமைப்புகளை புதிய உச்சங்களை நோக்கி நிலை மாற்றஞ் செய்தலும் ஆக்கமலர்ச்சியின் பாற்படுகின்றன.

இது ஒரு வகையில் தனித்துவத்தின் வெளிப்பாடாகின்றது. பிரச்சினையை விடுவித்தலிலும். புத்தாக்கங்களை ஏற்படுத்தலிலும் ஆக்கமலர்ச்சி இணைந்து கொள்கின்றது.' என்ற எடுகோள் கவனத்துக்குரியது.

பாடசாலை ஏற்பாடுகளில் வடிவமைக்கப்பட்ட ஆக்கமலர்ச்சிக்கான வாய்ப்புகளை பாடசாலைகளில் ஏற்பாடு செய்வதில் வளப்பகிர்வு புறந்தள்ளுகிறது.

ஒரு விஞ்ஞான ஆய்வுகூடம் ஆக்கமலர்ச்சிக்கான வாய்ப்பைக்கொடுக்கும் அதேவேளை, அந்த ஆய்வு கூடத்தை நாம் எற்பாடுகளாலான பாடத்திட்ட செயன்முறைகளுக்கு மட்டுமே அனுமதிப்பதும் எமது சூழலிலுள்ள பலவீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு ஆக்கமலர்சியை வெளிப்படுத்தும் வாய்ப்புக்கு குறிகாட்டிகள். எமது கல்வி ஏற்பாடுகளில் இல்லாதுள்ளது. மாறாக சப்பித் துப்பினால் பல்கலைக்கழகம் எட்டும் என்பதே நிலை.

பாடசாலையின் மறைநிலைக் கலைத்திட்ட கல்வி ஏற்பாடுகளை பாடசாலையின் பன்முக உழைப்பை இது அளவிட மறுக்கும் நிலைமையாகும். அவ்வாறான அளவிடும் பொறிமுறையினாலான குறிகாட்டிகள் உள்ள பட்சத்தில் இயல்பாக வரித்துக் கொள்ளும் ஆக்கமலர்ச்சியுடைய பிள்ளைகளுக்கான அங்கீகாரம் அந்த பாடசாலையின் உழைப்புக்கான அங்கீகாரமும் கிடைக்கும். பாடசாலை நற்பெயரை பெறும். அந்த நிலை நடைமுறையில் இல்லாதிருப்பதும் அதனைச்சான்றுப்படுத்தும் குறிகாட்டி ஏற்பாடுகள் கல்விச்செயலமைப்பில் இல்லாதிருப்பதும் ஆக்கமலர்சியின் பால் தம்மை அதிகம் புதைத்துக் கொள்ளும் பிள்ளைகளை சிதைக்கின்றது..

ஆக்கமலர்ச்சிப் பிரயோகம் முனைப்புடைய மாணவர்களை பாடசாலை ஏற்பாடுகளால் அவமதிக்கச் செய்கின்றமை மிகவும் மனவருத்தம் தரும் நிலைமையாகும். நாட்டின் சிந்தனையாளர்களை ஆக்கமுடையோரை நாம் எமது கல்வித்திட்டம் மதிப்பீட்டுத்திட்டம் மூலம் சிதைக்கிறோம். மதிப்பீடும் கற்றலுக்கான மிகவும் வினைத்திறனான உபாயம். அதில் பிள்ளைகளை எழுச்சிப்படுத்தவும் சிதைக்கவும் முடியும்.

மாகாண நிலையில் 1500 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன் ஒருவனை கல்விப்புலம் புறந்தள்ளியது அவனிடம் க.பொ.த சா.த பெறுபேற்றில் தோல்வி என்பதினால்.கவாட் காட்னர் குறிப்பிட்ட குறைந்தது ஒரு திறன் இந்தப் பிள்ளையிடம் உண்டு என்பதை கல்வி ஏற்பாடுகளில் கவனிக்கவேண்டும். ஒருவரிடமுள்ள செயற்திறனின் பின்னால் நுண்மதி என்ற உளதிறன் அமைப்பு உண்டு. அதன்படி மொழிதர்க்கம் இசை பார்வை உடலியக்கம் ஆள்அகம் ஆளிடை இயற்கை சார்ந்த நுண்மதி எனவே இவற்றை பிரயோகிக்க பிள்ளைக்கு பாடசாலை ஏற்பாடுகளில் மிக்க குறைந்த வாய்பைக் கொடுத்துள்ள போது சமமான கல்வி வாய்ப்பை அவர்கள் பெறமாட்டார்கள்.

உதாரணமாக வீட்டில் பழைய தொலைகாட்சிகளை இணக்கி தொழிற்படவைக்கும் ஒருவன் குறித்த க.பொ.த சா.த தேர்வில் தோல்வி என அடையாளப்படுத்தப்படுகிறான். அவனுக்கு பாடசாலை வாய்ப்பை மேலும் கற்க வழங்குவதில்லை. வீடுகளுக்கு தண்ணீர் குழாய்பொருத்த தானே மின் இணைக்கக் கற்றுக்கொண்ட பலரைப் பார்கிறோம். அவர்களை பரீட்சை நிராகரிக்கிறது. மிகத்தரமான கலை நுணுக்கமான ஒரு ஓவியனை க.பொ.த சா.த தரதேர்வு புறந்தள்ளிவிடுகிறது. தற்போது அவர்களை 13 ஆண்டுக்கல்வி மற்றும் தேசிய தொழிற்தகைமை உள் எடுத்துள்ளது. ஆனால் பாடசாலையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படாதவர்களாகவே உள்ளனர்.ஒரு மாணவன் தனது இயலுமைக்கு சமூகம் அங்கீகாரம் இல்லாதாகும் நிலையில் அவன் தன்னம்பிக்கையை தொலைக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆற்றலுக்குரிய துறையை விட்டு கஸ்டப்பட்டு வாழும் அடிமை தொழிலுக்கு செல்கிறான். தோமஸ் அல்வா எடிசனை ஆசிரியர்கள் நிராகரித்தார்கள் எனக் கற்றோம். இவ்வாறு ஆக்கமலர்ச்சி என்பது சான்றிதழ் கடந்ததே.. எனவே நாம் மீன்களை ஆற்றிலும் பறவையை காட்டிலும் விட வேண்டும். ஹவாட் காட்னரின் எட்டு ஆட்சிப்பண்புகளை கொண்ட ஆளுமைகள் எமது கல்விப் புலத்தில் உள்ளனர். அவர்களை சூழல் உருவாக்குகிறது. புத்தகம் மீது அபிமானம் இல்லாதுள்ள பிள்ளைகள் பற்றி புரிதல் வேண்டும் அவர்களுக்கான புறச் சமூக சூழலுக்கு பாடசாலை மட்டும் பங்களிக்குமா என்பது இந்தக்கருத்தாடலின் இன்னொரு முகம்..?

**பெருமாள் கணேசன்,**
**அதிபர்**
**கிளி / சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்.**



**கிளி / அக்கராயன் ம.வி சிறுவர் தின விழாவில்...**



**கிளி / அக்கராயன் ம.வி ஆசிரியர்களுக்கான செயலமர்வின் போது....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கைக்கான விழுமியங்கள் சுருக்க குறிப்புகள்

## வாழ்க்கைக்கான விழுமியங்கள்.

- விழுமியங்கள் செயற்படுத்துவதற்குரிய கொள்கைகள்.
- விழுமியங்கள் நடத்தை வரம்புகள்.
- விழுமியங்கள் மனித நடத்தைக்குப் பொருளும் வலிமையும் சேர்க்கின்றன.
- விழுமியங்கள் ஒருவரது தீர்மானங்களைப் பிரதிபலிக்கின்றன.
- விழுமியங்கள் கனவுகளையும் கண்ணோட்டத்தையும் தெளிவுபடுத்துகின்றன.
- விழுமியங்கள் சரியானவற்றைச் செய்யுமாறு வழிகாட்டுகின்றன.
- விழுமியங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், மனநிறைவையும், அமைதியினையும் ஏற்படுத்துகின்றன.

## தனிமனித விழுமியங்கள்.

1. இலட்சியமுடைமை- **Ambition**

   ஒரு குறிப்பிட்ட துறையில் வெற்றிபெற வேண்டும், உயர வேண்டும், என்ற பேரார்வம். உள்ளுறைகின்ற சக்தி

2. தூய்மை- **Cleanliness**

   களங்கமின்மை, ஊழலின்மை, மனத்தூய்மை.

3. மனநிறைவு- **Contentment.**

   பேராசையற்ற மனநிலை. இருப்பதைக் கொண்டு திருப்தியடைகின்ற உளப்பாங்கு.

4. துணிச்சல்- **Courage**

   சாதனை பெறுவதற்கான உந்தல், சவால்களை வெற்றிகொள்ளும் மனோதிடம்.

5. ஆக்கத்திறன்- **Creativity.**

   நமக்குள் உறங்கிக்கிடக்கும் சக்தியை வெளியே கொண்டுவரல்.

6. மன உறுதி- **Determination.**

   குறிக்கோளினை வெற்றிகரமாக அடைவதற்கான மனவிருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உடலுழைப்பின் மாண்பு- **Dignity of Labour.**
எத்தொழிலினையும் மதித்தல்
8. ஊக்கமுடைமை- **Diligence.**
பொறுமையுடன் கூடிய விடாமுயற்சி.
9. கூர்ந்துணர்தல்- **Discernment.**
சரியான தெரிவு. மெய்யான தகவல்களை இனங்காணல்.
10. மேம்பாடு- **Excellence**
ஒருவிடயத்தினை வெற்றிகரமாக நிகழ்த்தி முடித்தல்.
11. நேர்மை- **Honesty**
தமக்கும், மற்றவருக்கும் உண்மையாக நடந்துக்கொள்ளல்.
12. நம்பிக்கை- **Hope.**
தொடர் முயற்சி, எடுத்த காரியத்தை விடாது முடிக்கும் உந்தல்.
13. மனமுதிர்ச்சி- **Maturity**
மன உணர்வில் சமநிலை. பொறுப்பேற்றல், பொறுப்புள்ள பண்பாளர்.
14. ஒழுங்குமுறைமை- **Regularity**
நிலையான உறுதி , மாறாத்தன்மை,
15. நேரந்தவறாமை- **Punctuality**
குறித்த நேரத்தில் பணியாற்றல்.
16. தன்னம்பிக்கை- **Self Confidence**
தம்மீதும், தமது திறமையின் மீதும் ஒருவர் கொண்டுள்ள நல்லெண்ணம்.
17. சுய ஊக்கம்- **Self Motivation.**
எண்ணியது முடிக்கும் உறுதி.
18. எளிமை- **Simplicity.**
செயற்கைத்தன்மையில்லாத பண்பு.

## சமூக விழுமியங்கள்

1. வகைகூறல்- **Accountability.**
முழுப் பொறுப்புடன் பதில் சொல்லுதல்.
2. சகோதரத்துவம்- **Brotherhood.**
அடிப்படை உரிமைகளை அங்கீகரித்தல்.
3. சூழலியல் குறித்த அக்கறை- **Concern for Environment.**
தமது சூழல் மீதான அக்கறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நயநாகரிகம்- **Courtesy.**

கனிவான பவ்யமான நடத்தை. நயமான பேச்சு,

5. உரையாடல்- **Dialogue.**

எண்ணங்களையும்,கருத்துக்களையும் பரஸ்பர உணர்வுடன் பரிமாறும் திறன்.

6. கடமையுணர்வு- **Dutifulness.**

மனச்சான்றின்படி கடமைகளைச் செய்தல்

7. மன்னிப்பு- **Forgiveness.**

மற்றவர்பால் இரக்கமும் கருணையும் கொள்ளல்.

8. சுதந்திரம்- **Freedom**

நாம் விரும்பியதை தேர்ந்தெடுத்தல்.

9. நட்புறவு- **Friendship.**

நேச அர்ப்பண உணர்வு.

10. நன்றியுணர்வு- **Gratitude.**

பிறரின் உதவிகளை மதித்தல்.

11. விருந்தோம்பல்- **Hospitality.**

தாராள மனத்துடன் வரவேற்றல்.

12. நீதி-**Justice.**

சட்ட ஒழுங்குவிதிகளின்படி நடத்தல்.

13 .அன்பு-**Love**

மகிழ்ச்சியும்,வலிமையும் தரும் உறவு.

14. பெருந்தகைமை- **Magnanimity**

வலியச் சென்று ஒருவருக்கு உதவுதல்.

15. பொறுமை- **Patience**

அமைதியாக,பொறுமையாக,சகிப்புத்தன்மையோடு இருத்தல்.

16. தவறுக்கு வருந்துதல்- **Repentance**

விதிமீறல்களுக்கு மன்னிப்புக் கோரல்.

17. பொறுப்புணர்வு- **Responsibility.**

ஒப்படைக்கப்பட்டுள்ள பணியில் முழுக்கவனஞ் செலுத்தி அதனை செய்து முடித்தல்.

18. சேவை- **Service.**

மற்றவர்களது தேவைக்குறித்த தன்னலமற்ற அக்கறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இரக்கவுணர்வு- **Sympathy.**

மற்றவர்களின் உணர்வில் ஆழ்ந்து ஈடுபடும் பண்பு.

20. கூட்டொருமை பண்பு- **Team Sprit.**

மெய்யான ,அர்ப்பணிப்புடன் கூடிய கூட்டுப்பணி.

21. சகிப்புத்தன்மை- **Tolorance.**

பிறரது உள இயல்புகள்,கருத்துக்கள்,மனநிலைகள் என்பவற்றை மதித்து நடத்தல்.

22. பகிர்வு- **Sharing.**

நம்மிடம் உள்ளதை மற்றவர்களுக்கு கொடுத்தல.

23. விளையாட்டுபோட்டி உணர்வு- **Sportsmanship.**

வெற்றி தோல்வியை சமமாக மதிக்கும் பண்பு.

24. அகிம்சை- **Non-Violence.**

பலாத்காரமற்ற, துன்புறுத்தலற்ற மேலாண்மை.

25. கீழ்படிதல்- **Obedience.**

அர்த்தமுள்ள மரியாதை

26. இறையுணர்வு- **Prayer**

வேண்டுதல், விண்ணப்பித்தல், சுய அர்ப்பணம்.

27. தன்னல மறுப்பு- **Renunciation**

ஆசைகள்,உணர்வுகள் ஆகியவற்றை கட்டுப்படுத்தல்.

28. உண்மையுடைமை- **Truthfulness.**

விளையாட்டாக கூட பொய் பேசாமை

**திருமதி. ருக்ஷா சுவர்ணராஜா,**
**முகாமையாளர் வீடமைப்பு அதிகாரசபை,**
**வவுனியா.**

---

- *பளிங்குக் கல் அழகிய சிற்பமாவது போல் கல்வியினால் ஆன்மா சிறப்படைகின்றது-* **ஜோசப் அடிசன்**
- *கற்றறிந்த மனிதன் என்று யாருமில்லை. கற்கும் மனிதர்கள்தான் உள்ளனர் -* **மரேஷால்**
- *நன்கு கற்றுணர்ந்த மனிதனே தன்னுடைய அறியாமையைப்பற்றி அறிவான்-* **விக்டர் ஹியூகோ.**
- *எந்த சிறந்ததை நீங்கள் அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டியிருந்ததோ அதையே கற்றுக்கொடுங்கள் -* **ரிச்சர்ட் பாக்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் விழுமியக்கல்வியின் அவசியம்

அறிமுகம்

நாம் வாழும் உலகம் அறிவியல் உலகம் எனக் கூறப்படுகிறது. பொருளாதாரம், அரசியல், இராணுவக் கலாசாரம் என எல்லா விடயங்களையும் அறிவும் தகவலும் தீர்மானிக்கும் காலமாக மாறியுள்ளது. இன்று வணிகத்தில் கூட அறிவை எவ்வாறு உற்பத்தி செய்வது, பயன்படுத்துவது, விநியோகிப்பது என்பது தொடர்பில் அறிவு முகாமைத்துவம் என்ற புதியதுறை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. நிலம், உழைப்பு, முதல், முயற்சி என்கின்ற பொருளாதார காரணிகளுடன் அறிவு என்பதும் முக்கியமாகி அறிவுப் பொருளாதார யுகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கு கல்வியே மூலதனமாக அமைய கல்விக்கூடங்களே முக்கிய அமைப்புக்களாக மாறியுள்ளது. கல்வி என்பது ஒரு ஆயுதம் போன்றது. அது வைத்திருப்பவரின் சிந்தனையைப் பொறுத்து அதன் பயன்பாடும் மாறுபடலாம். நல்ல சிந்தனையோடு ஆக்கபூர்வமாக அதனைப் பயன்படுத்தினால் அதன் விளைவு உலகையே ஒளிமயமாக்கும். மாறாக வைத்திருப்பவரது சிந்தனை சமூக முரண்வாய்ந்ததாக இருந்தால் அது அழிவு நோக்கிய செயலை மேற்கொண்டு உலகையே இருள்மயமாக்கவும் முடியும். எனவே தான் கல்வியானது நல்ல ஆளுமை நிறைந்த மனிதனை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கலாசாரம் உளவியலில் ஏற்படுத்தும் தாக்கம் தனிமனித ஆளுமையிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. கலாசாரம் என்பது நன்னெறிகளின் கலவையாகக் கருதப்படுகிறது. மனிதன் ஒரு சமூகப்பிராணி எனும் வகையில் பல்வேறு வகையிலும் பல்வேறு இடங்களிலும் இணைந்து செயல்படுகின்ற போதும் ஒவ்வொருவரும் பல்வேறு பழக்கவழக்கங்களையும் பல்வகைப்பட்ட பண்புகளையும் கொண்டிருந்தாலும் ஒரு நிறுவனம், அல்லது ஒரு பிரதேசம் ஒரு நாடு, ஓர் இனம் என்கின்ற ஏதோ ஒருவகையில் அவர்கள் தமக்கென பொதுவாக ஒன்றிணையும் போது அவர்களது நோக்கம், எண்ணம், வெளிப்படுத்தும் பண்பு, தோற்றம், பழக்கவழக்கம் போன்ற விடயங்களே கலாசாரம் எனக்கருத முடியும். இது மனிதனின் ஆளுமையில் சிறப்பான செல்வாக்கு செலுத்துகிறது. தனியொருவர் மேற்கொள்ளும் இடைவினைகள் அவருக்கு கிடைக்கும் தனித்துவமான அனுபவங்கள் அவர் கற்கும் கல்வி நிலையத்தின் இயல்பு, வாழும் சமூக சூழல் போன்றன தனியாள் ஆளுமையில் செல்வாக்கு செலுத்துகிறது. பொருண்மிய உற்பத்தி முறைகளின் மாற்றத்தின் போதும் புலம்பெயர்வு, மரபுவழிப் பிரதேசங்களை விட்டு நகர்தல் போன்றவற்றின் போது கலாசார மாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவதும் அதன் காரணமாக ஏற்படும் உளநெருக்கீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. அதனை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை இன்றைய கல்வி வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் முழுமையடைவதில்லை.

பிள்ளைகளது நடத்தைக்கோலங்களிலே மாற்றத்தை ஏற்படுத்தி சமூகம் எதிர்பார்க்கின்ற ஆளுமை நிறைந்த நற்பிரசைகளாக ஒவ்வொரு மாணவனையும் உருவாக்குவதே பாடசாலை என்கின்ற அமைப்பின் நோக்கமாகும். பாடசாலைகள் தாம் அமைந்திருக்கும் நாட்டினதோ, பிரதேசத்தினதோ இனம், மொழி, கலை, கலாசாரம் போன்ற இயல்புகளையும் வெளிப்படுத்துவனவாகவும் காணப்படுகிறது. அதேவேளை தமது செயற்றிறன் வாய்ந்த தொழிற்பாடுகளுடாக சமூகத்தையே மாற்றிவிடும் பலமும் காணப்படுகிறது.

சமூகம் விரும்பாத செயற்பாடுகளின் தோற்றம்

இன்று சிக்கலடைந்து வரும் சமூக செயற்பாடுகள் வளர்ந்து வியாபித்துவரும் கல்விச்செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தும் நிலை காணப்படுகிறது. இது சில சந்தர்ப்பங்களில் பாடசாலை என்ற அமைப்புக்கு சாதகமாகவும் பல சந்தர்ப்பங்களில் பாடசாலைகளின் நோக்கத்தை தோல்வியடையச் செய்வனவாகவும் அமைந்து விடுகிறது.

மனிதர், மனித வாழ்க்கை சமூக வாழ்க்கை முதலான புலங்களில் மையம் கொள்ளும் மனித ஆளுமையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளுள் கலாசாரமும், விழுமியமும் முக்கியமாக அமைகின்றன.

ஆளுமை என்றால் என்ன என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் காணப்படுகிறது. ஆளுமை என்பது ஒருவனது உடலமைப்பு என்றும் ஒருவனது உடலமைப்பும் அவன் வாழும் சூழ்நிலை தன்மைக்கு தகுந்ததாக அமையும் இயல்புகளெல்லாம் ஒன்று சேர்ந்தது என்றும் பாரம்பரிய இயல்புகளும் அனுபவத்தால் ஈட்டிய இயல்புகளும் ஒருங்குசேர்ந்தமைவது என்றும் மனிதனது நனவிலி மன சக்தியும் சூழ்நிலை சக்தியும் ஒன்றோடொன்று மோதுவதனாலும் இணைவதனாலும் அமைவது என்றும் பலவாறு குறிப்பிடுகின்றனர். எனினும் ஆளுமை என்பது 'தனிமனிதனது எண்ணங்கள், செயற்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, உணர்ச்சிகள் யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மை' எனக்கூற முடியும். ஒருவர் பூணும் வேடம் அவர் வகிக்கும் அங்கம் பிறர் அவரைப்பற்றி என்ன எண்ணுகிறார் என்பதெல்லாம் ஒருவகை ஆளுமையாகவே பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் பார்த்தால் ஒருவர் எப்படி தோற்றமுடையவராக இருக்கிறார் எப்படி பிறரைப் பார்க்கிறார், எப்படி பிறரைத் தூண்டுகிறார் என்கின்ற சமூகத் தூண்டல் மதிப்பாக இது கருதப்படுவதாகவும் நினைக்கலாம். ஆளுமை பற்றிய ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புக்களும் அறிவியல்சார் கருத்துக்களும் ஆளுமைக் கோட்பாடுகளாக விரிந்துள்ளன. மேலும் பண்பாடு, சமூகம் இரண்டும் மனித நடத்தைகளை உருவாக்குகின்றன என கூறப்படுகின்றது. எனினும் மனித இயல்புகளும் ஆற்றல்களும் ஆளுமையின் அடிப்படைகளாகவே அமைந்து விடுகின்றன. எவ்வாறெனினும் தனிமனிதனுடைய சமூக செயல்களில் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் நடத்தைக்கூறாக ஆளுமை காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய பத்திரிகைச் செய்திகளில் கொலை, கொள்ளை, பாலியல் துஸ்பிரயோகம், அடிதடி, குடும்பச்சண்டை, தற்கொலை போன்ற செய்திகளே நிறைந்து காணப்படுகின்றன. மோசடி ஆயுத உற்பத்தி, ஏமாற்று, அதிகார ஆசை கொண்ட அரசியல், வர்த்தக நோக்கில் நோய்க்கிருமிகளை உற்பத்தி செய்து பிறநாடுகளில் பரப்பி அதற்கான மருந்துகளையும் விற்பனை செய்தல் போன்ற சராசரி மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட கீழ்த்தரமான செயற்பாடுகள் தினம் அரங்கேறுகின்றன.

இன்று கல்வியில் முன்னேற்றம் கண்ட நாடுகள் என்று விபரிக்கப்படும் நாடுகளில் எல்லாம் மிகமோசமான மனித கலாசாரம் தோற்றம் பெற்றிருப்பதையும் காணமுடிகிறது. கல்வி, பொருளாதாரம், தகவல் தொழிநுட்பம், அரசியல் என அனைத்திலும் முன்னேற்றம் கண்ட நாடுகளில் அனேகமாக ஒழுங்கான குடும்ப கட்டமைப்புக்கள் இல்லை. மோசமான பாலியல் கலாசாரம், நோய்கள், குரூரமான போர்க்குணம் என்பன நிறைந்து காணப்படுகிறது.

அண்மைய காலங்களில் எங்கள் நாட்டில் குறிப்பாக உயர்தமிழ்ப்பண்பை பேணி வளர்த்த எமது பிரதேசங்களில் கூட இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து நீதித்துறைக்கே சவால்விடும் நிலை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இவை குடும்பத்திலும், பாடசாலையிலும், வேலைத்தளங்களிலும், வீதியிலும் என எங்குமே வியாபித்துக் காணப்படுகிறது. இவை சாதாரணமாக நடக்கும் சம்பவங்கள் தானே என எண்ணும் அளவுக்கு மனிதம் மறைந்து அராஜகம் தலைதூக்கி உள்ளது. ஆனாலும் நற்பிரஜைகளின் உருவாக்கத்துக்காகவே பள்ளிகளும் இயங்குகின்றன. அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறைசார் அதிகாரிகள் என எல்லோருமோ செயற்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. காணவும் முடிகிறது.

இந்த நிலை ஏன் ஏற்பட்டுள்ளது, எங்கே தவறு நடந்தது, அறிவுப்பொருளாதாரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம், அறிவியலும் தொழிநுட்பமும் பிரமிக்க வைக்கும் அளவுக்கு அதன் சிகரத்தை தொட்டிருக்கும் நிலையில் மனித விழுமியங்களும் பெறுமானங்களும் கீழ்நோக்கிச் செல்ல யார் காரணமாக இருக்கிறோம் அல்லது எது காரணமாக இருக்கிறது என்பதை சரியாக இனங்காண்பதும் அதைத் தடுப்பதற்கான, முடிந்தவரை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகிறது.

பாதிப்புக்குள்ளாகும் விழுமிய வாழ்வு

விழுமியம் எனப்படுவது தனிநபர் சமூகம் வாழ்க்கை என்பவற்றை போசிக்கின்ற, வளப்படுத்துகின்ற, அர்த்தமுள்ளதாக்குகின்ற மனித குணப்பண்பு எனலாம். அதாவது மனிதனை முழுமனிதனாக உருவாக்கவல்ல நல்ல நம்பிக்கைகள் செயற்பாடுகளே விழுமியம் எனலாம். மேன்மையான மக்களை 'விழுமியோர்' என நாலடியார் கூறுகிறது. கல்வியியல் மூலதத்துவங்களான விழுமியங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்களை இன்றைய கல்வியியலாளர்கள் பட்டியல்படுத்துகின்றனர். அவற்றில் முக்கியமாக ஆத்மீகம், நுண்ணறிவு, தன்னம்பிக்கை, சுயமதிப்பு, சுயமுன்னேற்றம், ஒழுக்க வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை தனிமனித ஆளுமை வளர்ச்சியில் மிகுந்த செல்வாக்கை செலுத்துகின்றன எனவும் இந்த அம்சங்கள் இன்றைய கல்விச்செயற்பாடுகள் மூலம் சரியாக வழங்கப்படாததாலேயே கோடிக்கணக்கான மனிதர்களைக் காணமுடிந்தாலும் நல்ல உள்ளம் படைத்த மனிதம் நிரம்பியவர்களைக் காண்பது மிகக்குறைவாகவே உள்ளது என கூறமுடிகிறது.

இன்றைய மாறிவரும் உலகில் மாற்றங்களைப் பொருத்தமாக உள்வாங்குதல், கருத்து வேற்றுமைகளை அங்கீகரித்தல், சமூக சமத்துவம், சமூக அபிவிருத்தி, சமூக நீதி போன்றனவும் முக்கிய விழுமியங்களாக அமைகிறது. இவை உயர்ந்த சமூக உருவாக்கத்துக்கு மிக அவசியமாகும். மேலும் பூகோள சமத்துவம், மனித கண்ணியம், சூழல் நட்புடமை கூட்டுடமை போன்றனவும் உலகளாவிய சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்த தேவையான விழுமியங்களாகப் கூறப்படுகிறது. இத்தகைய விழுமியங்கள் (கல்வியில் ஊடாக அடையப்படுமாக) இருந்தால் மட்டுமே சிறந்த ஒழுக்கநெறி வாய்ந்த சமூகம் விரும்பும் நற்பிரசையை உருவாக்க முடியும்.

ஆரம்ப காலங்களில் விழுமியக்கல்வி பற்றி அதிகம் பேசப்பட்டது. 'நற்குணம் சேரா அறிவும் மனிதப்பண்பில்லா அறிவியலும் மனோபாவங்களுக்கு ஒப்பானது. மனித விழுமியங்களை அறிதலும் அதன்வழி ஒழுகுதலும் அவசியமாகும். ஒருவன் மனிதநேய விழுமியங்களைக் கொண்டவனாக ஒன்றிணைந்து வளரும்போதுதான் அவன்பெற்ற அறிவும் திறனும் அர்த்தமாக்கப்படும்' என மகாத்மா காந்தியடிகள் கூறினார். மெய்யான கல்வி என்பது உன்னத மரபையும், அன்பையும், இரக்கத்தையும் ஒருவரிடம் பேணி வளர்ப்பதுடன் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய முழுமையான வாழ்க்கை வாழ உதவ வேண்டும். அவ்வாறெனின் அதற்கு மனிதநேய விழுமியங்களுடன் கூடிய கல்வியே அவசியம் என டாக்டர் ராதாகிருஸ்ணன் கூறினார்.

விழுமியக்கல்வி என்பது புதிய ஒன்றல்ல. பண்டைக்காலம் தொட்டு கல்வி முறைமையில் ஒரு கூறாக இருந்து வந்துள்ளது. மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் மனித விழுமியங்கள் விளக்கம் தந்தன. மனித விழுமியங்களைப் பேணி வாழத்தவறிய சமூகங்களும் நாகரிகங்களும் காலப்போக்கில் அழிந்து போனமையை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது.

### மாறிவரும் உலகிற்கேற்ப கல்விசார் நடவடிக்கையிலும் மாற்றம் தேவைப்படுகின்றது

இன்றைய கல்வியானது தொழில் உலகம் நோக்கிய போட்டிப்பரீட்சையை மையப்படுத்தியதாகவே அமைந்திருப்பதால் கல்வித்திட்டத்திலே குறிப்பிடப்பட்ட விழுமிய விடயங்கள் கூட பாடசாலைகளில் முன்னுரிமைப்படுத்தப்படாது ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையும், மேற்குலக நகரமயமாக்கலில் தொழில் புரியவும் வாழவும் தேவையான தனியாள் திறன் விருத்திக்கு முதன்மையளிக்கும் நிலையம் காணப்படுகிறது. தற்கால கல்வி முறையில் விழுமியக்கல்வியின் வகிபங்கு சரியாக வரையறை செய்யப்படவில்லை என்பதுடன் பெரிதும் புறக்கணிப்புக்குள்ளாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். எமக்கான பாடசாலை எமது எதிர்காலத்துக்கான உன்னதமானவர்களை உருவாக்குகிறதா? என்றால் இல்லை என்றே பதில் கூறமுடிகிறது. இன்று வெறும் இயந்திர மனிதர்களை உருவாக்கும் தொழிற்சாலைகளாகவே கல்விக்கூடங்கள் காணப்படுகின்றன. மனித உறவுகள் சிதைவடைந்துள்ளன. குடும்ப உறுப்பினர்களிடையே பிணக்குகள் அதிகரித்துள்ளன. பாடசாலைகள் கல்வி நிலையங்களில் ஒழுங்கு கட்டுப்பாட்டைப் பேண முடியாத நிலை உள்ளது. ஆசிரியர், மாணவர் உறவு விரிசல் கண்டுள்ளது. பிள்ளைகள் மற்றும் இளையோரிடையே வன்முறைப்போக்கு அதிகரித்து காணப்படுகின்றது. எவரும் எவரையும் மதிக்க விரும்பாத சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உலக மயமாதல் மேலும் நிலைமையை சீரழிவுக்கு இட்டுச்சென்றுள்ளது. சமய சார்பின்மை, ஆன்மீக சார்பின்மை, ஒழுக்க சார்பின்மை, கலாசார பண்பாட்டு சார்பின்மை, மனித விழுமிய சார்பின்மை என்கின்ற நவீன கோட்பாடுகள் மனித உறவுகளுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காத மாக்களையே உருவாக்கியுள்ளது. கூட்டாக வாழ்ந்த காலம் மாறி தனித்துருவங்களாக ஒவ்வொருவரும் முற்படுகின்றனர். இவையெல்லாம் மாற்றப்பட வேண்டும். உண்மையாக மனிதம் நிறைந்த மனிதனாக ஒரு பிள்ளையை உருவாக்க வேண்டுமாயின் விழுமியத்தோடு இணைந்த கல்வியின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர வேண்டும். விழுமியம் கல்வியைவிட்டு விலகி கல்வி இயந்திரமயமாக்கப்பட்ட நிலை மாற வேண்டும். தொழிநுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் அளவுக்கு விழுமியக் கல்வியின் அவசியத்தையும் கல்வியாளர்கள் கொள்கை வகுப்போர் உணர வேண்டும். விழுமியக் கல்வி விழுமியம்சார் கல்வியாக மாற்றப்பட வேண்டும். பாடசாலைக் கலைத்திட்டத்திலே எல்லா பாடங்களிலும் விழுமியங்களை வெளிப்படுத்த உதவும் கற்றல் சூழல் உருவாக்கப்பட வேண்டும். சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டது போல நமக்குத் தேவையான கல்வியானது நல்லொழுக்கத்தை உருவாக்ககூடியதாகவும் நமது வாழ்க்கையை நாம் அமைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாகவும் அமைய வேண்டும். கல்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கமும் ஏற்பட்டு நற்பிரசை உருவாக கல்விக் கூடங்களில் விழுமியக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அவ்வாறாயின் மட்டுமே மனிதம் நிறைந்த வெற்றியாளர்களை உருவாக்க முடியும். அல்லாது விடின் எதிர்பாராத அளவுக்கு பாரதூரமான பண்பாட்டுப் பின்னடைவும் மனித அவலங்களும் ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது போய்விடும் என்பது உண்மையே.

**திருமதி.ஜெ.மாணிக்கவாசகன்,**

**அதிபர்,**

**கிளி / விவேகானந்த வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரும் வாண்மைத்துவமும்

இலங்கையில் கல்வியை வழங்கும் மிகப்பெரிய நிறுவனமாகப் பாடசாலைகள் விளங்குகின்றன. பாடசாலைக் கல்வி தனியார்துறை, பொதுத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. பிள்ளைகளுக்குப் பொதுக்கல்வியை வழங்குவதில் அரச பாடசாலைகளும், சில உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஈடுபடுகின்றன. இதேவேளை சில சர்வதேசப் பாடசாலைகளும் (International School) அண்மைக் காலமாகப் பொதுக்கல்வியை வழங்கி வருகின்றன. இப்பாடசாலைகளில் பல்வேறு தகைமைகள் உள்ள ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றனர்.

ஆசிரியர் தொழில் ஒரு வாண்மைத் தொழிலாக விருத்தியுற்றுள்ளது. கல்வியின் பண்புசார் மேம்பாட்டிற்கும் பண்புசார் தர உறுதிப்பாட்டிற்கும் (Quality Improvement and Quality Assurance) ஆசிரியர்களின் வாண்மை விருத்தி என்பது பங்களிப்புச் செய்கின்றது. வாண்மை என்ற தமிழ்ச்சொல் வாழ்க்கைத் தொழில் என்று பொருள்படும். குறித்த தொழில் நீண்டகாலம் ஒருவரால் தொடர்ச்சியாகச் செய்யப்படுவதுடன் அத்தொழில் மூலம் பிறரும் முன்னேற்றம் அடையும் போது அத்தொழிலை வாண்மைத் தொழிலாகக் கருத முடியும்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், வகுப்பறை, பாடசாலை முகாமைக் கட்டமைப்பு, வலயம், மாகாணக்கல்வி கட்டமைப்பு, சமூகம், அரசு சட்டதிட்டங்கள் என பல்வேறு நிலைமைகளுக்குள் தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்நிலைமைகளுக்குள்ளும் தமது பணியை வினைத்திறன், விளைதிறனுடன் முன்னோக்கிச் செல்வதற்கு அவர் ஒரு வாண்மையாளராக இருத்தல் வேண்டும். வாண்மைத் தொழில் என்பது வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஓர் எண்ணக்கருவாகும். மரபுவழி வாண்மைத் தொழில்களாகச் சட்டம், மருத்துவம், இறைபணி என்பன விளங்கின. அண்மைக்காலமாகப் பொறியியல், கணக்கியல், முகாமைத்துவம், வங்கியியல் ஆகிய தொழில்களும் வாண்மைத் தொழில்களாக வளர்ச்சி பெற்றனது.

ஆசிரியர் தொழில் வாண்மைத் தொழிலாக இலங்கையில் இன்றும் அங்கீகரிக்கப்படவில்லை. வாண்மைத் தொழிலாக அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின்

1. வாண்மைத்துவப் பயிற்சி பெறல்
2. வேலையை உறுதிப்படுத்தல்.
3. ஒப்பந்தம் புதுப்பித்தல்
4. அனுமதிப்பத்திரம் வழங்கல்.
5. ஒழுக்கக்கோவை அமைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். இவற்றில் வாண்மைத்துவப் பயிற்சி, வேலையை உறுதிப்படுத்தல், ஒழுக்கக்கோவை உருவாக்கல் போன்றவை இலங்கையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் "மாணவர்களுக்கு உதவுதல்" எனும் வாண்மைத் தொழிலை மேற்கொள்கின்றனர். ஒரு குறித்த சேவையை வழங்குவதற்காக நீண்டகாலம் உடையதும், விசேடத்துவம் கொண்டதுமான அறிவுசார் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட தொழில் ஆசிரியத் தொழிலாகும். வாண்மைத் தொழில் கொண்டுள்ள பண்புகள் பின்வருமாறு,

- ஆய்வறிவாளர்
- விஞ்ஞான ரீதியான கொள்கையின் அடிப்படையில் பெறப்பட்ட அறிவு
- சேவையை வழங்குவதற்கான நாட்டம்
- கல்வி, பயிற்சி, நியமங்கள் தொடர்பான கட்டுப்பாடு
- தனித்துவமான தொழிற்பாடு
- பயிலுநர் நிலை அல்லது தொடருறு பயிற்சி
- ஏதாவதொரு அனுமதிப்பத்திரம் அல்லது சான்றிதழ் வைத்திருத்தல்.
- சார்பளவில் சுயாதீனமான நிலை
- உயர்மதிப்பு, உழைப்பு, ஆற்றல், வலு என்பவற்றைக் கொண்டிருத்தல்.
- விழுமியப் பண்புகளைக் கொண்டிருத்தல்.
- தொழில்சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபாட்டுடன் இருத்தல்.
- தன்நலன் கருதாமல் பிறர் மீது அக்கறையுடன் தம்தொழிலைச் செய்தல்.
- தமது சக அங்கத்தவர்கள் வாண்மைசார் அடையாளம் கொண்டிருக்க வேண்டுமென எண்ணுதல்.
- தொழிலுடன் தொடர்புடைய விடயங்களுக்குரிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் செயற்படல்.
- ஏதாவதொரு தொழிலுடன் தொடர்புடைய அமைப்பு அல்லது சங்கத்தில் அங்கத்தவராக இருத்தல்.

மேற்குறித்த பண்புகளின் அடிப்படையில் இலங்கையில் ஆசிரியத் தொழில் வாண்மைசார் தொழிலாகக் கருதக்கூடிய நிலை உள்ளதா? என்ற வினா எழுகின்றது. எந்தவொரு முன்சேவைப் பயிற்சியும் இல்லாமல் யாரும் கற்பித்தல் தொழிலைச் செய்யலாம் என்ற மனப்பாங்கு இலங்கையில் காணப்படுவதாலும் மேற்கூறிய அம்சங்களைக் கொண்டிராதமையாலும் ஆசிரியத் தொழிலை போலி (Quasi Professional) வாண்மைத் தொழிலாகச் சில சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். எவ்வாறாயினும் வாண்மைத் தொழில்கள் பல சாதாரண மக்களிற்கான சேவைகளுடன் தொடர்புடையவை. இதனால் தன் நலன் கருதாமல் பிறர் நலன் (மாணவர்) கருதி அக்கறையுடன் பணிபுரிபவராக ஆசிரியர்கள் இருப்பர். பிற வாண்மைத் தொழில்களை விட ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் இப்பண்புகளை அதிகம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்தியைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வரவேண்டும். இவ்வாண்மை விருத்தி இருநிலைகளில் நோக்கப்படலாம்.

1. தனிநபர் வாண்மை விருத்தி
2. நிறுவன நிலைப்பட்ட வாண்மை விருத்தி

தனிநபர் வாண்மை விருத்தி என்பது தனி ஒருவரான ஆசிரியர் தனது அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை சுயகற்றல் மூலம் வளர்த்துக் கொள்வதைக் குறிக்கும். நிறுவன நிலைப்பட்ட வாண்மை விருத்தி என்பது கல்வி நிறுவன முறைமை என்ற முழுமையின் பகுதியாக நோக்கப்படும். அது நிறுவனத் தேவைகளின் அடிப்படையில் அமையும். பாடசாலையை எடுத்துக் கொண்டால் அதற்கென தெளிவான நோக்கு இலக்குகள் கொண்டதாகச் செயற்படும். இதற்கேற்ற வகையில் ஆசிரியர்கள் பயிற்றப்படுவர்.

இருபத்தோராம் நூற்றாண்டின் ஆசிரியர் தனது தொழில்வாண்மை தொடர்பாகப் பின்வரும் திறன்களை வளர்த்துக் கொள்வது அவரின் தொழிலில் நிலைத்திருக்கக் கூடிய தன்மையை வலுப்படுத்தும்.

1. மென்திறன்களை வளர்த்துக் கொள்ளல். (தொடர்பாடல், சுயஊக்கல், தலைமைத்துவம், பொறுப்புக்கூறல், குழுவுணர்வு, பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானம் எடுத்தல், நேர முகாமைத்துவம், நெகிழ்வுத்தன்மை)

2. தொடருறு கல்வியைப் பெறல்.

3. வினைத்திறன் தடைதாண்டல் பயிற்சி வகுப்புக்களில் விருப்புடன் பங்கேற்றல்.

4. பாடசாலை மட்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் விருப்புடன் பங்குபற்றல்.

5. தனது பாடம் மற்றும் மாணவர் அடைவு மட்டம் தொடர்பாக செயல்நிலை ஆய்வுகளில் ஈடுபடுதல்.

இவ்வாறு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்ற கல்விசார்ந்த தொழில்நுட்பப் புரட்சியில் ஆசிரியர்கள் வெற்றிகரமாக இணைந்து கொள்ள வேண்டுமானால் தமது வாண்மையை விருத்தி செய்து கொள்வதுடன் வாடிக்கையாளரான தனது மாணவனிடத்திலும் உரிய தேர்ச்சிகளை அடையச் செய்து சமூகப் பொருத்தபாடு உடைய பிள்ளைகளாக மாற்ற ஆசிரியர்கள் வினைத்திறனுடன் உழைக்க வேண்டும்.

**திரு.நடராஜா ராமதாஸ்,**
**அதிபர், வருகை விரிவுரையாளர்** (NIE)
**கிளி / சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தின் 2013 - 2019 வரையிலான காலப்பகுதி க.பொ.த உ/த சிறந்த பெறுபேறுகள்

| மாணவர் பெயர் | பெறுபேறுகள் | ஆண்டு | துறை | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| யோ.யதுசன் | 2 A B | 2014 | கலை | 01 |
| கு.குகனுசன் | 2 A C | 2014 | கலை | 05 |
| ச.திகழினி | 2 A B | 2018 | கலை | 01 |
| கே.சாளினி | 2 A B | 2018 | வணிகம் | 04 |
| ந.நிரோஜினி | 2 B | 2018 | வணிகம் | 05 |
| | | | | |
| இ.கேமகிரி | 2 A B | 2019 | மருத்துவம் | 02 |
| | | | | |
| பா.கிருபாலினி | 3 A | 2019 | வணிகம் | 01 |
| மோ.பிரதீப் | 3 A | 2019 | வணிகம் | 11 |
| | | | | |
| ச.கம்சிகா | 2 A B | 2019 | கலை | 03 |
| சி.நிறோஜினி | 2 A C | 2019 | கலை | 07 |
| ம.விஜிந்திரன் | A B C | 2019 | கலை | 07 |

## பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள்

| மாணவர் பெயர் | ஆண்டு | கலை | வணிகம் | கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|---|---|---|---|
| கிளி/அக்கராயன் ம.வி | 2012 | 06 | 02 | - | |
| | 2013 | 07 | 01 | - | |
| | 2014 | 06 | 01 | - | |
| | 2015 | 09 | - | - | |
| | 2016 | 06 | 04 | 04 | |
| | 2017 | 05 | 04 | 02 | |
| | 2018 | 04 | 02 | 02 | |
| | 2019 | 06 | 02 | 07 | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி / அக்கராயன் மகா வித்தியாலயத்தில்
கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக
அளப்பரிய பணியாற்றி, அகவை அறுபதில்
மணிவிழாக்காணும் எமது மதிப்பிற்குரிய
அதிபர்.திரு.க.மதுரநாயகம் அவர்களை உடல் உள
ஆரோக்கியத்துடன் இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.

பெருமாள் சிவகுமாரன்
பழைய மாணவனும், சமூக சேவகரும்



உ
பிள்ளையார்துணை

# சிவா பிறதர்ஸ்
# SIVA BROTHERS

**கென்ரெக்சன் ரான்ஸ்போட், பைப்லைனிங், மெசினறி**
***Construction, Transport, Pipe Plumbing, Machinery***

வைத்தியசாலை வீதி, ஸ்ரேடியம்,
மன்னார்

Hospital Road stadium,
Mannar.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. க. மதுரநாயகம்
B.Com, Dip.in Edu, M.Ed, SLPS II
அதிபர் - கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
31-வது பட்டமளிப்பு விழாவில்
M.Ed பட்டத்தினைப் பெற்ற
எமது பாடசாலை அதிபர்
திரு.க.மதுரநாயகம்
அவர்களை
உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.

ஆசிரியர் நலன்பேண் ஒன்றியம்
கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன்குளம்

(3434)

# சேவை நலன் பாராட்டு



திரு.க.மதுரநாயகம்
B.Com(Hons), Dip.in.Edu,SLPS
(அதிபர் கிளி/திருவையாறு ம.வி)

[illegible]

2011ஆம் ஆண்டு [illegible]

[illegible]

வாழ்த்துவோர்:
அம்பாள் நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர்,
திருவையாறு, கிளிநொச்சி

# திருவையாறு ம.வி.யில் சிறப்புற இடம்பெற்ற தமிழ்விழா



# அக்கராயன் ம.வி.யில் தமிழ் பண்பாட்டு விழா




கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் தமிழ் விழா பாடசாலை முதல்வர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பி.மதுரநாயகம், சிறப்பு விருந்தினராக தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் க.கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களில் தமிழ்ப் பண்பாட்டினை வெளிப்படுத்துகின்ற கும்மி, கரகம், கோலாட்டம், காவடி போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் தமிழ்த் தின விழாவினையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஜெ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org